செவ்வியல் படைப்புகளில்

பகுத்தறிவுச் சிந்தனைகள்

பதிப்பாசிரியர்

இரா. தாமோதரன் (அறவேந்தன்)

பதிப்புதவி

ம. லோகேஸ்வரன்
ம. புகழேந்திரசோழன்
மூ. அய்யனார்

பதிப்புத்துறை

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி-620 024

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

நூலக நூல்கள்

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

செவ்வியல் படைப்புகளில்
பகுத்தறிவுச் சிந்தனைகள்

பதிப்பாசிரியர்

இரா. தாமோதரன் (அறவேந்தன்)

பதிப்புதவி

ம. லோகேஸ்வரன்

ம. புகழேந்திர சோழன்

மூ. அய்யனார்

பதிப்புத்துறை

பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி – 620 024

நூல் விளக்கக் குறிப்பு

தலைப்பு	:	செவ்வியல் படைப்புகளில் பகுத்தறிவுச் சிந்தனைகள்
பொருள்	:	கருத்தரங்கக் கட்டுரைகள் - திறனாய்வு
மொழி	:	தமிழ்
பதிப்பாசிரியர்	:	**இரா. தாமோதரன் (அறவேந்தன்)** பேராசிரியர் - தலைவர் பெரியார் உயராய்வு மையம் பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளி - 620 024
முதல் பதிப்பு	:	2012
ISBN No.	:	978-81-922810-9-4
உரிமை	:	பாரதிதாசன் பல்கலைக்கழகம்
தாள்	:	18.6
அளவு	:	1/8 டெம்மி
விலை	:	105.00
படிகள்	:	1000
பக்கங்கள்	:	x + 262 = 272
« Î° ¸õ	:	¦¾Ç·Àì பிரிண்டர்ஸ் ¦°ý¨É - 608 001 போன் : (044) 4231 6274

முனைவர் (திருமதி) **கோ. மீனா,**
துணைவேந்தர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி - 620 024.

வாழ்த்துரை

பெண் விடுதலைக்கு, பெண் உரிமைக்குக் குரல் கொடுத்து, களம் அமைத்துப் போராடிப் பெருமளவு தம் வாழ்நாளிலேயே வெற்றியைக் கண்டுகளித்த ஒற்றைப் புரட்சியாளர் உலக அளவில் பெரியார் ஒருவர்தாம். பெண்களுக்கு எதிராக நிகழ்ந்த சமூக அவலங்களைத் தம் நா முனையையும் பேனா முனையையும் கருவிகளாகப் பயன்படுத்தி, கத்தியின்றி இரத்தமின்றிச் சத்தான சாதனை களைச் செய்தளித்த பெருந்தகையர் தந்தை பெரியாரே ஆவார். அவர்தம் சாதனையின் வெளிச்சத்தில்தான் இன்று பெண்கள் பலர் பலநிலைகளில் ஒளிவிடுகின்றனர். இன்று, நம் **தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா** அவர்கள் பத்தாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டின் அவலங்களையெல்லாம் அகற்றி வளம் கொழிக்கும் மாநிலமாகத் தமிழகத்தைக் கட்டி எழுப்ப **'தொலைநோக்குத் திட்டம்' (Vision 2023)** ஒன்றினைச் செயல்படுத்தி வருகின்றார்கள். இச்செயலாக்கத்தை முன்னின்று நடத்தும் தூண்களாக இன்று மகளிர் திகழ்கின்றனர் என்றால் இந்த வளர்ச்சிநிலைக்காகத் தந்தை பெரியாரை நாம் நன்றியோடு நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

பாரதிதாசன் பல்கலைக்கழகப் பெரியார் உயராய்வு மையம் கடந்த ஓராண்டில் மட்டும் இரண்டு தேசியக் கருத்தரங்குகளை நிகழ்த்தியுள்ளது. இக்கருத்தரங்குகளில் 150க்கும் மேற்பட்ட வளர்நிலை ஆய்வாளர்களும் பெரியாரியத்தை வாசித்துக் கட்டுரை எழுதியுள்ளனர். 50-க்கும் மேற்பட்ட அறிஞர்கள் தம் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்துள்ளனர். இவ்வுரைகளின் ஒருபகுதி 'பெரியாரும் உலகப் பகுத்தறிவாளர்களும், பெரியாரியல், பெண்ணுரிமை' என மூன்று நூல்களாக முன்பு வெளியிடப்பெற்றன. தற்பொழுது அறிஞர் பெருந்தகையரின் ஆய்வுரைகள் அடங்கிய 'செவ்வியல் படைப்புகளில் பகுத்தறிவுச் சிந்தனைகள்' எனும் நூல் வெளியிடப் பெறுகின்றது. இந்த நூலாக்க முயற்சிவழிப் பண்டைத் தமிழகத்தில் நிலவிய பகுத்தறிவு நிலைப்பாடுகளை அறிய முடிகின்றது என்பது இம்மையம் ஆய்வுலகிற்கு வழங்கும் ஒரு கொடையாகும்.

இந்த நூலை மிகச் சிறப்பாக வடிவமைத்துப் பதிப்பிக்கும் பெரியார் உயராய்வு மையத்தினரைப் பாராட்டு கிறேன். குறிப்பாக, இப்பதிப்பு முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட பெரியார் உயராய்வு மையத்தின் முதல்அணி முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கு எம் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

வாழ்த்துகளுடன்

(கோ. மீனா)

தடம் பதிக்கும் தேடல்...

நகர்வுக் கலாச்சாரம் என்பது மனித சமுதாயத்தின் பூர்விகத்தோடு தொடர்புடையது. தொல்பழங் காலத்தி லிருந்து ஒவ்வொரு இனத்தின், மொழியின் நீட்சியை அதனதன் இயங்கியலை முன்னிறுத்தி மீட்டெடுக்க முடியும். அவ்வாறு மீட்டெடுக்கும் பொழுது ஓர் அறிவுவயப்பட்ட முற்போக்குத் தன்மை சமூகத்தோடு தொடர்பு பெற்றிருப்பதை இனங்காண இயலும். அறிவு சார்ந்த சொல்லாடல்களும் சிந்தனைகளும் ஆக்கம் பெறுகையில் ஒட்டுமொத்தமான சமுதாயமும் தழைத்தோங்குகிறது. தமிழில் பழங்காலப் படைப்புகளாகக் கருதப்பெறுகின்ற செவ்வியல் படைப்புகள் பண்டைய மக்களின் வாழ்வியலை முன்னிறுத்துவதுடன் அவர்களின் அறிவுப்பூர்வமான வினைப் பாடுகளையும் எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் பண்டைக் கால மக்களின் வாழ்வியல் எத்தகைய அறிவுப் பாரம்பரியத்தைக் கொண்டது என்பதைச் 'செவ்வியல் படைப்பு களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்' எனும் இத்தொகுப்புநூல் வெளிக்கொணர முற்பட்டுள்ளது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஆய்வுரைகள், செவ்வியல் படைப்புகளாகக் கருதப்பெறுகின்ற 41 நூல்களையும் பொதுவெளியில் விமர்சிக்கின்றன. பண்டைய இலக்கிய இலக்கணங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள் காணப்பெறுதலை வெவ்வேறு அணுகுமுறைகள் வாசிப்புகள்வழி ஆய்வறிஞர்கள் கண்டறிந்துள்ளனர். கட்டுரைகள் 7 பிரிவுகளாக இந்நூலில்

பகுத்தளிக்கப் பெற்றுள்ளன. அறிவியல்பூர்வமான காரண காரியங்களை எடுத்துக்கூறி மூடப்பழக்கங்களைக் கண்டிக்கின்ற புத்தரின் போதனைகள் பெரியாரால் பிற்காலத்தில் மறுமலர்ச்சி யாக்கம் பெற்றமை, சீன அறநூல்களோடு பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகள் ஒத்துப்போதல், அறிவியல் செய்திகள் அறிவியல் அறிஞர்களால் தமிழ்ப்படுத்தப்பெற வேண்டியதன் தேவை, தமிழ் அறநூல்களுக்கும் வடமொழிப் பொருள் நூலுக்குமிடையே (கௌடலீயம்) உள்ள பெருத்த முரண்பாடு முதலிய கருத்துரைகள் பொதுநிலையில் அமையப் பெற்றுள்ளன.

தொல்காப்பியத்தில் ‘தெய்வமே முழுமுதல்’ என்ற கருத்து, ஆக்கம் பெறவில்லை என்பதைச் சொல், பொருள், இலக்கண அடிப்படையில் முன்வைத்தல், திணை, பால், புணர்ச்சி, சொல் ஆகிய பாகுபாடுகளை விளக்குவதில் தொல்காப்பியர் பகுத்தறிவுத் திறத்தோடு தொழிற் பட்டுள்ளமையைச் சுட்டுதல், களவு, கற்பு ஆகிய இரு ஒழுக்கக் காலத்திலும் சங்கக் காதலர் அறிவுவயப்பட்ட செயல்பாடுகளில் இயங்கியுள்ளமையை இறையனார் அகப்பொருள்வழி நிறுவுதல் முதலிய ஆய்வுரைகள் இலக்கண அடிப்படையிலான பகுத்தறிவுச் சிந்தனைகளை முன்வைக்கின்றன.

பண்டைத் தமிழரின் வாழ்வியல் முறைகளில் சிந்தனைத் திறன்மிக்க காரியங்கள் காணப்பெறுவதை அகநானூறுவழி புலப்படுத்துதல், சங்க அக மாந்தருள் பகுத்தறிவுச் சிந்தனை மிக்கவளாகத் தோழி கட்டமைக்கப் பெற்றுள்ளமையை நற்றிணை வழி விளக்குதல், குறுந்தொகைப் பாக்களில் கடவுள் மறுப்புச் சிந்தனைகள் இடம் பெற்றிருப்பதுடன் மனித மேம்பாட்டிற்கான பல அறிவுவயப்பட்ட அறிவுறுத்தல்கள்

இடம்பெற்றுள்ளமையை விளக்குதல், பண்டைக்காலப் பெண்ணுரிமையை விளக்குவதற்கு ஏற்ற தளத்தைக் கலித்தொகையில் காணலாம் என்கிற கருத்தியல் சுட்டப் பெறுதல் முதலான கருத்துரைகள் சங்கத்தொகை நூல்களை மையமிட்டு அமைந்துள்ளன.

ஆணாதிக்கச் சமுதாயத்தைக் கட்டமைப்பதாக முல்லைப் பாட்டு அமைந்துள்ளது என்று பெரியாரியப் பார்வையில் கருத்துரைத்தல், மனிதப் பண்புகளை மேம்படுத்திக் கொள்ளுதற்காகப் பத்துப்பாட்டில் மக்கள் குறித்த பதிவுகள் எல்லாம் மாக்களாகப் பதிவு செய்யப் பெற்றுள்ளமையை விளக்குதல் முதலிய ஆய்வுரைகள் பத்துப்பாட்டினை மையமாகக் கொண்டவை.

சிலப்பதிகாரக் கதைநகர்வு காரண காரியத்துடன் தொடர்பு படுத்தப் பெற்றுள்ளமை பகுத்தறிவுச் சிந்தனைபாற்பட்ட தாகும், என்ற நிலையில் பகுத்தறிவுக் கொள்கை ஆராயப் பட்டுள்ளது.

மறுமை பற்றிய ஏற்பு மறுப்புகள், இயற்கை, கல்வி, செயல் முதலிய அறிவு நிலைப்பாடுகள், புராணக் கருத்து களை விமர்சித்தல் என்று பழமொழி நானூறு பகுத்தறிவுக் கொள்கையுடன் தொடர்பு பெற்றுள்ளமை, சாதி சமயங் களுக்கு அப்பாற்பட்ட நிலையில், சமுதாய நல்லிணக்கத்தை வலியுறுத்துகின்ற நிலையில் நாலடியார் படைக்கப் பெற்றுள்ளமை, நிலையாமையை வலியுறுத்தாது மனித ஒழுங்கினைப் பகுத்தறிவோடு வலியுறுத்துவதாக முதுமொழிக் காஞ்சி அமைந்துள்ளமை, வையக வாழ்வைப் போற்று தலிலேயே வள்ளுவரின் பகுத்தறிவுச் சிந்தனை வெளிப் படுதலைச் சமய நோக்கில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளமை,

ஒழுக்கம் என்கிற தனித்துவத்தைக் கட்டுடைத்து ஏனைய அற நூல்களிலிருந்து ஏலாதி மாறுபட்டு மாற்றுச் சிந்தனைகளை முன்வைத்துள்ளமை முதலான கருத்தியல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை மையமிட்டு ஆராயப்பெற்றுள்ளன.

நல்லவை அல்லவைகளைத் தேர்ந்தெடுக்கின்ற அறிவுப் பாத்திரங்களாக முத்தொள்ளாயிரத் தலைவி, தோழி, தாய் ஆகியோர் திகழ்ந்துள்ளமை முத்தொள்ளாயிரம்வழி ஆராயப் பெற்றுள்ளது.

இத்தன்மையில் இவ்ஆய்வுரைகள் பண்டைச் சமூகத்தில் தமிழரின் வாழ்வியல்நெறி அறிவுவயப்பட்ட ஒழுங்குநிலையில் இயக்கம் பெற்றுள்ளமையை உணர்த்துகின்றன.

இத்தகைய கருத்தமைவுகளை வெளிக்கொணர்தற்குக் களம் அமைத்துக் கொடுத்த பாரதிதாசன் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் முனைவர் திருமதி கோ. மீனா அம்மா அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றிகள். 'தமிழ்ச் செவ்வியல் படைப்புகளில் பகுத்தறிவுச் சிந்தனைகள்' எனும் பொருண்மையில் கருத்தரங்கம் நிகழ்த்த அனுமதியும் நிதியும் ஒத்துழைப்பும் நல்கிய மத்திய அரசின் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு நன்றிகள் உரித்து. ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்த ஆய்வறிஞர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

அன்புடன்

இரா. அறவேந்தன்

ம. லோகேஸ்வரன்

உள்ளுறை

சிறப்புப் பார்வை

1. பாலி அறநூல்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்
கந்தசாமி சோ.ந. 3

2. சீன அறநூல்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்
கந்தசாமி சோ.ந. 20

3. செவ்வியல் படைப்புகளில் அறிவியல் சிந்தனைகள்
நரேந்திரன் சு. 39

4. தமிழ், வடமொழிச் செவ்விலக்கியங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்
மருதநாயகம் ப. 55

தமிழ்ச் செவ்வியல் படைப்புகளில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

I

1. தொல்காப்பியக் கருத்தியல் – மனிதனும் தெய்வமும்
சீனிவாசன் இரா. 85

2. தொல்காப்பியம் : எழுத்து, சொல்
சேதுபாண்டியன் தூ. 96

3. இறையனார் அகப்பொருள்
வள்ளியம்மை மு. 105

II

1. அகநானூறு
ஆலிஸ் அ. 119

2. நற்றிணை
இராசா கி. 133

3. குறுந்தொகை
மணி ஆ. 139

4. கலித்தொகை (பெரியாரியல் பார்வை)
மதிவாணன் பா. 153

III

1. முல்லைப்பாட்டு (பெரியாரியல் பார்வை)
இரவீந்திரநாதன் சுப. 169

2. பத்துப்பாட்டு
பாலசுப்பிரமணியன் உல. 175

IV

1. சிலப்பதிகாரம்
பஞ்சாங்கம் க. 185

V

1. பழமொழி நானூறு
இராசாராம் சு. 197

2. நாலடியார்
தாமரைச்செல்வி தி. 207

3. முதுமொழிக்காஞ்சி
புவியரசு அ. 214

4. திருக்குறள்
(வள்ளுவர் சமயம் – வாழ்க்கை விழைவு)
முருகரத்தினம் தி. 232

5. திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம்
வேல்சாமி பொ. 237

VI

1. முத்தொள்ளாயிரம்
வள்ளியம்மை மு. 243

VII

1. தொல். பொருளதிகாரம் காட்டும்
மெய்யியல் நிலைப்பாடுகள்
முத்துமோகன் ந. 247

VIII

பொருளடைவு 260

சிறப்புப் பார்வை

பாலி அறநூல்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

I. முன்னுரை

இந்தியத் திருநாட்டின் தொன்மொழிகளில் பாலிமொழியும் ஒன்றாகும். இம்மொழி பண்டைய மகத தேசத்தின் மக்களால் பேசப்பெற்ற மொழியாகும். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மொழி பாலி. போதிமாதவன் எனப்போற்றப்படும் புத்தர்பிரானின் தாய்மொழி பாலி. மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற பெருநோக்குடன் புத்தர்பிரான் மக்கள் மொழியாகிய பாலியில் தன் போதனைகளை வழங்கினார்.

பாலி என்ற சொல்லின் தோற்றம் பற்றிய அறிஞர் சிலரின் கருத்தினையும் இங்குக் குறித்தல் பொருத்தமாகும்.

1. ***விதுசேகரபட்டாசார்யா*** என்னும் அறிஞர் வடமொழிச் சொல்லாகிய பங்தி → பந்தி → பட்டி → பள்ளி → பாலி என்று ஆயிற்று என்றார்.

2. பாடலி மகத தேசத்தின் தலைநகர். எனவே, பாடலியில் வழங்கிய மொழி (இடைக் குறையாய்) **பாலி** என்றாயிற்று என்று ***மாக்சுமுல்லர்*** எண்ணினார்.

3. ***பிட்சு ஜகதீச கச்யப்*** என்பார், பர்யாய → பரியாய → பலியாய → பாலியாய → பாலி என்று வந்தது எனக்கூறினார்.

4. பாலி → பாலித்தல் → பேணிக்காத்தல் என்ற பொருள் தருதலால், புத்தர்பிரானின் போதனைகளைத் தாங்கிப்பேணும் மொழி என்ற கருத்தில் இச்சொல் தோன்றியது என்று ***அபிதானப்த தீபிகா*** (Abhidhānapta DĪpikā) என்ற நூல் சுட்டுகிறது :

சோ.ந. கந்தசாமி
இயக்குநர், உலகச் செம்மொழிகள் உயராய்வு மையம்,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613010.

"Pālayati rakṣatiti tasmāt pāli"

5. வடமொழியிலும், பாலியிலும், பாகத மொழியிலும் ள், ல் என்பன அபேதமாக வழங்கப்பட்டன. எனவே, பள்ளி → பாளி → பாலி என்று ஆயிற்று எனக் கூறுவார் கருத்து பொருத்தம் மிக்கதாகத் தோன்று கிறது. நெடுங்காலம் **பாளி** என்றே எழுதும் மரபு இருந்துள்ளது. ஆயினும், பாலி என்ற வடிவமே நிலை பெற்றது.

பள்ளி என்ற சொல் கிராமத்தினைக் குறிக்கும் பாலிச் சொல். எனவே, **பாலி** என்பது **கிராமத்தார் மொழி** — நாட்டார் மொழி (*Gāv ki Bhāṣa*) என்று கூறுவோரின் கருத்து ஏற்புடையது.

புத்தர்பிரானின் போதனைகள், சிந்தனைகள் யாவும் பாலி மொழியில் பேணிக் காக்கப் பெற்றுள்ளன. பாலி மொழி யின் ஆதி இலக்கியங்கள் யாவும் புத்தர்பிரானின் வாய்மொழி களாகவும் ஒருசில அவர்தம் சீடர்களின் சிந்தனைகளாகவும் விளங்குகின்றன. எனவே, பாலி மொழியின் ஆதிநூல்கள் பற்றிச் சுருக்கமாக அறிந்து கொள்ளுவோம்.

II. பாலிமொழியின் ஆதி நூல்கள்

புத்தர்தம் போதனைகள் யாவும் தருமம் என்று மொத்த மாகக் கூறப்பட்டன. தம்மம் - **தருமம்** - அறம். சில நிலை களில் **சத்தருமம்** என்றும் அவை கூறப்பட்டன. இச்சொல்லினை **நல்லறம்** என்று தண்டமிழாசான் சாத்தனார் மணிமேகலை யில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். புத்தநெறியில் **திரிசரணங்கள்** சிறப்பிடம் பெறும். 1. இந்த நெறியினை உருவாக்கிய பரம ஞானியாகிய புத்தரிடம் சரண்புகுதல். 2. அவர் போதனை களாகிய தருமத்தில் - அறத்தில் சரண்புகுதல். 3. அவற்றை மக்களிடத்தில் பரப்பும் மாதவர்களாகவும் ஞானச் செல்வர் களாகவும் விளங்கும் சங்கத்தாரிடம் சரண்புகுதல் என்பன மூன்றையும் மேற்கொண்டொழுகுபவன்தான் **பௌத்தன்** எனச் சுட்டத்தக்கவன்.

புத்தரின் போதனைகள் யாவும் அவர் பரிநிர்வாணம் அடைந்த உடன் காலத்தில் **திரிபிடகங்களாகத்** தொகுக்கப்

பெற்றன. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் **அஜாதசத்துரு** என்னும் அரசரின் ஆதரவில் இராசகிருகத்தில் கூடிய முதல் புத்த சங்கத்தில்தான் திரிபிடகங்கள் தொகுக்கப் பெற்றன. இந்தத் தொகுப்புப் பணியில் புத்தர்பிரானின் சீடர்கள் ஈடுபட்டிருந் தனர். அவர்களில் ஆண்டில் முதிர்ந்திருந்த **உபாலி** என்னும் சீடர் **விநயபிடகத்தினையும்,** புத்தரிடம் அன்பு முதிர்ந்த சீடர் **ஆனந்தர் சுத்தபிடகத்தையும்,** அறிவில் முதிர்ந்த சீடர் **மகாகாசிபர் அபிதம்மபிடகத்தையும்** தத்தம் நினைவிலிருந்து ஒப்பித்தனர் என்றும், அவற்றைக் குழுமியிருந்த மகாதேரர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டார் என்றும் அறிகிறோம்.

பிடகம் என்ற சொல்லிற்குக் **கூடை** (Basket) என்பது நேர்பொருள். **அறநெறிகளைக் கூறும் ஏடுகள் அடங்கிய கூடை** என்னும் பொருளில் இச்சொல் வழங்கிவருகிறது. இச் சொல்லிற்கு **மரபுவழி வருதல்** என்ற பொருளும் உண்டு. வேதம் ஓதப்பெற்று வந்ததுபோல், பிடகமும் பிட்சுக்களால் ஓதப்பெற்று வந்தது. கி.மு. முதல் நூற்றாண்டில் சிங்கள வேந்தன் **வட்ட காமணியின்** முயற்சியில் பிடகங்கள் எழுத்துருவம் எய்தின. வைதிகமார்க்கத்தார் வேதங்களை மூன்றாகத் தொகுத்ததுபோல் (நான்காம் வேதம் அதர்வணம் பின்னர் சேர்க்கப்பட்டது) பௌத்தச் சான்றோர்களும் தமக்குரிய வேதமாகிய பிடகங்களையும் மூன்றாகவே தொகுத்துக் கொண்டார் போலும்!

ஒவ்வொரு பிடகத்தின் அமைப்பினையும் பொருண்மை யினையும் சுருக்கமாகக் காண்போம்.

II. 1. விநயபிடகம்

விநயம் என்ற சொல்லிற்கு நடத்தை என்பது பொருள். விழுமிய சீலங்களையும் ஒழுகலாறு களையும் விளக்கும் பிடகத்திற்கு **விநயபிடகம்** என்று பெயரிட்டனர். துறவறத்தின் சிறப்பும், இல்லறத்தார்க்குரிய தகுதிகளும், அன்றாட வாழ்க்கையில் தேரரும் தேரியர்களும் மேற்கொள்ளுதற்குரிய நடைமுறை விதிகளும் விநயபிடகத்தில் கூறப்பட்டுள்ளன. **புத்தசங்கம்** என்ற அமைப்பின் நிர்வாகம் பற்றிய விதி களையும் இப்பிடகம் வரையறுத்துள்ளது.

விநய பிடகத்தில் 1. **சுத்தவிபாங்கம்** 2. **கந்தகம்** 3. **பரிவாரம்** 4. **பாதிமோக்கம்** என்னும் நான்கு சிறுநூல்கள் அடங்கி யுள்ளன.

II. 2. சுத்தபிடகம்

சூத்ரம் → **சுத்தம்** ஆயிற்று. இச்சொல்லிற்கு நூற்பா, மூலகாரணம் என்ற பொருள்கள் உண்டு. புத்தரின் கொள்கை களுக்கு மூலகாரணமாகவுள்ள பல்வேறு **உரையாடல்களும், போதனைகளும்** சுத்தபிடகத்தில் தொகுக்கப்பெற்றுள்ளன. இல்லறத்தார்க்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் இப்பிடகம் விரிவாகப் பேசுகிறது. நல்லாட்சிக்குரிய இலக்கணத்தையும் சுத்தபிடகம் விளக்குகிறது. இப்பிடகத்தில் வசன வடிவில் அமைந்த உரையாடல்கள், கருத்து விளக்கக் கதைகள், முதுமொழிகள், சிந்தனையினைத் தொடும் பாடல்கள் முதலியவை பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு சில பகுதிகள் உரைநடையாகவும் பிற பகுதிகள் பாடல் களாகவும் உள்ளன.

இப்பிடகத்தில் 1. **தீகநிகாயம்** 2. **மஜ்ஜிம நிகாயம்** 3. **சம்யுத்த நிகாயம்** 4. **அங்குத்தர நிகாயம்** 5. **குத்தக நிகாயம்** என்னும் ஐந்து பெரும் பகுதிகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பகுதி யிலும் பல சிறுநூல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. திருக்குறளுக்கு ஒப்பாகப் பேசப் பெறும் **தம்மபதம் குத்தகநிகாயத்தில்** இடம்பெற்றுள்ளது.

II. 3. அபிதம்ம பிடகம்

அபிதம்மம் என்ற சொல் மெய்யியலைக் குறித்தது. இப்பிடகப் பகுதியில் தத்துவப் போதனைகள் தம்ம (தரும) போதனைகளைவிட மிகுதியாகக் காணப்படுகின்றன. இதனுள், 1. **தம்மசங்கணி** 2. **விபாங்கம்** 3. **கதாவத்து** 4. **புத்தக பஞ்ஞத்தி** 5. **தாதுகதா** 6. **யமகம்** 7. **பட்டாணம்** என்ற ஏழு பகுதிகள் அடங்கியுள்ளன.

மேலே சுட்டப்பெற்ற திரிபிடகங்களுக்குப் **புத்ததத்தர், தம்மபாலர், புத்தகோஷர், புத்தசிகர்** உள்ளிட்ட மகாதேரர்கள் பலர் உரை வரைந்துள்ளனர். பிடகங்களில் கூறப்பெற்றுள்ள

நுட்பமான கருத்துக்களை இவர்தம் பேருரைகள் தெளிவு படுத்துகின்றன. இவர்கள் கி.பி. 400-700 என்ற காலப் பகுதியில் வாழ்ந்தவர்கள்.

இதுகாறும் புத்தரின் தம்மத்தையும் (-தருமத்தையும்), **அபிதம்மத்தையும்** (-தத்துவத்தையும்) விரித்துக்கூறும் முப்பிடகங்கள் பற்றிய அடிப்படைகளைக் கண்டோம். இனி, அவற்றில் காணப்படும் பகுத்தறிவுச் சிந்தனைகள் பற்றி ஆராய்வதற்குமுன், **பகுத்தறிவு என்றால் என்ன?** என்பது பற்றிய அறிஞர் பெருமக்களின் கருத்துக்கள் சிலவற்றைக் காண்போம்.

III. பகுத்தறிவு - விளக்கம்

வடமொழியில் **ஞானம்** என்ற சொல்லிற்கு **அறிவு** (Knowledge) என்பது பொருள். **பிரத்தியட்சஞானம், அனுமான ஞானம், ஆகமஞானம்** என்று தருக்கநூல்கள் அறிவினை மூன்று வகையாகக் கூறுகின்றன. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய கருவிகளால் பெறப்படும் அறிவு பிரத்தியட்ச ஞானம் ஆகும். காணப்படும் காரியப்பொருளைக் (Effect) கொண்டு காணப்படாத காரணப்பொருளை (Reason or Source) மனத்தினால் தெளியும் அறிவினை அனுமான ஞானம் என்றனர். அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் பெறப்படும் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டது ஆகம ஞானம் எனப்படும் நூலறிவு ஆகும்.

தமிழ்ஞானியாகிய திருவள்ளுவர் **அறிவுடைமை (43)** என்று ஓர் அதிகாரம் அமைத்து அறிவினை விளக்கியுள்ளார். அறிவுடையார் எல்லாம் உடையார் **(430)** என்றும் இயம்பினார். இந்த அதிகாரம் பொருட்பாலில் இடம்பெற்றது. முன்னரே அறத்துப்பாலில் **மெய்யுணர்தல் (36)** என்ற அதிகாரத்தில் நாம் கருதிய அறிவினும் மேம்பட்டதாகிய அறிவு பற்றிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அறிவும் பகுத்தறிவும் ஒன்றா? வேறா? என்பது விரிவாக ஆராய்வதற்குரியது. **பகுத்தறிவு** என்பது சென்ற நூற்றாண்டில் உருவாக்கப்பெற்ற தனிப்பொருண்மை வாய்ந்த சொல்லாக விளங்குகிறது. மேலைநாட்டு அறிவாராய்ச்சியியலாரின்

தாக்கத்தால் தமிழகத்துச் சிந்தனையாளர்கள் *Rationalism* என்பது பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினர். எனக்குத் தெரிந்தமட்டில் பெரியார் ஈ.வெ.ரா. தான் பகுத்தறிவு என்ற சொல்லினைத் தமிழ் மக்களிடையே பரவச் செய்தவர். பகுத்தறிவுக் கொள்கைகளையும் பரவச் செய்தவர். எப்பொருளையும் பகுத்து அறியும் அறிவு (Analytical and Critical Knowledge) பகுத்தறிவு எனக் கருதலாம்.

இனி, பகுத்தறிவு (Rationalism) பற்றிய அறிஞர் பெருமக்கள் சிலரின் கருத்துக்களைச் சுருக்கமாகக் காண்போம்.

III. 1. பகுத்தறிவு - புத்தர்பிரானின் கருத்து

கண்மூடிப் பழக்கவழக்கங்களுக்கும் போலி நம்பிக்கைகளுக்கும் (False beliefs) புத்தர்பிரான் இடம்தரவில்லை. பழைய நூல்களில் சொல்லப்பட்டன என்பதற்காக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் அவர் உடன்படவில்லை. பெரியவர்கள் கூறியவை என்பதற்காகக்கூட ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் ஒரு பொழுதும் சொல்லவில்லை. எப்பொருளையும் யார் கூறினாலும் நன்றாகச் சிந்தித்துப் பார்த்துப் பொருத்தமாகக் காணப்பட்டால் ஏற்றுக்கொள்ளலாம் என்பதுவே அவர்தம் கருத்து. புத்தர்பிரான் பேசுகிறார் :

> "Tāpāc chedāc ca nikaṣāt
> suvarṇamiva paṇḍitaiḥ |
> parīkṣaya bhikṣavo grāhyam
> madvaco natu gauravāt ||"

இதன் பொருள் வருமாறு:

> *"பிட்சுக்களே! நன்றாக உருக்கியும், நறுக்கியும், கட்டளைக் கல்லில் உரைத்துப் பார்த்தும் பொன்னின் மாற்றினைச் சோதிக்கும் அறிஞனைப் போல (-பொற்கொல்லரைப் போல) என் சொற்களையும் நன்றாக ஆராய்ந்து பார்த்த பிறகுதான் நீங்கள் (சரியென்றுபட்டால்) ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்; என்னிடம் வைத்துள்ள மரியாதை காரணமாக என் சொற்களை ஏற்க வேண்டாம்."**

* கந்தசாமி, சோ.ந. தமிழிலக்கியத்தில் பௌத்தம், சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறை வெளியீடு, சென்னை, *1977*, ப. *189*

எனவே, எப்பொருளையும், தன் சொந்த அறிவினால் சிந்தித்துப் பார்த்து ஏற்புடைய கருத்தினை எடுத்துக்கொள்ளுவதற்கு உதவுவதுதான் **பகுத்தறிவு** என்று புத்தர்பிரான் கருதியுள்ளார் என்பது புலனாகும்.

III. 2. திருவள்ளுவரின் கருத்து

தென்னகத்துப் புத்தராகப் போற்றப்படும் திருவள்ளுவர் பகுத்தறிவு பற்றிக் கூறும் குறள் பாக்களின் கருத்தினைக் காண்போம். உலகில் காணப்படும் பொருள்கள் எண்ணற்றவை; அவற்றின் தன்மைகளும் எண்ணில. புறத்தோற்றத்தை மட்டும் வைத்துப் பொருளின் இயல்பினை முடிவு செய்தல் இயலாதது. காரணப் பொருள்கள் மெய்யாக விளங்கும். அவற்றினின்றும் வெளிப்படும் காரியப் பொருள்கள் பௌதிக உண்மைகளாகத் (Physical Realities) தோன்றும். அவை காலப்போக்கில் மறைந்துவிடுவன. எனவே, எவை எவை பொய்ப்பொருள் (நிலையற்றவை), எவை எவை மெய்ப் பொருள் (நிலைபேறுடையவை) என்பதனை ஆராய்ந்து காண்பதற்குப் பயன்படும் அறிவுதான் சிறப்பாகச் சுட்டத் தக்கது :

> ***எப்பொருள் எத்தன்மைத்(து) ஆயினும் அப்பொருள்***
> ***மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு*** (355)

எனவே, எது உண்மைப் பொருள் என்பதைப் பகுத்துப் பிரித்து வேறுபடுத்திக் காண்பதற்கு உறுதுணையாகச் செயற் படும் அறிவினை இக்காலத்து முறைப்படி, **பகுத்தறிவு** எனப் பகரலாம். இக்குறள் **மெய்யுணர்தல்** (Realisation of Absolute Truth) என்ற அதிகாரத்தில் இடம்பெற்றது.

அறிவுடைமை என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் அறிவு பற்றிய மேலும் பல விளக்கங்களைத் தருகிறார். இறுதி வாராமல் காக்கும் ஒரு கருவியாகவுள்ள அறிவு பகைவராலும் அழிக்க முடியாத ஒரு பெரும் அரண் (421). நல்லனவற்றில் மட்டுமே மனத்தைச் செலுத்துதல் அறிவின் தொழில் (422). தம் கருத்தினைப் பிறர் மனங்கொள்ளும்படிச் சொல்லுவதற்கு உதவுவதும், பிறர் சொற்களின் நுண்ணிய பொருளைக் கிரகித்துக் கொள்ளுவதற்கு (உள்வாங்கிக் கொள்ளுவதற்கு)

உதவுவதும் அறிவுதான் **(424)**. உலகத்தோடு தழுவிப் போதல், வருவது அறிதல், அஞ்சத்தக்கவற்றுக்கு அஞ்சுதல், வருமுன் காத்தல் உள்ளிட்ட பலவற்றையும் செயற்படுத்துதல் அறிவு என்று பிற குறள்களில் பேசினார். **பகுத்தறிவுடன்** மிகவும் நெருக்கமான தொடர்புடைய குறள் இதுதான்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு (423)

இக்குறளின் சாரம் முன்பு நாம் பார்த்த புத்தர்பிரானின் பகுத்தறிவு விளக்கத்துடன் இயைத்து நோக்கத்தக்கது. பேசப் படும் பொருள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அதனைப் பேசுபவர் சமுதாயத்தில் எந்த நிலையினராகவேனும் இருக்கலாம். விருப்பும் வெறுப்பும் இன்றி அப்பொருளின் உண்மைத்தன்மையினை ஆராய்ந்து காண்பதுதான் **அறிவு** என்று சிறப்பித்துச் சொல்லப்படும்.

இந்தக் குறளின் தொடர்ச்சியாக விளங்கும் அறநெறிச்சாரப் பாடலைப் பார்ப்போம்.

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே - காய்வதன்கண்
உற்ற குணம்தோன்றா தாகும்; உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்.

எனவே, இன்னார் இனியார் என்று பேதப்படுத்தாமலும் இது நமக்குப் பிடித்தது, பிடிக்காதது என்று வேறுபடுத்தா மலும் நடுநிலையில் நின்று ஒருபொருளின் இயல்பினை ஆராய்தல் வேண்டும். இத்தகைய ஆய்வினைப் புரிவதுதான் **பகுத்தறிவு** என்று அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

III. 3. பெரியார் ஈ.வெ. ரா.வின் கருத்து

பகுத்தறிவுப் பகலவனாக ஒளிவீசிய பெரியார் சுயசிந்தனை யாளர்; மூடநம்பிக்கைகளையும், கண்மூடிப் பழக்க வழக்கங் களையும் இளமை முதலாகவே கண்டித்து விலக்கியவர்; அறிவுக்குச் சரி என்று பட்டதைப் பேசியவர்; மக்களிடையே விழிப்புணர்வினை உண்டாக்கிய பெருந்தகையாளர்;

தம்முடைய பகுத்தறிவுச் சிந்தனைக்கு அடிப்படையினைப் புத்தரின் சிந்தனையில் கண்டவர்; அவர் பேசுகிறார் :

*“எங்களுக்கு முன்பு - 2500 ஆண்டுக்கு முன்பு - புத்தர் என்பவர்தான் இப்படிச் சொன்னார். உன் அறிவுக்கு எது சரி என்று படுகின்றதோ அதன்படி நட. முன்னோர்கள் சொன்னார்கள், பெரியவர்கள் சொன்னார்கள் அவர் சொன்னார், இவர் சொன்னார் என்பதற்காக எதையும் நம்பாதே. உன் அறிவு கொண்டு அலசிப்பார்த்து எது உன் புத்திக்குச் சரியென்று படுகின்றதோ அதன்படி நட என்றார். இப்படிப் புத்திகொண்டு சிந்திக்கச் சொன்னதன் காரணமாகத்தான் புத்தன் என்று பெயர் பெற்றார்.”**

இவ்வாறு புத்தரைப் பின்பற்றித் தன் பகுத்தறிவுக் கொள்கையினை வளர்த்துக் கொண்டவர் பெரியார் ஈ.வெ.ரா. பகுத்தறிவுக்கு அவர்தரும் விளக்கங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

“பகுத்தறிவு என்பது யாவற்றையும்விட மேலானது. சிந்தித்தும், ஆழ்ந்து யோசித்தும், ஆராய்ந்தும், அனுபவத்தை யொட்டியும், சூழ்நிலைக்கேற்றவண்ணமும் அப்போதைக்கப் போது தன் வாழ்க்கையின் நிலையை மாற்றி அமைத்துக் கொள்வதும் நலனுக்கேற்றவாறு ஒவ்வொரு புதிய சாதனங் களையும் அமைத்துக் கொள்வதும் இதன் சம்பந்தப்பட்ட தாகும்”

மேலும், பகுத்தறிவாளர்க்குக் கடவுள், மதம், மூடநம்பிக்கை எதுவும் இல்லை என்பதும் பெரியாரின் முடிந்த கருத்தாகும். பகுத்தறிவினைப் பயன்படுத்தாமையால் சமுதாயத்துறையில் இன்றுள்ள வேற்றுமை, பகைமை, துவேசம், இழிவு, தரித்திரம், மடமை முதலியன விளைந்துள்ளன என்பதும் அவர்தம் கருத்தாகும். மனிதர்களாக வாழ்வதற்குப் பகுத்தறிவு விளக்கமாக வேண்டும். இயற்கைச் சிந்தனா சக்தி வளர்க்கப்பட வேண்டும் என்று இயம்பினார். ஒழுக்கமுடன் மக்கள் வாழ்வதன் அவசியத்தைப் பெரியார் வலியுறுத்தினார்.

*நன்னன், மா. பெரியாரைக் கேளுங்கள், 9. பகுத்தறிவு, ஏகம்பதிப்பகம், சென்னை, 2008, ப. 12

இதுகாறும் பகுத்தறிவு பற்றிய அடிப்படையான விளக்கங்களைக் கண்டோம். இனி, பாலி அறநூல்களில் புத்தர்பிரான் வழங்கியுள்ள பகுத்தறிவுச் சிந்தனைகள் பற்றிக் காண்போம்.

IV. பாலி அறநூல்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

வைதிக மதங்கள் கற்பித்துவந்த கடவுள், ஆன்மா ஆகியவற்றைப்பற்றிப் புத்தர்பிரான் உடன்பாடு தெரிவிக்கவில்லை. சமயத்தின் பெயராலும் வேள்வியின் பெயராலும் வைதிகர்கள் அறிமுகப்படுத்தியிருந்த சடங்குகளையும் அவர் ஏற்கவில்லை. அவர்கள் தங்கள் வசதிக்காக உண்டாக்கியிருந்த வருண பேதங்களைப் புத்தர்பிரான் அடியோடு களைந்தெறிந்தவர். மக்கள் எல்லோரும் சரிநிகர் சமானர் என்று முழக்கம் செய்தார். ஒழுக்கத்திற்கு முதன்மை தந்தார். புத்தர் போதனைகள் பலவும் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைக்கு வழிகாட்டியாகவும் ஆதார சக்தியாகவும் விளங்கியவை. இனி, நிறுத்தமுறையான் கடவுள் பற்றிய புத்தரின் கருத்தினைக் காண்போம்.

IV. 1. பகுத்தறிவுச் சிந்தனை - கடவுள்

மனிதனை வெளியே உள்ள எவருமே (External Agencies) முன்னேற்றிவிட முடியாது. தன் முயற்சியும் தன்னொழுக்கமுமே ஒருவனை உயர்த்தும் என்பதில் திடமான சிந்தனை கொண்டிருந்தவர் புத்தர்பிரான். ஒருமுறை இவர் சீடருள் ஒருவர், *'பெருமானே, கடவுள் இருக்கிறாரா?'* என்று வினா எழுப்பினார். புத்தர்பிரான் மறுமொழி பேசவில்லை. மீண்டும் *'கடவுள் இல்லையா?'* என்று கேட்டார். இந்தக் கேள்விக்கும் அவர் விடை சொல்லவில்லை. புத்தரின் மோனம் (The Great Silence of Buddha) அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தது. கடவுள் உண்டு இல்லை என்ற வாதங்களில் தலையிடாமல், மக்கள் அன்றாடம் செய்யவேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்துவருதல் வேண்டும் என்பதுவே அவர் உள்ளக்கிடக்கை என்று தெளிந்தனர். சுத்தபிடகத்தின் ஒருபகுதியாகிய சம்யுக்த நிகாயத்தில் இத்தகைய தேவையற்ற கேள்விகளைப் புத்தர் பொருட்படுத்தவில்லை என்ற கருத்து இடம்பெற்றுள்ளது.

IV. 2. ஆன்மா உண்டா?

உலகாயதம் தவிர இந்தியத் தத்துவங்கள் எல்லாம் நிலைபேறான தன்மையுடைய **ஆத்மன்** (Atman), **புருடன்** (Puruṣa), **சீவன்** (Jiva) என்ற பல சொற்களால் குறிக்கப்படும் உயிர் (Soul) உண்மையினை உடன்பட்டன. எப்பொருளிலும் முன்னையோர் கூறிய நிரந்தரமான ஆன்மா என்பதாக ஒன்று காணப்படவில்லை என்று இந்தியத் தத்துவ வரலாற்றில் முதன்முதல் ஆராய்ந்து உணர்த்தியவர் புத்தர்தான். **அநத்தலக்கண சுத்தம்** என்ற பிடகப் பகுதியில் **அனான்மவாதம்** (Non-Soul Theory) விரிவாகப் பேசப்படுகிறது. முதன்முதன் தன்நெறிக்கு மாறிய சீடர்களுக்கும் **ஆன்மா இல்லை** என்ற கொள்கையினைத்தான் புத்தர் போதித்தார். **விநயபிடகம், மகாவக்கம், சம்யுக்தநிகாயம்** முதலிய பாலி நூல்களில் இந்தக் கொள்கை பேசப்படுகிறது. இதன் சுருக்கத்தினைக் காண்போம்.

மனிதனின் ஆளுமை என்பது **உளக்கூறுகள், உடற் கூறுகள்** ஆகியவற்றின் கூட்டம். **உருவம், வேதனை, சஞ்ஞை, செய்கை, விஞ்ஞானம்** என்ற ஐந்து கந்தங்களின் சேர்க்கை தான் மனித வடிவம். இவற்றுள் **உருவக்கந்தம்** (Rūpa skandha) என்பது உடற்கூறுகளையும் (Physical Aspects of a man), ஏனைய நான்கு கந்தங்களும் உளக்கூறுகளையும் (Psychical Aspects of a man) உணர்த்துவன. இந்த நான்கு கந்தங்களையும் சுருக்கமாகக் கூறுவோம். இன்ப, துன்ப, நடுநிலை நுகர்வுகள் யாவும் **வேதனைக்கந்தம்** (Vedanā skandha) என்று கூறப்படும். **சஞ்ஞைக் கந்தம்** (Sañña skandha) என்பது கருத்துருவான அறிவு (Conceptual knowlege) ஆகும். இதனைக் **குறிப்பு** என்று தமிழில் சாத்தனார் வழங்கியுள்ளார். **செய்கைக் கந்தம்** (Samkhāra skandha) என்பது ஒருவன் புரியும் வினை களின் தொகுதியாகும். **விஞ்ஞானக்கந்தம்** (Viññanā skandha) என்பது உணர்வு (Consciousness) ஆகும். அறிதிறனும், உணர்ச்சியும், விருப்பாற்றலும் உடையது விஞ்ஞானம் எனப்படும் உணர்வு. மனிதனின் செயல்கள் யாவும் இவ்விஞ்ஞானக் கந்தத்தின் வழியே நடைபெறுவன.

இங்ஙனம் உடற்கூறுகளையும் உளக்கூறுகளையும் பகுத்தாராய்ந்த புத்தர், ஆன்மாவினால் ஆற்றப்படும் செயல்கள்

விடுபட்டன யாவை என்று எண்ணிப் பார்த்தார். ஏனைய தத்துவவாதிகளால் ஆன்மாவுக்குரிய செயல்களாகக் கூறப் பட்டவை எல்லாம் **விஞ்ஞானம்** ஆகிய உணர்வுபுரிவதால், **ஒரு செயலும் அற்ற ஆன்மா** என்பது ஒரு கற்பனை என்று ஒதுக்கினார்.

ஆன்மவாதிகள் நிலைபேறு, இன்பமயம், சுவாதந்தரியம் என்பன ஆன்மாவின் இயல்புகள் என்று கூறினர். இம் மூன்று தன்மைகளும் மனித ஆளுமையின் உடற்கூறிலோ உளக்கூறிலோ காணப்படவில்லை என்றார் புத்தர். மனித ஆளுமையினை உருவாக்கும் இவ்விருவகையான கூறுகள் தனித்தோ, சேர்ந்தோ மாற்றம் அடையும் தன்மையும் நிலைபெறா நீர்மையும் உடையன எனக்கூறினார். உலகப் பொருள்கள் யாவும் **தொடர்ந்து மாறும் தன்மை** (Constant Flux) உடையவை. ஆதலின், அமரத்துவம் அல்லது அழியாத தன்மை வாய்ந்த ஆன்மா என்பது மனித ஆளுமையில் இல்லை என்று புத்தர் புகட்டினார்.

IV. 3. சடங்குகள் தேவையா?

3.1. புனித நீராடல்

வேதப் பகுதியாகிய பிராமணங்களும் தரும சாத்திரங்களும் புனித நீராடினால் பாவம் போய்விடும் என்று கூறின. ***சங்காரவன்*** என்னும் அந்தணன், பகலில் செய்தபாவம் மாலையில் புனிதநீராடலானும், இரவில் செய்தபாவம் காலை நீராடலானும் கழுவப்படும் என்று நம்பினன். அவனைப் பார்த்துப் **புண்ணிகா** என்னும் பௌத்தப் பிக்குணி எள்ளி நகைத்துப் பேசத் தொடங்கினாள்:

ஒருவரின் பாவத்தினைத் தண்ணீர் போக்கிவிடும் என்றால், தண்ணீர்க்குள் தவளைகள், முதலைகள், பாம்புகள், மற்றும் நீரில் வாழ்வன எல்லாம் பாவத்தினின்றும் விடுபட்டு விண்ணகம் போயிருத்தல் வேண்டுமே! கசாப்புக் கடைக்காரரும் மீன்பிடிப்போரும் காட்டு விலங்குகளை வேட்டையடிப்பவரும், கள்வரும், கொலையாளிகளும் இத்தகைய தீவினையாளர் பிறரும் புனிதநீராடிப் புண்ணியப் பேற்றினை அடைந்தி ருக்கலாமே ?

துயரத்தினின்றும் தப்புவதற்கு ஏற்றவழி நீராடல் அன்று; புத்த, தன்ம, சங்கம் என்னும் மும்மணிகளிடமும் சரண் புகுதலும், சீலங்களைப் பின்பற்றி ஒழுகுதலுமே பாபநீக்கப் பாதை யாகும் என்றாள். இச்செய்தி சுத்தபிடகத்தில் **தேரி காதையில்** (236-51) அழகியலுணர்வுடன் சொல்லோவியம் செய்யப்பெற்றுள்ளது.

IV. 3.2. வேள்வித்தீ வளர்த்தல்

வேள்வித்தீ வளர்ப்பதால் பாபங்கள் சாம்பலாகும் என்று கூறிய வைதிகர் வழக்கத்தினையும் புத்தர்பிரான் உடன்பட வில்லை. புறவெளிச்சுத்தால் பாபம் போகாது. அகவிளக்கினை ஏற்றி அமைதி பெற்ற உள்ளத்துடன் சீலங்களை (-அறங் களை) மேற்கொண்டால் தீவினை தீண்டாது என்று சுத்த பிடகத்தின் ஒரு பகுதியாகிய சம்யுக்த நிகாயத்தில் (1.169) புத்தர் போதித்துள்ளார். **பாரத்துவாசர், காசிபர்** ஆகிய பிராமணர்கள் புத்தர்பிரானிடம் சரண்புகுந்தபின்னர், அவர் ஏற்றி வைத்த ஞானதீபத்தை மதித்து, வேள்வித்தீ பயனற்றது என்று வெறுத்தொதுக்கினர் என்று தேரிகாதை (219-341) எடுத்துரைக்கிறது.

நூறாண்டுகள் வனத்தில் வேள்வித்தீ வளர்த்து, ஆடு, மாடுகளைக் கொன்று உயர்வு பெறலாம் என்பதைப் புத்தர் வன்மையாகக் கண்டித்தார். புலன் வென்ற புன்மையில்லாத சான்றோரை ஒரு நிமிட நேரம் வணங்குவதால் உண்டாகும் நற்பயன் நூறாண்டுபுரியும் வேள்விப் பயனைவிட மேலானது என்று **தம்மபதம்** சாற்றுகிறது. (107)

IV. 3.3 திசைத்தெய்வ வணக்கம்

மகதநாட்டின் தலைநகராகிய இராசகிருகத்தில் வேலுவனம் என்னும் ஆராமத்தில் ஒருநாள் புத்தர் தங்கியிருந்தார். அப்பொழுது **சீகளன்** (Sigaḷa) என்னும் கிருகத்தன் விடியற் காலையில் எழுந்து புனலாடி, புலராத ஆடையினை உடுத்திக் கைகூப்பியபடியே கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, மேல், கீழ் என்னும் ஆறு திசைகளையும் வணங்கிக் கொண்டி ருந்தான். அவனைக் கண்ட புத்தர்பிரான், 'இளைஞனே!

இவ்வாறு புலராத ஆடைபூண்டு திசைகளை நோக்கி வணங்கு வதன் நோக்கம் யாது?' என்று கேட்டார். அந்த இளைஞன், தன் தந்தை இறுதிக் காலத்தில் தனக்கு இவ்வாறு வழிபாடு புரியக் கட்டளையிட்டதால் அதனை இப்படி நிறைவேற்றிக் கொண்டிருப்பதாகக் கூறினான். இவ்விளைஞனின் பொருளற்ற செயலை நோக்கிய புத்தர்பிரான் போதனை புரியத் தொடங் கினார். நம்பிக்கைகளும் சடங்குகளும் மேலோங்கிய காலத்தில் அவ்விளைஞனின் திசைத் தெய்வ வணக்கத்திற்கு ஒரு பொருளைக் கற்பித்து அந்தப்படி அதனைப்புரியக் கூறினார் :

> ***கிழக்குத்திசை என்பது பெற்றோரையும், தெந்திசை என்பது ஆசிரியரையும், மேல்திசை என்பது மனைவி மக்களையும், வடதிசை என்பது நண்பர்களையும் குறிக்கும் என்றார். கீழிடம் என்பது பணிமக்களையும், சார்ந்து வாழ்வோரையும் குறிக்கும், மேலிடம் என்பது ஞானக்குரவர்களைக் குறிக்கும் என்றார். இங்கே சுட்டப்பட்ட இவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்வதால் ஒருவன் திசைத் தெய்வங்களை வழிபட்டதைவிட மேலான பயன்களை அடைதல் இயலும் என்று போதித்தார்.***

எனவே, சடங்குகள் மனித முன்னேற்றத்திற்குத் தடைகள் என்பதனை நன்கு அறிந்திருந்த புத்தர்பிரான் பாமரர் வழியில் சென்று புது விளக்கம்தந்து அவர்களை நெறிப்படுத்தினார் என்பது புலனாகும்.

IV. 4. சமுதாயச் சமத்துவம் (Social Equality)

புத்தர்பிரான் தோன்றுவதற்கு முன்னர் வேதமார்க்கத்தவர் வருணாசிரம தருமங்களையும் சாதிபேதங்களையும் பரப்பி வந்தனர். ஒருவரின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவன்புரியும் செயல்களே காரணம், பிறப்பு அன்று என்பதை **முதன்முதல் விளக்கிப்பேசிச் சமுதாயச் சமத்துவத்தினை நிலைநாட்டிய சிறப்புக்குரியவர் புத்தர்தான்.**

மஜ்ஜிம நிகாயத்தில் அஸ்ஸலாயன சுத்தம் என்ற பகுதி சாதிபேதங்களைச் சாடுகிறது; சமத்துவத்தினை நிலைநாட்டு கிறது. நான்குவேறுமரங்களின் சுள்ளிகளை எரிப்பதால் உண்டாகும் சுடரொளி ஒரேமாதிரியாகத்தான் உள்ளது. அது

போல, நான்கு குலத்தவரும் நற்செயல்களினால் சரிநிகர் சமானராவர் என்று புத்தர் புகட்டியுள்ளார்.

யார் உண்மையான பிராமணன்? என்பதைத் தம்ம பதத்தில் புத்தர் விரிவாகக் கூறியுள்ளார். சடை முடியாலோ, பிறப்பினாலோ, கோத்திரத்தாலோ ஒருவன் அந்தணன் ஆதல் இயலாது. யாரிடத்தில் உண்மையும் தருமமும் உள்ளதோ அவரே தூயவர், அந்தணர் ஆவர் என்று **தம்மபதம்** சாற்று கிறது (393). பொறுமை இல்லாதவரிடத்தில் பொறுமையுடைய வராகவும், துன்பப்படுபவரிடத்தில் அன்புடையவராகவும், அவாவுடையவரிடத்தில் அவா அற்றவராகவும் உள்ளவர் எவராக இருப்பினும் அவரையே அந்தணர் என்று கூறுகிறார் புத்தர் (406). உண்மை பேசி, இன்சொற்களைச் சொல்லி, நல்லதைப் போதித்து வாழ்பவரே அந்தணர் ஆவர் (408).

சூத்தபிடகத்தின் ஒருபகுதி, 'ஒருவனைப் பற்றி உசாவு மிடத்து அவன் சாதியைப் பற்றிக் கேட்காதே, அவன் நடத்தையைப் பற்றிக் கேட்பாயாக' என்று இயம்புகிறது. வைதிக மார்க்கத்தின் சாதிக்கொடுமையினால் அமுக்கப்பட்ட அக்காலத்து மக்களுக்குச் சமுதாய விடுதலை வழங்க வந்த மனிதாபிமானியாகப் புத்தர்பிரான் திகழ்ந்தார்.

புத்தரைச் சரண்புகுந்தவர் பட்டியலில் மருத்துவர், பல்வேறு தொழிலாளிகள், திருந்திய கொள்ளையர், பொதுமக்கள், அந்தணர், அரசர், வணிகர் எனப்பற்பல குலத்தவரும் இடம் பெற்றனர். கடலில் சங்கமித்த பின் ஆறுகள் தம் பெயர் வேறுபாடுகளை இழந்து கடலாகவே மாறிவிடுதல்போல், புத்தசங்கத்தில் சேர்ந்தபின் மாந்தர் யாவரும் குலம், கோத்திரம் எல்லாம் மறைந்து சமானராகவே மாறி விடுகின்றனர் என்று **அங்குத்தர நிகாயம்** அறிவிக்கிறது.

IV. 5. அறன் வலியுறுத்தல்

சமத்துவம் பேசிய புத்தர்பிரான், மக்கள் அனைவரும் அறநெறியில் வாழ்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார். அவர் போதனை புரிந்த அறங்கள் யாவும் ***ஐவகைச் சீலங்கள்*** என்று பொதுவாகக் கூறப்பட்டன. அவையாவன :

1. கொல்லாமை 2. கள்ளாமை 3. காமமின்மை 4. பொய்யாமை 5. கள்ளுண்ணாமை என்பனவாகும். இவற்றுள் **கொல்லாமை** என்னும் அறம் ஒருவர் அல்லது ஒன்றன் உயிர்க்குப் பாதுகாப்பு அளித்தல் வேண்டும் என்பதை வலியுறுத்து கிறது. **கள்ளாமை** என்னும் ஒழுக்கம் பிறர் உடைமைக்குப் **பாதுகாப்பு அளித்தல் வேண்டும்** என்பதை எடுத்துரைப்பது. **காமமின்மை** என்பது தனக்கு உரிமை இல்லாத பெண்ணிடம் ஆசை கொள்ளாமையினை வற்புறுத்துகிறது. **பொய்யாமை** என்னும் சீலம் **உண்மைபேசும் ஒழுக்கத்தின் ஆற்றலை உணர்த்துவது**. அறிவினை மயங்கச் செய்யும் **குடிப்பழக்கத்தினை நீக்குதல்** வேண்டும் என்பதைக் **கள்ளுண்ணாமை** என்னும் சீலம் போதிக்கிறது. மஜ்ஜிம நிகாயத்தில் **சம்மாதிட்டி சுத்தத்தில்** ஒருவன் தவிரத் தக்கவினைகள் பற்றிய செய்தி காணப்படு கிறது. அவையாவன :

1. உடல் உறுப்புக்களால் தோன்றும் **கொலை, களவு, காமத்தீ விழைவும்;**
2. சொல்லில் தோன்றும் **பொய், புறங்கூறல், கடுஞ் சொல், பயனில் சொல்லும்;**
3. உள்ளத்தில் தோன்றும் **வெஃகல், வெகுளல், மயக்க உணர்வும்**

ஆகிய பத்துத் தீவினைகளையும் ஒருவன் விலக்குதல் அறம் ஆகும். இக்கருத்தினைத் திருவள்ளுவர் பல அதிகாரத் தலைப்புக்களில் விளக்கியுள்ளார். மணிமேகலையும் வழி மொழிந்தது (30.66-72).

இவற்றின் விரிவினையெல்லாம் திரிபிடகங்களில் விளங்கக் காணலாம். மனித வாழ்க்கை ஒழுக்கத்தினை மையமாகக் கொண்டது என்பது புத்தரின் போதனைச் சாரமாகும்.

V. நிறைவுரை

2500 ஆண்டுக்கு மேற்பட்ட பாலி மொழி புத்தர்பிரானின் தாய்மொழி. அவர் பொன்மொழிகளும் அவர்தம் சீடர்களின் வாய்மொழிகளும் **திரிபிடகங்களில்** அடங்கியுள்ளன. பகுத்தறிவுக்குப் புத்தர்பிரான் கொடுத்துள்ள விளக்கம் பெரியார்

ஈ.வெ.ரா.வைப் பெரிதும் கவர்ந்துள்ளது. சித்தர்நெறியும் கூட ஓரளவு புத்தர்நெறியின் வெளிப்பாடாகவே தோன்றுகிறது. திருவள்ளுவரும் புத்தரைப் பின்பற்றிப் பகுத்தறிவினை விளக்கியுள்ளார்.

பாலி அறநூல்களில் கடவுள், ஆன்மா என்பன ஒப்புக் கொள்ளப்படவில்லை. புனிதநீராடல், வேள்வித்தீ வளர்த்தல், திசை வணக்கம் முதலிய பழக்கங்களை அறிவியல் பூர்வமாகப் புத்தர்பிரான் கண்டித்துள்ளார். இந்தியாவில் சமத்துவத்தினைப் பேசிய முதல் ஞானி புத்தர்தான். இவர் ஒழுக்கத்தினைப் பெரிதும் வலியுறுத்தியுள்ளார். புத்தர்பிரானின் பகுத்தறிவுக் கொள்கைகளுக்குப் புதுவெளிச்சம் தந்தவர் பெரியார் ஈ.வெ.ரா. எனக்கூறலாம்.

துணைநூல்கள்

- Ambedkhar, B.R. The Buddha and His Dhamma. Bombay, 1957
- Charles Eliot, Hinduism and Buddhism : Volumes 1,2,3, 1921
- Das Gupta, S.N., A History of Indian Philosophy, Vol.I Cambridge, 1963
- Edward Conze, Buddhism, Its Essence and Development, NewYork, 1959
- Edward J. Thomas, The History of Buddhist Thought, London, 1953
- Har Dayal, The Bodhisattva Doctrine, London, 1932
- Kandaswamy, S.N. i. Buddhism As Expounded in Manimekalai, Annamalai University Publication, 1978 ii. தமிழிலக்கியத்தில் பௌத்தம், சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவத்துறை வெளியீடு, சென்னை 1977.
- Olden Berg Hermann, Buddha - His Life, His Doctrine, His Order, Calcutta, 1927
- Radhakrishnan, S. Indian Philosophy Volumes I&II, London, 1958
- Tachibana, S. The Ethics of Buddhism, London, 1926.

சீன அறநூல்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

உலகச் செம்மொழிகளின் வரிசையில் சீனம் சிறப்பான தொரு இடத்தினைப் பெற்றுள்ளது. சீனர்கள் மங்கோலிய இனத்தினர். சீனதேசம் நான்காயிரம் ஆண்டுகட்குக் குறையாத வரலாறு படைத்த பெருநாடு. மக்கள் தொகைப் பெருக்கத்தில் சீனம் முதல்நிலையில் உள்ளது. வடசீனப் பகுதியை **மஞ்சள் ஆறும்** (Yellow River, Huang Ho), தென்சீனப் பகுதியை **யாங்குச்சே ஆறும்** (Yangstze) வளப்படுத்துவன. இயற்கை வளம் கொழிக்கும் இப்பெருநாட்டில் கோபி (Gobi) பாலை நிலமும் உண்டு. இன்றைய உலகில் பல நிலைகளில் சீனதேசம் முன்னணியில் விளங்குகிறது.

சீனஇலக்கியம் நாலாயிரம் ஆண்டுகட்குக் குறையாத தொன்மைமிக்கது. சீனமொழியில் தோன்றிய ஆதி இலக்கியங் களைப் பற்றி முதலிற் சுருக்கமாகக் காண்போம்.

I. சீனமொழியின் ஆதிஇலக்கியங்கள்

சீனமொழியின் ஆதிஇலக்கியங்கள் யாவும் தொகை **இலக்கியங்கள்** (Anthologies) ஆகும். இவற்றைச் **செவ்வியல் பனுவல்கள்** (Classics) என்று கூறுவர். இவை 1. **ஷுகீங்கு** (Shu King) 2. **ஷீகீங்கு** (Shih King) 3. ***யீ கீங்கு*** (Yi King) 4. **லீகீ** (Li Ki) 5. ***சுன்சியு*** (Chun Chiu) என்று ஐந்து தொகுதி களாக எண்ணப்பெற்றன. இவை ஒவ்வொன்றின் உள்ளடக்கத் தினைச் சுருக்கமாகக் கூறுவோம்.

1. ஷு கீங்கு (Shu King கி.மு. 2400-700)

சீனச் செவ்வியல் பனுவல் தொகுதிகள் ஐந்தனுள் முதலாவதாக எண்ணப்படுவது **ஷுகீங்கு** (Shu King) ஆகும். இதனை **Shoo Keeng** என்று நெடிலொலியாக்கி உச்சரித்தல்

சோ.ந. கந்தசாமி

இயக்குநர், உலகச் செம்மொழிகள் உயராய்வு மையம்,
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613 010.

வேண்டும் என்று சீனவியலார் கூறுவர். **கீங்கு** என்ற சீனச் சொல்லிற்குப் **பனுவல்** (Book) என்பது பொருள். இத்தொகை நூல் பற்பல வரலாற்று நூல்களின் (Historical Writings) தொகுப் பாகும். இதனை **லெக்கே** (Legge) என்னும் அறிஞர் The Book of Historical Documents என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இதனைத் தமிழில் **வரலாற்றுப் பனுவல்** என்று வழங்கலாம். மிகப்பழைய ஆவணங்களில் இழந்தன போக இருந்தனவற்றைத் தொகுத்த ஒரு தொகைப்பனுவலாக இது திகழ்கிறது. ***அரசர்களின் தற்புகழ் ஆவணங்கள்***, தரண காவலரின் மனப்பூர்வமான பணிவுடைய **இறைவணக்கங்கள், புனிதம் மிக்க நீதிகள், அறிவுரைகள், போர்க்களத்தில் நிகழ்த்திய பேருரைகள், கையறுநிலை வெளிப்பாடுகள்** என்பன இந்த வரலாற்றுப்பனுவல் தொகுப்பில் அடங்கியுள்ளன. மிக்க தொன்மையுடைய ஆவணம் ***மன்னர் யாவோ*** (King Yao) கி.மு. 2,400இல் அரியணை ஏறிய செய்தியைக் கூறுகிறது.

2. ஷீ கீங்கு (Shih King கி.மு. 1700-600)

ஷீ என்ற சீனச்சொல் பாடலைக் குறிக்கிறது. கீங்-பனுவல். எனவே, **ஷீ கீங்கு** என்ற தொகையிலக்கியத்தின் பெயரினைத் தமிழில் **பாடற்பனுவல்** என்று மொழி பெயர்க்கலாம். இத்தொகையில் தொடக்கக் காலத்தில் 3,000 பாடல்கள் இருந்தன என்றும் அவற்றுள் தேர்ந்தெடுத்த 305 பாடல்களைக் **கன்பூசியசு** (கி.மு. 600) இதனுள் தொகுத்தார் என்றும் கூறுவர். சீனப்பெருஞானியாகிய கன்பூசியசு இந்தத் தொகையிலக்கியத்தில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். தமது போதனைகளிலும், உரைகளிலும் இதிலிருந்து பல பாடல்களை மேற்கோளாகக் காட்டி யுள்ளார்.

இப்பாடற்பனுவலில் இயற்கைக் காட்சிகளை வியந்து போற்றும் பாடல்கள், விந்தைமிக்க நாட்டுப்புறக் கதைகள், மனித உணர்ச்சிகளின் வெளிப்பாடுகள், கடவுட் பாடல்கள், பாடாண் பாடல்கள் முதலியன இடம்பெற்றுள்ளன.

பாடற்பனுவலை ஒவ்வொருவரும் படித்தல் வேண்டும் என்று **கன்பூசியசு** விரும்பினார். ஒருசமயம் தன்மகன் லீயைப் பார்த்து,

'இந்நூலின் அறிவார்ந்த பாடல்களைப் படிக்கவில்லை யென்றால், அவன் சுவரில் முட்டிக் கொள்ளவேண்டும்'

என்று பேசினார். இந்நூலைப் பயிலாதவன் வாழ்வியல் உண்மைகளை உணர முடியாமல் இடர்ப்படுவான் என்பது தான் இந்தச் சீனப் பெருஞானியின் கருத்தாகும்.

மற்றும் ஒருமுறை தன்மகனைப் பார்த்து,

'பாடற்பனுவலில் உள்ள பாக்களை நீ படிக்கவில்லை என்றால், உன்பேச்சும் எழுத்தும் செப்பம் பெறுதல் இல்லை'

என்று அறிவுறுத்தினார். இதனால், இத்தொகை இலக்கியத்தின் தனிச்சிறப்புப்புலனாகும்.

3. யீ கீங்கு (Yi King கி.மு. 1143)

யீ என்ற சீனச் சொல்லிற்கு மாற்றம் என்பது பொருள். கீங்கு - பனுவல். எனவே, **யீகீங்கு** என்பதைத் தமிழில் **மாற்றப்பனுவல்** (The Book of Changes அல்லது The Classic of Change என்று ஆங்கிலத்தில் வழங்குவர்) என்று வழங்கலாம். இந்நூல் **முன்னுணர்தல், மந்திரம், தந்திரம்** முதலியவற்றைப் பேசுதலின், இதனைக் **குறிநூல்** அல்லது **மந்திரப்பனுவல்** (The Book of Divination or Magic என்று ஆங்கிலத்தில் வழங்கினர்) என்று ***சீனவியலார்*** (Chinalogists) அழைத்தனர்.

சீனமரபின்படி (Chinese Tradition) இந்தப் பனுவலின் தோற்றம் சீனநாகரிகத்தின் தோற்றமான கி.மு. 3,322 ஆம் ஆண்டிற்குரியதாக அறிஞருள் சிலர் கருதினர். ***ஃபூ-ஹிசியா*** (Fu-Hsia) என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட ***முதல் சீன அரசும்*** கி.மு. 3,322இல் தோற்றுவிக்கப்பட்டது என்பர்.

எனினும், சீன அறிஞருள் பலர் இந்தப்பனுவல் கி.மு. 1143இல் தோன்றியது என்று கருத்துக் கொண்டுள்ளனர்.

4. லீகீ (Li Ki)

இப்பனுவல் பண்டைய சீனமக்கள் மேற்கொண்டிருந்த நம்பிக்கைகள், சடங்குகள், கிரியைகள் (Rites and ceremonies) ஆகியவற்றை விரித்துரைப்பது. இதனைச் ***சடங்குப்பனுவல்***

என்று தமிழில் வழங்கலாம். கன்பூசியசின் காலத்திற்குப் பின்புகூடப் பிற்சேர்க்கைகளாகப் பற்பல இதனுள் இணைக்கப் பெற்றுள்ளன. இந்தத் தொகைநூலில் இலக்கியச் சுவையினை எதிர்பார்த்தற்கில்லை.

இப்பனுவல் தீக்கிரையாகிவிட்டது. கி.மு. முதல் நூற்றாண்டில் மீண்டும் கண்டெடுக்கப்பட்டது என்பர். பேராசான் கன்பூசியசு சீனச்சடங்குகளுக்குக் கௌரவம் அளித்தவர். சடங்குகள் யாவும் ஒழுங்காகவும் முறையாகவும் நடைபெற வேண்டும் என்று அவர் போதித்தார். இத்தகைய போதனையினால் இந்தச் சீனஞானி சமுதாய முன்னேற்றத் தினைத் தடுத்துவிட்டார் எனக் கருதுவோரும் உள்ளனர்.

5. சூன்சீயு (Chun Chiu)

இந்நூல் கன்பூசியசின் படைப்பாக விளங்குகிறது. இதனை The Spring and Autumn என்று ஆங்கிலத்தில் வழங்குவர். தமிழில் **இளவேனிற் காலமும் இலையுதிர் காலமும்** என்று கூறுதல் சாலும். இப்பனுவல் கி.மு. 722-481 என்ற காலப் பகுதியில் சீனப்பெருநாட்டினை அரசாண்ட வேந்தர்களின் வரலாற்றினைக் கூறுகிறது. இஃது ஓர் ஆவணம் என்ற அளவில் சிறப்புடையது. இதில் இலக்கியச் சுவையினை எதிர்பார்த்தல் கூடாது. பிற்சேர்க்கைப் பகுதியும் இதில் உண்டு.

மேலே கூறப்பெற்ற ஐந்து தொகை இலக்கியங்களைத் தவிரக் குறிப்பிடத்தக்க வேறு சில நூல்களும் உள்ளன. அவற்றைக் காண்போம்.

II. நாற் பெரும்பனுவல்கள் (Four Great Books)

இந்தத் தொகை இலக்கியத்திற்குத் **தத்துவ ஞானிகளின் பனுவல்** (The Books of the Philosophers) என்ற பெயரும் வழங்கிவருகிறது. இந்த நான்கு பனுவல்களும் பேராசான் கன்பூசியசினாலும் அவர்தம் சீடர்களாலும் இயற்றப் பெற்றவை ஆகும். இந்த நாற்பெரும் பனுவல்களில் முதலில் வைத்து எண்ணப் பெறுவது **லூன்யூ** (Lunyu) **அல்லது அனலெக்ட்சு** (Analects) என்ற நூலாகும். இதனை எழுதியவர் கன்பூசியசு. கன்பூசியசின் சிந்தனைகளும் விழுமியங்களும் இந்த நூலில்

பொதிந்துள்ளன. இவர்தம் போதனைகளைக் கேட்டறிந்த அவர்தம் சீடருள் ஒருவர் இந்தப் பனுவலைத் தொகுத்துள்ளார் என்பது **சீனவியலாரின்** (Chinologists) கருத்து.

கிறித்தவர்க்குப் **புதிய ஏற்பாட்டின்** (New Testament) முதல் நான்கு அதிகாரங்களைப் (First four Gospels)போல, சீனமக்களுக்கு **அனலெக்ட்சு** என்ற பனுவல் அமைந்துள்ளது என்பர் ஒப்பியலார்.

இரண்டாவது பனுவல் **மென்சியசின் போதனைகள்** (The Sayings of Mencius) ஆகும். ஏசுபிரானுக்கு ஏற்ற சீடராகப் **பால்** (St. Paul) திகழ்ந்தமைபோல, கன்பூசியசுக் கொள்கை களைப் பரப்பும் பணியில் தலைசிறந்தவராக மென்சியசு (Mencius) விளங்கினார்.

மூன்றாவது பனுவல் ***தா ஹிசியோ*** (Ta Hasio) என்பதாகும். இதனை The great learning என்று ஆங்கில ஆக்கம் செய்துள்ளனர். தமிழில் **பெருங்கல்விப்பனுவல்** என்று இதனை வழங்கலாம். நான்காவது நூல் ***சுங்யுங்*** (Chung Yung) என்ற நூல் சீனஞானி கன்பூசியசின் பேரர் ஒருவரால் எழுதப் பெற்றது. தமிழில் **சமனிலைக்கோட்பாட்டுநூல்** என்று இதனைக் கூறலாம். இந்நூலில் ***மிதத்தன்மை*** (Temperance) அல்லது **பொருள்களின் ஒத்திசைவு** (Harmony in all things) பற்றிய போதனைகள் பொதிந்துள்ளன.

III. பிற முக்கியப் பனுவல்கள்

ஹிசியோ பனுவல் (Hsiao King) என்ற நூல் குறிப்பிடத் தக்கது. இதனை **The Classic of Filial Piety** என்று ஆங்கில ஆக்கம் செய்துள்ளார். இதனைத் தமிழில் **பெற்றோரன்புப் பனுவல்** எனக் கூறலாம். **Filial Piety** என்பது பெற்றோர்க்குப் பிள்ளைகள் செலுத்த வேண்டிய மரியாதையுடன்கூடிய பக்தியைக் குறிப்பதாகும். இப்பனுவலின் ஆசிரியர் கன்பூசியசு என்றும், அவர் நெறியைப் பரப்புவதில் ஈடுபாடுகொண்ட வேறொருவர் என்றும் இருவேறு கருத்துக்கள் அறிஞரிடையே நிலவுகின்றன.

IV இலவோசியம் (Lao-Tzeism) அல்லது தாவுமார்க்கம் (Taoism)

கி.மு. 6ஆம் நூற்றாண்டில் கன்பூசியசின் உடன் காலத்தவராக வாழ்ந்த மற்றொரு ஞானி இலவோசியசு ஆவர். சீனமொழியில் **இலவோ** (Lao) - **முதுமை** (Old), **சியசு** (Tzu) - ஒரு மரியாதைச் சொல்; முனிவர்க்கும் கவிஞர்க்கும் வழங்கப் படுவது. எனவே, **இலவோசியசு** (Lao-Tze) அறிவினால் முதிர்ச்சியும் அனைவரின் மரியாதையினையும் பெற்றவர் ஆவர்.

தமக்கு முன்பே வழங்கிய நெறியினைத் தாம் வழி மொழிந்தவர் என்று இவர் தன்னைத் தானே சொல்லிக் கொள்ளுகின்றார். தாவு மார்க்கத்தினை நிறுவியவர் இவர். **தாவு** (Tao) என்ற சொல் **முற்றமுடிந்த மறைபொருள், எல்லாம் கடந்தபொருள், நல்வழி, வழிநடத்துதல்** முதலிய பல பொருள்களைத் தரும்.

இலவோசியசு எழுதியுள்ள **தாவோதேசிங்கு** (Tao Te Ching) என்ற நூல் விவிலியத்திற்கு அடுத்தபடியாக உலகின் மிகப்பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. **தாவுமார்க்கம்** முற்றிலும் அறிவார்ந்த சமயம் (Most Purely intellectual religion) எனப் போற்றப்படுகிறது.

V. சட்டவிய நூல் (Legalistic Literature)

அரசாட்சியில் திறமையும் சமுதாயத்தில் ஒழுங்கமைதி யும் உண்டாவதற்குரிய ஒரேவழி சட்டத்தினை மதித்து நடத்தலே ஆகும் என்று சீன அறிஞர்கள் ஒரு சாரார் எண்ணினர். **ஹுவான் கோமகனிடம்** (Duke Huan) முதலமைச்சராக விளங்கிய **குவான்சுங்கு** (Kuan Chung) எழுதியதாகக் கூறப்படும் **குவான்சூ** (Kuan-Tzu) என்ற நூல் **சட்டவியத்தைப்** (Legalism) பேசுகிறது. **ஷங்குயங்கு** (Shang Yang) என்பார் எழுதியதாகக் கருதப்பெறும் **ஷங்கு-சூன்சூ** (Shang-Chun shu) என்ற நூல் சட்டத்தினை மதித்தல் வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்துகிறது. இந்நூலின் காலம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு. **ஹன்ஃபே** (Han Fei) என்பாரும் இதே காலத்தில் **ஹன்-ஃபே-சூ** (Han-fei-tze) என்ற சட்டவியத்தத்துவ நூலினை எழுதியுள்ளார்.

சீன இலக்கியப்பரப்பு அகன்று விரிந்துபரந்தது. ஆதலின் மேலே சொல்லப்பெற்றுள்ள நூல்களின் அளவில் பகுத்தறிவுச் சிந்தனைகளும் மனிதநேயச் சிந்தனைகளும் கூறப்பெற்றுள்ள பாங்கினை ஆராய்தல் முறையாகும். இந்த ஆராய்ச்சிக்கு முன்னதாகப் பகுத்தறிவு பற்றிய மேலைநாட்டறிஞர் சிலரின் கருத்துகளைச் சுருக்கமாகக் கூறுதல் பயன் அளிக்கும்.

VI. பகுத்தறிவு - மேலை நாட்டார் விளக்கம்

எப்பொருளையும் காரண-காரிய அடிப்படையில் சிந்தித்து உண்மை கூறுதல் வேண்டும் என்பது மேலைநாட்டுப் பகுத்தறிவாளர் பலரின் எண்ணமாகும். **Rationalism** என்ற சொல் பகுத்தறிவுபற்றிய கொள்கைக் குறியீடாகக் கொள்ளப் படுகிறது. **Rationalistic thinking** என்ற சொல் பகுத்தறிவு சார்ந்து சிந்தித்தலைச் சுட்டுகிறது. கிரேக்கச் சிந்தனையாளர் காலத்திலிருந்து **பெட்ரண்ட் ரஸ்ஸல்** காலம் வரை **பகுத்தறிவுச் சிந்தனை** பற்றிய பல்வேறு கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சிலவற்றை இங்குக் காண்போம்.

1. அறிவுக்குப் பொருத்தமானதும் உண்மையும் ஒத்தே இருக்கும் என்பது **பர்மேனிடெசு** (Parmenides) என்ற சிந்தனையாளரின் கருத்தாகும். **உண்மை** (Reality) என்பது புலன் அனுபவத்திற்கு முற்றிலும் அயன்மை உடையது என்று விளக்கினார். (Parmenides found it possible on the basis of this principle to **identify the rational and the real**, describing reality in terms, quite foreign to sense experience).
2. மரபு வழிப்பட்ட அறிவின் வேறாகப் **பகுத்தறி வியத்தைக்** (Rationalism) கருதினர். புதிய அறிவினைப் பின்பற்றுவதுதான் **பகுத்தறிவியம்** எனப்படும் என்று கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் பிரான்சிலும் செருமனி யிலும் வாழ்ந்த தத்துவ மெய்ஞ்ஞானிகள் கருதினர். (Rationalism means following the new knowledge, rather than the traditional ways).
3. இறையியலில் (Theology) **பகுத்தறிவியம்** (Rationalism) பயன்பட்டது. சமய நம்பிக்கைகளை ஆராய்தற்குரிய

அணுகுமுறையாக இது பயன்பட்டது. நம்பிக்கையின் இடத்தினை **நம்பிக்கை ஆதாரம்** (Reason) எடுத்துக் கொண்டது.

சில நிலைகளில், **பகுத்தறிவியம்** என்பது **நவீனம்** (Modernism) என்பதற்குச் சமமான சொல்லாகக் கொள்ளப் பட்டது. விவிலிய நூல்களைப் பகுத்தாராய்ந்து பயில்வதற்குப் பகுத்தறிவியத்தைக் கிறித்தவத்தின் இருபெரும் பிரிவினரும் பயன்படுத்தினர்.

4. காரணம் அல்லது ஆதாரம் என்பதன் அடிப்படையில் அறிவுவாயிலாக விளங்கும் எந்தக் கருத்தினையும் **பகுத்தறிவியம்** (Rationalism) எனக் கொள்ளலாம்.
5. சமய நெறியில், **கடவுட்கொடை** (Revelation) என்பதற்கு முரண்பட்ட நிலையில் **பகுத்தறிவு** (Reason) விளங்குகிறது.
6. அறத்துறையில் (Ethics), உணர்ச்சிக்கும் உணர்வுக்கும் (Emotion and Feeling) முரண்பாடாகப் பகுத்தறிவு திகழ்கிறது.
7. தத்துவத்துறையில் (Philosophy) புலக்காட்சிக்கு முரண்பட்டதாக அது விளங்குகிறது.
8. அறிவுக்குரிய முதன்மை வாயிலாகவும், அறிவினைப் பரிசோதித்துப் பார்க்கும் கருவியாகவும் திகழும் மெய்யியல் கருத்துதான் பகுத்தறிவியம் எனப்படும் (Rationalism is the philosphical view that regards reason as the chief source and test of knowledge).
9. **பகுத்தறிவியம்** (Rationslism) என்பது **அனுபவவியம்** (Empiricism) என்பதற்கு நேர்முரணானது. அனுபவியம் என்பது புலக்காட்சியினின்றும் அறிவு வெளிப்படும் என்றும், அதனால் அறிவு சோதிக்கப்படும் என்றும் கூறும் தத்துவக் கொள்கையாகும்.

ஆனால், **பகுத்தறிவியம்** என்பது புலக்காட்சிக்கு அப்பாலும் உண்மைகள் உள்ளன என்றும் அவற்றை அறிவதற்குரிய

ஆற்றலாக ஆதாரமும் காரணமும் மேற்கொள்ளப்படும் என்றும் எடுத்துரைக்கும் தத்துவக் கொள்கையாகும்.

10. Reason - என்ற சொல் மனிதனின் அறிதிறனைக் (Cognitive power) குறிப்பது என்றும்; இயற்கை கடந்த ஆற்றலாலும், அருளாலும் நம்பிக்கையாலும் அறியலாம் என்ற கருத்தினை மறுத்துரைப்பதற்கு மூலமாக இருப்பது என்றும் ஒருசாரார் கருதினர்.

இருபதாம் நூற்றாண்டில் மூடநம்பிக்கை இருளினின்றும் தமிழ்மக்களை அறிவு வெளிச்சத்திற்கு அழைத்துவந்த பெரியார் ஈ.வெ.ரா. பகுத்தறிவு பற்றிக்கூறிய ஒருசில கருத்துகளையும் இங்கே காண்போம்.

VII. பகுத்தறிவு - பெரியாரின் விளக்கம்

மூடநம்பிக்கைகள், அவதாரங்கள். அதிசயங்கள், சாதி பேதங்கள், ஆண்-பெண் வேறுபாடு என்பன தனிமனித வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டைகள் என்றார் பெரியார். ஆராய்ச்சிக்குப் பொருந்தாத எதனையும் ஏற்கக்கூடாது என முழங்கினார். புராணங்கள், சாத்திரங்கள், சம்பிரதாயங்கள் என்பனவற்றையும் வெறுத்து ஒதுக்கினார்.

மனிதப்பண்புக்கும் ஒழுக்கத்திற்கும் முதன்மை அளித்தவர் பெரியார். சாதிக்கு மதிப்புத் தராதே, தீண்டத்தகாதவன் என்று ஒதுக்காதே; பெண் ஆணுக்கு அடிமை இல்லை, ஆணும் பெண்ணுக்கு அடிமை இல்லை, யாவரும் சரிநிகர் சமானரே என்று சமத்துவம் பேசினார்.

பெரியாரின் பகுத்தறிவியத்தில் **1.** மனித நேயம் **2.** சமத்துவம் **3.** ஒழுக்கம் **4.** அறிவு **5.** பண்பாடு என்பன முதன்மை பெற்றன.

இப்பின்புலத்துடன் சீனச்சிந்தனையாளரில் முதன்மை வாய்ந்தவராகப் பாராட்டப்பெறும் கன்பூசியசின் எழுத்துக் களில் காணப்படும் பகுத்தறிவுச் சிந்தனைகள் சிலவற்றைப் பெரும்பாலும் அவருடைய **அனலெக்ட்சு** (Analects) என்ற நூலிலிருந்தும் அவர் வாழ்வியலிலிருந்தும் காண்போம்.

VIII. கன்பூசியசின் பகுத்தறிவுச் சிந்தனைகள்

சீனஞானி கன்பூசியசு தன் சீடர்களுக்கும், ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்க்கும் பொதுமக்களுக்கும் போதனைகள் புரிந்துள்ளார். அவற்றில் பகுத்தறிவுக்கு ஒத்துவரக்கூடிய சிந்தனைகளை நோக்குவோம்.

1. சேகுங்கு (Tsekung) என்னும் கோமகனை முன்னிலைப் படுத்திக் கன்பூசியசு பேசினார் :

   "ஐயா, சேகுங்கு! நல்ல உழவன் வயலில் நடவு செய்கிறான்; ஆனால், அறுவடையினைப் பற்றி உறுதி சொல்ல முடியாது. நல்ல கைவினைஞன் திறமைமிக்க ஒரு தொழிலைப் புரிகிறான்; ஆனால், வாடிக்கையாளரைத் திருப்தி செய்ய முடியாது.

   உம்மை நீவிரே பண்படுத்திக் கொள்ளுவதில் அக்கறை காட்டுதல் இல்லை. ஆனால், உம்மை மக்கள் ஏற்றுப் போற்றுதல் வேண்டும் என்பதில் அக்கறை காட்டுகிறீர்கள்! உமக்கு நீவிரே உயர்ந்த எடுத்துக்காட்டாக அமைத்துக் கொள்ளாமையினை நோக்கி அஞ்சுகிறேன்.''

   ஒருவன் தன்னைத்தானே பண்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் (Self-cultivation) என்பது அவர் கருத்து.

2. கங்குசி (Kang Chi) என்னும் கோமகனுக்கு வழங்கிய அறிவுரையைக் காண்போம் :

   ''முறை திறம்பாத மனிதரை அதிகாரத்தில் அமர்த்துக. அவர்கள் முறைதிறம்பியவரின் அளவுகோலாகப் பணி புரியட்டும். முடிவில், முறைதிறம்பியவர்கள் நீதிமான் களாகத் திருந்தி விடுவர்.''

   நல்லோரின் சார்பினால் அல்லவர் கூடத் திருந்துவர் என்று எதிர்பார்த்தார்.

3. கன்பூசியம் மனிதநேயத்தை மையமாகக் கொண்டது. மனிதன் சகமனிதனிடம் புலப்படுத்த வேண்டிய உறவு களைக் கன்பூசியசு வலியுறுத்தினார். பயனற்ற அப்பாலைத்

தத்துவத்திலோ (Transcendentalism), மறையியலிலோ (Mysticism) அமரத்துவத்திலோ (Immortality), ஆவிகள் உலகிலோ அவர் அக்கறை காட்டவில்லை. **மனிதனின் மேலளவு மனிதனே** (The measure of man is man) என்பதுதான் அவர்தம் மையக் கொள்கை.

அவர் கருத்தின்படி, மனிதன் பூரணத்துவம் (perfection) அடைவதற்குக் கடவுளை நோக்கத் தேவையில்லை என்பதும் தன்னாற்றலிலும் (Self-power), தற்பண்பாட்டிலும் (Self-cultivation) நாட்டம் செலுத்துதல் வேண்டும் என்பதும் புலனாகும்.

4. சமுதாயத்தில் அமைதி நிலவவேண்டுமெனின் நீதி அடிப்படையாக அமைதல் வேண்டும். இத்தகைய சமுதாய அமைப்பினின்றுதான் **அரசியல் அமைதி** (Political Peace) உருவாக முடியும்.
5. பகுத்தறிவு சார்ந்த சமுதாய அமைப்பினை **லீ** (Li **அல்லது** Lee) என்று குறிப்பிட்டார்.
6. நன்னெறி, நற்பண்பு, நல்லொழுக்கம் என்பனவற்றின் ஒரு பெயரே **லீ** என்றும் கூறினார்.
7. மனித நேயத்தினை (Humanism) வலியுறுத்தினார்.
8. நல்ல மகனாக, நல்ல மகளாக, நல்ல சகோதரனாக, நல்ல சகோதரியாக, நல்ல குடிமகனாக இருப்பதன் வாயிலாகவே ஒருவன் **உண்மையான மனிதனாக** (Real Man) இருத்தல் முடியும்.
9. அன்புடைமை, நடுநிலை பிறழாமை, சான்றாண்மை, பண்புடைமை, அறிவுடைமை, நேர்மை, **நடுப்பாதை** (Middle - Path), புலனடக்கம் என்பனவற்றைப் பெரிதும் வலியுறுத்தினார். (Vide, Ethics of the great Religions, p. 221)
10. சிந்தனை இல்லாத கல்வியும், கல்வி இல்லாத சிந்தனையும் ஆபத்தானது என்பது இவர்தம் பொன்மொழி. (**Vide**, The **Ideals** of East and West, p. 49)

11. பிறர் உனக்கு என்ன செய்யக்கூடாது என்று எதிர் பார்க்கிறாயோ, அதனை நீயும் பிறர்க்குச் செய்யாதே என்பது இவர்தம் அறிவுரை. இதனால் சமுதாயத்தில் அமைதி நிலவும்.

12. தனிஒருவன் ஒழுக்கம் உடையவனாக இருந்தால்தான் **சமுதாய ஒழுங்கு** நிலைபெறும். குடும்பவாழ்வு ஒழுங்காக இருந்தால்தான் தேசிய வாழ்வு ஒழுங்காக அமையும்.

13. சொல்லும் செயலும் வேறுபட்டவர்கள் போலிகள் வஞ்சகர்கள் (Hypocrites); அவர்கள் வெறுக்கத்தக்கவர்கள்.

14. தான் புரிந்தது தவறு என்பதை ஒருவன் தெரிந்திருந்தும், தன்னைத் திருத்திக் கொள்ளவில்லை எனின், மற்றுமொரு தவறு புரிந்தவன் ஆகிறான்.

15. எடை பார்ப்பவர்களுக்குத் துலாக்கோல் பயன்படுகிறது. தச்சர்களுக்கு அவர்தம் தொழிலுக்குரிய கருவிகள் பயன் படுகின்றன. மாலுமிகளுக்குத் திசைகாட்டும் கருவிகள் பயன்படுகின்றன. ***சமுதாய ஒழுங்கிற்கு லீ*** என்னும் ஒழுங்குமுறை பயன்படுகிறது.

16. பழைய அணை என்பதற்காக அது பயன்படாது எனக் கருதி அதனை அழிக்கக் கருதும் மக்கள் வெள்ளப் பெருக்கால் உறுதியாக அழிவினைச் சந்திக்க வேண்டி யிருக்கும். அதுபோலவே ***லீ*** (Li-Lee) என்பது பழைமை யானது, பயன்படாதது என்று எண்ணிக்கொண்டு அதனை அழிக்க எண்ணுவோர் அறப்பேரழிவினைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று கன்பூசியசு எச்சரிக்கை விடுத்தார்.

17. பெரிய மனிதன் என்பவன் இயற்கை விதிகளை எளிதில் பின்பற்றுகிறான். இயற்கை விதிகளை எளிதில் பின்பற்றுபவன் நல்ல மனிதன் ஆவன்.

18. ***"வானளாவ வல்லூறு உயர்ந்து போகிறது;***
அடிவரை மீன்கள் ஆழ்ந்து செல்கின்றன"

(இந்தப் பொன்மொழி **பாடற்பனுவலில்** (The Book of Songs) உள்ளது. இதற்குக் கன்பூசியசு தரும் விளக்கம் இதுவே:

நனியுயர்ந்த வானிலோ **நனி ஆழ்ந்த நீரிலோ** ஒழுங்கின் சட்டம் காணப்படாத இடமே இல்லை. ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உள்ள உறவில் தொடங்கிப் பிரபஞ்சத்தின் கடைசி எல்லைகள் வரையும் ஒழுங்கின் நியதி செயல்படுதலை **நீதிமான்** (Moral Man) காண்கிறான்.)

19. **நீதி உணர்வு** (Moral sense) மனிதனின் சிறப்பியல்பாக அமைதல் வேண்டும். எது சரி, எது தவறு; எது தக்கது, எது தகாதது என்பதை அடையாளம் காண்பிப்பது **நியாய உணர்வு** (The Sense of Justice) எனப்படும். இதனைச் சீன மொழியில் **யீ** (Yi) என்று கூறுவர்.

20. **கல்வியறிவினைப்** (Knowledge) பெறுவதற்குரிய வேட்கை **புத்தியுடைமைக்குச்** (Wisdom) சமமானது. நல்லொழுக்கத் தில் செலுத்தும் தீவிரக்கவனம் இரக்க உணர்வுக்குச் சமம். நாணத்தக்கவற்றுக்கு நாணுதல்தான் **வீரம்** என்று கூறப் படும்.

21. நீ என்ன கற்கிறாய் என்பது முக்கியம் அன்று; ஆனால், ஒருமுறை ஒன்றை நீ கற்றால் அதில் முழுத் தேர்ச்சிப் பெறுதற்கு முன்னர் அதனை ஒரு பொழுதும் கைவிடுதல் கூடாது.

22. மக்கள் பிறப்பினால் ஒத்தவர்கள். ஆனால், அவர்களுடைய பழக்கவழக்கங்களால் ஒருவருக்கு ஒருவர் வேறுபட்டு வளர்கின்றனர்.

(இந்தக் கருத்து,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

என்ற திருக்குறளுடன் ஒப்பிட்டு உணர்ந்து மகிழத்தக்கது)

23. புத்திசாலிக்கு (Wiseman) குழப்பங்கள் இல்லை. உண்மை மனிதனுக்குத் (True man) துயரம் இல்லை. வீர மனிதனுக்கு (Brave man) அச்சம் இல்லை.

இங்ஙனம் எண்ணற்ற வாழ்வியல் மேம்பாட்டுச் சிந்தனை களைக் கன்பூசியசு வழங்கியுள்ளார். இவையாவும் மனித

நேயம், பகுத்தறிவு ஆகிய இரண்டின் அடிப்படையில் வெளிப்பட்டவை எனலாம்.

இனி, கன்பூசியசின் உடன்காலத்தவரான **இலவோசியசின்** சிந்தனைகளில் சிலவற்றைக் காண்போம்.

IX. இலவோசியசின் பகுத்தறிவுச் சிந்தனைகள்

சீனமக்களின் வாழ்வியலைச் செம்மைப்படுத்திய சிந்தனை யாளரில் கன்பூசியசுக்கு அடுத்த நிலையில் கருதப்படுபவர் இலவோசியசு (Lao-Tze அல்லது Laocius) ஆவர். இவர் எழுதிய **தாவோதேசிங்கு** (Tao Te Ching) என்ற நூலில் இவர்தம் சிந்தனைகள் அடங்கியுள்ளன. இவர் காட்டிய நெறியினைத் **தாவுமார்க்கம்** (Taoism) எனக் கூறுவர்.

தாவோ (Tao) என்ற சொல்லுக்குப் பல பொருள் கூறப் படுகிறது. ஒரு சிலவற்றைக் குறித்தல் சாலும்.

1. தாவு என்ற சொல் ***அறப்பாதை*** (Path of Virtue) என்ற பொருள் தருவது.
2. இச்சொல் வழி நடத்துவோரையும் குறிப்பது.
3. தாவு என்பதற்கு முற்ற முடிந்த மெய்ப்பொருள் என்பது ஒரு பொருள்.
4. அது (தாவு) உயரங்களுக்கெல்லாம் உயரமானது; ஆனால் அது உயரம் அன்று. அது கீழே உள்ள வற்றுக்கெல்லாம் கீழே இருப்பது; ஆனால் அது கீழ் அன்று. அது மூத்ததுக்கெல்லாம் மூத்தது; ஆனால் அது முதியது அன்று.
5. தாவு என்பது சுத்த சைதன்யம் = வாலறிவு (Pure Knowledge)

தாவு நெறியில் ஊன்றி நடப்பவர் தன்னம்பிக்கையும் பிறர் உதவி நாடாமையும் உடையவர்கள்.

அறியாமைதான் அறக்கேட்டிற்குக் காரணம். ஆதலினால், அறிவுடையோன் அறத்தைப் பேணுபவன் ஆவன்.

எது ஒழுங்கோ அதனைச் செய்தல், இயற்கை விதிகளை மதித்து நடத்தல் முதன்மையானது.

பெண்ணியல்புகள் இல்லாத முழுமையான ஆணோ, ஆணியல்புகள் இல்லாத முழுமையான பெண்ணோ உலகில் இல்லை.

செய்திகளின் தொகுப்பினைத் தேடுதலையும் நினைவில் சேமித்தலையும் **புலமைத்திறம்** (Erudition) என்று கூறுவர். இத்தகைய அறிவு இயக்கம் இல்லாதது (static); இறந்த காலத்தொடும் வரலாற்றொடும் தொடர்புடையது. இறந்த காலம் என்பது இறப்பு; நிகழ்காலம் என்பது வாழ்வு. அறிவு என்பது ஆன்மிகத்துடன் தொடர்புடையது; நிகழ்காலத்தினை நினைப்பது. தாவுநெறிக்குரிய முனிவர்கள் மக்களுக்கு எதையும் போதிக்கமாட்டார்; தானே எடுத்துக்காட்டாக ஒளிவீசுவார்.

வாழ், வாழவிடு என்பதுதான் இயற்கைத் தன்மை. தனிவாழ்விலும், சமுதாய வாழ்விலும் உண்டாகும் உரசலைத் தவிர்த்தலும் உரசலால் உண்டாகும் வேறுபாட்டையும் முரண்பாட்டையும் தவிர்த்தலும் இயற்கைத் தன்மைக் கோட்பாடாகும்.

உணர்ச்சிக்கு வசப்படாமையும் ஆசையின்மையும் மனஇறுக்கத்தினின்றும் விடுதலை அளிக்கும்.

> *"தாக்குகிற ஆட்டுக்கிடா ஒரு சுவரை உடைத்துத்தள்ளி விடும்; ஆனால் உடைபட்டதைப் பழுதுபார்க்க அதனால் இயலாது"*

> *"நல்ல முடிவுக்கு வந்த பலாத்கார மனிதனை எனக்குக் காட்டுங்கள். அவனை எனக்குக் குருவாக எடுத்துக் கொள்ளுவேன்."*

முதிர்ச்சியும் பண்பாடும் கொண்ட ஒருவன் பலாத்காரத்தில் ஈடுபடமாட்டான் என்பதுதான் இலவோசியசின் எண்ணம்.

அறவோன் எண்வகை இயல்புகளை உடையவன் :

1. பிறரைப் புரிந்து கொள்ளுபவன் புத்திசாலி.
2. தன்னைப் புரிந்து கொள்ளுபவன் மெய்ஞ்ஞானி.

3. பிறரை வெல்லுபவன் பலசாலி.
4. தன்னையே வெல்லுகிறவன் பெரும் பலசாலி.
5. மனநிறைவு பெற்றவனே பெருஞ்செல்வன்.
6. எடுத்த நல்வினையினை ஆற்றலுடன் தொடர்பவன் மனவலிமை மிக்கவன்.
7. பதிஎழு வறியாப் பண்பினன் நெடுநாள் நிலை பெறுபவன்.

பூரண மனிதன் (Perfect man) யார்? என்பதையும் இலவோசியசு விளக்கியுள்ளார் :

1. குளிர்காலத்தில் நீரோடையினைக் கடப்பவனைப் போலக் கவனம் மிக்கவன்.
2. அண்டை வீட்டார்க்கு அஞ்சுபவனைப்போல் தயங்குபவன்.
3. விருந்தாளியைப்போல் பணிவும் பண்பும் படைத்தவன்.
4. உருகும் பனிக்கட்டியைப்போலத் தன்னைப் பிறர்க்கு ஈகிறவன்.
5. செதுக்கப்பெறாத மரக்கட்டையினைப்போல எளிமை நிலையினன்.
6. வெற்றிடமான பள்ளத்தாக்குப் போன்றவன்....

(Vide, **Ethics of the Great Religions**, p. 232)

அன்பு, நடுநிலை, உலகியல்கடவாமை என்ற மூன்றும் பெரும்புதையல்கள் என்று இலவோசியசு இயம்பினர். 'பெரும் வெறுப்பிற்கு மாறாக அன்பினைத் திருப்பிக் கொடு' என்றார். இக்கருத்து ஏசுபிரான் உள்ளிட்ட உலகஞானிகள் பலராலும் கூறப்பட்டதுதான்.

உண்மைத்துறவிக்கு இலவோசியசு கூறும் இலக்கணம் எண்ணத்தக்கவை. பின்வருவோரை உண்மைத்துறவிகள் என்றார் :

1. சொற்களினால் அன்றிச் செயல்களால் போதனை புரிபவர்.
2. எதனையும் எதிர்பாராமல் செயல் புரிபவர்.
3. முழுமை பெறுதற்காகவே செயலாற்றுபவர்.
4. உள்ளத் தூய்மையினைப் பேணுபவர்.
5. வேண்டத்தகாத ஆணவம், மிகை முதலியவற்றைத் துறந்தவர்.
6. ஆன்ற மதிப்பையும் அவமதிப்பையும் சமமாகக் கருதுபவர்.
7. யாவரையும் தம் பிள்ளைகளாகப் பாவிக்கிறவர்.

(Vide, **The Ideals of East and West**, p. 50)

இலவோசியக்குப்பின் முந்நூறாண்டுகள் கழித்துச் **சட்டவியம்** (Legalisn) என்ற சிந்தனைப் பள்ளி தோன்றியது. இந்நெறிக்குரிய **குவான் சுங்கு** (Kuan Chung) உள்ளிட்டோர் கூறியுள்ள அறிவார்ந்த சிந்தனைகளில் சிலவற்றைக் காண்போம். இவர்கள் கன்பூசியசையும் இலவோசியசையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்பது சுட்டத்தக்கது.

X. சட்டவியலார் சிந்தனைகள்

1. மனிதனிடம் காணப்படும் தீய இயல்புகளைக் கல்வியினால் நீக்கமுடியும் என்று ஒரு சாரார் கூறினர். ஆனால், அவற்றைச் சட்டத்தின் மூலமாகவே போக்க முடியும் என்று சட்டவியலார் எண்ணினர்.
2. பொய்ம்மை, நிலைபேறின்மை, நம்பகத்தன்மையின்மை ஆகிய இயல்புகள் கொண்ட அறங்களின் மூலம் சமுதாயத்தினை எழுப்புதல் என்பது சரியக் கூடிய மணலின்மேல் வீடு கட்டுதலைப் போன்றது.
3. நிகழ்காலத் தேவை சட்டத்தின் செயற்பாடுதான்.
4. அளவுகள் (Measures) இல்லாமல் தச்சர் தம் தொழிலைச் செய்ய இயலாது. அதுபோலவே, சட்டம் இல்லாமல் அரசர் தன்நாட்டினை ஆட்சி புரிதல் இயலாது.

5. நேர்மையும் நியாயமும் பொருந்தி அமைதல்தான் சட்டத்தின் இலக்கணம்.

6. சட்டத்தினை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப் படுதல் வேண்டும். சட்டத்தினை வழுவாமல் பின் பற்றுவோர்க்குத் தாராளமாகப் பரிசளித்துப் பாராட்டுதல் அரசின் கடமை.

7. பரிசளிப்பும் தண்டனையளிப்பும் அரசன் கையில் இருக்க வேண்டிய இருபெரும் ஆயுதங்கள் ஆகும்.

8. ஒருவர் அறம் உடையவரா என்பதைவிட அவர் சட்டத்தை மதித்து நடப்பவரா என்பதுதான் முக்கியம்.

9. எந்த உபாயத்தைக் கொண்டாவது அரசு வலிமை யுறுத்தப் பெறுதல் வேண்டும்.

10. வேறு வழியில்லாமை காரணமாகவே ஒருவன் நீதி மானாகவும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவனாகவும் இருக்கிறான்.

மக்கள் நன்றாக உண்டும் உடுத்தும், வாழும்பொழுது தான், நேர்மைக்கும் வெட்கக் கேட்டிற்கும் இடையே யுள்ள வேறுபாட்டினை அறிந்து கொள்ளுதல் இயலும்.

இருபதாம் நூற்றாண்டில் சீனப்புரட்சிக்குப்பின் உருவாகிய பொதுவுடைமை மக்கள் குடியரசு கன்பூசியசுத்துக்கு மாறாகச் சட்டவியத் தத்துவத்தினையே (The Philosophy of Legalism) ஏற்றுக்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

நிறைவுரை

சீனமொழியின் ஆதியிலக்கியங்கள் சீனநாட்டின் பழைய வரலாற்றினையும் பண்பாட்டினையும் நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் அறிவதற்குரிய மூலங்கள் (Sources) ஆகும். சீனச்சிந்தனைகள் பலவும் இந்தியச் சிந்தனைகளுடன் இணைந்து செல்வன. இந்தியர்களைப்போலவே சீனமக்களும் பழமைவாதிகள். ஆயினும், இந்தியாவில் புத்தர்பிரான் தோன்றிச் சீர்திருத்தம் செய்தது போலவே, சீனத்தில் கன்பூசியசும் இலவோசியசும் தோன்றிச் சமுதாய மேம்பாட்டிற்கு நல்லுரை

களை வழங்கினர். மேலைநாட்டு அறிஞர்களும் பெரியார் ஈ.வெ.ரா.வும் கூறிய பகுத்தறிவுக் கொள்கைகள் குறிப்பிடத் தக்க அளவுக்குச் சீனஞானிகளின் எழுத்துக்களில் காணப் படுகின்றன. **சட்டவியம் என்ற நெறியாளர் அறத்தினைவிட சட்டமே மக்களை ஒழுங்குபடுத்தும் என்ற கொள்கையினர்.**

மனித வளத்திற்கும் சமுதாய உயர்வுக்கும் சீனச் சிந்தனையாளர்களின் உரைகள் பெரிதும் நெறிகாட்ட வல்லன எனலாம்.

துணை நூல்கள்

- Henry Sidgwick - History of the Ethics.
- Kenneth Saunders - The Ideals of East and West
- Lin Yutang - The Wisdom of Confucius
- The Cambridge History of Chinese Literature
- Cooper, J.C. Taoism : The Way of the Mystic
- Li, Duan Jen, The Ageless Chinese - A History
- கந்தசாமி சோ.ந., சீன இலக்கியம் - முற்காலம் முதல் பொற்காலம் வரை

செவ்வியல் படைப்புகளில் அறிவியல் சிந்தனைகள்

தமிழ்ச் செவ்வியல் படைப்புகளில் அறிவியல் சிந்தனைகள் எந்த அளவு சிறப்புற்றிருந்தன, அதற்கான அக, புறச் சான்றுகள் யாவை என்ற கேள்விகளுக்கு விடைகாணும் முயற்சியின் முதற்படியாக இக்கட்டுரை அமைகின்றது.

இம்முயற்சியின் நோக்கம் பழம்பெருமை பாடுவதன்று. பழமை, பழமை என்று பாவனை பேசுவதும் தவறு. அதுபோல் பழமை அறியாது பாமரராக இருந்து விடுவதும் அழகல்ல. வருகின்ற நாட்களில் வான்முட்டும் மாடங்கள் அமைக்கும் ஆசையுடைய நமக்குச் சென்ற நாட்களில் நமது ஆன்றோர்கள் விட்டுச் சென்றிருக்கும் அடித்தளம் எவ்வளவு ஆழமானது, அகலமானது என்பதை ஆய்ந்து அறியும் ஒரு சிறு பணியின் தொடக்கமாகவே இதைக் கருதுகிறேன். நான் உங்கள் முன் வைக்க விரும்புவது ஆராய்ச்சிக் கருத்தல்ல. தமிழ் இலக்கியங்களிலிருந்து தொகுத்த செய்திகள். அத் தொகுப்பும் முழுமையானதல்ல; ஒரு நீண்ட பயணத்தின் தொடக்கம்.

ரோம் நாகரிகத்தின் எச்சமான பாம்ப்பே (Pampeii) போல், ரோமாபுரி பழமைச் சின்னங்களைப்போல், ஏதென்ஸ் நகரத்தின் பார்த்தினான் (Parthenon) கோவில்போல, எகிப்தின் பிரமிடு களைப்போல நிலையான சான்றுகள் ஏதும் இன்று நமக் கில்லை. நமது நகரங்களைக் கடல் கொண்டது. நமது ஏடு களைக் காலம் அழித்தது என்று கூறுகிறார்கள். இதில் உண்மை எவ்வளவு? கற்பனை எவ்வளவு? என்பதை நாம் இன்று வரை அறுதியிட்டுக் கூற முடியவில்லை.

சு. நரேந்திரன்

சிறப்புநிலை அறுவைச் சிகிச்சைப் பேராசிரியர்,
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்,
சென்னை.

ஏனெனில் சுமேரிய பாபிலோனிய நாகரிகம் வளர்ந்த மத்தியக் கிழக்குப் பகுதிகளை எகிப்து நகரில் கோலோச்சிய நைல் நதிக்கரையை, அங்குலம் அங்குலமாக அகழ்ந்து அலசி ஆராய்ந்த உலகத் தொல்கலை ஆராய்ச்சியாளர்கள் அதற்குச் சமமான முயற்சிகள் எதையும் தமிழ் மண்ணில் மேற்கொள்ள வில்லை. ஆகவேதான், கற்பனையும், கலையும், புராணமும் ஒன்றி இணைந்து இயங்குகின்றன.

இதனால்தான் நாம் நம் முன்னோருடைய அறிவியல் சிந்தனைகளை மறுவாசிப்புச் செய்ய இப்பொழுது முனைந்துள்ளோம்.

இந்தச் சிந்தனைகள் அனைத்தும் அவர்கள் அறிந்தவை, அனுபவித்தவை, பயன்படுத்தியவை, பயன்பெற்றவை. அன்றைய அவர்களது சமுதாய வளர்ச்சிக்கு உதவியவை. இவை அனைத்தும் நிலவுடைமைச் சமுதாயத்தில் இடம் பெற்ற அறிவியல் தொழில்நுட்பச் சிந்தனைகள். இவை இன்றைய தொழிற் புரட்சிக்குப் பின் ஏற்பட்ட சிந்தனை களுக்கு ஒத்துப்போவதாக அல்லது சமமானதாக அல்லது ஏற்றமுடையதாக இருக்க முடியுமா? என்றால் முடியாது. முற்றிலும் முடியாது! ஏனெனில் சோதனைக்கு அதிகம் ஆளாகாத, அனுபவத்தினாலும் கூர்ந்த நோக்கினாலும் பதிவு செய்யப்பெற்ற பண்டைய அறிவியல் சிந்தனைகள் ஈடு கொடுக்க முடியாது.

இன்று, இன்றைய அறிவியல் சிந்தனைகளோடு ஒப்பிட்டுக் காண்பதே ஒரு சுவையான ஆய்வாக உள்ளது. இதற்கு நமக்கு ஒரு பி.எல். சாமியும், கு. சீனிவாசனும் தேவைப்படுகிறார்கள். ஆமாம். போர்க்களத்தில் அடிபட்ட வனுக்கு எலி மயிர் கம்பளம் போர்த்தி வைக்கப்பட்டது. இதனைச் சீவகசிந்தாமணிப் (816) பாடல் குறிப்பிடுகிறது. அது எங்குக் காணப்படும் எலி என்று சொல்ல அவர்கள் தேவைப்படுகிறார்கள்.

அறிவியல் சிந்தனைகள் பெரும்பாலும் உவமைகளாகவே செவ்வியல் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. ஒரு எடுத்துக் காட்டு, போரில் பிளவுபட்ட காயத்தைத் தையலிடும்போது

ஊசி தசையில் புகுந்து பின்வெளிவரும் காட்சி மீன்கொத்திப் பறவை நீருள் வாழும் மீனைக் கொத்தி எழும்போது அதன் அலகு எவ்வாறு நீருள் சென்று பின் மீளுமோ அவ்வாறு அமையும்.

"மீன்றேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச்
சிரல் பெயர்ந் தன்ன நெடுவெள்ளூசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்" (42:2-4)

இது பதிற்றுப்பத்து. இச்சிந்தனைபோன்றே கணிதம், வானியல், நெசவுத் தொழில், கட்டடக்கலை, கப்பல் கட்டும் தொழில் நுட்பம் போன்ற பல செய்திகள், சில ஆழமாகவும், சில மேலோட்டமாகவும் இருக்கின்றன என்றாலும் முழுமையாக அறிய இயலவில்லை. (எ.கா) அடித்தளமே இல்லாத தஞ்சைப் பெருவுடையார் கோவில் கட்டுமானத்தைப் பற்றிய அறிவியல் சிந்தனை, மாரி பொய்ப்பினும் தான் பொய்யாத் தண்ணொளி யுடைய காவேரியில் கட்டப்பட்ட கல்லணை பற்றிய சிந்தனை வெளிப்பாடுகள் குறித்த நூல்கள் ஏதாவது நம்மிடம் உண்டா என்றால் இல்லை.

ஆனால், சில தொழில்நுட்பங்களைப் பற்றிய நூல்கள் இருந்திருந்ததாக நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், தக்கயாக பரணி உரையாசிரியர் முதலியோர் வழி அறிய முடிகிறது. சிறந்த அந்நூல்கள் கணக்கதிகாரம், ஆஸ்தான கோலாகலம், கோளதீபிகை, பூலோக விலாசம், கூவநூல், அசுவசாஸ்திரம் முதலியவை. இப்படியாக ஏன் சில நூல்கள் பெயர்கள் மட்டும் அறியப்படுகின்றன. ஏன் முழுமையான அறிவியல் நூல்களின் பெயர்கள் மட்டும் அறியப்படுகின்றன. ஏன் முழுமையான அறிவியல் நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லை என்று பார்க்கும்பொழுது அன்றைய நிலையில் தொழில்நுட்பங்கள் ஒரு பாடப்பொருளாகக் கல்வி நிறுவனங்கள் வழியாகக் கற்றுக் கொடுக்கப்படவில்லை. எண்ணையும், எழுத்தையும் கீழ்ப்பால் உள்ளோரும் மேற்பால் உள்ளோரும் கற்றனர். ஆனால், தொழில் கற்றலில் வேல் வடித்த கொல்லனும், சிலம்பு செய்த பொற்கொல்லனும், என் தேர் செய்த தச்சனும் பரம்பரை வழி வாய்மொழியாகவே

தம் தொழிலைக் கற்றனர். தந்தை மகன் என்ற உறவு முறையில் தொழில்நுட்பம் பரம்பரையாக வளர்ந்து வந்துள்ளது.

ஒரு வளமான மொழி வழியில் அதுவும் தாய்மொழியில் வளர்ந்து வந்தபோதும் நூலாக்கம் பெறவில்லை. அதாவது இந்த அறிவியல் சிந்தனைகள் தனியுடைமையை இழந்து பொதுவுடைமை எய்தவில்லை. பொதுவுடைமை எய்தும் நிலை இருந்திருப்பின் அது இலக்கியமாக மலர்ந்திருக்கும். பிறகு அதற்கு இலக்கணம் வரையப்பட்டிருக்கும்.

ஒரு குறிப்பிட்ட பிரிவினரைத் தாண்டிப் பொதுவுடைமை எய்தாதலினாலே மருத்துவம் செய்த தாமோதரனாரும், கணித்தல் செய்த பூங்குன்றனும் அவர்கள் தொடர்பான சிந்தனைகளுக்குப் பதிலாகப் பொதுச் சிந்தனைகளே இடம் பெற்றன.

மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்கள் வரலாற்று ஆசிரியர்கள் ஆகியோர் நமது பண்டை நாகரிகம் பற்றிப் பேசும்போது நாம் மூன்று துறைகளில் சிறந்த முன்னேற்றம் அடைந்திருந்ததாகக் கூறுகிறார்கள். 1. வேளாண்மை, 2. கப்பல் கட்டுதல், 3. நகரமைப்பு. பழைய நாகரிகத்தின் சிறந்தன யாவும் வேளாண்மை, வாணிபம் என்ற இரண்டின் அடிப்படையில் தான் செழிப்பிற்கு ஏற்ப நகரங்கள் அமைந்தன.

அன்றைய நகரங்களின் தெருக்களைப் பற்றிப் பாடும் புலவர் மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியில், "யாறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு" என்கிறார். அகன்ற தெருக்கள். நகரங்களில் தானாக அமைவதில்லை. இச்சொற்றொடர் ஓர் உண்மையை மட்டும் கொண்டிருக்கவில்லை. ஓர் உவமையையும் தன்னுள் கொண்டுள்ளது. ஆற்றின் இருமருங்கிலும் செழிப்பின் சின்னமான வயல்கள் ஓங்கி நிற்கும் தென்னைகள் அழகு செய்கின்றன. ஆற்றுநீர் இடையறாது செல்வதுபோல மக்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு அகன்று திருநிறைந்து விளங்கும் தெருவின் மற்றொரு சிறப்பைப் பார்ப்போம். அது "உயர்பூரிம விழுத்தெரு" என்கிறார். 'பூரிமம்' குப்பைகளையும் வேண்டாப் பொருள்களையும் போடுவதற்காக அமைந்த தொட்டி. அவை உயரமாக உள்ளன.

(இன்றைக்கு மக்கும், மக்கா என்ற) தொட்டியும் அதனால் அத்தெருவும் சிறப்புற்று விளங்கின. குப்பைத் தொட்டிகளை ஒரு பொருட்டாகக் கருதிப் பாடியது மட்டுமல்ல. அவற்றை யுடைய "விழுத்தெரு" என்று கூறுவதன் மூலம் அது தெரு அமைப்பில் ஒரு முக்கியமான உறுப்பு என்பதை உறுதிப் படுத்துகிறார். குறுக்கிச் சொன்னால் குப்பைத்தொட்டி இல்லா வீதிகள் இல்லை.

இனி நகர்ப்பகுதிகள் எப்படி அமைந்திருக்கின்றன என்று பார்ப்போம். இன்றைய நகரமைப்பில் பகுதி பிரித்தல் (Zoning) என்று ஒரு முறை உண்டு. இதைச் சண்டிகார் போன்ற புது நகர்களில் காணலாம். தமிழ் இலக்கியங்களில் மதுரை, வஞ்சி, காவிரிப்பூம்பட்டினம், உறந்தை, காஞ்சி ஆகிய நகரங்களில் இச்செய்திகள் காணப்படுகின்றன. தனிப்பட்ட நகரைப் பற்றி விளக்காமல் நகரமைப்புப் பற்றிக் காணப்படும் செய்திகளை மட்டும் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். அச்செய்திகள் வெவ்வேறு நகரைக் குறித்து இருக்கலாம்.

தமிழகத்தில் அன்றைய நகரங்களில் ஒவ்வொரு பயன் குறித்தும் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்திருந்தார்கள். நகரம் இருபகுதியாக உள்ளது. ஒன்று புறநகர், மற்றொன்று அகநகர். முதலில் புறநகரைப் பார்ப்போம். இது அரணுக்கு அப்பாலுள்ள பகுதி. நகருக்கு அரணாகச் சுவர்கள் எடுக்கப் பட்டுள்ளன. அவற்றில் "வையை யன்ன வழுக்குடை வாயில்கள்" வைக்கப்பட்டுள்ளன. அந்த வாயிலைப் பற்றி நெடுநல்வாடை,

"வேழம் சென்று புக,
குன்று குயின்றன்ன ஓங்குநிலை வாயில்" (87-88)

என்று குறிப்பிடும் அரண் சுவற்றினை அடுத்து வெளிப் புறத்தில் அகழி வெட்டப்பட்டுள்ளது. அகழியின் இரு மருங்கிலும் மரங்களடர்ந்த சிறுகாடு அமைக்கப்பட்டுள்ளது. இதனை,

"இளைசூழ் மிளையொடு, வளைவுடன் கிடந்த
இலங்கு நீர்ப்பரப்பின்" (சிலம்பு.ஊர். 62-63)

என்கிறது சிலம்பு. வாயிலில் இவ்வகழியைக் கடப்பதற்காக ஒரு பாலம். இது பல யானைகள் செல்லும் விரிவும் வலியும் உடையது.

''பெருங்கை யானை இனநிரை பெயரும்
சுருங்கை வீதி'' (சிலம்பு.ஊர். 64-65)

அப்பாலம் வழியேதான் நகருக்குள் நுழைய வேண்டும். நுழையுமுன் பார்க்கத்தக்கது இன்னொன்றும் உண்டு. அது நகர்ப்புறத்தில் அகழிகட்டும் காட்டுக்கும் அப்பால் அமைந்துள்ள பசுமையான வளம் நிறைந்த, ''புறஞ்சிறைப் பொழிலும் பிறங்கு நீர்பண்ணையும், இறங்கு கதிர் கழினியு''மாகும். இப்பகுதியில் மற்றொரு வாயிலை அடுத்து அழகான அமைதியான விரிந்த பூங்கா ஒன்றும் அமைந்திருந்தது. அது அறத்தினையே விரும்பும் முனிவர்கள் விரும்பிச் சென்று அமைதியை நாடும் தகுதியுடையது.

''அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறம் சிறை மூதூர்'' (சிலம்பு:புறஞ். 195-196)

ஆகும்.

ஓர் ஒப்பீட்டுக்குச் சொல்ல வேண்டுமானால் இப்போதைய தியான மையம். அடுத்து அகநகர் அதில் பகுதி (Zonal) பிரிக்கும் முறையைச் சிறப்பாகக் கையாண்டு வாழ்வதற்கு, வணிகத்திற்கு, பொழுதுபோக்கிற்கு என்று பல்வகைப் பயன்கட்கு ஏற்ப வீதிகள் அமைத்திருக்கிறார்கள்.

இரவு பகல் என இரண்டு நேரமும் கடைவீதிகளில் வணிகம் நடந்தது. ஆனால், பகற்பொழுது கடைகட்கு ஒரு வீதி இரவு கடைகட்கு ஒரு வீதி. இவை நாளங்காடி அல்லங்காடி எனக்கூறப்பட்டன. அவற்றை,

''ஓவுக்கண்டன்ன இரு பெருநியமம்'' (மதுரைக். 365)

என்கிறது மதுரைக்காஞ்சி. வாழுமிடம் குடிலாயினும் கோபுர மாயினும் தூய்மை வேண்டும். அதற்குத் துணை நிற்பன கழிவுப் பொருள்களை அகற்றும் சாதனங்கள், அவற்றுள் தலையாவது நல்ல முறையில் அமைக்கப்பட்ட புதைசாக்கடை

(Underground Drainage). இதைப்பற்றி மணிமேகலை அழகாகக் கூறுகிறது. பாடலின்படிக் கழிவு "சுருங்கை தூம்பு வழியாக அகழிக்குச்செல்கிறது. தூம்பு என்பது வாய்க்கால். சுருங்கைத் தூம்பு நிலத்தின் அடியில் செல்லும் வாய்க்கால். இளைஞரும் மகளிரும் நீராட அவரவர்கள் வீட்டிலே குளம் இருந்தது. அதை எந்திர வாவி என்கிறார். நிறைக்கவும் குறைக்கவும் எந்திரம் அமைத்திருக்கிறார்கள். குளிக்குமிடத்திலிருந்து நிறைய வரும் நீரன்றி, மண்கலத்திலிருந்து கசியும் நீர்கூடச் சுருங்கைத் தூம்பு வழி அகழியை அடையும். இப்பாடல்களிலிருந்து அன்றைய பொறியியல் திறத்தையும் நகர்ப்புறச் சுற்றுச் சூழலையும் பாதுகாப்பையும் அறியமுடிகிறது.

இந்த அளவிற்குப் பொறியியலைச் சுற்றுப்புறச் சூழ்நிலை கெடாது அமைத்த பொறிஞன், கணிதத்தில் கரை கண்டவனாக இருத்தல் வேண்டும். இதற்குத் துணை புரிவது ஓர் எளிய குறள். எல்லோரும் அறிந்த குறள்.

"எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழு முயிர்க்கு" (குறள் : 392)

நாம் கூறிய குறளில் எண் என்பது கணிதம். இதைப் பரிமேலழகர் தெளிவாகக் கூறுகிறார். கண்போலமைந்த கல்வி யில் கணிதத்தின் இடம் என்ன என்ற கேள்வி எழுகிறது. விரிந்த வெளியின் தந்தையான கடவுள் இப்பொழுது கணித நிபுணனாகக் காட்சியளிக்கத் தொடங்குகிறார் என்றான் ஜீன்ஸ். இயற்கையின் பெருங்காவியம் கணிதக் குறியீடுகளால் எழுதப்பட்டிருக்கிறது என்றான் கலிலியோ. தன்னுடைய கலைக்கழகத்தின் வாயிலில் பிளாட்டோ கீழ்க்கண்ட வேண்டு கோளை அல்லது எச்சரிக்கையைப் பொறித்து வைத்திருந்தான்.

"வடிவக் கணிதம் அறியாதவர்கள் உள்ளே வரவேண்டாம்"

எண்கள் அண்டத்தை ஆள்கின்றன என்றான் பிதாகோரஸ். கடவுளை ஏசுவாகக் கண்ணனாக, நபியாகக் கண்டது சமய உலகம். அவரை அன்பாக அருளாக அழகாகக் கண்டது பண்டைத் தமிழ்ப்பண்பு. அவனைக் கணிதமாகக் கண்டது ஒரு புது அனுபவந்தான். பண்டைய சிந்தனைச் சிற்பி பிளாட்டோவிலிருந்து அண்மைக்கால அறிவியல் மேதையான

ஜீன்ஸ் வரை கடவுள் கணித வடிவானவர் என்ற அளவிற்குச் சிறப்பிப்பதனால் கணிதத்தின் இடம் நம்மில் பலர் நினைத்தி ருப்பதைவிட மிகமிக உயர்ந்தது என்பது மட்டும் தெளிவு.

மீண்டும் நகரமைப்புக்கு வருவோம். முறையாகக் கழிவு அகற்றிய தமிழனின் சிந்தனை, நீர் வீணாகக்கூடாது என்ற கொள்கையிலும் அதிகமான கவனம் கொண்டிருந்தான். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு நிர்வாகச் சபை இருந்தது. நீராதாரங்களைக் கண்காணிப்பது அதன் முக்கிய நோக்க மாகும். சட்டரீதியான நீர்ப்பங்கீட்டு முறை, கரையை உயர்த்தி உறுதிப்படுத்தல் நீரில் உள்ள பாசி படிவுகளை அகற்றுதல் போன்ற கடமைகளைச் செய்து இயங்கியது. இதற்கு ஒரு காவலன். இதை அகநானூறு விளக்குகிறது.

''தொழின் மழை பொழிந்த பானாட்கங்குல்
எறிதிரை திவலை தூஉம் சிறுகோட்டுப்
பெருங்குளம் காவலன்'' (அகம் : 252; 11-13)

இதுபோலவே, பெருங்கதையிலும்,

''வண்டும் சேரா அஞ்சுவரு சீற்றத்துக்கு
உண்டுதுறைக் காவலர்''

வண்டுகள் வந்தும் நீரின் தூய்மையைக் கெடுக்காத வகை யில் சீறிப் பாயும் நீர்த்துரையைக் காவல்புரிய நீர்க்காவலர் இருந்தனர் என்பது விளங்குகிறது. நீர்நிலை காத்த நீராளியைப் பற்றி ஒரு குறிப்புக் கிடைத்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டம் முதுகுடி என்னும் சிற்றூரிலுள்ள கருங்குளம் என்னும் ஏரிக்கு கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் பெருந்தேவப்பள்ளன் நீராளியாக நியமிக்கப்பட்டிருந்தான். ஒருநாள் பெருமழையின்போது இரவில் குளக்கரையின் ஒரு பக்கத்தில் உடைப்பு ஏற்படு வதைக் கண்ட நீராளி தனிமனிதனாக நின்று பெருமுயற்சி யுடன் மண்ணை வெட்டிப்போட்டு அடைத்துவிட்டான். இதில் வெற்றிகண்ட நீராளி இறுதியில் உயிரிழந்துவிட்டான். மறுநாள் காலை நிலைமையை ஊகித்த ஊர்மக்கள் அவனுடைய நிலையை எண்ணி வருந்தி அவனுடைய செயலைப் புகழ்ந்து அவனுடைய ஒரே மகளைக் காக்கும்

பொறுப்பை ஏற்று அவளுக்கென அரை மா நிலத்தையும் ஒதுக்கி அவனுக்கு ஒரு நடுகல்லையும் நாட்டிச் சிறப்பித்தனர்.

இரைச்சல் மாசுபாடு பற்றிய அறிவியல் சிந்தனைகள்

விருப்பமில்லாத மனதிற்கு வெறுப்பூட்டுகிற ஒலியே இரைச்சல் எனப்படும். இயந்திரங்கள், ஊர்திகள், வானொலி, தொலைக்காட்சி போன்றவை இரைச்சலை ஏற்படுத்துகின்றன. இரைச்சலால் இதயத்துடிப்பு அதிகமாகி மனதைப் பாதிக்கக் கூடும்.

சங்ககாலத்தில் காணப்பட்ட கரும்பு ஆலைகளும் அங்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களும் இரைச்சலை ஏற்படுத்திய செய்தியை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. கரும்பு பிழியும் இயந்திரத்தின் ஓரையானது யானை பிளிறுவதைப் போன்று இருப்பதாக, ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது.

இப்போது சொல்லப்போவது சிந்தனைக்கு விருந்தாவது.

வினைமுடித்து மீளும் தலைவன் தலைவியைக் காண வேண்டும் என்ற ஆவலில் தேரில் விரைகிறான். அத்தேரின் மணி ஒலி வண்டுகளுக்கும், பறவைகளுக்கும் துன்பம் செய்யும் எனக்கருதி அம்மணியின் நாவைக் கட்டித் தேரை ஓட்டி வருகிறான் என்பதைக் கீழ்க்காணும் பாடலால் அறியலாம்.

பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுஉண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன் (அகம். 4 :10-12)

ஆனால், இதற்கு மாறாகத் தற்பொழுது சாதாரண ஒலிப்பான் போதாது என்று காற்று விசையுடன் வரக்கூடிய காற்று ஒலிப்பான் (Air Horn) பொருத்தப்படுகிறது.

எல்லோரும் உறங்கும் இரவுப் பொழுதில் தம் வீடு திரும்பும் தலைவன் ஒலியெழுப்புகின்ற தனது தேரை முன்னரே நிறுத்தி நடந்தே வீடு வருகிறான்.

பாணி பிழையா மாண்வினைக் கலிமா
துஞ்சு ஊர் யாமத்துத் தெவிட்டல் ஓம்பி
நெடுந்தேர் அகல நீக்கி, பையெனக்
குன்றுஇழி களிற்றின் குவவுமணல் நீந்தி (அகம். 360 :11-14)

நெடிய தேரினைத் தொலைவில் நிறுத்திக் குன்றின் மீதிருந்து இறங்கி வரும் களிறுபோல நீயும் குவிந்து கிடக்கும் மணற் குன்றுகளைக் கடந்து வருக. இதன் மூலம் சங்ககாலம் மாசு கட்டுப்பாட்டுவாரியம் இல்லாமல் எப்படிச் செயல்பட்டது என்பதை அறிய முடிகிறது.

ஓசோனில் ஓட்டை, புவி வெப்பமாகிறது. மரம் வளர்ப்போம் என்ற வாசகங்கள் உலகம் முழுவதும் காணப் படுகின்றன. இதனால் காடுகளைப் பாதுகாத்தலும் மரம் வளர்ப்பதும் வெகுவிரைவாகத் திட்டமிட்டுச் செயல்பட்டு வரும் இக்காலத்தில் இந்நற்றிணைப் பாட்டுச் சிந்தனை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இக்காலத்தில் நண்பர்களை மச்சான், மாமன் அடுத்த வீட்டு வயது வந்த பெண்டிரை மாமி என்றுகூட அழைப்பதுண்டு. ஆனால், இப்பாட்டில் காதலன் புன்னை மரநிழலில் நகைத்து விளையாட அழைக்கின்றான். அப்போது தலைவி கூறுகிறாள். இப்புன்னை அருகில் நின்று நகைத்து விளையாட நான் நாணுகின்றேன். ஏனெனில் என் அன்னை கூறினாள், "நீங்கள் வளர்க்கும் இப்புன்னை உங்களைவிடச் சிறந்ததாகும். அது உங்களுக்குத் தமக்கை முறையாகும் தகுதியுடையது" என்று. நின்று பேசவே இந்நிலை என்றால் அம்மரம் அது என்றாவது வெட்டப் படுமா? அது அவர்களின் உடன்பிறப்பாகி விடுகிறதல்லவா? இதுபோல் ஒவ்வொரு மரத்தையும் நேசித்தால் ஓசோன் ஓட்டை தானாக அடைபட்டு விடும் அல்லவா?

தொல்காப்பியத்தில் மரபியல் கருத்துக்கள்

ஏறத்தாழ இருபது ஆண்டுகள் ஆய்வுகளுக்குப் பின்னர் டார்வின் வெளியிட்ட இனங்களின் தொடக்கம் (Origin of Species) என்னும் நூல் அவருக்கு மனிதகுலத் தொட்டிலின் இனம் கண்ட ஏந்தல் என்ற சிறப்பைப் பெற்றுத்தந்தது. அவரது ஆய்வுக்கு வித்துக்களாக விளங்கியவை மால்தூஸ்

என்ற அறிஞரின் ஆய்வுகளே. ஒரு செல் உயிரிலிருந்து பல செல் உயிர்கள் உருவாகிப் படிப்படியாக வளர்ச்சியடைந்து பல நிலைகளைக் கடந்து மனிதக் குரங்கிலிருந்துதான் மனிதன் தோன்றினான் என்னும் உண்மையை உலகிற்கு உணர்த்தி உயிரினங்களின் வகைப்பாடு பற்றி விரிவாக விளக்கமளித்தவர் சார்லஸ் டார்வின் ஆவார்.

தொல்காப்பியமும், டார்வின் கொள்கையும் பல நூற்றாண்டு இடைவெளியை உடையவை என்றாலும் இன்றைய மரபியல் சிந்தனைகளுக்கு அடித்தளம் அமைப்புவை யாகக் கீழ்வரும் வரிகள் அமைந்துள்ளன.

புறக்கா ழனவே புல்லெனப் படுமே (தொல்.மர. 85)

அகக் காழனவே மரமெனப் படுமே (தொல்.மர. 86)

ஒன்றறிவதுவே உற்றறிவதுவே

....

நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே (தொல்.மர. 27)

தொல்காப்பியரும் உலகில் தோன்றிய முதல் உயிர் ஓர் அறிவு உயிரே. அதாவது தாவர இனமே என்றுதான் வலியுறுத்துகிறார். அறிவைப் பற்றிச் சொல்லி உயிர்களை வரிசைப்படுத்தும்போது முதலில் தாவர இனத்தையே பாடுகிறார்.

பக்தி இலக்கியத்தில் இதையே மாணிக்கவாசகரும்,

புல்லாகிப் பூண்டாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்...
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

(திரு. 26-31)

என்று தான் பாடுகிறார். இதில் முதல் பிறவியாகப் புல்லாகிய தாவரத்தையே சுட்டுகிறார்.

பரிணாம வளர்ச்சியானது ஆறறிவு படைத்த மனிதனோடு நின்றுவிடாமல் அவனையும் தாண்டிச்செல்கிறது என்றும்

தொல்காப்பியர் கூறுகிறார். அதாவது பகுத்தறிவு என்னும் ஆறாவது அறிவை உடையவன் மனிதன். ஆனால், இன்று மனிதன் அதையும் தாண்டிச் சிறப்பாகச் சிந்திக்கின்றான். கணிப்பொறியைக் கண்டுபிடித்து உலகத்தையே ஒரு வலைக்குள் கொண்டுவந்துவிட்டான். எனவே, மனிதன் என்ற நிலையிலிருந்து மாமனிதன் என்ற நிலைக்கு உயர்ந்து கொண்டிருக்கிறான். மனிதனின் பரிணாம வளர்ச்சி மேலும் மேலும் விரிவடைகிறது. இதனால்தான் தொல்காப்பியர், "பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" என்ற தொடரை ஆறு முறை அழுத்திக் கூறுகிறார். ஆகவேதான், பரிணாமம் பற்றிக் கூறிய அறிஞர்களின் கருத்துக்களைவிடத் தொல்காப்பியர் கருத்துகள் காலத்தால் பழமையானவை யாகவும், கருத்தால் புதுமையானவையாகவும் நிருபிக்கப்பட்ட உண்மையாகவும் விளங்குகின்றன.

உயரினங்களின் அறிவியல் வகைப்பாடு

உலகிலுள்ள உயிரினங்கள் பொதுவாகத் தாவரங்கள் என்றும் விலங்குகள் என்றும் இருபெரும் பிரிவுகளின் கீழ் வகைப்படுத்துவர். தாவரங்களின் தோற்றத்தைக் கொண்டும், விதைகளைக் கொண்டும் வகைப்படுத்தியுள்ளனர். இது போலவே விலங்கினங்களையும் முதுகெலும்பற்ற, முதுகெலும் புள்ள என இருபெரும் பிரிவுகளின் கீழ்ப் பிரித்துள்ளனர். இதுபோன்ற காலத்தின் மிகப் பழமையான தொல்காப்பியத்தில் மரபியல் சுட்டும் உயிரின வகைப்பாடு இன்றைய அறிவியல் ஆய்வுக்குரியதாக அமைந்துள்ளது. மரபியல் என்னும் ஒன்பதாம் இயலில், மரபுகளைத் தொகுத்துரைக்கும்போது பொது மரபு, இளமைப் பெயர்கள், உயிர்களின் பாகுபாடு, ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள், நூலின் மரபு ஆகிய ஆறு பிரிவுகளின் கீழ் நுணுக்கமான பல செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, கடல்வாழ் சுறாவும், "ஏறெனப்படுமே" (தொல்.பொருள்.586) நூற்பா வரியானது கடலில் வாழ்கின்ற ஆண் சுறாவை, "ஏறு" என்று சுட்டுகின்றது. பொதுவாக மீன்கள் இனத்தில் ஆண், பெண் என்ற வேறுபாடுகளை வெளித் தோற்றத்தைக் கொண்டு பிரித்தறிவது கடினம். ஆனால்,

சுறா மீனினத்தில் மட்டும் ஆண், பெண் சுறா மீன்களை அதனுடைய வெளிப்புற உறுப்புகளின் தோற்றத்தைக் கொண்டு பிரித்தறிய இயலும். இத்தகைய அறிவியல் சிந்தனையைத் தொல்காப்பியத்துள் காண்பது அதன் அறிவியல் அமைப்பைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

மருத்துவ அறம் எனப்படுவது யாது?

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடா அது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல" (நற்.136:2-3)

என்ற அடிகள் மருத்துவன் எப்படி மருத்துவம் செய்ய வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

"திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்துபோல் மருந்தாகி மனனுவப்ப" (கலி.17:19-20)

மருத்துவன் நோயுற்றவரின் உடல் நிலையை நன்கு ஆராய்ந்து அவரின் தடுப்பாற்றல் அல்லது திருந்திய யாக்கை யின் தன்மைக்கு ஏற்றவாறு மருந்து கொடுக்க வேண்டும் என்பதோடு கொடுக்கப்பட்ட மருந்து உண்மையான மருந்தாகி நோயைப் போக்கும். அவ்விதம் அமைந்தால் மருந்துவன் நோயுற்றவன் என இருவருமே மனம் மகிழ்வர்.

'பிறர்நோயும் தந்நோய் போல் போற்றி அறனறிதல்
சான்றவர்க்கெல்லாம் கடனாம்" (கலி.139:2-3)

இதைக் குறளும் கூறுகிறது.

"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்
தந்நோய் போல் போற்றாக்கடை" (குறள். 315)

மேற்கண்ட குறளில் இருந்து பிறருடைய நோயைத் தான் உற்றது போல் கருத வேண்டும் என்பதே மருத்துவரின் கடமையாகும் என்பது தெரியவருகின்றது.

மருத்துவன் வணிகன் அல்லன். அவன் தன்பால் உள்ள கலையை மறைத்தல் பாவம் என்பது பண்டைத் தமிழரின் கோட்பாடாகும்.

"வருந்திய செல்லல் தீர்த்த திறனறி ஒருவன்
மருந்தறை கோடலின் கொடிதே........." (கலி. 129:22-23)

என்னும் கலித்தொகை அடிகள் இதற்குச் சான்று.

மருத்துவம் செய்தல் ஒரு தொழிலாக இல்லாமல் தொண்டாகவே கருதப்பட்டது. மருத்துவர் நோயின் தன்மை களை அறிந்து மருந்தினைச் சரியாக ஆய்வு செய்து கொடுக்க வேண்டும். மாறாகப் பிணியாளன் விருப்பப்படி நடக்கக் கூடாது. இதனைப் பின்வருமாறு குறள் குறிப்பிடுகின்றது.

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டவை கொடாஅது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்" (நற். 136:2-3)

நல்லுடம்பில் மருந்து

நல்லொழுக்கத்தாற் பேணப்பட்ட உடம்பால் தான் மருந்து நன்கு பலனளிக்கும் என்பதை அறிந்திருந்தனர். மருந்தை உடம்பு ஏற்றுக்கொள்ளவில்லையேல் பயனில்லை.

"பொருந்தியான்றான் வேட்ட பொருள்வயின் நினைந்தசொல்
திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்துபோல் மருந்தாகி மனனுவப்பப்
பெரும்பெயர் மீளி பெயர்ந்தனன் செலவே" (கலி.17)

ஏனெனில் நல்லொழுக்கம் இல்லாவிடில் நோய் எதிர்ப்புத் தன்மை *(Immunity)* போய்விடும். அப்போது மருந்து வேலை செய்யாது. இதுதான் நடக்கும். இதற்குச் சிறந்த எடுத்துகாட்டு ஏமநோய் என்ற எய்ட்ஸ் நோய்க்கு ஏதாவது மருந்து உள்ளதா எனில் இன்றுவரை எந்த மருத்துவ முறைகளிலும் முழுகுணம் அளிப்பதாக உள்ளதா எனில் இல்லை. ஏதோ ஒருவகையில் கட்டுப்படுத்தலாம். ஆனால், அதற்கு மருந்து சரியாகக் கண்டுபிடித்தவன் ஒரு தமிழன் அவன்தான் திருவள்ளுவன்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். (குறள். 131)

இன்றைய அறிவியலில் உடலியலுடன் தொடர்புடையது நோயியல் (Pathology). அதன் செயல்பாடு, 1. நோயின்

காரணங்களை ஆராய்தல், 2. அக்காரணங்கள் செய்யும் உடல் அமைப்பு மாறுதல்களை ஆராய்தல், 3. காரணங் களையும் மாறுதல்களையும் எதிர்க்கும் முறைகளை ஆராய்தல். இவை மூன்றையும் மருந்து என்று குறிப்பிட்டு நேரடியாக எந்த மருந்தையும் பரிந்துரைக்காத தன்மையைக் குறட் பாக்களில் காண்கிறோம்.

முதற்குறளில்

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று (குறள். 941)

எனும் நோயைச் செய்யும் காரணிகளான வளியும் பித்தமும் சளியும் சம நிலையில் இல்லாமல் மிகுந்தாலும் நோய் உண்டாகும், குறைந்தாலும் நோய் உண்டாகும் என்று நோயின் காரணங்கள் ஆராயப்பட்டன. பசியெடுத்தபின் மாறுபாடில்லாத உணவை உண்ணல். மாறுபாடில்லாத உணவை உண்ணும் உடல் நலத்தால் உடலிலுள்ள உயிர்க்கு ஊறுபாடு இல்லை. மிக அதிகம் தின்றால் உடம்பில் நோய் நிலைக்கும். வயிற்றுத் தீயின் அளவறிந்து (எவ்வளவு கலோரி தேவை) உண்ண வேண்டும் என உணவு கொள்ளும் உணவை வைத்து அதனை ஏற்கும் உடல் நோயில்லா அமைப்பைப் பெறுக என்று விளக்கு கின்றன. ஆறு குறட்பாக்களும் இக்கால நோய் இயலின் இரண்டாவது ஆய்வைக் கொண்டவை.

இறுதியான மூன்று குறட்பாக்களும் நோயை, நோயின் மூலத்தை அறிந்து மருந்து வழங்கல், மருத்துவம் கற்றவன் கருதிச் செய்ய வேண்டியவை. மருத்துவ நலம் பயப்பச் செய்பவை நான்கு என விளங்குகின்றன. இவை நோயை எதிர்த்து முறியடிக்கும் வழியைச் சொல்கின்றன.

இவ்வாறு ஒட்டுமொத்தமாகப் பத்துக் குறட்பாக்களும் இக்கால நோய் அறிவியலின் கருத்துக்களை நோயியல் (Pathology) அறியப்பட்ட 1500 ஆண்டுகளுக்கு முன் அறிவிக்கப் பட்டவை.

முடிவாக மனிதனுக்கு இலக்கியங்கள் தேவையானவை. மனமகிழ்ச்சிக்கும் வாழ்வின் ஒழுக்கத்திற்கும் நல்ல கவிதை இலக்கியங்கள் தேவை. ஆனால், அறிவியல் கருத்துக்களும் வாழ்க்கை வளம் பெறத் தேவை. தமிழர்கள் வெளிநாடு சென்று புகழ் பெற்றாலும், அவரது கலைச்செல்வங்கள் ஏனோ தமிழில் ஆக்கவில்லை. மேலும், இங்குள்ள தமிழர் களும் அறிவியலைத் தமிழில் தர இன்னும் போதிய முனைப்புக் காட்டவில்லை.

தமிழ், வடமொழிச் செவ்விலக்கியங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

அறவிலக்கியம் : தமிழ் மரபும் வடநூல் வழக்கும்

இலக்கியம் இரண்டு நோக்கங்கள் கொண்டிருக்க வேண்டுமென்றும் அவை இன்பமும் பயனுமாகும் என்றும் கூறுவர். மேலைக் கவிதையியலார்களுள் செவ்வியல் சார்புடையார் பயனையும் புனைவியல் சார்புடையார் முருகியல் இன்பத்தையும் முதன்மைப்படுத்திப் பேசுவர். செவ்வியல் இலக்கியத்தைத் தலையாயதாக மதித்த ஜான்சன், "ஓரிலக்கியத்தைப் படைப்போனின் கடமை பிறர் அறியாதன கற்பித்தலும் அறிந்த உண்மைகளை அழகுபடுத்திப் பரிந்துரைத்தலுமாகு"மென்பார் *(336)*. "கவிதையென்பது அறிவிற்குத் துணையாகக் கற்பனையைக் கொண்டு, உண்மையோடு இன்பத்தை இணைக்கும் கலை" *(336)* என்ற கருத்துடையவர் அவர்; அறங்கூறாத இலக்கியத்தை இரண்டாந்தர இலக்கியமாகவே எடையிடுவார். புனைவியல் சார்புடையாரும் அறமுணர்த்தலை முற்றும் புறக்கணிக்கவில்லை. கோல்ரிட்ஜ் கவிதையின் முதல் நோக்கம் இன்பம், இரண்டாம் நோக்கம் உண்மை என்று ஏற்றுக் கொண்டார். வோர்ட்ஸ்வொர்த் தமது கவிதைகள் ஒன்வொன்றும் ஓர் அறம் கூறும் என்று சொல்லுமிடமும் உண்டு. "நீதி புகட்டும் கவிதையை முற்றும் வெறுக்கிறேன்" என்று தெரிவித்த ஷெல்லியும்கூட, "கவிதை நம் உள்ளத்தைத் தாக்கியும் கற்பனையைத் தூண்டியும் எல்லாவுயிர்களின் பாலும் நாம் அன்பும் இரக்கமும் கொள்ள வழி செய்யும் பயனுள்ள கருவியேயாகும்" என்று வாதிடும்போது அறத்தை வெளிப்படையாகச் சொல்லும் கவித்துவமற்ற கவிதையை மட்டுமே அவர் ஒதுக்குகிறார் என்பது புலனாகும். கவிதை கவிதைக்காகவேயென்றும் அது வாழ்க்கைப் பயனையோ அறமுரைத்தலையோ குறிக்கோளாகக் கொள்ளக் கூடா

ப. மருதநாயகம்

ஆய்வறிஞர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.

தென்றும் வாழ்க்கையைத் தொடுவதே அதற்குக் கேடு விளைவிக்குமென்றும் முழங்கிய ஒரு சிறு குழுவைச் சார்ந்தவர்கள் கௌடியர் (Gautier), போதலேர் (Baudelaire), ரெனன் (Renan), பேட்டர் (Pater), ஆஸ்கார் ஒயில்டு (Oscar Wilder), சுவின்பர்ன் (Swinburne) போன்றோர், அன்னாருள் பலரும் தமது முதுமைக் காலத்தில் இக்கொள்கையிலிருந்த பிடிப்பை இழந்தனர் என்று வரலாறு சொல்லும்.

இருபதாம் நூற்றாண்டில் முருகியலின்பத்திற்கு முதலிடம் தரக் கூடாதென்று அறை கூவியவர்களில் குறிப்பிடத்தக்கவர் டால்ஸ்டாய் ஆவார். மனித வாழ்க்கைக்குப் பயன்படாத கலையைக் கலையென்றே ஏற்றுக்கொள்ள மறுத்து இந்த ருசிய நாட்டு அறிஞர் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள், பீதோவனின் இசை போன்றவையும் மாந்தனுக்கு நன்னெறி காட்டத் தவறுவதால் அவையும் தள்ளப்பட வேண்டியவையேயென்று அஞ்சாது எடுத்துரைத்தார். ஒரேவிதமான உணர்வுகளில் மனிதர்களை ஒன்றுபடுத்தி அவர்களது வாழ்க்கைக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாத் தேவையாயிருப்பதே கலையென்பது அவர் முடிவு. மக்களுடைய முன்னேற்றத்திற்கும் ஒருங்கிணைப்பிற்கும் கொடுமையை அகற்றுதற்கும் எவ்விலக்கியம் கருவியாகச் செயல்படுகிறதோ அஃதே பெருமைக்குரிய இலக்கியமென்று அவர் மதிப்பீடு செய்வார்.

அழகிய பொருளாகி மட்டற்ற மகிழ்ச்சியளித்தலும் அறம் பேசுதலும் ஒன்றுக்கொன்று முரண்படும் செயல்கள் அல்லவென்றும் உயர்ந்த கவிதைகளில் இவையிரண்டும் இணைந்தியங்கக் காணலாமென்றும் கூறுவோர் பலரும் உள்ளார். சமயம், இசை, கவிதை ஆகிய மூன்றும் முற்றுமாகக் கலந்தவையே பேரிலக்கியங்கள் என்று கருதிய டி.எஸ். எலியட், உண்மைகளையும் அறக் கருத்துகளையும் எவ்வித அணிநலன்களுமின்றி நிரல்படத் தருபவையும் உயர்ந்த கவிதைகளாகலாமென்றும் தாந்தேயின் தெய்வீக இன்பியல் நாடகத்தில் (The Divine Comedy) இத்தகைய பகுதிகளைப் பார்க்கலாமென்றும் தெளிவுபடுத்தினார்.

தொல்காப்பியர் கூறும் அகத்திணைப் பாக்கள் கருத்தொரு மித்த காதலரின் நுண்ணிய மனவுணர்வுகளை உள்ளவாறு ஓவியமாக்கும் நோக்கம் கொண்டவையாதலின் இவற்றில் முருகியல் இன்பமே முதலிடம் பெறும். ஆனால், போர், புகழ், இறப்பு ஆகியவை பற்றிப் பேசும் புறத்திணைப் பாடல்களில் அறமுணர்த்தலுக்குச் சிறப்பிடம் உண்டு. தொல்காப்பியரே ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி எனும் நால்வகைப் பாக்களும் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று முதற் பொருட்கும் உரியனவென்றும் அந்நான்கும் வாழ்த்தியற் பொருளிலும் வருமென்றும் விளக்கி, அவை யடக்கியல், செவியறிவுறூஉ என்பனவற்றையும் சுட்டுகிறார். "பொங்குதலின்றிப் புரையோர் நாப்பண் அவிதல்கடனெனச் செவியுறுத்தன்றே என்பது செவியறிவுறூஉ" என்று நச்சரும் பெரியோர் நடுவில் வெள்குதலின்றித் தாழ்ந்து ஒழுகுதல் கடனெனச் செவியுறுத்தல் செவியறை அல்லது செவியறிவுறூஉ ஆகும்" என்று இளம்பூரணரும் அறிவுறுத்துவர். அடிவரையில்லாதனவென்று தொல்காப்பியம் குறிப்பிடும் ஆறனுள் முதுமொழி, மந்திரம், குறிப்பு அல்லது அங்கதம் ஆகிய மூன்றும் அறமுணர்த்தும் தன்மைய. போர்க் களம் பற்றிய புறப் பாடல்கள் கவிதையின்பத்தை முதல் நோக்காகக் கொண்டிருப்பினும் அறமுணர்த்தல் அங்கும் நிகழக் காணலாம். நிலையாமை பற்றியவையும் செவியறிவுறூஉ, முதுமொழி, மந்திரம், குறிப்பு போன்றனவும் அறமுணர்த்தலை முதல் நோக்காய்க் கொண்டவையென்பதை அவற்றின் பாடுபொருள் தெரிவிக்கும். ஆனால் தொல்காப்பியரால் செய்யுள் என்று வரையறுத்துக் கூறப்பெறுவது எல்லாமே வெளிப்படையாக அறம் கூறும் போதும் அல்லாத இடத்தும் முருகியல் இன்பம் தராதிருக்க வழியில்லை. செய்யுள் உறுப்புகள் என்று அவர் கூறுபவை பொருளுக்கேற்ற சொல், வடிவம், ஓசை ஆகியவற்றைத் தந்து, செய்யுள் அளிக்கும் இன்பத்தை மிகுவிக்கும் தன்மையவை.

கெனித் பர்க் (Kenneth Burke) எனும் மேலைத் திறனாய்வாளர் பழமொழி பற்றித் தமது கட்டுரையொன்றில் கூறும் கருத்துகள் ஈண்டு நினைவு கூரற்பாலன. அவரது "வாழத் தகுதியாக்கும் கருவியாக இலக்கியம்" (Literature as

the equipment for living) பற்றிய கட்டுரை சமுதாயவியல் அணுகுமுறைக்கு ஒரு புதிய பரிமாணத்தைத் தர முனைவது. முதலில் பழமொழிகளைப் பற்றிக் குறிப்பிடும் பர்க் அவை யெல்லாம் மருந்து (Everything is medicine)போல் செயல் படுபவையென்றும் அவற்றில் இலக்கியத்திற்காகவே இலக்கியம் அல்லது "தூய" இலக்கியம் (Pure literature) என்னும் நிலையைக் காண முடியாதென்றும் சுட்டிக் காட்டுவார். நம்மவர் அத்தகைய இலக்கியத்தை மருந்துகளின் பெயரிட்டுத் திரிகடுகம், சிறுபஞ்ச மூலம், ஏலாதி என்றெல்லாம் அழைத்த நுட்பம் கருதற்குரியது. பழமொழிகள் யாவும் துன்பமுற்ற வரைத் தேற்றல், வஞ்சந் தீர்த்தல், இடித்துரைத்தல், நலிந்தாரை ஊக்கமுறச் செய்தல், எதிர்காலம் உரைத்து எச்சரித்தல் போன்றவற்றுள் ஒன்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டி ருக்கும். இவை மூலமாகப் பழமொழிகள் வாழ்க்கையில் நாம் மீண்டும் மீண்டும் எதிர்கொள்ளும் சூழல் வகைகளை நமக்கு அடையாளம் காட்டுகின்றன என்பது பர்க்கின் எண்ணம். போட்டி, கூட்டுறவு காரணமாக விளையும் செயல்கள் சமுதாய அமைப்புகளில் மிகுதி. இவற்றின் வகை மாதிரிகளைப் (types) பழமொழிகள் பாமரர் அனுபவத்திற் கேற்பப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இவை கருத்துச் சிறப்பிற்காக மட்டும் தோன்றுவதில்லை; மனித நலத்தோடு அவற்றிற்குள்ள அக்கறை பற்றி மனித நல மேம்பாட்டு அடிப்படையிலேயே தோன்றுகின்றன. அவை எந்தவிதமான உள் நோக்கமின்றியும் பிறப்பதில்லை; வாழ்க்கையில் எதை எதிர்பார்க்க வேண்டும், எதைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் அறிவுறுத்தும் கட்டளைகளாகவே அமை கின்றன.

பழமொழிகள் செய்யும் தொழில்களுக்கேற்ப, ஆங்கிலத்தில் உள்ள பழமொழிகள் பலவற்றை அவ்வறிஞர் வகைப் படுத்திக் காட்டுதல்போல் நாமும் செய்ய இயலும். தமிழ்க்குடி உலகின் மூத்த குடிகளில் ஒன்றென்பதால் ஏனைய மொழி களினும் தமிழ் மொழியில் உள்ள பழமொழிகள் மிகப் பலவாம். அவை மனித வாழ்க்கையின் எல்லாக்கூறுகளை யும் பற்றிப் பேசுபவை. அவை தொடாத வாழ்க்கையனுபவம்

ஏதுமில்லை. ஒரு சமுதாயத்தில் உள்ள பேரறிஞன் முதல் கல்வியறிவற்ற கடை மனிதன் வரை யாவர்க்கும் அறிவு கொளுத்தும் பழமொழிகள் தமிழில் பல உண்டு. ஐம்புல இன்பங்களில் தொடங்கி ஆன்மிக எண்ணங்கள் முடிய, உண்டி, உடை, உறையுள், தூக்கம் போன்ற அடிப்படைத் தேவைகளில் ஆரம்பித்து உயர்ந்த தத்துவக் கருத்துகள் வரை எல்லாவற்றையும் தம்முள் அடக்கும் பழமொழிகளின் வீச்சு அளப்பரும் தன்மையது. அவற்றுள் நுண்ணறிவு, நூலறிவு, பட்டறிவு ஆகியவை பளிச்சிடல் கண்கூடு. காலங்காலமாக நம் சமுதாயத்தில் வழங்கி வரும் பழமொழிகளுக்குச் சான்று களுள் மிகச் சில பின்வருமாறு : முள்ளை முள்ளால் எடுக்கலாம், முற்பகல் கண்டான் பிறன் கேடு தன் கேடு பிற்பகல் கண்டு விடும்; முழம் கறைப்பச் சாண் நீளும், எரிவதை யிழுத்தால் கொதிப்பது அடங்கும்; பூவோடு நார் சேர்ந்தாற்போல, பாம்பறியும் பாம்பின் கால், நுணலும் தன் வாயால் கெடும், நாய்வால் திருந்துதல் என்றும் இல், தாய் மிதித்து ஆகா முடம், தனி மரம் காடாகாது, கொல்லன் தெருவில் ஊசி விற்பாரில்லை, குன்றின் மேல் இட்ட விளக்கு. கெனித் பர்க் பழமொழிகளை வகைப்படுத்தியிருக்கும் பாங்கின் அருமையை இப்பழமொழிகளாலும் அறியலாம். இவற்றில் எல்லாம் யதார்த்தத்திற்காக யதார்த்தம் (Realism for its own sake) என்றில்லாமல் அறிவுறுத்துதற்காக, நம்பிக்கை யூட்ட, கண்டிக்க, மன அமைதி தர, தேற்ற, திட்டி ஒழுக்கம் உரைக்க, யதார்த்தம் பயன்படுகிறது.

பழமொழிகளுக்கான இத்தகைய ஆய்வை இலக்கியம் எனும் பெரிய தளத்திற்கும் விரிவுபடுத்திக் காட்டுவார் பர்க். பேரிலக்கியங்கள் என்று போற்றப்படுபவையெல்லாம் அடிப்படையில் விரிவாக்கம் செய்யப்பட்ட பழமொழிகளே. இம்முடிவு இலக்கிய ஆக்கம் பற்றிய சில உண்மைகளை நாம் கண்டறிய உதவும். இவ்வணுகுமுறை இலக்கியத்தை அதன் தனித்துவ நிலையிலிருந்து பெயர்த்தெடுத்துச் சமுதாய வாழ்வில் அதற்குரிய இடத்தைத் தரும். பழமொழிகள் என்பவை நாம் நாளும் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்க்க உதவும் உத்திகளே.

ஒன்றுக்கொன்று முரண்படும் பழமொழிகள் உள்ளனவே யென்பார்க்கும் பர்க் தக்க விளக்கம் தருகிறார். மாறுபாடு களாகத் தோன்றுபவை நம் அணுகுமுறையைப் பொறுத்து அமையக் காணலாம். ''செய்து விட்ட பாவத்திற்கு வருந்திப் பயனில்லை'' (Repentance comes too late) என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. ''திருந்துவதற்கு என்றுமே காலம் கடந்த நிலையில்லை'' (Never too late to mend) என்ற பழமொழியும் ஆங்கிலத்தில் உண்டு. இவற்றையெவ்வாறு எடுத்துக் கொள்ள வேண்டும்? முதல் பழமொழி பாவம் செய்தவனைக் கடுமையாகச் சாடுகிறது; ''நீ எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் அழிந்து விடுவாய்'' என்று கூறுகிறது. இரண்டாம் பழமொழி, ''குற்றம் புரிந்து விட்டு வருந்துவானைத் தேற்றி ஆறுதல் கூறுவது; ''வருந்தாதே, இன்னும் உனக்கு வாய்ப்பிருக்கிறது'' என்பதே அதன் உட்கருத்து. நம் பழமொழிகளிலும் நீதி நூல்களிலும் நாம் காணும் முரண்பாடுகளுக்கும் இவ்விளக்கம் பொருந்தக் காண்க. ''அவனன்றி ஓரணுவும் அசையாது'', ''மெய்வருத்தக் கூலி தரும்'', ''எல்லாம் தலைவிதி'', ''விதியை மதியால் வெல்லலாம்'' என்னும் முதுரைகளெல்லாம் இத்தகைய இரட்டைகளே.

வாழ்க்கைப் போரில் நமக்குத் தேவையான உத்திகளைத் தரும் நூல்களில் இரண்டு வகையானவை தவிர்க்கப்பட வேண்டியவை யென்பார் பர்க். இவற்றுள் ஒருவகை எளிதில் ஒருவன் மனம் தேறும் உத்தியைத் தர முனையும் Inspirational literature ஆகும். நண்பர்களை விலைக்கு வாங்குவது எப்படி? பிறரை எளிதில் ஏமாற்றுவது எப்படி? கோடி சேர்ப்பது எப்படி? என்பன போன்ற தலைப்புகளில் எழுதப்படும் நூல்கள் எளிதில் மன நிறைவு பெறும் மாயத் தோற்றத்தை ஏற்படுத்துமே தவிர இடையூறுகளை உண்மையாக வுணர்ந்து அவற்றை வெல்லும் யதார்த்த வழிகளைச் சொல்பவையல்ல. இவைகளுக்கு நேர் எதிராக, வாழ்க்கைப் போராட்டங்களின் உண்மையான புகைப்படங் களை அப்படியே தரும் நோக்குடன் எழுதப் பெறும் Naturalistic writings என்பவையும் பயனற்றவையே என்று பர்க் வாதிடுவார். இவையும் துன்பங்களைச் சமாளிக்கும்

உத்திகளைத் தருவதில்லை. இரண்டு எதிர் முனைகளான இவைகளைத் தவிர, ஏனைய நூல்கள் ஒவ்வொன்றும் ஒரு சூழலை அடையாளங்காணும் உத்தியைத் தருகின்றதென்ற அடிப்படையில் அதனை அணுக வேண்டுமென்றும் சமுதாய வியல் திறனாய்வு, கவிஞர்கள் காட்டும் உத்திகளை வகைப் படுத்தி முறை செய்து உலகிற்கு உணர்த்த வேண்டுமென்றும் துன்பியல், இன்பியல் நாடகங்கள், அங்கதங்கள் போன்ற இலக்கிய வகைகள் வாழ்வாங்கு வாழ வழி செய்யும் கருவி களாகவே அணுகப்பட வேண்டுமென்றும் பர்க் கூறும்போது நம் முன்னோர்கள் பழமொழிகளுக்கும், நீதி கூறலுக்கும், நீதி இலக்கியங்களுக்கும் அளித்த சிறப்பின் காரணத்தை நாம் அறிய முடியும்.

பழமைக்கும் பண்பாட்டுக்கும் பெயர் பெற்ற தமிழ்ச் சமுதாயம் பழமொழியின் பயனறிந்து அதன் தன்மையைக் கூர்ந்து நோக்கி, ஒல்லும் வாயெல்லாம் அதனை அழியாமல் பாதுகாக்கவும் முயற்சி மேற்கொண்டது. தொல்காப்பியர்,

நுண்மையும் சுருக்கமும் ஒளியுமுடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப. (செய். 170)

என்று விளக்குவார்.

பழமொழிகளின் பெருமையுணர்ந்த சங்கச் சான்றோர் தமது அமரத்துவம் வாய்ந்த கவிதைகளில் அவற்றை ஆங்காங்கே பொருத்தமுறப் பதித்து வைத்துள்ளனர்.

அம்ம வாழி தோழி! 'இம்மை
நன்றுசெய் மருங்கில் தீதுஇல்' என்னும்
தொன்றுபடு பழமொழி இன்று பொய்த்தன்று கொல்?
(அகம். 101 : 1-3)

இவ்வகநானூற்றுப் பாடல் ஒரு பழமொழியைக் கூறுவதோட மையாது பழமொழி பழைய மொழியாயினும் என்றும் பொய்ப்பதில்லை என்றும் அறிவுறுத்துகின்றது.

முன்றுறை அரையனார் தமது பழமொழி நானூறு எனும் நூலில் நீதிகளைக் கவிதை நயத்தோடு சொல்லப் பல பழமொழி களைப் பலவாறாகப் பயன்படுத்திக் கொள்கிறார். சில பாடல்கள் பழமொழிகளின் விளக்கங்களாகவும், சில பழமொழிகள் கூறும் உண்மையை வலியுறுத்தும் சான்றுகளாகவும், மேலுஞ் சில, பழமொழிகளையே அரிய உவமைகளின் மூலங்களாகவும் கொண்டிருக்கக் காணலாம். பர்க் கூறுவது போல், முரண் பட்ட கருத்துகளைச் சொல்லும் பழமொழிகளும் தக்க விளக்கங் களோடு சேர்க்கப் பெறுகின்றன. ஒருவனது நல்ல அறிவினையும்கூட ஊழ்வினை கெடுத்து விடும் என்று ஒரு பாடல் கூறும்.

சுட்டிச் சொலப்படும் பேரறிவினார் கண்ணும்
பட்ட இழுக்கம் பலவானால் - பட்ட
பொறியின் வகைய கருமம்; அதனால்
'அறிவினை ஊழே அடும்' (பழ. 203)

ஆனால், இன்னொரு பாடல், எதனையும் ஊழின் பயன் என்று கருதி அஞ்சிச் செயலற்றிருப்பவன் பேதையென்று கண்டிக்கிறது.

உறுகண் பலவும் உணராமை கந்தா
தறுகண்மை ஆகாதாம் பேதை - தறுகண்
பொறிப்பட்ட வாறல்லால் பூணாது என்றெண்ணி
'அறிவச்சம் ஆற்றப் பெரிது' (பழ. 220)

ஒரு பாடல் செல்வமும் வறுமையும் ஊழ்வினைப் பயனால் வாய்ப்பன எனும் கருத்துடையது :

ஆகும் சமயத்தார்க்கு ஆள்வினையும் வேண்டாவாம்
போகும் பொறியார் புரிவும் பயம் இன்றே;
ஏகல் மலைநாட! என் செய்தாங்கு என் பெறினும்
ஆகாதார்க்கு ஆகுவது இல் (பழ. 127)

மற்றொன்று தோல்வியால் மனம் தளராது தொடர்ந்து செயல் படுவோர் வெற்றி பெறுவது திண்ணம் என்று உறுதி கூறும் :

இனியாரும் இல்லாதார் எம்மில் பிறர்யார்
தனியேம் யாம் என்றொருவர் தாம் மடியல் வேண்டா;
முனிவில ராகி முயல்க; முனியாதார்
முன்னியது எய்தாமை இல் (பழ. 161)

சில பழமொழிகள் கவி நயம், பொருள் நயம் செறிந்த உவமைகளாகி விடுகின்றன. மனிதனுக்கு ஆடையே அணி யெல்லாவற்றினும் தேவையானது என்ற கருத்தைச் சொல்லுவது "அணியெல்லாம் ஆடையின் பின்" என்னும் பழமொழி. கவிஞர் அதனைப் போலவே அறிவு பிற செல்வங் களைக் காட்டிலும் முதன்மையானது என்று சேர்க்கிறார்.

அறிவினால் மாட்சியொன்று இல்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனாம்? - பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் மற்று இன்ன
அணியெல்லாம் ஆடையின்பின் (பழ. 271)

பறையானது ஒருவர் மனத்தில் நினைக்கும் சொற்களை யொட்டி ஒலிப்பதுபோல் தோன்றும். இது எத்துணை அறிவுடையார்க்கும் ஏற்படும் அனுபவ உண்மையாகும். இதனை "ஓர்த்து இசைக்கும் பறை" என்ற அரிய பழமொழி தெரிவிக்கும். புலவரோ, ஒருவர் நெறியற்ற கருத்தை உள்ளத்தே கொண்டிருந்தால் அதனின்றும் அவரை மாற்றல் சான்றோராலும் ஆகாத செயல் என்ற கருத்தை உவமேயமாக்கி விடுகிறார். இப்பழமொழிக் கருத்து உளவியல் மேதை பிராய்டு கண்ட Projection Theory எனும் கோட்பாட்டிற்கு அவரே அறியாத நல்ல சான்றாகும்.

நீர்த்தன்று ஒருவர் நெறியன்றிக் கொண்டக்கால்,
பேர்த்துத் தெருட்டல் பெரியார்க்கும் ஆகாதே;
கூர்த்த நுண்கேள்வி அறிவுடையார்க்கு ஆயினும்
ஓர்த்தது இசைக்கும் பறை (பழ. 195)

பெருங்கவிஞர்கள், மன்னர்குடி மக்களை வருத்தாமல் வரி வாங்குதற்கு வண்டு மலரைச் சிதைக்காது தேனுண்டு மலரினம் பெருக வழி செய்வதை உவமையாகச் சொல்வர். இது பல நூற்றாண்டுகளுக்கு முன் வழங்கிய பழமொழி யென்பது வியப்பூட்டுவதாகும்.

பொருத்தம் அழியாத பூந்தண்தார் மன்னர்
அருத்தம் அடிநிழலாரை - வருத்தாது
கொண்டாரும் போலாதே கோடல் அதுவன்றோ
வண்டு தாதுண்டு விடல் (பழ. 242)

சில பாடல்கள் இரண்டு பழமொழிகளை உவமையாக்கி முருகியல் இன்பத்தை மிகுவிக்கும். “சுரம் போக்கி உல்கு கொண்டார் இல்லை” என்பதும், “மரம்போக்கிக் கூலி கொண்டார் இல்லை” என்பதும் பழமொழிகள். வழியை ஒருவன் கடந்து போனபின் அவனிடம் வரி வசூலிப்பதும் ஓடத்தில் கரை சேர்ந்தபின் ஒருவனிடம் முறையான கூலி பெறுவதும் இயலாத செயல்கள். “அவை போல, இளமையில் கல்லாதவன் முதுமையில் கல்வியைப் போற்றல் உண்டோ?” என்று புலவர் கேட்பார்.

ஆற்றும் இளமைக்கண் கல்லாதான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ? - ஆற்றச்
‘சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லை; மற்றுஇல்லை
மரம் போக்கிக் கூலி கொண்டார்’ (பழ. 60)

தமிழில் தொன்றுதொட்டு நீதிநூல் செய்ய வந்தாரெல்லாம் அவற்றை இலக்கியமாகவே கண்டு யாத்தனர். திருக்குறள் போன்ற நீதி இலக்கியங்களைப் பற்றியெழுதும் சிலர் அவை மனு சாத்திரம் முதலான வட நூல்களுக்குக் கடன்பட்டிருப்பன என்பதை அடிக் கோடிட்டுக் காட்டுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். திருக்குறள் பொருட்பாலைப் பற்றிப் பேசும்போது கௌடலீயம் எனும் வடமொழிப் பொருள் நூலிலுள்ள சில கருத்துகளையும் உவமைகளையும் சுட்டிக் காட்டி, குறளின் பெருமைக்கு மறைமுகமாக ஊறு செய்யும் வகையில் இப்பொழுதும் எழுதுவோரும் உண்டு. நாலடியாரின் ஆங்கில மொழிபெயர்ப்பை 1893-இலேயே வெளியிட்ட போப் அடிகளார் தமது முன்னுரையில் இவர்களுக்கெல்லாம் தக்க விடையைத் தருமாற்றான், தமிழ்க் கவிதைகளிலுள்ள நீதிக் கருத்தைச் சொல்லும் ஒவ்வொரு பாவிற்கும்கூட ஒரு வடமொழிச் செய்யுளை அதனோடு நெருக்கமுடையதாகக் காட்ட முடியும். ஆனால், இத்தகைய ஒற்றுமை கொண்டுள்ள

பாக்களில் பலவற்றுள் அழகு, இயல்பாய் இயங்கல், அகத் தூண்டுதல், சுருக்கம், தெளிவு ஆகிய தன்மைகளை வைத்துப் பார்க்கும்போது தமிழ்க் கவிதையே மூலமென்று நிறுவப் படக் காணலாம் (போப் : xxxiv) என்று தெளிவுபடுத்துவார். இத்தகைய கூற்றுகளைப் புறக்கணித்து மீண்டும் மீண்டும் கௌடலீயத்தின் முதன்மை பற்றிப் பேசுவார்க்கு அது எத்தகைய நூல் என்பதை நாம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நூற்றெண்பது சூத்திரங்களைக் கொண்டு நூற்றைம்பது அத்தியாங்களாக வகுக்கப் பெற்றுள்ள பதினைந்து அதிகரணாங் களில் கௌடலீயம் அதன் கூற்றுப்படியே மன்னன் நிலத்தைக் கொள்ளுதலையும் அதனைக் காத்தலையும் பாடு பொருளாகக் கொண்டுள்ளது. அதனை மேலெழுந்த வாரியாக ஒருமுறை படித்தவருங்கூட அதில் நீதியும் இல்லை, கவிதையும் இல்லை என்பதை அறிவர். அது ஒரு மூல நூலன்று என்பதை ஆசிரியர் முதல் அதிகாரத்திலேயே ஏற்றுக் கொண்டு,

> *முன்னையாசிரியர்களால் எத்துணைப் பொருள் நூல்கள் கூறப்பட்டனவோ அவற்றைப் பெரும்பாலும் திரட்டி இப்பொருள் நூல் ஒன்று செய்யப்படுகின்றது.*
>
> (கௌடலீயம் : 1.2)

என்று தெரிவித்து விடுகிறார். நூலில் எப்பொருளை யெடுத்துக் கொண்டாலும் மனுவும் அவர் வழியினரும், பிருகற்பதியும் அவர் வழியினரும், சுக்கிரனும் அவர் வழியினரும், பாரத் துவாசர், விசாலாட்சர், பராசரர், பிசுநர், கௌணபதந்தர், வாதவியாதி, பாகு தந்தீ புத்திரர் ஆகியோருள் சிலருடைய கருத்துகளைச் சொல்லி விட்டுத் தமது கருத்தையும் தருகிறார். கிடைக்கின்ற அகப்புறச் சான்றுகளை வைத்துக் கொண்டு, கௌடலீயம் எழுந்த காலத்தை உறுதியாக நிர்ணயிக்க முடியவில்லை. ஆனால், ஆஸ்திரிய நாட்டு விண்டர்னிட்சன். ஜெர்மானியரான ஜாலி, ஆங்கிலேயரான கீத் ஆகிய மூன்று வடமொழி விற்பன்னர்களும் சந்திரகுப்த மௌரியனது காலத்தில் சாணக்கியம் என்ற பொருள் நூலாசிரியர் ஒருவரும் இருந்ததில்லையாதலால் இது மௌரியர் காலத்து நூலன்

றென்றும் மிகப் பின்னால் வந்த ஒருவர் இதனைச் செய்ய கௌடலியர் பெயரில் வழங்கி வருகிறதென்றும் கூறுவர். இந்நூலில் பயின்று வரும் சந்தமும் வாக்கிய அமைப்பும் இதன் பழமையைப் புலப்படுத்தவில்லையென்று கீத் அறிவுறுத்துவார் (கௌடலீயம் : xxiii).

மேலைக் கல்வியாளர்களின் கருத்துப்படி, கௌடலீயம் கி.மு. நான்காம் நூற்றாண்டிலல்லாமல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிறகே தோன்றியிருக்க வேண்டுமென்பது தேற்றம். அவ்வாறாயின் அது குறளுக்குப் பின் வந்த தென்பதில் ஐயமில்லை. கௌடலீயத்திற்கும் வள்ளுவரின் பொருட்பாலுக்கும் சிலவிடங்களில் வியத்தகு சொல், பொருள் ஒற்றுமைகள் இருக்குமானால் யாரிடமிருந்து யார் பெற்றார் என்பது இப்பொழுது தெளிவாகும். வடமொழிப் பொருள் நூலின் ஆசிரியர் பல கருத்துகளைத் தமது முன்னோடிகள் சொல்லியனவாகத் தொகுத்து முன் வைத்துவிட்டு, "ஆச்சாரியர்கள்" கூறுவரென்று பெயர் குறிப்பிடாமல் சிலவற்றைக் கூறுவர். இவ்வாசிரியார்கள் வள்ளுவர் போன்ற தமிழ் நூலராக இருக்க வேண்டும் என்று முடிவு செய்வது தவறாகாது. சான்றாக, மறைவில் செய்யும் சோதனைகளால் அமைச்சர் முதலியோரின் மனவியல்பு ஆராய்தல் பற்றிய பத்தாம் அத்தியாயத்தில் கீழ்க்கண்ட பொருளுள்ள நூற்பா காணப்படுகிறது.

அறம், பொருள், இன்பம், உயிரச்சம் ஆகிய நான்கானாலும் ஆராயப்பட்ட தூயவர்களை அவரவர் தூய்மைக் கேற்ப அன்னார் தகுதிக்குரிய செயல்களில் நியமனம் செய்தல் வேண்டும் என்று பண்டை ஆசிரியர்கள் வரை யறைப்படுத்தினர் (கௌடலீயம் : 59). இங்கு,

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும் (501)

என்னும் குறளின் எதிரொலியைக் கேட்கலாம்.

திருக்குறளையும் கௌடலீயத்தையும் இணைத்துப் பார்ப்பார் அவையிரண்டையும் உருவாக்கியுள்ள பண்பாடு களின் வேறுபாட்டைக் கண்டு அதிர்ச்சியுறுவர். பெண்ணின்

கற்பு பற்றியும் சமுதாயத்தில் பெண்ணின் நிலை பற்றியும், வடநூலார் கொண்டிருந்த எண்ணத்தை, அரசன் மூப்புடையனாக அல்லது நோயுடையனாக இருப்பின் தன் தாய்வழி உறவினர், தன் குல வழியினர், நற்குணமுடைய வேற்று மன்னர் என்னும் இவருள் ஒருவனைக் கொண்டு, தன் மனைவியிடத்துப் புதல்வனை உண்டு பண்ணிக் கொள்ளலாம் (கௌடலீயம் : 104) என்றும், முதலில் மணம் செய்து கொள்ளப்பட்ட மனைவி மகப் பேறில்லாதவளாயின் உயிர் வாழ்வதற்குப் போதிய ஓரளவு பொருளையும் கொடுத்த பின் பல மகளிரையும் மணந்து கொள்ளலாம். என்னை? மகப்பேற்றின் நிமித்தமே மகளிராதலின் என்க என்றும் கௌடலீயர் எவ்வித மன நடுக்கமுமின்றிக் கூறுவதால் அறியலாம். "பெண்ணின் பெருந்தக்க யாவுள?" என்று கேட்ட வள்ளுவரிடமிருந்து வடமொழியாளர் எவ்வளவு தூரம் தள்ளிச் சென்று விட்டனர் என்பதை அன்னார் பெண்ணை வெறும் புதல்வரைப் பெற்றளிக்கும் சாதனமாகக் கருதினர் என்பதிலிருந்து அறியலாம்.

அரசன் காட்சிக்கெளியனாய், கடுஞ்சொல்லன் அல்லனாய், கடிதோச்சி மெல்ல எறிபவனாய், கருமஞ்சிதையாத கண்ணோட வல்லனாய் முறை செய்து குடிகளைக் காக்க வேண்டுமென்று திருக்குறள் உரைக்க, பொருள் நூல் ஆசிரியர், பொருள் சேர்க்கும் முயற்சியில் ஈடுபடும் அரசன், அந்தணர்க்குப் பயன் படாத நாட்டுப் பொருளையாதல் பொருள் மிகப் படைத்த கைம்பெண்ணின் பொருளையாதல் உதவி செய்வார்போல் வஞ்சித்துக் கவர்ந்து கொள்ளலாம்; அல்லது வாணிகக் கூட்டத்தாரை மயக்கத்தை விளைவிக்கும் கள் முதலியவற்றால் வஞ்சித்து அவர்களுடைய மரக்கலங்களில் உள்ள பொருள் களைக் கவர்ந்து கொள்ளலாம் (கௌடலீயம் : 107) என்று கூறுவார்.

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்று வள்ளுவர் கூறியிருக்க, ஒரு குலத்துக்கொரு நீதியுடைய சமுதாயமே அரசனால் பேணிக் காக்கப் பெறவேண்டுமென்று கௌடலீயம் வற்புறுத்துகிறது. கள்வர்களுக்குக் கொடுக்க வேண்டிய தண்டனைகளைக் கூறும்போது அந்தணன் எவ்வகைக்

குற்றத்திற்காகவும் துன்புறுத்தத் தக்கவனல்லன். விலக்குதற் குறியீடாக அவனது நெற்றியில் குற்றப் புள்ளியிடப்படும் (கௌடலீயம் : *625*) என்பார்.

பெயக்கண்டு நஞ்சுண்டமையும் நாகரிகம் பற்றிக் குறள் பேச, பல அடாத செயல்களுக்குக் கௌடலீயம் கட்டியம் கூறுகிறது. நல்ல முடிவுகளை அடைதற்கு நல்ல வழிகளைக் கையாள வேண்டுமென்பது அரசனுக்கும் எல்லா மாந்தர்க்கும் குறள் அறிவுறுத்தும் நீதி. நிலத்தை அடையவும் அதனைக் காக்கவும், மன்னன் எத்தகைய கொடிய முறைகளையும் மேற்கொள்ளலாமென்று கூறுகிறது வடமொழிப் பொருள் நூல்.

பகைவரைக் கொல்ல எத்தகைய பாதகச் செயலையும் செய்யலாமென்று வஞ்சக உத்திகளை வரிசைப்படுத்தி விளக்கும் பன்னிரண்டாம் அதிகரணம், பகைவன் திருவிழாக் காலங்களில் தெய்வ வழிபாடு நிமித்தம் வரும்போது அவன் மீது மறைவான சுவரையோ, பாறையையோ தள்ளுதல், தெய்வத் திருமேனியில் அமைந்திருக்கும் படைக்கலங்களை அவன் மேல் வீழ்த்தல், தெய்வத்திற்கான மலர்கள், குங்குமம் முதலியவற்றைக் காணிக்கையாய்க் கொடுப்பதைக் தலைக்கீடாகக் கொண்டு நஞ்சைப் பிரயோகித்தல், பகைவனுக்கு வேண்டிய புல், விறகு முதலியவற்றை ஒரு யோசனை தூரமுள்ள இடங்களில் கொளுத்துதல், நஞ்சினால் நீரைக் கெடுத்தல், கரை, அணைக்கட்டுகளைத் தகர்த்தல் மூலம் நீரைப் புறத்தே பெருகச் செய்தல், பகைவர் வாழுமிடங் களில் நஞ்சிடப் பெற்ற கூலம், எண்ணெய், பால், உப்பு, என்னுமிவற்றைப் புகுத்தல் என்றெல்லாம் அடுக்கிச் செல்கிறது (கௌடலீயம், *1135-44*).

குறள் எதனையும் பகுத்தறிந்து உண்மை உணர்ந்து செயல்பட வேண்டிய நிலையை வற்புறுத்தி விண்ணுலகம் பற்றி எதுவும் அறியாத நிலையில் பேசுவது வீணென்று அதனை விட்டுவிட, வடமொழிப் பொருள் நூல் வசிய மந்திரங்கள், சடங்குகள், மூடநம்பிக்கைகள் ஆகியவைகளின் பெட்டகமாகக் காட்சி தருகிறது. பாத்திரங்களில் நிறைத்து

வைத்து உணவு, நீர் ஆகியவை எடுக்க எடுக்கக் குறையாமல் இருக்க என்ன வழி? கௌடலீயம் கூறுகிறது.

குறித்த சில முறைகளில் இறந்தவன் ஒருவனுடைய மண்டையோட்டில் மண் போட்டு அதில் விதைத்து முளைத்த குன்றிமணிக் கொடிகளால் புரிமணை செய்து அதன் கண் வைத்த பாத்திரம் இத்தகைய அமுதசுரபியாகி விடும். (கௌடலீயம் : 1218)

ஒரு சிற்றூரில் பல வீடுகளிலுள்ள வெண்ணெயை ஒருவன் தன் வீட்டுப் பாத்திரத்திற்குக் கொண்டு வருவது எவ்வாறு?

இறந்த பசுவின் மடியை அறுத்து விளக்குத் தீயால் கொளுத்தி, கொளுத்தியதை எருதின் சிறுநீரால் பிசைந்து புதிய குடத்துள் பூசி, அக்குடத்தை அவ்வூரின் வலப்புற மாகக் கொண்டு வந்து அதில் சிறிது வெண்ணெயை வைக்க அவ்வெண்ணெய் ஊரிலுள்ள வெண்ணெயை யெல்லாம் உடன் வருவிக்கும். (கௌடலீயம் : 1218)

மரத்திலுள்ள கனிகளைக் கீழே கொண்டு வருவது எவ்வாறு?

பூசத்துடன் கூடிய தேய்பிறைச் சதுர்த்தசியில் பைத்தியம் பிடித்த நாயின் உடலில் இருப்பு இலச்சினையைப் புகுத்தித் தானே வீழ்வதையெடுத்து அதைக் கொண்டு அழைத்தால் மரக் கனிகள் யாவும் தாமே கீழே இறங்கி வரும்.

(கௌடலீயம் : 1218)

இரவில் ஒருவன் எல்லாவற்றையும் பார்க்கக்கூடிய கண்களைப் பெறுவது எப்படி?

பூனை, ஒட்டகம், ஓநாய், பன்றி, முள்ளம் பன்றி, காக்கை, கோட்டான் ஆகியவற்றுள் ஒன்று இரண்டு பலவற்றுக்கு வலக்கண்களையும் இடக் கண்களையும் எடுத்து வலக் கண்களைத் தனியாகவும் இடக் கண்களைத் தனியாகவும் அரைத்து, ஒருவன் தன்னுடைய வலக் கண்ணில் மேற்கூறிய இடக் கண் மையையும் இடக் கண்ணில் வலக்கண்

மையையும் பூசிக்கொள்ள, அவனால் இரவில் எல்லா உருவங்களையும் பார்க்க முடியும். (கௌடலீயம் : 1207)

முப்பால், குறைந்தது ஆயிரத்து எண்ணூறு ஆண்டு களுக்கு மேலாகப் பல தலைமுறை அறிஞர்களின் சிந்தனையைக் கிளறிப் பல புத்துரைகளும், விளக்கங்களும் ஆய்வுகளும் மொழி பெயர்ப்புகளும் தோன்றக் காரணமாய்த் தொட்டனைத் தூறும் மணற்கேணியாய் விளங்க, கௌடலீயம் முதலில் மயங்கிய மேலையறிஞர்களால் கைவிடப்பட்டு விட்டதற்குக் காரணம் அதில் கால ஓட்டத்தால் தேவையற்றுப் போன பகுதி மிகுந்திருப்பதுமாகும். வள்ளுவர் மன்னர்க்கென்று சொல்லியவை எல்லா மாந்தர்க்கும் இன்றும் பொருந்த, கௌடலீயம் மன்னர்க்கென்று சொல்லியவை இன்றைய அரசுகளுக்கும் பொருந்தாதவையாய்ப் போய்விட்டன. மன்னன் பயிற்சி பெறுதல், தொழில் தலைவர் செயல்முறை, அறநிலை யாட்சி, சிறு பகை களைதல், வஞ்சித் தொறுத்தல், மண்டல யோனி, அறுவகைக் குணங்கள், விதனம் விளம்பல், போர்ச் செலவு மேற்கொள்வோன் செயல், போர் நிகழ்ச்சி, குழூஉச் செயல், ஆற்றலிலான் செயல், பகையரண் எய்தும் வழி, மறைவுச் செயல், தந்திர யுக்தி ஆகிய பதினைந்து அதிகரணங் களில் பத்துக்கும் மேற்பட்டவை இன்று யாரும் படிக்கவும் பயனற்றவையாகி விட்டது கண்கூடு. கௌடலீயத்தில் சில சிறுபிள்ளைத் தனமான விவாதங்களையும் காணலாம். எட்டாம் அதிகரணம் அரசனுக்குத் துன்பம் தரும் ஒழுக்கக் குறைவான செயல்களை "விதனம் விளம்பல்" எனும் தலைப்பில் விளக்குகிறது. கடுஞ்சொல், பொருட்கேடு, கடுந்தண்டம், வேட்டை, சூது, மகளிர், குடி என்று விதனங்கள் ஏழாகுமென்றும் இவைகளுக்குக் காரணங்கள் காமம், சினம் ஆகிய இரண்டென்றும் கூறி, காமமும் சினமும் குறைகளா, நிறைகளா என்றும் ஏனையவற்றையெல்லாம் இரண்டிரண்டாக எடுத்துக்கொண்டு ஒன்றைவிட மற்றது பெருங்குறையா, சிறுகுறையா என்றும், நீண்ட விவாதம் நடத்தி எல்லாம் குறைகளேயென்று முடிவு செய்வார் கௌடலீயர். அறிவு, ஆண்மை, ஊக்கம் ஆகிய மூன்றுள் எது எதைவிடச் சிறந்தது என்று ஓர் ஆய்வு நீள்கிறது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது கௌடலீயம் எனும் பொருள் நூல் அது தொகுக்கப்பட்ட காலத்திருந்த சிற்றரசர்களுக்கு ஒருவரையொருவர் வஞ்சித்து நிலமும் பொருளும் கவர்ந்து, கவர்ந்தவற்றைத் தக்க வைத்துக் கொள்வது எப்படியென்று கூறும் நோக்குடையதே தவிர, எக்காலத்திற்கும் மனிதஇன உயர்வுக்குத் தேவையான அறத்தைக் கவிதையாகத் தரும் நீதி இலக்கியமாகாது என்பது ஒரு தலை.

மனு தர்ம சாத்திரத்திலிருந்து திருவள்ளுவர் சில கருத்துகளை எடுத்திருக்கிறார் என்று பேசுவார் மனு தர்ம சாத்திரத்தைப் படித்திருக்க மாட்டார் என்பது உறுதி. வள்ளுவர் 'உழவு' எனும் அதிகாரத்தில்,

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. (1031)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (1033)

என்றெல்லாம் உழவுத் தொழிலின் உயர்வு பற்றிப் பேசுவதை யாவரும் அறிவர். ஆனால், மனுவின் நூல், "சிலர் பயிரிடுந் தொழிலை நல்ல தொழிலென்று நினைக்கின்றார்கள்; அந்தப் பிழைப்பு பெரியோர்களால் நிந்திக்கப்பட்டது" (மனு தர்ம சாஸ்திரம், "அந்தணர் ஆபத் தருமம்" 84ஆம் வசனம்) என்று கூறுகிறது. அந்நூல் பற்றி வள்ளுவர் என்ன நினைத்திருப்பார் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை.

தமிழிலுள்ள நீதிக் கவிதைகள் பற்றித் தமது நாலடியாரின் ஆங்கில மொழிபெயர்ப்பு முன்னுரையில் போப் அடிகளார் கூறும் கருத்துகள் ஏனைய மொழி நீதிக் கவிதைகளோடு அவற்றை ஒப்பிட்டு அவர் கண்டுள்ள முடிவுகளை உணர்த்தும். நீதியைச் சுருக்கமாகவும் உள்ளத்தில் தைக்கும் வண்ணமும் சொல்லுதற்கு ஏற்ற பாவகை வெண்பாவென்றும் தூங்கிசை, ஏந்திசை, ஒழுகிசை எனும் மூவகைச் செப்பல்கள் மூலமாகக் கருத்துக்கேற்ற ஓசையைப் புலவர்கள் பெற முடிகின்றதென்றும் ஓசை மாறுபாடுகளில் 512 வகைகளைக் காணலாமென்றும் தமிழ் யாப்பு மரபு வடமொழி மரபினும்

மிகச் சிறந்ததென்றும் தமிழ் மொழிக்கேற்ற தன்மையதென்றும் பிண்டார் (Pindar) பாடல்களிலும் கிரேக்கக் குழுப் பாடல் களிலும் உள்ள ஓசை மாறுபாடுகள் யாவற்றிற்கும் சான்று களை வெண்பாப் பாடல்களில் பெறலாமென்றும் மனம் நெகிழ்ந்து கூறுவார். நாலடிப் பாடல்களைப் படிப்போர் பிண்டார் கவிதைகளைப் படிப்போர்க்குச் சொல்லப்பட்டுள்ள அறிவுரையைப் பின்பற்றுவது நல்லதென்றும் ஒரு கவிதை யின் பொருளை உணர முதலில் அதன் யாப்புக் கூறுகளை ஆராய்ந்து ஓசை நயத்தோடு படித்துப் பார்ப்பது உதவி செய்யுமென்றும் ஒவ்வொரு நாலடிப் பாடலிலும் அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் அமைந்திருக்கும் பாங்கு அறிந்தறிந்து இன்புறத் தக்கதென்றும் புகழ் பாடுவார். நாலடிப் பாடல்களைக் கலைச் சிறப்புடைய முழு வடிவங்கள் என்ற முறையில் ஏழு வகைகளாகப் பிரிப்பார்.

முதல் வகை, நீதியை நேரடியாகக் கூறுபவை. இவற்றுள் மூன்று நான்காம் அடிகள் கூறும் ஓர் உண்மையின் விளக்க மாகவோ எண்பிப்பாகவோ முதல் இரண்டு அடிகள் அமையும்.

அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி உண்டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனின் செல்வம் ஒன்று
உண்டாக வைக்கற் பாற்றன்று. (நாலடி. : 1)

இப்பாடலில் “செல்வத்தை ஒரு பொருளாக மதித்துக் கணக்கில் கொள்ளல் தவறு” என்ற உண்மையை விளக்கப் பெருஞ் செல்வராய் விளங்கியோர் இரந்து வாழும் நிலையேற்படலாம் என்ற உலக அனுபவம் சுட்டிக் காட்டப்படுகிறது.

இரண்டாம் வகைப் பாடல்கள் ஏதேனும் ஒரு பொருத்தமான உவமை மூலம் கருத்தை வலியுறுத்தும் உத்தி கொண்டவை.

ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேல் செல்லாவாம் - நீர்த்தருவி
தாழா உயர்சிறப்பின் தண்குன்ற நன்னாட
வாழாதார்க் கில்லை தமர். (நாலடி. : 290)

இப்பாடலில் ஏழைகளுக்கு உறவினர் இல்லையென்ற கருத்து காட்டப்பெறும் ஒப்பினால் (analogy) ஏற்புடையதாகிறது. வண்டினம் பூத்தொழிந்த மரக் கொம்புகளை நாடுவதில்லை யென்பது தக்க உவமையாகும்.

மூன்றாம் வகைப் பாடல்களில் உவமையிருப்பினும் தெளிவான கருத்து விளக்கம் முதன்மை பெறுகிறது.

'செல்வர் யாம்' என்றுதாம் செல்வுழி எண்ணாத
புல்லறிவாளர் பெருஞ்செல்வம் - எல்லில்
கருங் கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி
மருங்கறக் கெட்டு விடும். (நாலடி. : 8)

'நாங்கள் செல்வந்தர்கள்' என்று நினைத்து அதற்கேற்ப அறவழியில் ஒழுகாத மூடர்களின் செல்வம் இருளில் கரிய மேகத்தில் தோன்றி மறையும் மின்னல்போல் எச்சுவடுமின்றி முற்றும் அழிந்து விடும் என்பது இப்பாடல் கூறும் அறிவுரை.

நான்காம் வகைப் பாடல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துகள், ஒரு முத்தாய்ப்புடனோ, முத்தாய்ப்பின்றியோ, அடுக்காய் வரும்.

கடிப்பிகு கண்முரசம் காதத்தோர் கேட்பர்;
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்;
அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படும் சொல். (நாலடி. : 100)

முரசொலியை ஒரு காத தூரத்தில் உள்ளார் கேட்பர்; இடி முழக்கத்தை ஒரு யோசனை தூரத்திலுள்ளோர் கேட்பர்; 'சான்றோர் கொடுத்தார்' எனும் சொற்களை மூவுலகும் கேட்கும் என்று மூன்று கருத்துகள் முத்தாய்ப்போடு இப்பாடலில் இடம் பெறுகின்றன.

ஐந்தாம் வகைப் பாடல்கள் ஓர் அறிவுரை சொல்ல அதனோடு தொடர்புடைய செய்திகளைப் பட்டியலாக்கித் தரும்.

புக்கவிடத் தச்சம், போதரும் போதச்சம்
துய்க்கும் இடத்தச்சம், தோன்றாமைக் காப்பச்சம்,

எக்காலும் அச்சம்தரு மால், எவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்? (நாலடி. : 83)

பிறனில் புகுவான் துய்ப்பது அச்சமே அன்றி இன்பமில்லை என்று அச்சுறுத்தப் பட்டியல் பயன்படுகிறது.

ஆறாம் வகைப் பாடல்கள் ஒரு கருத்தை உடன் பாடாகவும் எதிர்மறையாகவும் சொல்லித் தெளிவாக்கும்.

விளக்குப்புக இருள்மாய்ந்தாங்கு ஒருவன்
தவத்தின் முன்நில்லாதாம் பாவம்! விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாம் தீது. (நாலடி. : 51)

விளக்கொளியில் இருள் மறைவதுபோல் தவத்தின் முன்பாவம் அழியும் என்ற கருத்து விளக்கில் எண்ணெய்தீர, இருள் சூழ்வதுபோல் நல்வினையின்றேல் தீது முன்னிற்கும் என்று எதிர்மறை நிலையிலும் உறுதி செய்யப் பெறுகிறது.

மிகச் சிலவாகிய ஏழாம் வகைப் பாடல்கள் சிலேடையைப் பயன்படுத்துகின்றன.

வைகலும் வைகல் வரக் கண்டும் அஃதுணரார்;
வைகலும் வைகலை வைகும் என்றின்புறுவர்;
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்து உணராதார். (நாலடி. : 39)

இப்பாடல், அறிவிலார் நாள்தோறும் நாள் கழிவதை நினைத்து வருந்தி அறம் செய்யாமல் பொழுது போக்குவர் என்ற கருத்து, 'வைகல்' என்னும் சொல்லைத் 'தங்குதல்', 'கழிகை', 'விடியற்காலம்', 'நாள்', 'கழிவு நாள்' என்னும் பொருள் களில் கையாண்டு அழகுற வெளிப்படுத்துகிறது.

போப் அடிகளார் அடையாளம் காட்டும் உத்திகள் எல்லாத்தமிழ் நீதி இலக்கியங்களிலும் பயின்றுவரக் காணலாம்.

நாலடியார் போன்ற தமிழ் நீதி இலக்கியங்களின் உண்மைச் சிறப்பு அறிய விரும்புவார் வடமொழியாளர் விதந்து கூறும் பர்த்ருஹரி நீதி சதகம் பற்றித் தெரிந்திருப்பது நல்லது. இந்நூல் மூர்க்கர், கல்வி, வீரம், பொருள், தீயோர், நல்லோர்,

உதவி, துணிவு, தெய்வம், ஊழ் எனும் பத்துத் தலைப்பு களில் பப்பத்துப் பாடல்களைக் கொண்டது. இத்தலைப்பு களிலெல்லாம் நீதி சதகம் சொல்லும் கருத்தும் முறையும் தமிழ் நீதி இலக்கியம் பயின்றார்க்குப் பெரும் ஏமாற்றத்தை அளிக்கும். அற்ப மனிதர்கள் பற்றி நாலடியார் கீழ்மை, கயமை, பேதைமை எனும் மூன்று அதிகாரங்களில் பரக்கப் பேசுகிறது. மூர்க்கரைப் பற்றி,

> *கப்பிகட வதாக் காலைத் தன் வாய்ப்பெயினும்*
> *குப்பை கிளைப்போவாக் கோழிபோல் மிக்க*
> *கனம் பொதிந்த நூல்விரித்துக் காட்டினும் கீழ்தன்*
> *மனம்புரிந்த வாறே மிகும்.* (நாலடி. : 341)

என்று கூறுகிறது. நாள்தோறும் காலையில் வாயிலே உணவைத்தரினும் கோழி குப்பையைக் கிளறுதலை விடாதது போல் கீழோர்க்குப் பொருள் பொதிந்த நூல்களையெடுத்துச் சொன்னாலும் தம் மனம் போன வழியே நடப்பதை மாற்றிக் கொள்ளார் என்று நாம் நாளும் காணும் நிகழ்ச்சியை உவமை யாக்குகிறது பாடல். மூர்க்கரைப் பற்றிப் பேசும் நீதி சதக ஆசிரியர், ''மணலில் எண்ணெய் முயன்று எடுக்கலாம்; கானலைத் தண்ணீராய்க் குடிக்கச் செய்யலாம்; கணக்கற்ற காட்டு முயற்கொம்பைக் கொண்டு வரலாம்; ஆனால், மூடனைத் திருத்த முடியாது'' (நீதி சதகம் : 3) என்பார். ''தெய்வம்''என்ற அதிகரணத்தில், தலையில் துணி சுற்றிய ஒருவன் கோடை வெயில் பொறாமல் ஒரு பனை மர நிழலில் தங்கி, அங்கு அதன் காய் திடீரென்று அவன் தலைமேல் வீழ்ந்ததனால் மாண்டான்; ஆகையால், தெய்வ ஆற்றலை யாரால் அறிய முடியும்?'' (நீதி சதகம் : 46) என்பது போன்ற பாடல்களையும், ''ஊழ்'' என்ற அதிகாரத்தில், ''தேவரை வணங்குகின்றேன்; தேவரும் கெடாத தெய்வ பலத்திற்குட்பட்டு நிற்பதால் தெய்வத்தை வணங்குகின்றேன்; தெய்வம் ஊழின்படி நன்மை தீமை நமக்குச் செய்வதால் ஊழை வணங்குகின்றேன்; நமக்கு எய்தும் பலன்கள் ஊழின்படியாகையால் தேவராலும் தெய்வத்தாலும் உண்டாகும் பலன் ஒன்றுமில்லை; ஊழ் வினையில் ஆழும் தேவரும் தாண்டற்கரியதாகிய ஊழை விரும்பித் தொழுவேன்''

(நீதி சதகம் : 49) "நற்காரியம் செய்தால், நல்ல மெத்தை மேடைகளும் அழகு மிகுந்த அநேகம் குலப் பெண்களும் திருமகளும் சேர்வார்கள், தீச்செயல் மிகுமேல் யாவரும் அகன்று போவார்" (நீதி சதகம் : 50) "பாம்பிருந்த பெட்டியில் அதைப் பாராத எலியொன்று துளை செய்து உட்சென்றது. அதற்குள் சில நாட்களாக ஆகாரமின்றி வருந்திய பாம்பு அவ்வெலியைத் தின்று பசியாறி அவ்வழியே தப்பிப் போய்விட்டது; ஆகையால், தெய்வ பலத்தை யாரால் அறிய முடியும்?" (நீதி சதகம் : 45). "காரணமில்லாமல் கலகம் செய்தலும், தயையில்லாமையும், பண்புடைய பெரியோரைப் பகைத்தலும், சுற்றத்தாரை வெறுத்தலும், துயரம் தரும் பிறனுடைமை விரும்பலும் ஆகிய இவை களெல்லாம் தீயோர்களின் பண்புகளாம்" (நீதி சதகம் : 22). "கொடியவரைத் தண்டித்தல், புகழோடு வாழ்தல், அந்தணரைக் காத்தல், தானம் செய்தல், இன்ப வாழ்வு வாழ்தல், நட்போடு இருத்தல் ஆகிய ஆறு நற்குணங்களில்லா அரசனிடம் பணி செய்வதால் எப்பயனும் இல்லை" (நீதி சதகம் : 21). "கடலின் ஒரு பக்கம் திருமால் பள்ளி கொண்டிருப்பார்; ஒரு பக்கம் அரக்கர்கள் ஒளிந்து கொண்டிருப்பர்; ஒரு பக்கம் மலைகளும் பாறைகளும் இருக்கும்; ஒரு பக்கம் வடவைக் கனல் இருக்கும். இதனால் கடல் மிகவும் பெருமை உடையதாம்" (நீதி சதகம் : 37) என்பன போன்ற பாடல்கள் நிறைந்திருக்கக் காணலாம். நீதியற்ற கருத்துகளும், நீதியைக் கவிதையாக்கும் முயற்சி மேற்கொள்ளாத பாடல்களும், அம்முயற்சியில் தோல்வியடைந்தவையும் மிகுந்திருப்பதால், நீதி சதகம் உள்ளிட்ட வடமொழி நீதி சாத்திரம் தமிழ் நீதி நூல்கட்கு மிகவும் கீழானதென்று (How inferior the verses of Bhartrihari are may be seen by examining the version given in Trubners' series) நீதியிலக்கியத்தில் ஆழங்கால் பட்ட போப் அடிகளார் அறிவிப்பார் (நாலடியார் : xi).

தமிழில் நீதி இலக்கிய மரபும் பரப்பும் பெருமைக் குரியவை; வேறெம்மொழி நீதியிலக்கியத்திற்கும் இல்லாத சிறப்புகள் இதற்குண்டு. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் பதினொன்று, நீதிக் கவிதைகளை மிகுதியாகக் கொண்டவை. சங்க காலத்துக் கவிஞர்களைச் சான்றோர் என்று குறிப்பிட்டது

போலவே பதினெண் கீழ்க்கணக்கு நூல் ஆசிரியர்களைப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும், 'பிற்சான்றோர்' என்று அழைப்பர். சங்க காலத்தில் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகியவை பெரிதும் மேற்கொள்ளப் பெற்றன; பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எல்லாம் வெண்பா யாப்பில் உள்ளன. நீதியைச் சுருக்கமாகவும், தெளிவாகவும், உள்ளத்தில் உறைக்குமாறும் கூறுதற்கு வெண்பா ஏற்றதாக அமைவதோடு, இளமையில் கற்ற நீதியை வாழ்நாள் முழுதும் மறவாது நினைவில் கொண்டிருக்கவும் அப்பாவகை பெரிதும் துணை செய்கிறது. குறள், சிந்தியல், நேரிசை, இன்னிசை, பஃறொடை, சவலை வெண்பாக்கள் கணக்கற்ற சந்த வேறுபாடுகள் பெற்று நீதியை இனிமையாக எடுத்துச் சொல்லவும், அழுத்தமாகச் சொல்லவும் கை கொடுக்கக் காணலாம். சங்க நூல்களுக்கு அறிஞர்கள் உரை வகுத்தது போலவே நீதி நூல்களுக்கும் பின்னால் உரையெழுதி அவற்றை மக்களுக்கு எடுத்துச் செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றன.

சங்க நூற் கருத்துகளைப் பிற்சான்றோர் தம் நீதி நூல்களில் எடுத்தாள, அவற்றைப் பின்னால் வந்த கம்பர், திருத்தக்க தேவர் போன்ற பெருங்காப்பியமியற்றிய பெரும் பெயர்ப் புலவர்களும் பொன்னே போறப்போற்றிப் பொருளை மட்டுமின்றிச் சொல்லையும் தொடரையும் அவ்வாறே கையாள, இம்மரபு பல நூற்றாண்டுகளுக்கு விரிந்து செல்லக் காணலாம். சங்கவிலக்கியங்களில் முன் எழுதப்பட்டவைகளின் தாக்கத்தைத் திருக்குறளிலும் அதன் தாக்கத்தை நாலடியார் போன்ற பின் வந்த நீதி நூல்கள், காப்பியங்கள் எல்லாவற்றிலும் பரக்கப் பார்க்கலாம். நாலடியார், பழமொழி போன்றவற்றின் தாக்கமும் இத்தகையதே. இதற்குக் காரணம், இவர்கள் நீதி சொல்வது முதல் நோக்கம், கவிதையின்பம் தருவது இரண்டாம் நோக்கம் என்று கொள்ளாது நீதிக் கவிதையை இலக்கியமாகத் தருவதை முதல் நோக்கமாகக் கொண்டிருந்ததே. இதற்காக இவர்கள் பின்பற்றியுள் வழிகள் பல. நீதிகளை வெறும் பட்டியல் களாகத் தராமல் அவற்றை ஒரே வகையில் சொல்லாமல் ஒருவகையான உவமைகளையே மீண்டும் மீண்டும் பயன் படுத்தாமல் பலவாறு கவிதைப்படுத்தும் முயற்சிகளாக இந்நீதி

நூல்கள் அமைந்திருக்கக் காரணம், குறள் இரண்டடிகளில் சொன்ன கருத்துகளை, நாலடியார் சற்றே விரிவாக்கி நாலடிகளில் சொல்ல, பழமொழி நானூறு அவற்றைப் பழமொழிகளோடு சேர்த்து விளக்க, நான்மணிக்கடிகை, ஆடூஉ முன்னிலை, மகடூஉ முன்னிலை ஆகிய இடைப் பிறவரல்கள் இன்றி, நந்நான்கு பொருள்களைப் பாடல்தோறும் வைத்துக் கூற, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என்பவை நோய் நீக்கி உடல் நலம் பேணும் மருந்துச் சரக்குகளின் பெயர்களைக் கொண்டு முறையே மூன்றும், ஐந்தும், ஆறும் ஆகிய பொருள்களை அமைத்துக் கொள்ள, அறம் கூறும் இன்னா நாற்பது, இனியவை நாற்பது ஆகிய இரண்டும் முறையே துன்பம் தருபவை, இன்பம் தருபவை இன்னின்னவை எனத் தொகுத்துரைக்க, முதுமொழிக் காஞ்சி, பத்துப்பத்துகளை உள்ளடக்கி, ஒவ்வொரு பத்திலும் பத்து மொழிகளை 'ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்' என்று தொடங்கி அறிவுறுத்த, இந்நூல்களெல்லாம் நீதி இலக்கியங்களாகின்றன.

நான்மணிக் கடிகையும் நாலடி, பழமொழி போன்று நான்கு வரிப் பாடல்களைக் கொண்டதாயினும் அதற்கென்று ஒரு தனித்தன்மை இருக்கின்றது. ஒவ்வொரு பாடலும் கூறும் நான்கு பொருள்களும் ஒப்புமையாலோ, வேறுபாட்டாலோ, உவமையாலோ தொடர்புபடுத்தப் பெற்று ஒரு கருத்து வலியுறுத்தப் பெறுகின்றது. கூறப்படும் பொருள்கள் நான்கனுள் மூன்று மற்றதற்கு உவமைகளாதலும் உண்டு. பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை, சான்றோர் எக்குடியிலும் பிறக்கலாமென்ற கருத்தை,

கள்ளி வயிற்று இன்அகில் பிறக்கும்; மான் வயிற்று
ஒள்ளரி தாரம் பிறக்கும் - பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார் யார்
நல் ஆள் பிறக்கும் குடி? (நான். : 4)

என்று எடுத்துச் சொல்வார். இம்மூன்று உவமைகள் ஒன்றோடொன்று உறவு பெற்றும் விளங்கலாம்.

போதினான் நந்தும் புனைதண்தார்; மற்றதன்
தாதினான் நந்தும் சுரும்பெல்லாம் - தீதில்

வினையினான் நந்துவர் மக்களும்; தம்தம்
நனையினான் நந்தும் நறா (நான். : 47)

இக்கவிதை “மலர்களால் மாலை சிறக்கும்; மலரின் தேனால் வண்டு சிறக்கும்; தேன் அது தோன்றிய மலரால் சிறக்கும்; அதுபோல் நற்செயல்களால் மாந்தர் சிறப்பர்” என்று கூறும் போது மலரையும் தேனையும் வண்டையும் உவமை களாக்கிக் கவிதை நயத்தைக் கூட்டுகிறது.

இரண்டு, மூன்று, நான்கு வரிகளாலான பாடல்களிலும் கூட நகை, அச்சம், குறும்பு, ஏளனம், சினம், வீரம், அருவருப்பு, முரண் ஆகிய சுவைகளுக்கு இடம் தந்து பழிப்பதுபோல் புகழ்தல், புகழ்வது போல் பழித்தல், உயர்வு நவிற்சி, குறைத்துக் கூறல், கெஞ்சிக் கேட்டல், மிரட்டியுரைத்தல், அச்சுறுத்தல், எச்சரித்தல் போன்ற முறை களையெல்லாம் மேற்கொள்ளவும் இப்புலவர்களால் முடிகிறது. சொற்சிக்கனத்தை வியத்தகு முறையில் கையாளும் இவர்கள் அடுக்குத் தொடர்களையும் வேண்டியபோது பயன்படுத்திக் கொள்கின்றனர்.

நின்றன நின்றன நில்லா என உணர்ந்து
ஒன்றின ஒன்றின வல்லே செயிற் செய்க;
சென்றன சென்றன வாழ்நாள், செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று! (நாலடி. : 4)

“நிற்கும் என்று நீ நினைக்கும் செல்வமெலாம் நில்லாது போய்விடும் என்பதையும், இறப்பு உறுதியாக விரைவில் வந்து கொண்டிருக்கிறதென்பதையும் உணர்ந்து விரைந்து அறம் செய்க” என்று கூறும்போது விரைவுணர்வை ஏற்படுத்த இறந்த கால வினைகளும் அடுக்குத் தொடர் களும் அழகுறப் பொருத்தமாக வந்துவிழுகின்றன.

பின்னால் தோன்றிய பெருங்காப்பியங்கள் நீதி நூல் தொடர்களையும் வரிகளையும் எடுத்தாள்வதைக் குறையாகக் கருதவில்லை. இப்புலவர்கள் மூலத்தை மறைக்க முயலாமல் கடன் பெற்றதற்கு மேலும் மெருகூட்டும் முயற்சியில் ஈடுபட்டுச் செய்யும் மாற்றங்கள் நோக்குதற்குரியவை.

இம்மரபு இவர்களின் கவியாற்றலையும், அதில் அவர்கள் கொண்டிருந்த தன்னம்பிக்கையையும் காட்டும். "கூற்றம் புறம் கொம்மை கொட்டினாரில்" என்பது பழமொழி. இதனைப் பழமொழி நானூறு,

ஆற்றப் பெரியார் பகைவேண்டிக் கொள்ளற்க
போற்றாது கொண்டரக்கன் போருள் அகப்பட்டானால்;
நோற்ற பெருமை உடையாரும் கூற்றம்
புறங்கொம்மை கொட்டினாரில் (பழ. : 126)

என விளக்கும். "கூற்றத்தை அதன் பின்னே நின்று கை கொட்டி வலிய அழைப்பவர்கள் யாருமிலர். இதனை உணராத அரக்கன் பெரும் பகை தேடி, போரில் மாண்டான். மிகவும் பெரியவர்களுடைய பகையை விரும்பி மேற்கொள்ளல் ஆகாது" என்பது இதன் பொருள். இதனைச் சீவக சிந்தாமணி,

நோற்றிலர் மகளிரென்பார் நோங்கண்ணுர் தோள்களென்பார்,
கூற்றத்தைக் கொம்மை கொட்டிக் குலத்தொடு முடியுமென்பார்;
ஏற்றதொன்றன்று தந்தை செய்தவிக் கொடுமையென்பார்,
ஆற்றலள் சுநந்தையென்பார் ஆ தகாது அறனே யென்பார்
(சிந்தா. : 1109)

என்று பயன்படுத்திக் கொள்ளும். சிறைப்பட சீவகன் நிலை கண்டு வருந்திய பெண்டிர் "கூற்றத்தைத் தட்டியழைத்துத் தன் குலத்தோடும் முடியும்" என்று புலம்புவதாகக் கவிஞர் கூறுவார்.

சிதலை தினப்பட்ட ஆலமரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றியாங்குக்
குதலைமை தந்தைகண் தோன்றின் தான்பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும். (நாலடி. : 197)

சிதலால் தின்னப்பட்ட ஆலமரத்தை அதன் விழுது தாங்குதல் போல் ஒருவன் தளர்ச்சியுற்றபோது அவன் புதல்வன் பாதுகாக்க வேண்டும் என்பது கருத்து. திரிகடுகம் இவ் வுவமையை ஒரு பாடலில் எடுத்தாள்கிறது.

கோலஞ்சி வாழும் குடியும், குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும், வேலின்

கடைமணிபோல் திண்ணியான் காப்பும் - இம்மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். (திரி. : 33)

திருத்தக்க தேவர் விருத்தப் பாவில் பொருத்தமான சூழலில் இதனைச் சேர்க்கிறார்.

தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
ஓங்கு குலம் நைய அதனுட் பிறந்த வீரர்
தாங்கல் கடனாகும் தலை சாய்க்க வருதீச்சொல்
நீங்கன் மடவார்கள் கடனென்றெழுந்து போந்தான்.
(சிந்தா. : 498)

"ஒரு குடியில் பிறந்த வீரர் அதனைத் தாங்குவதை, ஆலம் விழுதுகள்போல், தம் கடமையாகக் கொள்ள வேண்டும்; அக்கடமையை உணராதவர் பேதையரென்பது" கவிதை சுட்டும் பொருள்.

"அறம் பாடிற்றே ஆயிழை கணவ!" என்று கூறும் ஆலத்தூர் கிழாரின் புறநானூற்றுப் பாடலிலிருந்து தொடங்கி, சிலம்பு, மணிமேகலை, சீவக சிந்தாமணி, கம்ப ராமாயணம் போன்ற காப்பியங்களும் நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்களும் நீதி இலக்கியங்களை மற்றையவற்றினும் தரக் குறைவுடையனவாகக் கருதவில்லையென்பது தெளிவு. புறப் பாடல்களிலிருந்து கிளைத்தெழுந்த நீதிக் கவிதை ஆல்போல் வளர்ந்து பிற்சான்றோரால் பேணப் பெற்று பெருமைக்குரிய நீதி இலக்கியங்கள் தோன்ற வழி வகுத்தது. வள்ளுவரின் குறள் நீதி இலக்கிய மரபிற்கு வலுவான அடித்தளமிட்டது. அரவிந்தர், "தமிழ் முனிவராகிய திருவள்ளுவர் இயற்றிய நீதிக் கவிதை, திட்டம், உருவாக்கம், ஆற்றல் மிக்க செயற்பாடு ஆகியவற்றில் இதுகாறும் உலகில் எழுதப் பெற்ற நீதி நூல்களிலெல்லாம் தலையாயது" என்பார் (அரவிந்தர் : 317).

ஆல்பெர்ட் ஸ்வெய்ட்சர் (Albert Schweitzer) எனும் செர்மானியப் பேரறிஞர், "திருக்குறள் போன்று வாழ்வு பற்றிய பேரறிவை உள்ளடக்கிய நீதிகளைக் கொண்ட நூல் உலகில் வேறெந்த இலக்கியத்திலும் இல்லை. மனித

நடத்தை பற்றிய பல்வேறு வினாக்களுக்கு அது தரும் விடைகள் பொருள் பொதிந்தவை, செம்மாப்புடையவை. அது கூறும் அறக் கருத்துகள் செயல் நிறைந்த வாழ்வு தரும் இன்பம் பற்றிப் பேசுவதிலும், இவ்வுலகின் சிறப்புக்குச் சாட்சியாகி, வாழ்க்கை மறுப்பின்றி ஏற்பை வற்புறுத்துவதிலும் உயர்ந்தவை; இவை இந்தியர்களிடமிருந்து நாம் எதிர்பாராதவை யாகும்'' என்று பாராட்டுவார். இத்தகைய குறள், முன்னோடி யாகப் பின் வந்த ஏனைய பதினெண் கீழ்க்கணக்கு நீதி நூல்களெல்லாம் அதனை முன் மாதிரியாகக் கொண்டு எழுந்தமையால் தமிழ் நீதி இலக்கிய மரபு நிலைப்பட்டது.

துணை நூல்கள்

- கௌடலீயம்: பொருணூல், தமிழ் மொழிபெயர்ப்பு, மு. கதிரேசச் செட்டியார், பி.ஸ்ரீ. இராமானுஜாச்சாரி, அண்ணாமலைப் பல்லைக்கழகம், *1979.*
- பர்த்ரஹரி நீதி சதகம், தமிழ் மொழிபெயர்ப்பு, ம. மாணிக்கவாசகம் பிள்ளை, சென்னை, மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, *1925.*
- பழமொழி நானூறு, (பதி.) புலியூர்க் கேசிகன், சென்னை, முல்லை நிலையம், *1989.*
- திரிகடுகம், நான்மணிக் கடிகை, (பதி.) பேராசிரியர் சு.ந. சொக்கலிங்கம், சென்னை, வானதி பதிப்பகம், *1998.*
- The Naladiyar, tr. Rev. G.U. Pope, New Delhi, Asian Educational Services, First Published, 1893, AES Repring, 1984.
- The Sacred Kurral, tr. G.U. Pope, New Delhi : Asian Educational Services, First Published : 1886, AES Reprint, 1980.
- நான்மணிக்கடிகை, (உரை) சாமி சிதம்பரனார், சென்னை, இலக்கிய நிலையம், *1985.*
- சீவக சிந்தாமணி, (உரை) உ.வே.சாமிநாதையர், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம், முதல் பதிப்பு, *1887*, ஏழாம் பதிப்பு : *1969*

இலக்கண நூல்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

[illegible]

துணை நூல்கள்

- [illegible] 1979.
- [illegible]
- [illegible] 1989.
- [illegible] 1995.
- The Holy Kural, tr. Rev. G.U. Pope, New Delhi, Asian Educational Services, First Published. 1893, AES Repring, 1984.
- The Sacred Kurral. tr. G.U. Pope, New Delhi : Asian Educational Services, First Published : 1886, AES Reprint 1980.
- [illegible] 1985.
- சீவக சிந்தாமணி, (உ.ஆ) உ.வே.சாமிநாதையர், [illegible] முதல் பதிப்பு, 1887, [illegible] 1969

[illegible]

தொல்காப்பியக் கருத்தியல் மனிதனும் தெய்வமும்

மொழி, இலக்கியம் இரண்டிலும் அக்காலத்தில் நிலவிய கருத்தாக்கங்களையே தொல்காப்பியம் பெரிதும் வெளிப் படுத்துகின்றது என்ற விதத்தில் சிந்திக்கும்போது, இந்தக் கட்டுரையில் விவாதிக்கும் பொருளைத் 'தொல்காப்பியர் காலக் கருத்தியல்' என்று கொள்ளலாம்.

ஒரு இலக்கண நூல் என்ற வகையில் தொல்காப்பியம் வழிவழியாக வரும் மரபுகளைப் பேணிய நிலையிலேயே செயல்பட்டு வந்துள்ளது என்பதைப் பல இடங்களிலும் அவரது கூற்றுகளால் அறியலாம். ஏற்கெனவே இருந்த மரபி லிருந்து அவர் எந்தெந்த இடங்களில் மாறியுள்ளார் என்றும் அதற்கு அவரது கருத்துநிலை எந்த அளவுக்குக் காரணமாக அமைந்தது என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்தக் கட்டுரையில் 'தெய்வம்' என்பதற்குத் தொல்காப்பியத்தில் உள்ள 'இடம்' எது என்பதும் தெய்வத் திற்கு அந்த நூலில் அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் குறித்தும், அதில் 'தொல்காப்பியர்' என்ற நூலாசிரியரின் பங்கு எந்த அளவிற்கு அமைந்திருக்கும் என்பது பற்றியும் விவாதிக்கப்படும். அதேவேளையில், ஒரு இலக்கண நூலில் இதற்கான சாத்தியப்பாடுகள் குறைவே என்பதையும் மனத்திலிருத்தல் வேண்டும்.

இலக்கணத்தில் வரும் சொல்லாடல்களை வைத்துக் கொண்டு இவையெல்லாம் தொல்காப்பியரின் கருத்தியல் என்று சொல்ல முடியுமா? என்ற கேள்வியும் இங்கே எழுகின்றது. மொழியிலும், இலக்கண, இலக்கிய மரபுகளிலும் அல்லது அவைபற்றிய விளக்கங்களிலும் அக்காலத்தில் நிலவிய சிந்தனைகளையே தொல்காப்பியம் வெளிப்படுத்துகின்றது

இரா. சீனிவாசன்

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, மாநிலக்கல்லூரி, சென்னை - 5.

என்று சொல்லிவிடமுடியுமா? அக்காலத்தில் இருந்த வேறு இலக்கண நூல்கள் இன்று கிடைக்காத நிலையில் இவ்வாறான சொல்லாடல்களில் தொல்காப்பியரின் பங்கு யாது என்று எவ்வாறு முடிவுகட்டுவது?

எடுத்துக்காட்டாக, மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவு பற்றி ஒரு இலக்கண நூலாசிரியருக்கு அவரது சமயம் சார்ந்தும், நம்பிக்கை சார்ந்தும் காலம் சார்ந்தும் தனிப்பட்ட கருத்துநிலை இருந்திருக்கும். இது இலக்கண உலகில் இயங்கிய எல்லா ஆளுமைகளுக்கும் பொருந்தும். ஆனால் அவரது கருத்துநிலையை இலக்கண நூலில் வெளிப்படுத்த இடம் இருக்கின்றதா? கருத்துநிலை சார்ந்து இலக்கணத்தை வகுப்பதற்கு வாய்ப்பு உள்ளதா என்று நோக்க வேண்டும். அவ்வாறு நோக்கும்பொழுது, இப்படிப்பட்ட வாய்ப்புகள் மிகவும் குறைவே எனலாம். ஏனெனில் எந்தக் கருத்துநிலைச் சார்பு உடையவராக இருந்தாலும் இலக்கணத்தின் அடிப்படை களைத் தமது கருத்துநிலைக்கேற்ப மாற்ற இயலாது. இதற்கு விதிவிலக்காக ஒருசில இடங்களில் இலக்கண நூலாசிரியர்கள் தாம் சார்ந்திருக்கும் சமயக் கொள்கையின் அடிப்படையில் கூறுவதைக் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, பிறப்பியலில் எழுத்துகள் பிறப்பதைக் கூறும்போது, தமிழ் இலக்கண ஆசிரியர்கள் தமது சமயக் கருத்திற்கேற்ப எழுத்துகள் பிறக்கும் முறையைக் கட்டமைக்கின்றனர். தொல்காப்பியம்,

உந்தி முதலா முந்து வளி தோன்றி (பிறப். 1)

என்று உந்தியிலிருந்து எழும் காற்றே ஒலிகள் பிறக்கக் காரணம் என்று கூறுகின்றது. நன்னூல்,

நிறை உயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
எழும் அணுத்திரள் (நன். 74)

என்று அணுத்திரள்தான் ஒலிகளின் தோற்றத்திற்குக் காரணம் என்று கூறுகின்றது. சமண சமயம் சார்ந்த இதே கருத்தை அவிநயமும், யாப்பருங்கல விருத்தியும் கூறுகின்றன (சீனிவாசன் : 2000 : 43). சைவ சமயத்தைச் சார்ந்தவரான இலக்கண விளக்க நூலாசிரியர் வைத்தியநாத தேசிகர்,

மொழிக்காரணமாகிய நாதகாரிய ஒலி (இ.வி. 3)

என்றும்

உயிர் உழப்பு உதான வளி நாதம் (இ.வி. 9)

என்றும் தமது சமய மரபைப் பின்பற்றிக் கூறுகின்றார். சுவாமிநாதம் என்ற நூலின் ஆசிரியரான சுவாமிகவிராயர், வைத்தியநாத தேசிகர் போலவே.

மொழிக்குக் காரணமாகிப் பரையருளான் மூலமுகிழ்
நாதகாரியமாம் விந்தொலி (சுவாமி. 2)

என்று கூறுகின்றார். இதற்கு எழுந்த பழைய உரை இந்தக் கருத்து சிவப்பிரகாசம் என்ற சைவ சித்தாந்த நூலில் உள்ளது என்று கூறுகின்றது (மேற்படி : 44-45). இவ்வாறு, ஏற்ற இடங்களில் தத்தமது சமயக் கருத்துகளைப் புகுத்தி இலக்கண நூலாசிரியர்கள் இயற்றியிருந்தாலும் இவ்வாறு எல்லா இடங் களில் சமயக் கருத்துகளைப் புகுத்தவில்லை; இலக்கண நூல்கள் அப்படிப் புகுத்தவும் இடந்தரமாட்டா.

எனவே, சிக்கலான இத்தகைய கருத்தாக்கங்களை மிகுந்த எச்சரிக்கையுடன் கையாள வேண்டியுள்ளது. ஏனென்றால் ஒரு இலக்கண நூலில் ஆசிரியரின் செயற்பாடு எந்த அளவிற்குச் சுதந்திரமானது என்று எண்ணிப்பார்க்க வேண்டும். உயிர் எழுத்துகள் பன்னிரண்டு என்பதை ஒரு இலக்கண ஆசிரியர் தன்னிச்சையாக மாற்றிவிட முடியாது. ஆகவே இலக்கணத்தை வகுக்கும் ஆசிரியரின் தனிப்பட்ட கருத்தாக்கங்கள் எந்த அளவிற்கு இலக்கண நூல்களில் இடம்பெற முடியும் என்றும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆனால் அக்காலத்திலேயே தத்துவச் சிந்தனைகள் வளர்ந்துவிட்டன என்று புறநானூற்றுப் பாடல்கள் காட்டு கின்றன. எனவே தனது சமகாலச் சிந்தனைகளையே அவர் நூலில் வெளிப்படுத்தினார் என்று நோக்குவதைவிட, அவரது சொந்தச் சிந்தனைகளும் இந்த நூலில் பதிந்திருக்கும் என்று பார்ப்பதற்கு உள்ள வாய்ப்பையும் மறுக்க முடியாது. ஏனெனில் தொல்காப்பியம் போன்ற ஒரு சீரிய நூலை இயற்றிய

ஆசிரியரின் கருத்தியலும் அந்த நூலில் காணப்படும் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

தொல்காப்பியத்தின் கருத்துநிலையை அறிவதற்குத் தெய்வம் பற்றிய கருத்தாக்கம் அந்த நூலில் எவ்வாறு பதிந்துள்ளது என்று பார்க்கவேண்டும். இதன் மறுநிலையாக மனிதன் பற்றிய தொல்காப்பியத்தின் நிலைப்பாட்டையும் நோக்க வேண்டும். இந்த இரண்டு நிலைகளிலும் காணும்போது தொல்காப்பியத்தின் ஆசிரியர் எங்கு நிற்கின்றார் என்பதை அறிய முடியும்.

இத்தகைய கேள்விகளுக்குத் தொல்காப்பியம் என்ற ஒரே நூலை வைத்துக்கொண்டு விடை தேடுவதைவிட மற்ற சில நூல்களையும் பார்க்கும்போது தெய்வம் பற்றிய தொல்காப்பியத்தின் நிலைப்பாடு மேலும் தெளிவாகும்.

பிற்காலத்தில் தோன்றிய எல்லா நூல்களிலும் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து இடம்பெறும். ஆனால் தொல்காப்பியத்தில் கடவுள் வாழ்த்து இல்லை. சங்க இலக்கியங்களிலும் பல வற்றிற்குக் கடவுள் வாழ்த்து இல்லை. எனவே அந்தக் காலத்தில் கடவுள் வாழ்த்து பாடிவிட்டு நூலைத் தொடங்கும் முறை இல்லை என்று எடுத்துக்கொள்ளலாம்.

கடவுள் வாழ்த்து என்பதையும் கடந்து பார்க்கும்போது, பிற்கால நூல்களில் எந்தப் பிரிவை எடுத்துக்கொண்டாலும் கடவுள் பற்றியே முதலில் கூறப்படும். பின்னர்தான் மற்றவை இடம்பெறும். எடுத்துக்காட்டாக, சொற்பொருள் உணர்த்துவதை அடிப்படையாகக் கொண்ட நிகண்டுகளில்கூடத் தெய்வப் பெயர்த் தொகுதியே முதலில் வருகின்றது. தெய்வப் பெயர்த் தொகுதி, மக்கட்பெயர்த் தொகுதி, விலங்கின்பெயர்த் தொகுதி, மரப்பெயர்த் தொகுதி, இடம்பெயர்த் தொகுதி, பல்பொருட் பெயர்த் தொகுதி, செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி, பண்பு பற்றிய பெயர்த் தொகுதி, செயல்பற்றிய பெயர்த் தொகுதி, ஒலிபற்றிய பெயர்த் தொகுதி, ஒரு சொல் பல்பொருட் பெயர்த் தொகுதி, பல்பொருட் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி என்ற பன்னிரண்டு பிரிவாக அமைந்திருக்கும் இவற்றில் முதல் பத்துத் தொகுதிகளும் ஒரு பொருள் பல்பெயர் என்ற

நிலையில் இருக்கும். இவற்றிலும் முதலாவதாகத் தெய்வப் பெயர்த் தொகுதியே இடம்பெற்றுள்ளது. (திவாகரம், உரிச்சொல் நிகண்டு, பாரதி தீபம், சூடாமணி நிகண்டு, கயாதரம், ஆசிரிய நிகண்டு, பொதிகை நிகண்டு)

ஒரு சொல் பல்பொருட் பெயர்த் தொகுதியான பதினோராம் தொகுதியிலும் தெய்வப்பெயரே முன்னிலைப் படுத்தப்படுகின்றது.

பகவனே ஈசன், மாயோன், பங்கயன், சினனே, புத்தன்

(சூடா. நிக., பதினோராம் தொகுதி 1)

'தொல்காப்பியத்தில் தெய்வம்' என்பதைப் பற்றி அணுகும் போது, எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங் களையும் சேர்த்து நோக்க வேண்டும். முதலாவதாக, சொல்லதிகாரத்தில் சொல் நிலையில் அதாவது திணை, பால் உணர்த்தும் நிலையில், தொல்காப்பியம் 'தெய்வம்' என்பதை எவ்வாறு அணுகுகின்றது என்று பார்க்க வேண்டும். அடுத்ததாக, பொருளதிகாரத்தில் வெவ்வேறு சூழல்களில் தெய்வம் பற்றிய கருத்துகள் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்று பார்க்க வேண்டும்.

இவற்றிற்கு அடிப்படையாக முதலில் தொல்காப்பியத்தில் தெய்வம், கடவுள், இறை முதலிய சொற்கள் வந்துள்ள இடங் களையும் சூழலையும் பொருளையும் பார்க்க வேண்டும்.

தெய்வம் என்ற சொல் தொல்காப்பியத்தில் எட்டு இடங் களில் வந்துள்ளது.

அ) தெய்வம் (கடவுள் என்ற பொருளில்)

1. *தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்* (487:3)

தமக்கான தனி ஈறுகள் இல்லாமல் உயர்திணையில் பால்காட்டும் சொற்கள், கிளவியாக்கம்

2. *பால்வரைத் தெய்வம் வினையே பூதம்* (541:2)

பாலுக்குப் புறனடை விதி முதலிய சொற்கள் உயர்திணை யில் பால்காட்டாது. அஃறிணையாய் வரும் கிளவியாக்கம்

3 தெய்வம் உணாவே மா, மரம், புள் பறை (964:1)

கருப்பொருள்களின் பட்டியல். (அகத்திணையியல்)

4 மன்னுநிமித்தம் மொழிப்பெருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தல் . . . (982 : 2-3)

நற்றாய் கூற்று (அகத்திணையியல்)

5. உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்
கொள்ளும் என்ப குறியறிந்தோரே (992:1-2)

உள்ளுறை - தெய்வம் அல்லாத கருப்பொருளை நிலைக் களனாகக் கொண்டு அமையும். (அகத்திணையியல்)

6. தோழியை வினாவலும் தெய்வம் வாழ்த்தலும் (1061:7)

செவிலி கூற்று. (களவியல்)

7. தெய்வம் அஞ்சல் புரை அறம் தெளிதல் (1218:1)
(மெய்ப்பாட்டியல்)

8. வழிபடு தெய்வம் நின்புறம் காப்ப (1367:1)

புறநிலை வாழ்த்து, (செய்யுளியல்)

ஆ) தெய்வக்கடம் 110:4

தெய்வத்திற்கான கடன்

இ) கடவுள் மூன்று இடம்

1. ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும் (1092:9)

தலைவன் கூற்று. (கற்பியல்)

2. காமப்பகுதி கடவுளும் வரையார் (1029:1)

பாடாண் திணை பற்றிய ஒரு விளக்கம். (புறத்திணையியல்)

3. கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே (1034:3)

கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகியவை கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வரும், புறத்திணையியல்.

இறைவன் என்ற பெயர் அரசன் என்ற பொருளில் இரண்டு இடங்களில் வந்துள்ளது.

சொல் வகைப்பாடு

இந்த இரண்டு நிலைகளில் சொல்லலாம்.

தெய்வப் பெயர்களுக்கென்று திணை நிலையிலோ பால் நிலையிலோ தனிப்பிரிவுகள் இல்லை; அப்பெயர்களுக்கென்று தனி ஈறுகளும் தமிழில் இல்லை. எனவே தெய்வப்பெயர்கள் பற்றிய இலக்கணமும் தனியாக விதந்தோதப்படவில்லை. கிளவியாக்கம் நான்காம் நூற்பாவைத் தவிரத் தெய்வப் பெயர் பற்றி வேறு கருத்துகள் இல்லை.

சொல்லதிகாரத்தில் உயர்திணையைக் குறிக்கும் இடத்தில் மக்களை மட்டுமே உயர்திணை என்று பிரித்துச் சொல்லு கின்றார். அதுவே மூன்று பால்களிலும் வரும் என்கிறார் (கிளவியாக்கம் 1-3) நான்காவது சூத்திரத்தில் தான் தெய்வப் பெயர்கள் பற்றிய பேச்சு வருகின்றது. அதுவும் பேடி என்ற சொல்லுடன் இணையாகப் பார்க்கப்படுகின்றது.

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும் (பேடி)
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவியும்
இவ் என அறியும் அந்தம் தமக்கு இலவே
உயர்திணை மருங்கின் பால்பிரிந்திசைக்கும் (கிளவி. 4)

இந்த இரண்டு சொற்களும் பால்காட்டும் ஈறுகளை உடையன அல்ல என்று சொல்லப்பட்டுள்ளது. சொல் நிலையில் தெய்வம் என்ற சொல்லையும் பேடி என்ற சொல்லையும் ஒரு நிலை யில் வைத்துப் பார்ப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், 'தெய்வம்' என்ற சொல்லுக்கு என்று தனி மரியாதை எதுவும் அளிக்கப்படவில்லை என்பது வியப்பாகவே உள்ளது. இந்த நேரத்தில்,

மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை (நன். 261)

என்று நன்னூல் கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

பெயரியலில் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் என்று பகுத்துக் கூறும் தொல்காப்பியம், உயர்திணைப் பெயர்களாக 44 வகைப் பெயர்களைக் கூறுகின்றது. இவற்றில் தெய்வப்பெயர் என்று ஒரு வகையே காணப்படவில்லை. தெய்வப்பெயர் மட்டுமல்லாது அதன் அடியாகப் பிறக்கும் பெயர்களையும் தரவில்லை (குமரனார், இளங்கண்ணன், முதலியவை).

தொல்காப்பியரின் பொருள் வகைப்பாடு

தொல்காப்பியத்தில் மனித வாழ்வியல் சார்ந்து அகம், புறம் என்று இலக்கியத்தின் பாடுபொருள் பிரிக்கப்பட்டுள்ளது. தெய்வத்தைப் போற்றும் பாடல்களோ புராணக்கதைகளோ முதன்மை நிலையில் இலக்கியத்தின் பாடுபொருளாகச் சொல்லப்படவில்லை.

பொருளதிகாரத்தில் அகத்திணையியலில் பொருள், முதற்பொருள், உரிப்பொருள், கருப்பொருள் என்று மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இதில் முதன்மையானது என்ற பொருளில் உள்ளது முதற்பொருள். அது,

முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரே. (அகத். 4)

என்று கூறப்பட்டுள்ளது. மேலும் ஒரு திணையை அடையாளப்படுத்துவதற்கும் முதற்பொருளையே அடிப்படை யாகக் கொள்ளப்பட்டுள்ளது. திணை மயக்கம் வரும்போது முதற்பொருளின் அடிப்படையிலேயே திணை வகுக்கப் படவேண்டும் என்பது தொல்காப்பியத்தின் கருத்து (அகத்திணையியல் 19).

மிக முக்கியமான, அழுத்தமாகச் சொல்லப்பட வேண்டிய கருத்து, முதற்பொருளாக நிலத்தையும் பொழுதையுமே தொல்காப்பியம் கொள்கின்றது; தெய்வத்தை அல்ல. உலகின் தோற்றத்திற்கும் உயிர்களின் தோற்றத்திற்கும் உயிர்கள் வாழ்கின்ற முறைக்கும் காரணம் ஆதிமுதலான தெய்வமே (ஆதிபகவன் முதற்றே உலகு) என்று கூறப்படும் தமிழ்ச்

சமூகத்தில், முதற்பொருள் என்று தெய்வத்தைக் கூறாதது ஆழ்ந்து நோக்கத்தக்கது. உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்து உலக வாழ்க்கைக்கு ஆதாரமாக அமைவது தெய்வம்; 'இறைவன் அடிசேர்வதே பிறவிப்பயன்' போன்ற விழுமியங்கள் நிலவிய தமிழ்ச் சமூகத்தில், தெய்வத்தை முதற்பொருள் என்ற நிலையில் பார்க்காதது வியப்பாகவே உள்ளது. பொதுவாக மக்கள் வாழ்க்கை முறையைத் தீர்மானிப்பது அந்தப் பகுதியின் நில அமைப்பே என்று கூறுவது, உலகியல் சார்ந்த நடைமுறையை அடிப்படையாகக் கொண்ட கருத்தியலாக அமைந்துள்ளது. ஒரு மக்கள் கூட்டத்தின் வாழ்க்கை முறைக்கு நிலப்பரப்பும் காலமுமே அடிப்படை; அவையே அந்த மக்களின் வாழ்க்கை முறையைத் தீர்மானிக்கின்றன என்று உலகாயத நிலையில் நின்றே தொல்காப்பியம் பேசுகின்றது.

'மாயோன் மேய' என்ற நூற்பாவில் 'மேய' என்ற சொல்லே உள்ளது. இந்த நூற்பா நிலத்தைப் பற்றிக் கூறும் இடத்தில் உள்ளது. இதற்கு உரை எழுதும் நச்சினார்க்கினியர் மாயோன் முதலிய தெய்வங்கள் அந்நிலத்தின் வழிபடு கடவுள் என்று கூறவில்லை. மாறாக இந்தத் தெய்வங்கள் அந்த நிலத்தில் விரும்பி உறைகின்றன என்று கூறுகின்றார். 'கடல் வண்ணன் காதலித்த காடுறையுலகமும்' என்றும், 'செங்கேழ் முருகன் காதலித்த வான்தங்கிய வரைசூழுலகமும்' என்றே உரை கூறுகின்றார்.

'இனிக் குறிஞ்சி நிலத்துக் குறவர் முதலியோர் குழீஇ வெறியயர்தற்கு வேண்டும் பொருள்கொண்டு வெறியயர்ப வாகலின், ஆண்டு முருகன் வெளிப்படும் என்றார்.' அதவாது குறிஞ்சி நிலத்து மக்களின் செயல் வெறியயர்தல் போல முருகனை வணங்குவதும் அவர்களது ஒரு செயலே என்று கூறுகின்றார் (சூத்திரம் 5 உரை ப. 174-175).

அடுத்துத் தெய்வத்தின் பெயர் மேலே பொருள் பாகுபாட்டில் எங்கே வருகின்றது என்பதையும் நோக்க வேண்டும்.

மாயோன் மேய காடுறை உலகமும் (அகத். 5)

என்று தெய்வங்களின் பெயரைச் சொல்லி நிலத்தை உணர்த்தும் தொல்காப்பியம், தெய்வத்தைக் கருப்பொருளில் ஒன்றாக வைக்கின்றது. தெய்வம், உணவு, பறவை, மரம், விலங்கு, இசைக்கருவி முதலியவை அடங்கும் பொருட்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

தெய்வம் உணாவே, மா, மரம், புள், பறை
செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கரு என மொழிப. (அகத். 18)

என்று தெய்வம் கருப்பொருளில் ஒன்றாக வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கருப்பொருள் பற்றி ஆராய்ந்தவர்கள் அவை அகப்பொருள் பாடல்களில் பின்னணிக் காட்சிகளாக வருபவை என்று கூறுகின்றனர். எனவே வெறும் பின்னணியாக அமையக் கூடிய பட்டியலில் தெய்வம் வைக்கப் பட்டுள்ளமை தெரிகின்றது. அதாவது தொல்காப்பியப் பாகுபாட்டின்படி முக்கியத்துவம் அளிக்கப்படும் முதற்பொருள் என்ற நிலையில் தெய்வம் அமையவில்லை. பிற நூல்களில் காணப்படும் தெய்வமே முழுமுதற் பொருள் என்ற நிலையும் இங்கே காணப்படவில்லை. பொதுவாக நோக்கும்போது 'ஒரு முழுமுதற்கடவுள்' என்ற ஒன்றை ஏற்றுக்கொண்ட நிலை தொல்காப்பியத்தில் காணப்படவில்லை.

உள்ளுறை பற்றிச் சொல்லும்போதும் தெய்வம் தவிர்த்த மற்ற கருப்பொருள்களையே நிலனாகக் கொண்டு உள்ளுறை தோன்றும் என்று கூறப்பட்டுள்ளது. கலிப்பா பற்றிக் கூறும் இடத்திலும், அகநிலை ஒத்தாழிசைக் கலிப்பாவைக் கூறிய பிறகே,

ஏனை ஒன்றே
தேவர்ப் பரா அய முன்னிலைக் கண்ணே (செய்யு. 1395)

என்று தெய்வத்தை வாழ்த்தும் வண்ணகம், ஒருபோகு ஆகிய கலிப்பா வகைகள் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. இங்கும் தெய்வத்தைப் போற்றிப் பாடும் பாடலுக்கு முதன்மை கொடுக்கப்படவில்லை.

மரபியலில் உயிர்களை வகைப்படுத்தும் தொல்காப்பியர்,

மக்கள் தாமே ஆறறிவு உயிரே (மரபி. 33)

என்று கூறுகிறார். இதை.

வானவர், மக்கள், நரகர், விலங்கு, புள்
ஆதி செவியறிவொடு ஐ அறிவு உயிரே (நன். 449)

என்று நன்னூல் கூறுவதோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஐயறிவு உயிர்களாக வானவர்களையும் சேர்த்துக் கொள்வதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள வகைப்பாட்டில் எந்த இடத்திலும் தொல்காப்பியர் தெய்வத்தைக் கொண்டுவரவில்லை.

இதுவரை பார்த்தவற்றைக் கொண்டு நோக்கும்போது, தொல்காப்பியம் மனித வாழ்க்கை, மொழி, பண்பாடு ஆகியவையே முதன்மைப்படுத்துகின்றது. தெய்வத்தை முதன்மைப்படுத்தவில்லை. தெய்வம் முழுமுதல் என்ற கருத்தாக்கத்தைத் தொல்காப்பியம் ஏற்கவில்லை என்றும், தொல்காப்பியம் கடவுளை முதன்மைப்படுத்தாத நூல் என்றும் கூறவேண்டியுள்ளது. தொல்காப்பியத்தில் எங்குமே 'தெய்வமே முழுமுதல்' என்ற கருத்தாக்கம் காணப்படவில்லை. இதைச் சொல், பொருள் இலக்கணங்களை அடிப்படையாகக்கொண்டு உணர முடிகின்றது.

துணை நூல்கள்

- சண்முகம் பிள்ளை, மு., 1982, நிகண்டுச் சொற்பொருட்கோவை, மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
- சீனிவாசன், இரா., தமிழ் இலக்கண மரபுகள் கி.பி. 800-1400, சென்னை, தி பார்க்கர்.
- தொல்காப்பியம், 1981, சென்னை, நியுசெஞ்சரி புக் ஹவுஸ்.
- தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம் (முதல் பகுதி), 2003, (பதி. கோபாலையர், ந. அரணமுறுவல்), சென்னை, தமிழ்மண் பதிப்பகம்.

தொல்காப்பியம் : எழுத்து, சொல்

தமிழில் கிடைத்துள்ள நூல்களில் காலத்தால் முந்தியது தொல்காப்பியம் என்ற கருத்து பரவலாகத் தமிழ் உலகம் ஏற்றுக்கொண்ட கருத்தாகும். தொல்காப்பியரின் காலம் குறித்துப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறுபட்ட கருத்துக் களைக் கூறிவருகின்றனர். தொல்காப்பியத்துக்கு முன்னர்ப் பல இலக்கண நூல்கள் இருந்திருந்தாலும் அவை இன்று நமக்குக் கிடைக்கவில்லை என்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை. தமிழில் உள்ள நூல்களில் தொன்மையானது என்று கருதப்படும் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில் காணப்படும் பகுத்தறிவுச் சிந்தனைகளைத் தொகுத்துத் தரும் விளக்கவியல் ஆய்வின் விளைவே இந்தக் கட்டுரை. செவ்வியல் நூல்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ள செவ்வியல் இலக்கியங்கள் என்று கருதப்படும் பிற சங்க நூல்களில் காணப்படும் அளவிற்கு விரிவான செய்திகளைத் தொல்காப்பியத்தில் காணமுடியவில்லை. எனினும் செவ்வியல் நூல்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ள நூல்களில் காலத்தால் தொன்மையானதான தொல்காப்பியத்தைப் புறக்கணித்துவிடக் கூடாது என்ற காரணத்தினால்தான் இந்த நூலிலும் பகுத்தறிவுச் சிந்தனை பற்றிய செய்திகளைத் துருவிக்காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்ற அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் பல சொற்களுக்கு நேரடியான பொருள் என்ன? என்ற வினா எழும்போது அச்சொல்லுக்குச் சரியான பொருள்வரையறை செய்ய முடியாமல் திணறு வதுண்டு. இப்படிப்பட்டச் சொற்களில் ஒன்றுதான் பகுத்தறிவு என்பதும். பகுத்தறிவு என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? என்ற வினாவிற்கு ஓரிரு சொற்களில் பொருள் கூறுவது கடினமான செயலேயாகும். அச்சொல்லுக்குரிய பொருளாக

தூ. சேதுபாண்டியன்

முன்னைப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625 021.

அகராதிகள் கூறும் பொருள்கள் சில பின்வருமாறு அமைந்துள்ளன.

"பகுத்தறிவு எனப்படுவது பொருட்களின் / நிகழ்வுகளின் / கருத்துக்களின் கூறுகளை அவதானித்து ஆய்ந்து அவற்றின் இயல்புகளில் இருந்து ஆதாரப்பூர்வமான புறவயநோக்கில் நிரூபிக்கப்படக் கூடிய முடிவுகளை முன்வைக்கும் வழி முறைகளையும் அதை ஏதுவாக்கும் மனித அறிவு ஆற்றலை யும் குறிக்கின்றது. பகுத்தறிவின் நோக்கம் மெய்ப்பொருளை அல்லது உண்மையைக் கண்டறிவதே..."

என விளக்கம் தருகிறது விக்கிப்பீடியா.

திருவள்ளுவர் அறிவு என்பதற்கு விளக்கம் கூறும்போது,

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள். 423)

என்றும்,

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள். 355)

என்றும் அறிவுக்கு விளக்கம் கூறுகிறார். அவர் அறிவுக்குக் கூறும் இவ்விளக்கம் பகுத்தறிவுக்கும் பொருந்துவது போலவே உள்ளது. "பகுத்தறிவு வேறு; அறிவு வேறு என்பதாகக் கிடையாது. அறிவு என்றாலே பகுத்தறிவு என்றுதான் பொருள். அதிகப்படியான அறிவைப் பயன்படுத்துகிற செலுத்துகிற முறையே பகுத்தறிவு என்பதாகக் கூறுகிறார்கள்" என்றதொரு விளக்கமும் காணப்படுகிறது.

"நம்மால் நம்ப இயலாதவற்றை மூடநம்பிக்கை எனப் பெயரிட்டு அம்மூடநம்பிக்கைகளைப் புறம் தள்ளுவதே பகுத்தறிவு" என்றொரு விளக்கத்தைத் தருகிறது இன்னொரு வலைத்தளம்.

"பகுத்தறிவு என்பது காரணக் காரியங்களை மனத்திற் கொண்டு விஷயங்களைத் தொடர்புபடுத்தி அல்லது பிரித்து அறிதல். உயிரினங்களில் மனிதனுக்கு மட்டுமே பகுத்தறியும் ஆற்றல் உண்டு" என்கிறது கிரியாவின் தற்காலத்தமிழ் அகராதி.

"பகுத்தறியும் திறன், நம்பிக்கையின் அடிப்படையில் அல்லாமல் எதையும் சிந்தித்து ஏற்றுக்கொள்வதை அடிப்படை யாகக் கொண்ட முறை" என்கிறது மற்றோர் அகராதி.

இவற்றை அடிப்படையாகக் கொண்டே பகுத்தறிவுச் சிந்தனைகளை அடையாளம் காணும் முயற்சி மேற்கொள்ளப் படுகிறது. தொல்காப்பியம் எழுத்து, சொல் அதிகாரங்கள் மொழியின் அமைப்பை விளக்கத் தோன்றிய இலக்கண நூலாகும். மொழியிலக்கணத்தை விளக்கும் தொல்காப்பியர் எவ்வாறு அவற்றைப் பகுத்தறிவுடன் விளக்குகிறார் எனக் காணலாம்.

பிறப்பியலில்

எழுத்துக்களின் பிறப்பைக் குறித்துப் பேசுமிடத்து உயிர் எழுத்துக்கள் எவ்வாறு மெய்யெழுத்துக்களிலிருந்து வேறுபடு கின்றன என்பதை அவர் விளக்கியுள்ள முறை இன்றைய மொழியியலாளர்கள் விளக்கியுள்ள முறையோடு ஒத்திருப்பதனைக் காணமுடிகிறது.

உயிர் எழுத்துக்களின் பிறப்பைக் குறித்துப் பேசுமிடத்து உயிர் எழுத்துக்களின் பொதுப்பிறப்பினை,

"அவ்வழிப்
பன்னீர் உயிரும் தம் நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்" (தொல். 84)

என்று கூறிப் பின்னர் உயிர் எழுத்துக்களின் பிறப்பினைத் தனித்தனியாகக் கூறாமல் மூன்று உட்பிரிவுகளில் கூறியுள்ளார்.

"அவற்றுள்
அ ஆ ஆயிரண்டு அங்காந்து இயலும்" (தொல். 85)

என அகர ஆகாரத்தை ஒரு பிரிவாகவும்;

"இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய" (தொல். 86)

என இ ஈ எ ஏ ஐ ஆகிய ஐந்து எழுத்துக்களையும் மற்றொரு பிரிவாகவும்;

"உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந்து இயலும்" (தொல். 87)

என உ ஊ ஒ ஓ ஔ ஆகிய ஐந்து எழுத்துக்களையும் இன்னொரு பிரிவாகவும் விளக்குகிறார் தொல்காப்பியர். இந்த விளக்கம் இன்றைய மொழியியலாளர்கள் உயிர் எழுத்துக் களை அவை பிறக்கும் இடம் கருதி முன்னுயிர்கள் (front vowels) நடுவுயிர்கள் (centrol vowels) பின் உயிர்கள் (back vowels) எனப் பகுத்திருப்பதனுடன் ஒத்திருப்பதைக் காண முடிகிறது. இவை யாவும் இன்றைய அறிவியல் வளர்ச்சிக்குப் பின் மொழியியலார் சிந்தித்திருப்பதைப்போலத் தொல்காப்பியரும் சிந்தித்து உள்ளார் என்பதைக் காட்டுகிறது. மொழியியலார் உயிர் எழுத்துக்களைப் பிரிக்கும் முறையைப் பின்வரும் அட்டவணை விளக்கும்.

	முன்னுயிர்	நடுவுயிர்	பின்னுயிர்
மேலுயிர்	இ, ஈ		உ, ஊ
இடையுயிர்	எ, ஏ		ஒ, ஓ
கீழுயிர்		அ, ஆ	

சுட்டெழுத்துக்கள், வினாவெழுத்துக்கள் போன்ற கலைச் சொற்கள் எவ்வாறு எழுத்துக்கள் எழுத்து நிலையிலிருந்து பொருளை உணர்த்தும் உருபன் நிலைக்குச் செல்லுகின்றன என்பதை நுட்பமாக உணர்ந்து வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்து வதும் பகுத்தறிவேயாகும். இவ்வகையில் அ, இ, உ என்ற எழுத்துக்களை அவற்றின் குறில் உயிர்கள் என்ற நிலை யிலிருந்து சுட்டுப்பொருள் உணர்த்தும் உருபன் நிலைக்கு மாறியமையை உணர்ந்து அவற்றை வேறுபடுத்திக்காட்டுவதை,

"அ இ உ அம் மூன்றும் சுட்டு" (தொல். 31)

"ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா" (தொல். 32)

என்ற நூற்பாக்கள் விளக்குகின்றன. மெய் எழுத்துக்களின் பிறப்பினை விளக்குமிடத்தில்,

''ககார ஙகாரம் முதல்நா அண்ணம்'' (தொல். 89)

என்றும்,

''சகார ஞகாரம் இடைநா அண்ணம்'' (தொல். 90)

என்றும்,

''டகார ணகாரம் நுனிநா அண்ணம்'' (தொல். 91)

என்றும்,

''அண்ணம் நண்ணிய பல் முதல் மருங்கின்
நா நுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாம் இனிது பிறக்கும் தகார நகாரம்'' (தொல். 93)

''அணரி நுனிநா அண்ணம் வருட
ரகாரம் ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்'' (தொல். 95)

''இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்'' (தொல். 97)

என்றும் ஆறு நூற்பாக்களில் பன்னிரண்டு எழுத்துக்களின் பிறப்பைப்பற்றிக் கூறும் தொல்காப்பியர் அவற்றுள் மெல்லின எழுத்துக்கள் ஆறும் இடத்தால் அவற்றின் இன எழுத்துக் களின் பிறப்பை ஒத்திருந்தாலும் பிறக்கும் முறையால் அவற்றின் இன எழுத்துக்களாகிய வல்லெழுத்துக்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை விளக்குவதற்காகவே தனியாக ஒரு நூற்பாவை அமைத்துள்ளார். அந்நூற்பா பின்வருமாறு :

''மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்
மூக்கின் வளிஇசை யாப்புறத் தோன்றும்'' (தொல். 100)

இவ்வாறு இரண்டு எழுத்துக்களிடையே உள்ள ஒற்றுமையையும் அவற்றிற்கிடையே உள்ள வேறுபாட்டையும் விளக்கிச் செல்வதால் ஒவ்வொரு எழுத்துக்கும் உள்ள தனித் தன்மையினை (distinctive feature) மற்ற எழுத்துக்களிலிருந்து வேறுபடுத்தும் வகையில் பகுத்தறிவுடன் விளக்குவதைக் காணமுடிகிறது.

திணைப் பாகுபாட்டில்

சொல்லதிகாரத்தில் திணைப்பாகுபாட்டில் உயர்திணை, அஃறிணை என்ற பாகுபாடு தொல்காப்பியத்தில் அமைந்துள்ள

முறை ஏனைய தமிழ் இலக்கணங்களிலிருந்து வேறுபட்டிருக்கிறது.

தொல்காப்பியர் உயர்திணையில் மக்களை மட்டுமே குறிப்பிடுவார். இதனை,

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே" (தொல். 484)

என்ற நூற்பா அடியால் அறியலாம். பின்னால் வந்த நன்னூல் போன்ற பிற்கால இலக்கண நூல்களில் இத்தகைய பகுத்தறிவுச் சிந்தனையைக் காணமுடியவில்லை.

நன்னூலார் மக்கள், தேவர், நரகர் உயர்திணை என்று கருதுவார். இது பகுத்தறிவுக்கு உகந்த கருத்தாக இல்லை. இந்த வகையில் திணைப்பாகுபாடு தொல்காப்பியரின் பகுத்தறிவுக்குச் சான்றாக விளங்குகிறது.

பால்பாகுபாட்டில்

சொல்லதிகராத்தில் அமைந்துள்ள பால்பாகுபாடு தொல்காப்பியரின் பகுத்தறிவுச் சிந்தனைக்கு மற்றுமோர் சான்றாகும். தொல்காப்பியம் உயர்திணையில் ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்று பால்களைச் சுட்டுவர். இதனை,

"ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல்
பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி
அம்முப் பால்சொல் உயர்திணை யவ்வே" (தொல். 485)

என்ற நூற்பாவால் அறியலாம். தொல்காப்பியரின் இப்பால் பாகுபாடு இயற்கையோடு இயைந்ததாக அமைந்துள்ளது. மனித இனத்தை ஆண், பெண், பலர் என்றே பகுக்கமுடியும். தொல்காப்பியர் காலத்தில் இருந்த பிறமொழிகளில் பால் பாகுபாடு என்பது இயற்கைக்கு மாறாக இலக்கண அடிப்படையில் அமைந்துள்ளதை வடமொழியில் உள்ள பால் பாகு பாட்டால் அறியலாம். வடமொழியில் ஆண்பால் (புருஷ லிங்கம்) பெண்பால் (ஸ்த்ரீலிங்கம்), அலிப்பால் (நபும்சலிங்கம்) என்ற பாகுபாடு காணப்படுகிறது. இந்தப் பால்பாகுபாடு இயற்கைக்கு மாறான இலக்கண அடிப்படையில் அமைந்த பால்பாகுபாடு ஆகும். வடமொழியில் உள்ள பார்யா,

ஸபத்னி, களத்ரம் என்ற மூன்று சொற்களும் மனைவி என்ற பொருள் தருவனவேயாகும். ஆனால் அவற்றைப் பின்வருமாறு பால் பாகுபாடு செய்வர் :

பார்யா - ஆண்பால்

ஸபத்தனி - பெண்பால்

களத்ரம் - அலிப்பால்

இப்பாகுபாடு சொற்பொருளை அடிப்படையாகக் கொண்டது அன்று. சொற்களின்கண் இடம்பெறும் இறுதி எழுத்துக்களின் அடிப்படையில் அமைந்த இலக்கணப் பால் பாகுபாடாகும்.

தமிழில் உயிரில்லாத பொருள்களை அஃறிணை என்றே பாகுபாடு செய்துள்ளார் தொல்காப்பியர். இதுவும் அவருடைய பகுத்தறிவுக்குக் காட்டாக அமைகிறது. ஆனால் வடமொழி யிலும் பிற ஐரோப்பிய மொழிகளிலும் உயிரற்ற அஃறிணைச் சொற்களையும் ஆண்பால் பெண்பால் என்று பாகுபாடு செய்வதைக் காணலாம்.

வடமொழியில்

மேஜா என்னும் மேசையைக் குறிக்கும் சொல் ஆண்பால் ஆகும்

குர்ஷி என்னும் நாற்காலியைக் குறிக்கும் சொல் பெண்பால் ஆகும்

விருக்ஷா என்னும் மரத்தினைக் குறிக்கும் சொல் ஆண்பால் ஆகும்.

பர்ணம் என்னும் இலையைக் குறிக்கும் சொல் பெண்பால் ஆகும்

இதைப் போன்றே இந்தியிலும் கலம் என்னும் பேனாவைக் குறிக்கும் சொல் ஆண்பால் என்றும், தவாத் என்னும் மைக்கூட்டைக் குறிக்கும் சொல் பெண்பால் என்றும் பால்பாகுபாடு அமைந்துள்ளது. இவற்றைப் பார்க்கும் போது தொல்காப்பியரின் பால்பாகுபாடு இயற்கைக்குப் பொருத்தமான பகுத்தறிவு மிக்கப் பாகுபாடாக அமைந்தி ருப்பது புலப்படும்.

புணர்ச்சி இலக்கணத்தில்

புணர்ச்சி இலக்கணம் கூறுமிடத்துப் பல இடங்களில் தொல்காப்பியனாரின் பகுத்தறிவுச் சிந்தனை வெளிப்படும் குற்றியலுகரப் புணரியல் என்ற ஒரு தனியியல் அமைத்ததே இதற்குச் சான்றாகின்றது. முழுஉகரம் உயிரீற்றுச் சொற்களைப் போலப், புணர, குற்றியலுகரம் புள்ளியீற்றுச் சொற்களைப் போல (உயிர் வந்து சேர இடமளிக்கும் வகையில்) புணர் கிறது. இதனை உணர்ந்த தொல்காப்பியர் குற்றியலுகரப் புணர்ச்சியை உயிர் மயங்கியலில் கூறாமல் தனியியலாகப் படைக்கிறார். குற்றியலுகரம் எழுத்துவகையால் உயிராகவும், புணரும் முறையில் மெய்யெழுத்துப் போல உயிர் வந்து ஒன்ற இடம் தருவதாகவும் விளங்குவதால் இதனை உயிர் மயங்கியலிலும் அடக்காமல், புள்ளி மயங்கியலிலும் அடக்காமல் தனி ஒரு இயலில் பேசுகிறார். இது அவருடைய பகுத்தறியும் திறனைக் காட்டுகிறது.

உயிர் எழுத்துக்களின் புணர்ச்சியைப் பேசும் உயிர் மயங்கியலில் ஒவ்வொரு ஈற்றையும் பேசும்போது அந்த ஈறு எவ்வாறு முன்னர்க்கூறிய எழுத்தோடு ஒத்துச்செல்கிறது என்பதை நினைவூட்டும் வகையில் மாட்டேற்று உத்தியைப் பயன்படுத்துவதைக் காணலாம். வேறுபடும் இடங்களில் வேறுபாட்டைத் தனியே சுட்டிச் செல்வார். "மரப்பெயர் கிளவி மெல்லெழுத்து மிகுமே" என்ற பொது விதியிலிருந்து வேறுபடுமிடங்களில் எல்லாம் "புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை" என்றும், குற்றியலுகர ஈற்று மரப்பெயர்கள் அம் சாரியை பெறும் என்பதனைக் குற்றியலுகரப்புணிரியலில் "மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை" என்றும் விதி யமைத்திருப்பது அவருடைய பகுத்தறிவுச் சிந்தனையையும் கூர்ந்து நோக்கும் திறனையும் வெளிப்படுத்துகிறது. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி பேசும்போதும் மிக நுட்பமான ஒரு முறையைத் தொல்காப்பியர் கையாள்கிறார். சிறிய எண்ணை நிறுத்த சொல்லாக்கொண்டு பெரிய எண்ணை குறித்து வரு கிளவியாகக் கொண்டு அமையும் புணர்ச்சி யாவும் பெருக்கலைக் (multiplication) குறிப்பதாகவும், பெரிய எண்ணை நிறுத்த சொல்லாகவும் சிறிய எண்ணைக் குறித்து வரு கிளவி

யாகவும் கொண்டமையும் புணர்ச்சி யாவும் கூட்டலைக் (Addition) குறிப்பதாகவும் அமையும்.

சொல்லதிகாரத்தில் தொடரிலக்கணம்

சொற்களையே தொடர்களின் உறுப்புக்களாகவே தொல்காப்பியர் கருதுகிறார். மொழியின் அடிப்படை அலகே தொடர்தான் என்பது தொல்காப்பியரின் கருத்தாக அமைகிறதைத் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரம் விளக்கு கிறது. சொற்களைப் பாகுபாடு செய்யும்போது ஒரு வாக்கியத்தின்கண் எழுவாயாக வருவன எல்லாம் பெயர்களே என்றும் வாக்கியத்தின் பயனிலையாக வருவன எல்லாம் வினைகளே என்றும் தொடரிலக்கண அடிப்படையிலேயே சொற்களைப் பெயர்கள், வினைகள் என்று இரண்டாகப் பிரிக்கிறார். அதன் பின்னரே தனித்தியங்காத இடைச்சொற் களையும், அடிச்சொல்லாகவோ அடைச்சொல்லாகவோ செயல்படும் உரிச்சொற்களையும் கூறுகிறார்.

பெயர்ச்சொல், வினைச்சொல் இவற்றை வரையறுக்கும் முறையை நோக்கினால் தொல்காப்பியரின் பகுத்தறிவுச் சிந்தனை வெளிப்படும் வேற்றுமை ஏற்றல், காலம் காட்டல் இந்த இரு பண்புகளை அடிப்படையாகக் கொண்டே பெயரையும் வினையையும் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

+ < வேற்றுமை ஏற்றல் >

- < காலம் காட்டல் > இந்த இரண்டு பொருண்மைக் கூறுகள் உள்ள சொற்கள் பெயர் என்றும்

- < வேற்றுமை ஏற்றல் >

+ < காலம் காட்டல் > இந்த இரண்டு பொருண்மைக் கூறுகள் உள்ள சொற்கள் வினை என்றும் வரையறுத்துக் கொள்கின்றமையைக் காணலாம். இது எவ்வாறு தொல்காப்பியர் சொற்களைப் பாகுபாடு செய்யும்போதும் பகுத்தறிவுடன் செயல்படுகிறார் என்பதைக்காட்டுகிறது.

இவ்வாறு தொல்காப்பியத்தின்கண் இடம்பெறும் இலக்கணச் செய்திகள் யாவும் பகுத்தறிவுச் சிந்தனையுடன் கூடியதாகவே அமைந்துள்ளன.

இறையனார் அகப்பொருள்

ஆறாவது அறிவாகிய பகுத்தறிவிற்குத் தலைமைத் தன்மை தந்து நிர்வகிக்கத் தெரிந்தவனே மனிதன். மனம் போன போக்கெல்லாம் போகாமல் அறிவுக் கடிவாளம் கொண்டு அதை நெறிப்படுத்தி வாழத் தெரிந்தவனே மனிதன். அவை அறிவுக்குப் பொருந்துகிற அர்த்தமுள்ள கொள்கைகளை உடையதாக இருக்க வேண்டும்.

இந்தப் பகுத்தறிவு என்பதற்கு, "ஜீவப் பிராணிகளின் சிந்தனா சக்தியும் சிந்திப்பின் உணர்ச்சியும்தான் அறிவு என்று சொல்லப்படுகிறது. அச்சிந்திக்கும் தன்மையின் கூர்மையைப் பகுத்தறிவு என்று சொல்லலாம்" என விளக்குவர்.

எந்தக் கருத்தை எவர் சொன்னாலும் அந்தக் கருத்தின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து கண்டு, கொள்வன கொண்டு, தள்ளுவன தள்ளிப் பயன்பெறுவதே பகுத்தறிவு.

எனவே, மனிதன் வாழத் தொடங்கிய காலத்தில் இருந்து இன்றுவரையில் அவன் நல்வாழ்விற்கு வழிகாட்ட வேண்டிய அவசியம் இருந்துவந்திருக்கிறது. மனிதனின் இயக்கம் அவனது பிறப்பு, இறப்பு என்னும் இரண்டிற்கும் இடையே நடை பெறுகின்ற வாழ்வில் அமைந்திருக்கிறது. அந்த இயக்கத்தில் நல்ல செயலாற்றுவதற்கேற்ற உடல் உறுப்புக்களும், செயல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளக்கூடிய சிந்தனை ஆற்றலும் உடையவன்தான் மனிதன் என்று கூறத்தக்கவன். அந்த மனிதனுக்கு இணையாக எந்த உயிரையும் ஒப்பிட்டுப் பேசமுடியாது.

செயல்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளாத சிந்தனை ஆற்றலுடைய மனிதர்களிடையேதான் சாதி, மதம், மொழி, இனம் இவற்றின் பெயரால் சண்டையும் வெறுப்பும்

மு. வள்ளியம்மை
பேராசிரியர், தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

வளர்ந்துவருகின்றன. பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் நடைபெறுகின்ற வாழ்க்கையில் மனிதனுக்கு ஆறாவது அறிவு இருந்தும் காலத்தாலும் சூழ்நிலைகளாலும் சிலநேரங் களில் அது செயற்படாமல் போய்விடுகிறது. அந்த இருட்டில் இருந்து வெளியே வரத்தான் பகுத்தறிவுப் பகலவனின் ஒளிவெள்ளம் கிடைத்தது. அக இன்பத்தை அனுபவிப்பதில் மற்ற உயிரினங்களுக்கும் மனிதனுக்கும் வேறுபாடு உண்டு. அகவொழுக்கம் என்றே அது பேசப்படுகிறது. ஏனெனில் ஒழுங்கற்ற நிலையில் பிறஉயிர்கள் அனுபவிக்க, அதை ஒரு ஒழுங்கோடு, கட்டுக்கோப்போடு, கட்டுப்பாட்டுடன் அனுபவிக்கும் பண்பு மனிதனுக்கு உரியதாயிற்று. நெறிப் படுத்தப்பட்ட ஒழுக்கம் பகுத்தறிவுக் கொள்கைக்கு உட்பட்டது. இறையனார் அகப்பொருள் இதையும் பேசுகிறது.

அகம்

அகமென்பது உள்ளத்தின் கண்நிகழ்வது; வெளிக்குத் தோன்றாதது. அது பல்வகைய ஆயினும் உணர்ந்தாலன்றி அறியமுடியாதது. இவ்வாறு இருந்தது என வெளியில் கூறமுடியாதது. ஏனெனில் அது மனத்தினால் அறியும் மாண்புடையது. அதுவே காதலுணர்வு. பருவம் வாய்ந்த ஆடவர், பெண்டிர் உள்ளத்தே பூத்து மலரும் பொறபுடையது என அகத்திற்கு விளக்கம் தரும் இறையனார் அகப்பொருள்.

புறம்

புறமென்பது வெளியே புலனாகும் நிலைகள். அவை, போர் முறை, களியாடல், ஆடல், பாடல் முதலிய யாவும் ஆகும். இவைகள் பிறருக்குக் கட்புலன், செவிப்புலன் களுக்கு வெளியே தோன்றும் வண்ணம் காட்டக்கூடிய வாகலான் இதனைப் புறம் என்றனர் என விளக்குவர். இவற்றுள் அகத்திற்கான களவிலக்கணத்தை உலகத்தார் ஏற்றுக்கொள்கிறார்களா? என்பது சிந்தனைக்குரியது.

"ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப...." என்பதில் ஒத்த என்பதற்கு மனமொத்த, அறிவொத்த, பிறப்பொத்த எனப்பல கூறலாம்.

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு

.... (தொல்.பொருள். 269)

என்ற நூற்பா காட்டும்.

எனவே, களவு என்பதற்குத் தலைவனும் தலைவியும் மனமொத்தவராக இருக்க வேண்டும். ஏனெனில் இல்லற நெறிக்கு அன்பு அடிப்படை. அந்த அன்பு மனமொத்தவரிடமே இருக்க முடியும். வாழ்க்கை பிறருக்குப் பயன்படக் கூடியதாக அமைய வேண்டும். ஒத்த மனமிருப்பின் கொள்கையும் ஒத்ததாக இருக்கும். அகப்பொருளில் தவறு கண்டால் கடிந்து நீக்கும் நிலையைக் காணமுடிகிறது. புறப்பொருளில் அவ்வாறில்லை. எனவே, தவறு கண்டவிடத்துத் திருத்தி ஒழுங்குபடுத்தும் ஒழுக்க மேன்மையுடையது அகப்பொருள். அகம்புறமென்ற இவ்விரண்டுள் கடல்போல் பரந்த அகப் பொருள் விரிவை அங்கை நெல்லியெனச் சுருக்கி 60 நூற்பாக்களில் விளக்குகிறது இறையனார் களவியலுரை. இந்நூலுள் அக்காலச் சமுதாயத்தில் ஆடவர் பெண்டிரிடையே இருந்த அகவொழுக்கப் பண்பாட்டைக் காணமுடிகின்றது. இப்பண்பாடு போற்றப்பட்டால் இன்றிருக்கும் உயிர்கொல்லி நோய்களை நாம் சந்தித்திருக்க வாய்ப்பில்லை. தலைவன் தலைவியிடையே நிகழும் அன்பு ஏதேனும் ஒரு காரணம் பற்றியே நிகழும் என்பது பகுத்தறிவு. ஒருவரைஒருவர் எதிர்ப்பட்ட நிலையிலும் ஏதேனும் ஒரு காரணம் பற்றி அன்பு நிகழ்தல் உண்டு. இறையனார் அகப்பொருளுரை,

"அன்பு என்பது, தான் கருதப்பட்ட பொருளின் கண் தோன்றும் வேட்கையன்றே, ஈண்டு நம்மால் அன்பு என்று விகற்பிக்கப்படா நின்றது. அஃது யாதோ எனின் நாணுச்சுருங்க புணர்வு வேட்கை பெருக, ஒருவனோடு ஒருத்தியிடை நிகழும் அன்பு விசேட இலக்கணம் உடைத்து என்று கொள்க"

எனத் தலைவன் தலைவியிடையே நிகழும் அன்பிற்கு இலக்கணம் கூறும். இது ஒருவரை ஒருவர் தேர்ந்து எடுத்துக் கொள்ளும் நிலையாகும்.

மணமக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து, தங்களுக் குள்ளாகவே ஒருவரை ஒருவர் தேர்ந்தெடுத்துக் கொள்ள

வேண்டும் என்பதும், அர்த்தமும், பொருத்தமும் அவசியமும் இல்லாமல் வெறும் சடங்கு, பழக்கவழக்கம் என்பதற்காக மாத்திரம் ஒன்றையும் செய்யக்கூடாது என்பதுமே சுயமரியாதைத் திருமணம் குறித்த கருத்து.

"எஞ்ஞான்றும் மூப்புப் பிணி சாக்காடு இல்லது, நிச்ச நிரப்பு இடும்பை இல்லது, இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானால் இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய் ஒத்த பண்பும், ஒத்த நலனும், ஒத்த அன்பும், ஒத்த செல்வமும், ஒத்த கல்வியும் உடையராய்ப் பிறிதொன்றிற்கு ஊனமின்றிப் போகந் துய்ப்பர்"

என்று இறையனார் அகப்பொருள் ஏற்புடைத் தலைவன் தலைவியைக் குறிப்பிடுகிறது. இங்குச் சாதி, வகுப்பு, குலம், கோத்திரம் என்பவைகள் சுட்டப்படவில்லை.

இதையேதான் பகுத்தறிவுக் கொள்கையில் ஒன்றாகச் சுட்டுகிறார் பெரியார். வயதில் ஒத்தவராகவும், பண்புகளிலும் பழக்கவழக்கங்களிலும் ஒத்த நலன் உடையவராய், கல்வியும் செல்வமும் ஏற்புடையவராய் இருப்பவர்களாகவும் மணமக்கள் அமையவேண்டும் என்பர்.

"சுயமரியாதைக் கல்யாணத்தில் சாதி, வகுப்பு, குலம், கோத்திரம் என்பவைகள் கவனிக்கப்படாமல் மணமக்க ளுடைய யோக்கியதாம்சங்களே கவனித்துப் பார்க்கப் படுகின்றது"

என்கிறார் ஈ.வெ.ரா.

"கலியாணப் பொருத்தம் பார்க்க வேண்டிய பொறுப்பு மணமக்களுக்கே உண்டு 'கலியாணம் மணமக்கள் எத்தனத்தினாலே ஆகவேண்டும்" (ப.326)

என்பது பகுத்தறிவுக் கொள்கை.

சங்க இலக்கியத் திருமணங்களும், இலக்கணக் கொள்கை களும் இதற்கு முரண்பட்டவையல்ல. களவியல் பேசுகின்ற காதல், ஆடவனும், பெண்ணும் எதிர்ப்பட்ட நிலையில் தொடங்குவதாகக் கூறப்படுகின்றது.

எண்வகை மணம்

எட்டுவகையான மணங்கள் பற்றிய செய்திகளை இறையனார் களவியலுரையில் காண்கிறோம். அவை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன.

பிரமம் என்பது 48 ஆண்டுகள் பிரமசரியம் காத்தவனுக்குப் பன்னிரண்டு வயதுப் பெண்ணை அணிகலன் அணிந்து கொடுப்பது. சமீபத்தில் இதுமாதிரியான செய்தி ஒன்று வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரசாபத்தியம் என்பது மைத்துனகோத்திரத்தான் மகள் வேண்டிச் சென்றால் மறாது கொடுப்பது. இதனை ஒப்பு என்று உணர்வது.

ஆரிடம் என்பது ஆவும், ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நீரிற் கொடுப்பது. இதனைப் பொருள் கொள்ளுதல் என உணர்வது.

தெய்வம் என்பது வேள்வி ஆசிரியர்க்கு வேள்வித் தீமுன் வைத்துப் பெண் கொடுப்பது.

காந்தர்வம் என்பது இருவர் ஒத்தார் தாமே கூடும் கூட்டம். இதனை யாழோர் கூட்டம் என உணர்வது.

அசுரம் என்பது கொல்லேறு கொண்டான் இவளை எய்தும், வில்லேற்றினான் இவளை எய்தும், திரிபன்றி எய்தான் இவளை எய்தும், மாலை சூட்டப்பட்டான் இவளை எய்தும் என இவ்வாறு சொல்லிக் கொடுப்பது. இஃது அரும்பொருள் வினை நிலை என்பதாகும். அதாவது அரியவாகிய செயலைச் செய்தல்.

இராக்கதம் என்பது அவள் தன்னினும் தமரினும் பெறாது வலிந்து கொள்வது.

பைசாசம், மூத்தாள் மாட்டும் துயின்றாள் மாட்டும் களித்தாள் மாட்டும் சார்வது. இது பேய்நிலை எனப்படும்.

இவ்வாறு எட்டுவகையான மணம் குறித்து இறையனார் களவியல் உரை விளக்கம் தரும். இவற்றுள் காந்தர்வமே நல்லது என்று புலவரால் - சான்றோரால் நாட்டப்பட்ட ஒழுக்கமாகும்.

இனி, கந்தருவ வழக்கம் என்பது கந்தருவர் என்பார் ஈண்டுச் செய்த நல்வினைப் பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி இருவரும் ஒரு பொழிலகத்து எதிர்ப் பட்டுப் புணர்வது. இது காந்தர்ப்ப மணம். இதனை ஒப்பதனையே களவு என்பர். களவு, ஏகதேசத்துப் புணர்தலும், கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றிப் புணர்வதும், ஒத்த அன்பினர் ஆகலும் என்னும் இத்துணையே ஒப்பாகும். எனவே, தமிழ்ப் பொருளிலக்கணம் பேசும் களவு காந்தர்வ மணமே. அப்படியாயின் மேலே கூறிய மன்றல் எட்டோடு கந்தருவ வழக்கம் என்ற இதைச்சேர்த்து ஒன்பதாகுமோ என்றால் அன்று; அவ்வெட்டும் உலகியலில் உள்ளன; ஆனால் அவை சமுதாய நலனுக்கு ஏற்புடையன அல்ல. இது இல்லது, இனியது, நல்லது என்று சான்றோரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கம் என்பர்.

எல்லோர்க்கும் உரியது

இவ்வொழுக்கம் களவு, கற்பு எனப் பலரால் வகுத்துரைக்கப்பட்டது. இவை உலகத்தில் வாழ்வோரில் தலைவன், தலைவி என்று சொல்லப்பட்டாரின் உள்ளத்தின் கண் நிகழ்கின்ற அன்பினது உயர்வு, என்பதை,

> *''களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்*
> *உளநிகழ் அன்பின் உயர்ச்சிமேன''* (60)

என்ற இறுதிச் சூத்திரத்தில் இறையனார் அகப்பொருள் விளக்குகிறது. ஈண்டு 'அன்பின் உயர்ச்சி' என்பதால் அது இல்லாத இடத்து இவ்வொழுக்கங்கள் நடைபெறாது என்பது தெளிவாகிறது. இது உயர்ந்தார்க்கு மாட்டும் உரியதல்ல.

> *'அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்*
> *கடிவரையில புறத்தென்மனார் புலவர்'* (அகத். 23)

என்று கூறுவதால் ஏனையோர்க்கும் இது உரியது என்பது புலனாகிறது. எனவே இவ்வொழுக்கம் சாதி, மதம், குலம் கடந்த தன்மையுடையது என்பது தெளிவாகிறது.

அன்புவாழ்க்கை

இவ்வொழுக்கத்தில் ஈடுபட்டோர் குறித்து

"அதுவே,
தானே அவனே தமியர் காணக்
காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்" (சூ 2)

என்று கூறும் இறையனாரகப் பொருள் கந்தரவ வழக்கத்தோடு ஒக்கும் ஒழுக்கம் களவு என்பதை உணர்த்துகிறது. இச் சூத்திரம்தான் அவள் என்னும் வேற்றுமையின்றி, அதாவது மனவேற்றுமையின்றி, பொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம் உணர்வினரன்றி என்றால் என்ன? நாம் யார் என்ற உணர்ச்சி யின்றி நிற்றல். அதாவது எப்பொருளாயினும் அப்பொருட்கண் நின்று அம்மெய்ம்மையை உணரும் அறிவு, காப்பனகாத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கமாகிய நிறை ஒருபொருளை ஆராய்ந்து உணரும் ஓர்ப்பு, கொண்ட பொருள் மறவாத கடைப்பிடி ஆகிய நான்கையும் வேட்கையான் மீதூரப்பட்ட நிலையில் மறந்து நிற்பது.

தலைமகளோ நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய நான்கையும் மறந்து தன் உணர்வின்றி நிற்றல். இந்நிலை யாரைக் கண்டாலும் வருவதில்லை. ஏற்புடை ஒருவரைக் கண்டபோது மட்டுமே வரும். பெண்டிர்க்கு இயல்பாக உள்ளதொரு தன்மை நாண், கொளுத்தக் கொண்டு கொண்டது விடாத மடம்; தான் காணப்படாததோர் பொருள் கண்ட விடத்து அஞ்சும் அச்சம், பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலையாகிய பயிர்ப்பு இந்நான்கும் நீங்க வேட்கையான் மீதூராம்படுவாள். வேட்கை என்பது ஒருவரோடொருவர் இன்றியமையாமை. அவ்வின்றியமையாது நின்ற வேட்கை எல்லா உணர்வினையும் நீக்கித்தானேயாய் இருவரையும் புணர்விக்கும் என்பது இறையனாரகப் பொருள் விளக்கம்.

திருமணத்திற்கு முன்பாகவே ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் ஆசை ஏற்பட்டு அதன் பின்னரே திருமணம் நடக்க வேண்டும் என்பது பகுத்தறிவு வாதம். வாழ்க்கைக்கும் மனத்துக்கும் ஏற்ற தம்பதிகளானால் கூடி வாழலாம் என்பர். அவ்வகையில் கூடிவாழும் இல்லற வாழ்க்கையே அதன்பின் ஐந்திணை ஒழுக்கமாய் மலர்கிறது.

களவுப்புணர்ச்சி உள்ளப் புணர்ச்சியே

"உள்ளத்தால் வேட்கப்படாத பொருள் இல்லை." அவ் வேட்கப்பட்டவற்றுக்கண் எல்லாம், அறத்தின் வழுவாமையும் பொருளின் வழுவாமையும் தனக்குத்தகவும் ஆராயாது உள்ளம் ஓடினவழி ஓடுவித்தல் தக்கதன்று. மற்று என்னையோ உரைக்குமாறு எனின், அவர் தம்முள் மெய்யுற்றுப் புணர்ந்திலர், இருவர்தம் காமமுமே தம்முட் புணர்ந்தன என்று இங்ஙனம் உள்ளங்களானின்று புணர்வது புணர்ச்சி இது பிறரொருவர் உணர, நெடுங்காலம் புணர்தலாகாது என நீங்கும் நீக்கம் பிரிவு. அப்பிரிவின் கண் சொல்வது மெய்யுறு புணர்ச்சிக்குச் சொல்லுவன எல்லாம் சொல்லவே அமையும். பாங்கற் கூட்டத்தின் கண்ணும் தோழியிற் கூட்டத்தின் கண்ணும் எல்லாம் அதுவே. வரைந்து எய்திய ஞான்று மெய்யுறு புணர்ச்சி உண்டாவது என்ப. எனவே, களவுப்புணர்ச்சி உள்ளப் புணர்ச்சிதான்' என இறையனாரகப் பொருள்நிலை நிறுத்துகிறது.

இவற்றின்வழிக் களவுக் காலத்து நிகழும் இயற்கைப் புணர்ச்சி என்பதும் அது தொடர்பாக இடந்தலைப்பாடு போன்றனவும் நிகழும் காலத்து அங்கு மெய்யுறு புணர்ச்சி நிகழ்வதில்லை எனத்தெரிகிறது. களவுக் காலத்தே தலைவனும் தலைவியும் கட்டுப்பாட்டுடனேயே இருந்திருக்க வேண்டும். அது மட்டுமன்றி அவர்களின் செயல்களும் ஆராய்ந்து செய்யும் செயல்களாகவே உள்ளன. பகுத்தறிவுவாதிகளின் கூற்றுக்கிணங்க அறிவு, அனுபவம், ஆராய்ச்சி ஆகியவற்றின் மீது ஏற்பட்ட மணமுறையாகவே இது நடைபெறுகிறது. அந்த ஆராய்ச்சியில் தோழியின் அறிவும், வெளிப்படுகிறது. எதையும் ஆராயாது எதிர்ப்பட்டவுடன் காதல் கொண்டிருக்க

முடியாது. ஏனெனில் கண்டதும் ஐயம், தெளிவு, ஏற்பட்ட பின்னரே மனம் உறுதிப்பட்ட பின்னரே அவளும் அவனும் கருத்தொருமிக்கின்றனர். இவை யாராவது ஒருவருக்கே முதலில் தோன்றும். எனவே, இது கைக்கிளையின் பாற்படும். காதல் கைக்கிளையில் தொடங்கி அன்பின் ஐந்திணையில் வளர்ந்து காமஞ்சான்ற கடைக்கோட் காலை ஏமஞ்சான்ற மக்களோடு துவன்று அறம்புரி சுற்றமொடு வாழும் கிழவனுக்கும் கிழத்திக்கும் உரிய முதியோர் காதலாகிய பெருந்திணையில் முடிவடைகிறது. எனவே கைக்கிளை என்பது காதலின் தொடக்கம். ஏனெனில், காதலின் ஆரம்பம் ஒருவர்பக்கம் தானே தொடங்க முடியும்?

அறிவோடு ஆராய்தல்

பாங்கன் உற்றது வினாதல், தலைவி உற்றது உரைத்தல், கழறியுரைத்தல், கழற்றெதிர்மறை, கவன்றுரைத்தல், இயல் இடம் கேட்டல், இயல்இடம் கூறல், இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் என்பன அவர்தம் உள்ள உணர்வுகளை ஆராயும் துறைகளாக அமைகின்றன. அவனைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் விசாரித்து அமைகின்றனர் தோழியும் தலைவியும்.

"இரந்து குறையுறாது கிழவியும் தோழியும்
ஒருங்கு தலைப்பெய்த செவ்வி நோக்கிப்
பதியும் பெயரும் பிறவும் வினாஅய்ப்
புதுவோன் போலப் பொருந்துடி கிளந்து
மதியுடம் படுத்தற்கும் உரிய னென்ப" (இறை : 6)

மதியுடம்படுத்தல்

ஒருவருடைய மதியை மற்றொருவர் மதியோடு பொருந்தும்படிச் (உடம்படுத்துதல்) செய்தல். மதி என்பது அறிவு. அவ்வறிவினை ஒருப்படுத்தற்கும் உரியன். யார் அறிவை உடம்படுத்தல்? என்றால் தோழியின் அறிவை என்று கொள்க என்கிறார். தோழியின் அறிவு மேம்பட்டது. ஒன்றித் தோன்றும் தோழி அவள் உடல் வேறுபாட்டை யும், அவன் இரந்து பின்னிற்கும் நிலையையும் கொண்டே

அவர்களின் காதலை உணர்கிறாள். குறிப்பறியும் திறத்திலே வல்லவள் அவள். இது அவளது ஆராய்ந்து காணும் அறிவைப் புலப்படுத்துகிறது. அவளை விடுத்துத் தலைவியோ, தலைவனோ எச்செயலும் செய்ய இயலாது.

''விரையாடிய கண்ணிவேந்தன் விசாரிதன்
கொல்லிவிண்தோய்
வரையாடிய புனங்காவலும் மானின்வழி வரவும்
நிரையாடிய குழலாட்கும் இவற்கும் நினைப்பினில்லை
உரையாடுவர் கண்ணினான் உள்ளத்து உள்ளதும்
ஒன்றுளதே'' (64) (ப.68)

''மருங்கண்ணி வந்த சிலம்பன்தன் கண்ணும்
இவ்வாள்நுதலாள்
கருங்கண்ணும் தம்மிற் கலந்ததுண்டாம் இங்கொர்
காரணமே''

என்ற பாடல்களைத் தோழியின் அறிவுத்திறத்திற்குச் சான்று காட்டுவார் இறையனார் அகப்பொருள் உரை ஆசிரியர். இந்நிலைகளைத் தோழிக்குரிய உணர்ச்சியெனச் சூத்திரம் கூறுவார்.

''முன்னுற உணர்தல் குறையுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல் என்று
அம்மூன்றென்ப தோழிக் குணர்ச்சி'' (இறை : 7)

என்பது அச்சூத்திரம்.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றைஞான்று அவள்கண் சிவப்பும், நுதல் வேறுபாடும் கண்டு உணர்தல் முன்னுற உணர்தல். இது தோழி தோற்றத்தால் ஆராய்ந்து காணும் அறிவுத் திறத்தைக் காட்டுகிறது.

குறையுறவுணர்தல் என்பது அவன் இரந்து பின் நிற்கின்றது. எதற்கு என உணர்வதாயிற்று. அதாவது இவர் மனத்து எண்ணம் யாதெனத் தேர்தல்

இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல் - அந்த ஐய உணர்வோடு நிற்கின்ற தோழி, இருவரும் இருக்கின்ற

இடத்து அவன் வந்து நின்று பதியும் பெயரும் பிறவும் வினாவ, அவள் தெளிவாக உணர்கின்றாள். இது தோழியின் துணிபு.

''ஏனல் காவல் இவளும் அல்லள்
மான்வழி வருகுவன் இவனும் அல்லன்
நரந்தங் கண்ணி இவனோ டிவளிடைக்
கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே
நம்முள் நாணுநர் போலத் தம்முள்
மதுறைந் துண்டோர் மகிழ்ச்சிபோல
உள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லும் ஆடுப கண்ணி னானே''

(தொல். பொருள், களவு. 23)

அறநெறிப்பட்ட வாழ்க்கையே வாழ்க்கை என்பது பகுத்தறிவுச் சிந்தனை. காதலர் வாழ்வில் இடைப்படும் தோழிக்கும் அந்த அறம் தேவை; கட்டுப்பாடு தேவை. தோழி எங்கெல்லாம் கூற்று நிகழ்த்தலாம் என்ற வரையறை அவர்தம் வாழ்வைச் செம்மைப்படுத்துகிறது. தோழி தலைவியின் குடும்பத்தைக் கௌரவத்தைக் காப்பதிலும் அக்கறை காட்டுபவள்.

குறையுறும் தலைவனிடம், தலைவியிடம் வலிதாகச் சொல்லிக் குறைநயப்பிக்கும் நிலையையும் காணமுடிகின்றது.

''ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்:
பன்னாள்வந்து, பணிமொழி பயிற்றி,யென்
நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகியோனே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ?
வேறுபுலன் நன்னாட்டுப் பெய்த
ஏறுடை மழையிற் கலுழுமென் நெஞ்சே'' (குறுந். 176)

என்பது வலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தலுக்கான சான்று.

அறத்தொடு நிற்றல்

களவு வழிப்பட்ட காதலர் இல்லற நெறிப்படுவதற்குப் பாலமாக அமைவது அறத்தொடு நிற்றலாம். அது ஒழுங்கு

முறைக்கு உட்பட்டது; ஒழுக்கம் வழுவா நெறிமுறை; களவு அம்பலாய், அலராய் வெளிப்படும் நிலையிலும், தலைவன் பிரிவுழியும் தலைவியிடம் மெய்வேறுபாடு ஏற்படும். அது கண்ட செவிலித்தாய் என் மகட்கு இவ்வேறுபாடு எதனாலாயிற்று என உடனிருக்கும் தோழியை வினவுவாள். அந்நிலையில் செவிலிக்குத் தோழி அறத்தொடு நிற்பாள். செவிலி இன்புற்ற மனத்தாளாய் 'என் மகள் பெரிது அறிவுடையவளே காண்' என்று அவ்வாறு நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும். நற்றாயும் இன்புற்ற மனத்தாளாய் தந்தைக்கும், தன் ஐயன் மார்க்கும் அறத்தொடு நிற்கும். அவரும் அவளது அறிவும் ஆசாரமும் (ஒழுக்கமும்) கேட்டு இன்புற்ற மனத்தராய்ச் சொன் மறுத்துத் தலையிறைஞ்சி நிற்பர் (ப.122) என அறத்தொடு நிற்றலுக்கு இறையனார் அகப்பொருள் உரைவிளக்கம் தரும்.

கட்டுப்பாட்டிற்காகவும் நிர்ப்பந்தத்திற்காகவும் கற்பு ஒரு காலமும் கூடவே கூடாது. வாழ்க்கை ஒப்பந்தத்திற்காகவும் காதல் அன்பிற்காகவும் இருவரையும் கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு வேண்டுமானாலும் இறுக்கிக் கட்டட்டும் என்பார் பெரியார். களவு வழிப்பட்ட கற்பு வாழ்க்கை அன்பின் ஐந்திணையில் மலர்ந்து மணம் பரப்புவது இக்கருத்திற்கு அரண் சேர்க்கிறது.

எட்டுத்தொகை நூல்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

அகநானூறு

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகையில் அடங்கும் அகநானூறு தமிழர்தம் அகவாழ்வைச் சித்திரிக்கிறது. பல்வேறு புலவர்கள் பாடிய இப்பாடல்களில் காணலாகும் ஒரு சில பகுத்தறிவுச் சிந்தனைகளை இக்கட்டுரை இனங்காண முயலுகிறது. எதையும் முன்னோர்கள் சொன்னார்கள் என்பதற்காக அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அறிவு கொண்டு அலசிப் பார்ப்பதும் எது ஒருவனது புத்திக்குச் சரியென்றுபடுகிறதோ அதனை ஏற்றுக் கொள்வதும் பகுத்தறிவுப் புரட்சியாகக் கருதப்படுகிறது.

தமிழர்தம் தொன்மை வாழ்வானது இயற்கை நெறிக்குட்பட்ட வாழ்வாக அமைந்திருந்தது என்பதைப் பல சங்கப் பாடல்கள்வழி நாம் அறிகிறோம். இவ்வகையில் இயற்கையில் கிடைத்த உணவு, தம்மைச் சுற்றியுள்ள நிலச் சூழல், தட்ப வெப்பம் ஆகியவற்றிற்கேற்பவே அவர்கள் வாழ்வு அமைந்தது. இதையே தொல்காப்பியர் இலக்கிய மரபாக முதல், கரு, உரிப்பொருள் என்று பேசுகிறார். சங்க இலக்கியத்தில் சுட்டப்படும் திணைசார்ந்த வாழ்வியல் இதனை நமக்குத் தெரிவிக்கிறது. தமிழர்தம் தொன்மைச் சமயமும்கூட இயற்கை சார்ந்த வழிபாடுகளாகவே பெரிதும் இருந்தது என்பதை மானிடவியல் ஆய்வுகள் சுட்டுகின்றன. பெருந் தெய்வ வழிபாடுகள் ஆரியரின் வரவால் விளைந்தனவாகும். இவ்வகையில் அமைந்த சங்ககால மக்கள் வாழ்வில் காணப்பட்ட பகுத்தறிவுக்குட்பட்ட சிந்தனைகளை, வாழ்வியல் முறைகளை அகநானூற்றின்வழி எடுத்துக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

சிந்தனை, பகுத்தறிவு, ஆராய்ச்சி இவைதாம் பெரிதும் மனிதனை இதர மிருகங்கள், பிராணிகளிடமிருந்து பிரித்துக்

அ. ஆலிஸ்

பேராசிரியர், தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

காட்டுவன ஆகும். சிந்தனா சக்தியைக் கொண்டுதான் மனிதன், மாற்றமோ முன்னேற்றமோ அடைந்து வருகிறான் என்று மனிதனின் வளர்ச்சிப் பாதையில் பகுத்தறிவு பெற்றுள்ள முதலிடத்தை வலியுறுத்திச் சொன்னவர் தந்தை பெரியார். எதையும் அறிவு கொண்டு அலசிப் பார்த்து எது தனது புத்திக்குச் சரியென்று படுகிறதோ அதனை ஏற்றுக்கொண்டு வாழும் வாழ்வைப் பண்டைத்தமிழர்கள் வாழ்ந்தார்களா? அவர்தம் வாழ்வில் பகுத்தறிவுக்குட்பட்ட சிந்தனையும் மூடத்தனமற்ற வாழ்வியலும் காணப்பட்டதா? என்று ஆராய்ந்து பார்த்தால் பண்டைத்தமிழர்தம் வாழ்வியல் அறிவுக்குட்பட்டு இருந்ததைக் காண ஏதுவாகிறது.

இவ்வகையில் அகநானூற்றில் காணலாகும் பகுத்தறிவுக் குட்பட்ட சிந்தனைகளின் அடிப்படையிலான இன்றியமையாத வாழ்க்கைக் கோட்பாடுகள் சிலவற்றைச் சுட்டலாம். அவை :

1. காதலறம்
2. தமிழர் திருமணம்
3. பொருள் குறித்த எண்ணங்களும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்ற வாழ்வியல் கோட்பாடும்
4. இயற்கையுடன் இயைந்த வாழ்வு
5. நடுகல் வழிபாடு

பகுத்தறிவுக்குட்பட்ட தமிழர் வாழ்வியல்

1 காதலறம்

தமிழர்தம் வாழ்வில் அறமும் இன்பமும் ஒன்று என்ற சிந்தனையின் வழிப்பட்ட காதலறம் மேலோங்கி இருந்தது. களவின் வழிப்பட்ட திருமணமே சிறந்தது என்ற சிந்தனை தமிழர்தம் எண்ணத்தில் மேலோங்கி இருந்தமையைச் சங்க அகப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. உலகப் பொதுப் பொருளாகிய அன்பாம் காதல் என்பதன் வழிப்பட்ட அக் காலத்துப் பெண்டிரும் ஆடவரும் காதலர் இருவராகக் கருத்தொருமித்து வாழ்ந்தவர்கள் அவர்கள் என்பதைச் சங்க அகப் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன. களவுப் பாடல்கள் அதிகமாக இடம்பெற்றிருப்பதும் இதற்குத் தகுந்த சான்றாகும்.

பெற்றோர் பார்த்து முடித்த திருமணங்களும் இருந்திருக்கலாம். இருப்பினும் அவை மிகக் குறைவாக இருந்திருக்க வேண்டும். அகநானூறு 12-ஆம் பாடல் கபிலரது பாடல் ஆகும். பகற்குறி வாராநின்ற தலைமகன் தோழியாற்செறிப்பறிவுறுக்கப்பட்டு இரவுக்குறி வாராவரைவல் என்றாற்கு அதுவும் மறுத்து வரைவு கடாவும் பாடல் ஆகும். இப்பாடலில் வாழ்வதே ஆதரவுபட்ட இன்பமாக இருக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டு

யாமே பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஓருயிரம்மே (12:4-5)

என்று பேசும் வரிகள் நோக்கத்தக்கவை. தலைவனும் தலைவியும் கொண்டிருக்கும் காதலை இப்பாடல் வரிகள் தகுந்த உவமை மூலமாக எடுத்துக்காட்டுகின்றன. இதே பொருளில், நக்கீரரின் பாடல் தலைவி கூற்றில்

'உயிர்கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பில்' (205:1)

என்றும் காவன் முல்லைப் பூதனார்,

'துனியின்று இயைந்த துவரா நட்பின்
இனியர் அம்ம அவர்' (241:1-2)

என்றும் நரைமுடிநெட்டையர் என்ற புலவர் தலைவன் கூற்றில்

உயிரியைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்த லன்ன காதல்
சாதல், அன்ன பிரிவறி யோளே (339:12-14)

என்றும் குறிப்பிடும் வரிகள் நோக்கத்தக்கன. இப்பாடல்கள் முறையே பின்வரும் பொருள் பயக்கின்றன. தலைவனும் தலைவியும் இருதலைகளைக் கொண்ட புள்ளைப் போல ஓருயிர் உடையவர்கள்; எனவே பிரியின் உயிர் வாழ்தலரிது என்று தோழியும் நம் தலைவர் உயிருடன் கலந்து பொருந்திய பல பிறவிகளினும் தொடர்ந்து வரும் நட்பினால் குற்றமற்ற நெஞ்சத்தால் கலந்தோர் போல பெண்ணே நின்வயின் பிரியலாம் என்றார் என்று தலைவியும் வெறுப்பின்றி ஒன்றிய என்றும் பிளவுபடாத நட்பினையுடைய இனிய குணங்களை

யுடையர் அவர் என்று தோழியும் உடலொடு உயிர் ஒன்றினாலொத்த நட்பினையும் அவ்வுயிர் இன்புற்று வாழ்தல் போலும் காதலையும் உடைய அதற்குச் சாதல் போலும் துன்பினைத் தரும் பிரிதல் அருமையை உடைய நம் தலைவி, வருந்தியிருப்பாளோ என்று தலைவன் தன் நெஞ்சிற்கும் கூறும் இவ்வரிகள் அக்காலத்து நிலவிய ஆழ்ந்த உண்மையான காதலைச் சுட்டுகின்றன.

இத்தகைய காதலைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக் கொண்டு திருமணத்திற்கு உடன்பட்டதை மகிழ்ச்சியுடன் தோழி அறிவிக்கும் பாடலாக அகநானூறு 282 அமைகிறது.

.... இழிதரு நாடற்கு
இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து
எந்தையும் எதிர்ந்தனன் கொடையே அலர்வாய்
அம்பல் ஊரும் அவனொடு மொழியுஞ்
சாயிறைத் திரண்ட தோள்பா ராட்டி
யாயு மவனே யென்னும் யாமும்
வல்லே வருக வரைந்த நாளென
நல்லிறை மெல்விரல் கூப்பி
இல்லுறை கடவுட்கு ஆக்குதும் பலியே (282 : 10-18)

மேல்குறிப்பிட்ட வகையில் பெற்றோர் உடன்படாத சூழலில் இதன் தொடர்ச்சியாகவே தலைவி தலைவனுடன் உடன்போக்கு மேற்கொள்வது நிகழ்கிறது. அகநானூறு 153-இல் மகட்போக்கிய செவிலித்தாய் தன் மகளின் மென்மையும் அவள் தன் காதலனுடன் சென்றிருக்கும் சுரத்தின் வன்மையையும் எண்ணி வருந்துகிறாள். இப் பாடல் சேரமான் இளங்குட்டுவன் எழுதிய பாடல் ஆகும். இப்பாடலின் பொருள் “அளியள் பந்துவழிப் படர்குவள் ஆயினும் நனி நொந்து வெம்புமன், இனி மெல்லியள், மலை விளங்கிய சுரனில் வேனில் வெங்காட்டுப் பயம் நீங்கு ஆரிடையில் ஒய்யெனச் செல்ல வல்லுநர் கொல்லோ! உள்ளம் நோதகும் என்று செவிலி வருந்துவதாகும்.

பெற்றோர் பார்த்து முடித்துவைக்கும் திருமணங்களை விடவும் உண்மையான அன்பின் வயப்பட்டுக் காதலர் இருவர்

கருத்தொருமித்து முடிக்கும் திருமணமே சிறந்தது என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை. தந்தை பெரியார் பெண் ஏன் அடிமையானாள் என்ற நூலில் காதல் என்பது கற்பிக்கப்பட்ட ஒன்று என்று வாதத்திற்காகச் சொன்னாலும் காதல் தோல்வி அடைந்தாலோ அல்லது காதல் கொண்ட ஒருவர் வேறு ஒருவரைக் கைப்பிடிக்க நேர்ந்தாலோ அதன் விளைவுகள் பற்றி ஊரில் வேலை இல்லாத வம்பர்கள் கூறும் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்பதை நிறுவுவதற்காகவே இக்கட்டுரையினை எழுதுகிறேன் என்கிறார்.

“ஆகவே, இதிலிருந்து நாம், யாரிடமும் அன்பும், ஆசையும், நட்பும் பொருளாகக்கொண்ட காதல் கூடாதென்றோ, அப்படிப்பட்டதில்லை என்றோ சொல்ல வரவில்லை. ஆனால், அன்பும் ஆசையும் நட்பும் மற்றும் எதுவானாலும் மன இன்பத்திற்குத் திருப்தியும் இன்பமும் இல்லாமல் அன்பும் ஆசையும் நட்பும் இருப்பதாகக் காட்டுவதற்காகவே அல்ல என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே இதை எழுதுகின்றோம். இதுவும் ஏன் எழுத வேண்டியதாயிற்று என்றால் மற்றவர்கள் திருப்தியிலும் சந்தோஷத்திலும் நுழைந்துகொண்டு தொட்டதற்கெல்லாம் ‘இது காதலல்ல’, ‘அது காதலுக்கு விரோதம்’, ‘அது காம இச்சை’, ‘இது விபச்சாரம்’ என்பது போன்ற அதிகப் பிரசங்கித்தனமான வார்த்தைகளை ஒருவிதப் பொறுப்புமில்லாதவர்கள் எல்லாம் கூறுவதால் அப்படிப்பட்டவர்கள் கூற்றையும் கூறும் காதலையும் சற்றுப் பார்த்து விடலாம் என்றே இதைப் பற்றி எழுதலானோம்”[1]

என்ற தந்தை பெரியாரின் கருத்து காதலுக்கு அவர் எதிரி இல்லை என்றும் காதல் என்ற பெயரில் அலங்கோலங்கள் வேண்டாம் என்பதையே விளக்குகிறது.

2. தமிழர் திருமணம்

சங்க காலத் திருமணங்கள் பற்றி நாம் அறிந்துகொள்ள அகநானூறு நமக்கு உதவுகிறது. அகநானூறு 195 மகட் போக்கிய நற்றாய் சொல்லும் பாடல் ஆகும். இப்பாடலில்

அவள் உடன்போக்கு மேற்கொண்ட தலைவனையும் தலைவியையும் தலைவனது தாய் வரவேற்கத் தயாராய் இருக்கும் காட்சியை எண்ணிப் பார்க்கிறாள்.

அருஞ்சுரம் இறந்தஎன் பெருந்தோள் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே
புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி
மனைமணல் அடுத்து மாலை நாற்றி
உவந்தினிது அயரும் என்ப (195:1-5)

இப்பாடல் வரிகள் இயற்றிய அழகினால் மாட்சிமைப்பட்ட புறஞ்சுவர் எல்லாம் செம்மண் பூசி, இல்லத்தின் முற்றத்தே மணல் பரப்பிப் பந்தலிட்டு மலர் மாலைகளைத் தூங்க விட்டு, உள்ளம் பெரிதும் மகிழ்ந்து இனிதாக அணி செய்கின்றாள் என்று அறிந்தோர் கூறுவர் என்ற பொருளைத் தெரிவிக் கின்றன. இங்கு எளிய ஒரு திருமண வரவேற்பைப் பார்க்கிறோம்.

பண்டு நிகழ்ந்ததை எண்ணிப் பார்க்கும் தலைவன் கூற்றில் அவர்தம் திருமணம் இடம்பெறும் அகநானூறு 86ஆம் பாடல் குறிப்பிடத்தக்கது. உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த செவ்விய குழைதலையுடைய பொங்கலொடு பெரிய சோற்றுத் திரளையை உண்டல் இடையறாது நிகழ, வரிசையாகிய கால்களையுடைய குளிர்ந்த பெரிய பந்தரில், மனையின்கண் விளக்கினை ஏற்றி வைத்து மாலைகளைத் தொங்கவிட்டு, தீயகோள்களின் தொடர்பு நீங்கப் பெற்ற வளைந்த வெள்ளிய திங்களைக் குற்றமற்ற சிறந்த புகழினையுடைய உரோகணி எனும் நாள் அடைந்ததாக, கனை இருள் அகன்ற கவின் பெறு காலை அந்நாளிலே மிக்க இருள் நீங்கிய அழகு பொருந்திய விடியற்காலையில் உச்சியில் குடத்தினையுடையரும் கையினிற் புதிய அகன்ற மண்டை எனும் கலத்தினையுடையரும் மணத்தினைச் செய்து வைக்கும் ஆரவாரமுடைய முதிய மங்கல மகளிர், முன்னே தருவனவும் பின்னே தருவனவும் முறைமுறையாகத் தந்திட, மகனைப் பெற்ற தேமலையுடைய அழகிய வயிற்றினையுடைய தூய அணிகலன்களையுடைய மகளிர் நால்வர் கூடிநின்று கற்பினின்றும் வழுவாது, நன்றாய பல பேறுகளையும் தந்து, நின்னை எய்திய கணவனை

விரும்பிப் பேணும் விருப்பத்தையுடையை ஆகுக என்று வாழ்த்தி நீரொடு கூட்டிப் பெய்த குளிர்ந்த இதழ்களை யுடைய பூக்கள் மிக்க கரிய கூந்தலில் நெற்களுடன் விளங்க, இங்ஙனம் நன்றாகிய வதுவைக் கலியாணம் முடிந்த பின்பு என்று அப்பகுதி அமைகிறது. நல்லாவூர்கிழாரின் அப்பாடல் வரிகள் சில பின்வருமாறு :

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
.... (86:1-17)

என்பன அப்பாடல்வரிகள் ஆவன.

அகநானூறு **136**ஆம் பாடலும் இக்காட்சியைக் காட்டு கிறது. விற்றூற்று மூதெயினனாரின் இப்பாடல் உணர்ப்புவயன் வாரா ஊடற்கண் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லும் மருதத்திணைப்பாடல் ஆகும். என் நன்னர் நெஞ்சமே! குற்றமுண்டாகாதபடி சமைக்கப்பட்ட இனிய நெய் மிக்க வெள்ளிய சோற்றினை, இன்னார்க்கு வழங்கலாம், இன்னார்க்கு வழங்குதல் கூடாது என்று வரையறை செய்தலில்லாத வள்ளன்னைப் பண்போடு எல்லோர்க்கும் வழங்குதலோடு

சான்றோர் கூற்றினை மேற்கொண்டு புள் நிமித்தத்தானும் பெரிதும் பொருந்தி இனியனவாக அமையா நிற்ப, அழகிய இடத்தையுடைய பெரிய வான முழுதும் தனது தெளிந்த ஒளியாலே விளங்கும்படித் திங்கள் மண்டிலம் உரோகணியைக் கூடிய குற்றந் தீர்ந்த கூட்டமுடைய நன்னாளிலே, திருமண இல்லத்தை அணி செய்து, அதன்கண் முற்பட இறை வழிபாடு செய்து முழங்குகின்ற திருமண முழவும் பரிய திருமண முரசும் முழங்காநிற்பவும் திருமண மங்கல முழுக்கினை இவட்குச் செய்த மங்கல மகளிர்கள் இவள் தன் திருமணக் கோலத்தைக் காண்டற்குப் பெரிதும் விருப்பமுற்று நோக்குபவள் செந்தாமரை மலர் போன்ற தங்கள் கண்களை இமைத்தலிலராய்க் கூர்ந்து நோக்கிப் பின் நாணத்தால் அங்கு நின்று கூட்டத்துட் புகுந்து மறையவும், இவள் சுற்றத்தார் விருப்பமுண்டாகக் கூடி, இவட்கு மெல்லிய மலரையுடைய வாகை மரத்தினது புல்லிய புறத்தையுடைய கவைத்த இலையை ஆண்டு முதிர்ந்த கன்றால் கறிக்கப்பட்ட பள்ள நிலத்திலே படர்ந்த அறுகம் புல்லினது முழங்குகின்ற ஒலியை யுடைய முகிலினது முதல் மழை காரணமாகத் தோற்றிய கழுவிய நீலமணி போன்ற நிறமுடைய இதழ்களையுடைய கிழங்கின்கண்ணுள்ள நறிய அரும்புகளோடு விரவித் தொடுத்த வெள்யி காப்புநூலை அணிந்து தூய திருமணப் புடவையாற் பொலிவெய்தப் பண்ணி மழைபெய்தாற்போன்ற ஒலியை யுடைய புதுமணல்மிக்க மணப் பந்தரிலே அணிகலன்களை அணிந்தமையாலுண்டான சிறப்பழகினோடு இவள் இயங்கு தலாலுண்டான வியர்வையும் சிவிறியாலாற்றி இவளை நமக்கு ஈத்த முதல்நாள் இரவிலே என்பது அப்பகுதியாகும்.

மைப்பறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணிப்
புள்ளுப்புணர்ந் தினிய வாகத் தெள்ளொளி
யங்க ணிருவிசும்பு விளங்கத் திங்கள்
சகட மண்டிய துகள்தீர் கூட்டத்துக்
கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்
படுமண முழவொடு பரூஉப்பணை யிமிழ
வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்றுப்

பூக்கணு மிமையார் நோக்குபு மறைய
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பம லறுகைத்
தழங்குகுரல் வானின் றலைப்பெயர் கீன்ற
மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணறு முகையொடு வெண்நூல் சூட்டித்
தூவுடைப் பொலிந்து மேவரத்து வன்றி
மழைபட் டன்ன மணன்மலி பந்த
ரிழையணி சிறப்பின் பெயர்வியர்ப் பாற்றித்
தமர்நமக் கீத்த தலைநா ளிரவின்
....
(136:1-18)

இவ்விரு பாடல்களிலும் முதுபெண்டிரும் மங்கல மகளிரு மாகிய பெண்டிர் வாழ்த்துதல், திங்களை உரோகணியும் திங்களும் கூடிய திருமணத்திற்கு உகந்த நன்னாளில் திருமணம் நடந்தது என்ற இரு செய்திகள் தவிரப் பெரும்பாலும் எளிய முறையில் அறிவுக்கு உட்பட்ட வகையில் திருமணம் நடப்பதைக் காணுகிறோம்.

3. பொருள் குறித்த எண்ணங்களும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்ற வாழ்வியல் கோட்பாடும்

தலைவன் பொருள்வயிற் பிரிதல் குறித்த சிந்தனை களாகிய பொருள்வயிற்பிரிதலின் தேவை குறித்த சிந்தனைகள் தமிழன் உழைத்துப் பிழைப்பவன், நேர்மையாக உழைத்துப் பிழைப்பவன், தன்னலமின்றிப் பிறருக்காக உழைப்பவன் என்ற பல கருத்துக்களை அறிவிக்கின்றன. அகநானூற்றில் பொருள்வயிற்பிரிவு என்ற சூழலில் தலைவன் கூற்றில் பெரும்பான்மையாகவும் தலைவி கூற்றில் சிலவிடங்களிலும் இத்தகைய செய்திகள் இடம்பெறுகின்றன. இச்செய்திகளில் தமிழர் கொண்டிருந்த கடமையுணர்வும் மேலிடுகின்றன. சான்றுகள் பின்வருமாறு :

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் தன்னெஞ்சிற்குச் சொல்லும் 151-ஆம் பாடல் காவன்முல்லைப் பூதரத்தனாரின் பாடல் ஆகும். வறுமையுற்றோர் தம்மை விரும்பித் தம்மோடிருந்து வாழ்வாரைக் காப்பாற்றித் தாம்

விரும்புகின்ற இனிமை பொருந்திய நண்பரோடே அன்பு மிகும்படிக் கூடி மகிழ்தல் மாட்டாதவராவர் என்று கருதி அந்நல்குரவு திரிதற்குக் காரணமான மிக்கப் பொருளையே உறுதிப் பொருள் என்று நினைகின்றதொரு நெஞ்சத்தைப் பெற்றிருத்தலாலே நம்பால் அருளுடையார்காண் என்று பேசும் இப்பாடல்

- *தம்மோடிருந்து வாழ்வாரைக் காப்பாற்றவும்*
- *தாம் விரும்பிய நண்பரோடே அன்புபாராட்டவும் மகிழவும்*

பொருள் தேவை என்ற கருத்தை முன்வைக்கிறது

அறன்கடைப் படாஅ வாழ்க்கையு மென்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமு மிரண்டும்
பொருளி னாகும் புனையிழை யென்றுநம்
இருளே ரைம்பா னீவி யோரே (155:1-4)

என்ற இப்பாடல் வரிகள் பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பாடல் வரிகளாகும். தலைவி கூற்றில் இப்பாடல் அமைகின்றது. இவ்வரிகள் பொருள் என்பது

- *அறத்திற்குரிய புறம்பே செல்லாத மெய்வாழ்க்கையைத் தரும்*
- *ஒருபொழுதேனும் ஏதிலார்மாட்டு ஒன்று இரந்து செல்லாமையாகிய மெய்ச்செல்வத்தைத் தரும்*

என்ற கருத்தை முன்வைக்கின்றன. முள்ளியூர்ப்பூதியாரின் 173-ஆம் பாடல் இதேவகையில் தலைவி கூற்றில் அமைகின்றது.

அறந்தலைப் பிரியா தொழுகலுஞ் சிறந்த
கேளிர் கேடுபல வூன்றலு நாளும்
வருந்தா வுள்ளமொ டிருந்தோர்க் கில்லெனச்
செய்வினை புரிந்த நெஞ்சினர் .... (173 : 1-4)

என்ற இப்பாடல் தலைவன் பொருள்வயிற் பிரிந்த காரணங் களைச் சுட்டுகின்றது.

- *இல்வாழ்வார்க்கோதிய அறச்செயலினின்றும் பிறழாமல் நடத்தலும்*
- *நெருங்கிய சுற்றத்தார்க் கெய்திய துன்பங்கள் பலவற்றையும் நீக்கி அவர்களை நல்வாழ்க்கையில் நிலை நிறுத்துதலும்*

நாள்தோறும் முயற்சியின்கண் வருந்தாது மடிந்த உள்ளத்தோடே இருந்தவர்க்கு இல்லை என்று முன்னர்க்கூறிப் பொருளீட்டுந் தொழிலை விரும்பிய நெஞ்சத்தோடே நம்பெருமான் பிரிந்தார் என்று தலைவி பேசும் இவ்வரிகள் தன்னலமில்லாப் பெருவாழ்வு வாழ்ந்ததைக் காட்டுகிறது.

- *சேய்நாட்டு அரும்பொருள் வலித்த நெஞ்சமொடு ஏகி நம்முயர்வு உள்ளினர் காதலர்*

என்ற வரி தலைவி கூற்றில் தலைவன் களவில் பொருள் தேடச் சென்றமையை விளக்குகிறது. 187-ஆம் இப்பாடல் மாமூலனாரின் பாடல் ஆகும்.

செறுவோர் செம்மல் வாட்டலுஞ் சேர்ந்தோர்க்கு
உறுமிடத் துய்க்கும் உதவி யாண்மையும்
இல்லிருந் தமைவோர்க் கில்லென் றெண்ணி
நல்லிசை வலித்த நாணுடை மனத்தர் (231:1-4)

என்ற மதுரை ஈழத்துப் பூதன்றேவனாரின் இப்பாடல் வரிகளில் தோழி கூற்றில்,

- *பகைவருடைய தலைமைத் தன்மையை அழித்தலும் நண்பருக்கு இடுக்கண் வந்துற்றபொழுது உதவி செய்தலுமாகிய ஆண்மைத் தன்மைகள்*

தம் கடமையைச் செய்யாது சோம்பி இல்லத்தின்கண் வாளாவிருந்து அமைதி கொள்ளுவோர்க்கு இல்லையாகும் என்று எண்ணித் தலைவன் பிரிந்ததாகச் சுட்டுகிறது.

- *நம்காதலர் மன்னுயிர்க்கு நன்மை செய்தலையே விரும்புகின்ற மெய்க்காட்சி உடையர், ஆதலால் உயிரினும் சிறப்புடைய ஒள்ளிய பொருளை ஈட்டிக்கொணர்தற் பொருட்டு பிரிந்து சென்றனர்.*

என்று தலைவி எண்ணுவாள் என்று தலைவன் எண்ணிப் பார்ப்பதாக அமையும் பாடல் (245:1-3) மதுரை மருதனிள நாகனாரின் பாடல் ஆகும். இருங்கோன் ஒல்லையான் செங்கண்ணனாரின் 279ஆம் பாடல் பொருள்வயிற்பிரிந்து போகாநின்ற தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லும் பாடல் ஆகும்.

- *பொன்போன்று விளங்குகின்ற தேமலோடு நெருங்கிப் பருத்த மெல்லிய முலைப்பரப்பினைக் கடந்து செல்லும் ஆற்றலில்லா ஆடவர்தாம் தம்மொடு நட்புச்செய்து ஒழுகுவோர் இல்லாமையையும் தம்முடைய சுற்றத்தார்கள் நல்குரவால் துன்பம் உறுதலையும் தம்மோடு உறவு கொள்ளாது பகைத்து வாழுபவருடைய செருக்கினையும் கண்டுவைத்தும் அவற்றால் அவலம் கொள்ளாது அவரோடு ஒரே ஊரின்கண் வாழ்தலைப் பொறுத்துக் கொள்ள மாட்டுவர்*

என்று இரவிலும் பகலிலும் இயைந்து இயைந்து நம்முடைய உள்ளத்திலே மூட்டப்பெற்று நம் அறிவினைச் சுட்டெரிக் கின்ற கூர்த்த கவலையாகிய நெருப்பினை நமது இடையறா முயற்சியாகிய மழையினாலே அவித்து நாள்தோறும் வன்காட்டிலே துன்பமுற்று யாம் இற்றை நாள் இப்பாலை நிலத்திலே இருந்து வருந்துவேம் ஆக என்று தலைவன் பேசுகிறான். இப்பாடல் தலைவனின் ஆள்வினை முயற்சியை எடுத்துக்காட்டுகிறது.

நட்டோ ரின்மையுங் கேளிர் துன்பமும்
ஒட்டா துறையுநர் பெருக்கமுங் காணூஉ
ஒருபதி வாழ்த லாற்றுப தில்ல
பொன்னவிர் சுணங்கொடு செறிய வீங்கிய
மென்முலை முற்றங் கடவா தோரென
நள்ளென் கங்குலும் பகலு மியைந்தியைந்
துள்ளம் பொத்திய உரஞ்சுடு கூரெரி
ஆள்வினை மாரியின் அவியா நாளும்
கடறுழந் திவண மாக .... (279:1-9)

என்பது அப்பாடல். இச்சான்றுகளின் வாயிலாகப் பண்டைத் தமிழர்கள்

- *தம் குடும்பத்தைக் காப்பாற்ற*
- *தம் நண்பர்களோடு நட்பு பாராட்டி மகிழவும் இடுக்கண் வந்தபோது உதவவும்*
- *அறத்திற்குப் புறம்பான வாழ்க்கை வாழாமல் மெய் வாழ்க்கை வாழ*
- *பிறரிடம் இரந்து வாழும் வாழ்க்கை வாழாதிருக்க*
- *இல்வாழ்வோர்க்கோதிய அறச்செயல்களினின்று பிறழா திருக்க*
- *நெருங்கிய சுற்றத்தாரைத் துன்பத்திலிருந்து காப்பாற்ற*
- *பகைவர் செருக்கினை அழிக்க*
- *மன்னுயிர்க்கு நன்மை செய்ய*

ஆகிய காரணங்களால் பொருள்வயிற் பிரிதலைத் தலைவன் மேற்கொண்டான் என்பது பகுத்தறிவுக்குட்பட்ட காரணங்களே யாவன.

4. இயற்கையுடன் இயைந்த வாழ்வு

தமிழர்தம் இயற்கையுடன் இயைந்த வாழ்க்கையினைப் புலவர்கள் காட்டும் அழகான கற்பனையற்ற இயற்கை வருணனைகள்வழி அறியலாம். எள்ளளவும் கற்பனையற்ற வருணனைகள் சங்க இலக்கியப் பாக்கள் முழுவதும் பரவிக் கிடத்தல் புலவர்கள் இயற்கையின்மீது கொண்டிருந்த ஆர்வத்தையும் அக்கால மக்களின் பொதுவான இயற்கை யார்வத்தையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. இவ்வகையில் அகநானூறு *128, 142, 158, 170, 171, 172, 183, 187, 192, 194, 214* ஆகிய பாடல்களைச் சுட்டலாம். சங்க கால மக்கள் வாழ்ந்த வாழ்க்கையின் அடிப்படையிலேயே திணைசார்ந்த வாழ்வியல் முதல், கரு, உரிப்பொருள் சார்ந்த இலக்கிய மரபுகளாகத் தொல்காப்பியத்தில் சுட்டப்படுவதையும் காண்கிறோம். இயற்கை சார்ந்த வாழ்வியல் பகுத்தறிவுக்குட் பட்ட நியாயமான வாழ்வு என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

5. நடுகல் வழிபாடு

தமிழர்கள் பெருந்தெய்வ வழிபாட்டினை அதிகமாகக் கைக்கொள்ளவில்லை என்பதைச் சங்கப் பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன. தம் முன்னோர் வழிபாடாகிய நடுகல் வழிபாட்டினை அவர்கள் கொண்டிருந்தமை தாம் வாழ்ந்த காலத்தில் தாம் பார்த்த சிறந்த மக்களின் செயல்பாட்டிற்கு மதிப்புக்கொடுத்து அவர்கள் செயல்பட்ட அறிவினை நமக்குக் காட்டுகிறது. அக்காலத்தில் ஆடவருக்கு இலக்கணமாக அமைந்த வீரத்தின் அடிப்படையில் இந்நடுகல் வழிபாடு அமைகிறது. இத்தகைய பாடல்களுக்குச் சான்றுகளாக 179, 211, 248, 253, 269 ஆகிய பாடல்களைச் சுட்டலாம்.

இவ்வாறு பண்டைத்தமிழர் கொண்டிருந்த காதல் வாழ்வும் ஆடம்பரமற்ற திருமணமும் பொருள்தேடற்கான மனித நேயத்துடனான காரணங்களும் இயற்கையோடு இயைந்த அர்த்தமுடனான வாழ்வும் நியாயமான வழிபாடாகிய நடுகல் வழிபாடும் பண்டைத்தமிழர் கொண்டிருந்த பகுத்தறிவுச் சிந்தனைகளை நமக்குக் காட்டுகின்றன. இவற்றிலிருந்து மாறுபட்ட சிந்தனைகள் சங்க இலக்கியத்தில் காணப்படு மாயின் அவை காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களாகும் எனலாம். “என்னிடத்திலே சுயமரியாதை உணர்வு இருக்கிறது என்றால் என்னைவிடத் தாழ்ந்தவன் எவனும் இல்லை, என்னை விட உயர்ந்தவனாக யாரையும் நான் ஏற்கத் தேவை இல்லை. என்னிடத்திலே பகுத்தறிவு இருக்குமானால் என்னைச் சேர்ந்தவர்களை நான் மூடநம்பிக்கையிலே ஆழ்த்தாமல் இருக்க முடியும். என்னிடத்திலே பகுத்தறிவு அடிப்படையில் சிந்தனை வளருமானால் சமுதாயத்தினுடைய ஒட்டுமொத்த நலனை கருதக்கூடிய பக்குவம் என்னிடத்திலே வளரும். இவை யெல்லாம் பெரியார் நமக்குப் போட்ட - நமக்குத் தந்த வாழ்வு”[2] என்ற கூற்றிற்கிணங்கச் சுயமரியாதையான வாழ்வும் பேதமற்ற வாழ்வும் திராவிட இனத்தவரின் வாழ்வாக இருந்தது என்பதற்குச் சங்க இலக்கியங்கள் தகுந்த எடுத்துக்காட்டுக்களாகின்றன.

துணை நூல்கள்

- தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்? ப. 31.
- பேராசிரியர் அன்பழகனார், முரசொலி, 29.2.2012, ப. 5

நற்றிணை

அறிவின் அடுத்த வளர்ச்சிப்படி பகுத்தறிவு. அறிவு என்பது எல்லோர்க்கும் பொதுவானது. அது இயற்கையாக உள்ளது. ஆனால் இயற்கையான இந்த அறிவை அடுத்த வளர்ச்சிப் படிநிலைக்கு உயர்த்துவது, அனுபவமும் ஆராய்ச்சியு மாகும். ஒவ்வொருவரிடமும் அனுபவம் இருக்கும். அதே சமயம் ஆராய்ச்சி மனப்பான்மை என்பது எல்லோரிடமும் இருக்கும் என்று சொல்ல முடியாது. இயல்பாக உள்ள அடிப்படை அறிவைத் தமது சொந்த அனுபவத்தைக் கொண்டு ஆராய்ச்சி மனப்பான்மையோடு யார் உயர்த்திக் கொள்ள முயற்சி செய்கிறார்களோ அவர்களைப் பகுத்தறிவு வாதிகள் என்று சொல்லலாம்.

மொழியைப் பற்றிய தனது அறிவினை மக்களோடு பகிர்ந்துகொள்ளும் தந்தை பெரியார் அவர்களின் கூற்றில் அறிவு - அனுபவம் - ஆராய்ச்சி இவற்றுக்கிடையே உள்ள உறவினைக் காணலாம் :

> *“எனக்குத் தோன்றிய, என் அனுபவத்துக்கு எட்டிய விஷயங்களைத்தான் நான் உங்களுக்குச் சொல்லப் போகிறேன். அவற்றில் பெரும்பாலும் உங்களுக்குக் குற்றமாகப் படலாம். ஆகவே நான் சொல்வதை நீங்களும் உங்கள் அறிவையும் அனுபவத்தையும் மற்றும் இது விஷயத்தில் அனுபவமும் ஆராய்ச்சியும் உள்ள பெரியோர்கள் கருத்தையும் கொண்டு சிந்தித்துப் பார்த்து ஏற்கக் கூடியதை ஏற்றும் ஏற்கக்கூடாததைத் தள்ளியும் தெளிவு பெற வேண்டுகிறேன்.”*

மேற்சுட்டிய கூற்றின் இறுதி வரி, பகுத்தறிவின் பயனைத் தெளிவாகக் காட்டி நிற்கிறது. மேலும் திருவள்ளுவரைப்

கி. இராசா

பேராசிரியர் - தலைவர், தமிழியல்துறை,

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 620 024

பகுத்தறிவுவாதி எனக் குறிப்பிடும் தந்தை பெரியார் அவர்கள் அதற்கான காரணத்தைப் பின்வருமாறு மொழிகிறார் :

''உன் அறிவைக் கொண்டு சிந்தித்து, ஆராய்ந்து, உண்மை கண்டு உலகம் ஒப்ப நடந்துகொள் என்கிறார்''

சொந்தப் புத்தியைக் கொண்டு சிந்திப்பவனையே தந்தை பெரியார் பகுத்தறிவாளன் என்கிறார் என்பதை இதன் வாயிலாக அறியலாம்.

இயல்பாக இருக்கக்கூடிய அறிவு சில சூழல்களில் பிறழ்ந்து விடுகிறது. இதனைப் 'பிறழ் மனநிலை' என்கிறார்கள். அதே அறிவு சில சூழல்களில் அறிவு விளக்கம் பெறுகிறது. இதனைப் 'பகுத்தறிவு' என்கிறார்கள். இயல்பறிவு, பிறழ்வறிவு, பகுத்தறிவு இந்த மூவகை அறிவு நிலை களுக்கும் சங்க இலக்கிய அகமாந்தர்கள் எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றனர். சங்க அகப்பாடல்கள் யாவும் இம்மாந்தர்களின் கூற்று நிலை களிலேயே அமைந்துள்ளன. தோழி, தலைவி, தலைவன் ஆகிய இம்மூவருள் அதிகமான பிறழ்வு நிலையில் இருப்பவள் தலைவி. ஏனெனில் அவளுக்கே வாழ்க்கை பற்றிய அச்சம் மிகுதியாக இருக்கிறது. தலைவிக்கு அடுத்த நிலையில் தலைவன் அதிகமான பிறழ்வு நிலையில் இருக்கிறான். ஏனெனில் அவனுக்குப் பொருள் தேடப் பிரிவதா அல்லது தலைவியின் துயரம் கண்டு அவளருகிலேயே இருப்பதா என்ற இரண்டாட்டம். இவ்வாறு பிறழ்வு நிலையில் இருக்கும் தலைவி - தலைவன் இருவரது உள்ள உணர்வுகளை மடை மாற்றம் செய்து தெளிவை நல்குபவள் தோழியே ஆவாள். எனவே அவளே அகமாந்தர்களுள் பகுத்தறிவு மிகுந்தவளாகக் காணப்படுகிறாள்.

தந்தை பெரியார் அவர்களது கருத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது தலைவி அனுபவத்திற்கும் ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டு இயல்பறிவிலேயே மூழ்கிக் கிடக்கிறாள். தலைவனோ அனுபவத்திற்கும் ஆராய்ச்சிக்கும் இடையில் பட்டு உழல்கிறான்; தோழியே அனுபவத்தையும் ஆராய்ச்சியையும் ஒருங்கு சேர்த்து, அதனால் விளைந்த பகுத்தறிவோடு உய்யும் வழி காட்டுகிறாள். இந்த

உண்மையை நிறுவுவதற்கு நற்றிணையின் முதல் ஐம்பது பாடல்களின் சில பகுதிகள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

நற்றிணையின் முதல் பாடல் தலைவி கூற்றாக அமைந் துள்ளது. இங்குத் தலைவி பிறழ்வறிவுக்கு ஆட்பட்டு விடாமலும் பகுத்தறிவின்பால் சென்றுவிடாமலும் இயல்பான மாந்தரின் மனநிலையில் பேசுகிறாள். இங்குத் தலைவனின் சில நல்லியல்புகளைத் தோழியிடம் அவள் எடுத்துரைக் கிறாள். "அவன் சொன்ன சொல் தவறாதவன்; நினைக்க நினைக்க இனிமை தருபவன்; என் தோள்களை விட்டு என்றும் பிரியாதவன் நீரில்லாமல் எப்படி இந்த உலகம் இல்லையோ, அதுபோல நான் இன்றி அவள் இல்லை என்றும் எனக்கு அருள் செய்பவன். அப்படிப்பட்டவன் என்னைப் பிரிந்து செல்லும் சிறுமையைச் செய்வானோ?" என்று நம்பிக்கை கொள்கிறாள். இது தலைவியின் மனச் சமநிலையைக் காட்டுகிறது. நொச்சி நியமங்கிழார் காட்டும் தலைவி (நற். 17) தலைவனை முதன்முறையாகச் சந்தித்த இடத்திற்குப் பன்முறை சென்று அதனைப் பார்த்துப் பார்த்து அழுகிறாள்.

"நாண்மழை தலையிய நன்னெடுங் குன்றத்து
மால்கடல் திரையின் இழிதரும் அருவி
அகலிருங் கானத்து அல்கணி நோக்கி
தாங்கவும் தகைவரை நில்லா நீர்சுழல்பு
ஏந்தெழின்மழைக்கண் கலுழ்தலின்..." (17:1-5)

மகளின் அழுகையைக் கண்டு "ஏன் அழுகின்றாய்?" என அன்னை கேட்க, பிறழ்வறிவு நிலையில் இருந்த தலைவி - அதனை மறைக்கவேண்டும் என்ற இயல்பறிவு பின்னிட - உயிரைக் காட்டிலும் சிறந்த நாணத்தை நன்றாகவே மறந்து "தலைவன் மார்பைப் பிரிந்தமையால் அழுதேன்" என்று உண்மையைத் தன்னையறியாமல் போட்டுடைக்கிறாள். பின்னால் சுயநினைவு வந்த நிலையில் "அதனைப் பாதி யிலேயே நிறுத்திவிட்டேன்" என்று தோழியிடம் சொல்கிறாள். இங்குத் தலைவியின் பிறழ்வறிவு நிலையையும் பின்னர்

இயல்பறிவு நிலையையும் காண்கிறோம். அக இலக்கியத் தலைவியருள் பெரும்பாலோர் இத்தகையோரே.

கணக்காயனார் காட்டும் தலைவி (நற் : 24) மற்ற அக இலக்கியத் தலைவியரிடமிருந்து பெரிதும் வேறுபட்டிருக் கிறாள். தலைவனின் பொருட் பிரிவுக்குத் தோழி உடன் பட்டால் அவளைக் கடிந்து கூறுவதே தோழியின் இயல்பு. அதற்கு மாறாக இவள் பொருட் பிரிவுக்கு உடன்பட்ட தோழியை உவந்து கூறுகிறாள். அவளை "நன்றெனப் புரிந்தோய், நன்றுசெய் தனையே" என்று பாராட்டுகிறாள். பொருள் ஈட்டுவதற்கு வேற்று நாட்டிற்கு ஆடவர் அகலும் போது அதனை மறுத்துக் கூறாமல் உடன்படுவதே சிறந்த பண்பாகும்" என்று தலைவி ஆராய்ச்சி அறிவு தோன்ற இலட்சியக் காதலியாகப் பேசுகிறாள். இப்படிச் சில பகுத்தறிவுத் தலைவியரும் உள்ளனர்.

தலைவனைப் பொறுத்தவரையில் ஏற்கனவே சொன்னவாறு இயல்பறிவுக்கும் பகுத்தறிவுக்கும் இடையிலான இரண்டாட்டம் அவனைப் பிறழ்வு நிலைக்குத் தள்ளிவிடு கிறது. இது பெரும்பாலும் தலைவன் தன் நெஞ்சுக்கு உரைக்கும் பாடல்களில் வெள்ளிடை மலையாய் வெளிப் பட்டுத் தோன்றிவிடுகிறது. குறிப்பாகச் சிறைக்குடி ஆந்தையார் பாடிய (நற். 16) பொருள் கடைக் கூட்டிய நெஞ்சினை நெருங்கித் தலைவன் செலவழுங்கிய பாடல். இதற்கு நல்ல சான்றாக அமைய வல்லது. அப்பாடல் வருமாறு :

"புணரிற் புணராது பொருளே பொருள்வயின்
பிரியில் புணராது புணர்வே ஆயிடைச்
செல்லினும் செல்லாயாயினும் நல் லதற்கு
உரியை வாழி என்நெஞ்சே; பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியில் கெடுவ யானே
விழுநீர் வியலகம் தூணி யாக
எழுமாண் அளக்கும் விழுநொதி பெறினும்
கனங்குழைக் கமர்த்த சேயரி மழைக்கண்
அமர்ந்தினிது நோக்கமொடு செகுத்தனென்
எனைய ஆகுக வாழிய பொருளே" (16:3-11)

தலைவன் சொல்கிறான் : "தலைவியைச் சேர்ந்திருந்தால், பொருள் நம்மோடு சேர்ந்திருக்காது; பொருள் தேடப் பிரிவோமாயின், இவள் உயிர் தரிக்க மாட்டாள். எனவே இந்த இரண்டு வழி களில் நல்ல வழியை எனக்குக் காட்டு என் நெஞ்சே! பொருளோ நீரில் இரையைத் தேடி அலைந்து திரிந்து மீன் செல்லும் வழியைப் போல விரைவில் மறைந்து விடும். நானோ இந்த உலகம் முழுவதையும் அளக்கும் மரக்காலைக் கொண்டு ஏழு மரக்கால் செல்வம் பெறுவதாயினும் அதைப் பெறும்பொருட்டு இவளைவிட்டுப் பிரியமாட்டேன். அந்தப் பொருள் எந்தப் பொருளாயினும் ஆகுக! அது சேர்ந்தவர் இடத்தில் மட்டும் வாழ்வதாகுக!" என்று உறுதி படச் சொல்கின்றான். முதலில் தன் நெஞ்சிடம் "இரண்டு வழியில் ஒன்றைக் காட்டு" என்று சொல்லியவன், கடைசியில் பொருள் தேடுவதற்காக "இவளைவிட்டுப் பிரியமாட்டேன்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுகின்றான். பகுத்தறிவு நிலையிலிருந்து இயல்புநிலைக்கு வந்தவன், கடைசியில் பிறழ்வு நிலையில் வீழ்கிறான். தலைவன் தன் நெஞ்சிற்குச் சொன்ன பாடல்களில் கூட விழுக்காடு இவ்வண்ணமே அமைந்துள்ளன.

இனித் தோழியின் அறிவு நிலையைக் காணலாம். கபிலர் காட்டும் தோழி (நற். 32) தலைவியின் மயங்கிய அறிவைத் தெளிவுறுத்தும் முயற்சியில் முன்னிற்கிறாள். தலைவனை எண்ணி எண்ணி மயங்கி மருகி வருந்தி நிற்கும் தலைவியை "உன்னுடைய நிலையில் நீ உறுதியாக நில்" என்று தோழி விளக்குகிறாள். "என்னிடம் மட்டுமே உன் நிலையைச் சொல்வதோடு மட்டும் அமையாமல், தலைவனிடமும் நீ வாய் திறந்து பேசவேண்டும். உன் நிலையைத் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். அனைத்தையும் உன்னுடைய அறிவினால் 'இது தக்கது இது தகாது' என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்வாயாக. அறிவுடைய சான்றோர்கள் ஒருவரோடு நட்புக்கொள்ள விரும்பினால் அவருடைய குணநலன்களை நன்கு ஆராய்ந்து அதன் பின்னர்தான் நட்புக் கொள்வார்கள். மாறாக நட்புக் கொண்டுவிட்டு அதன் பின்னர் அவர்களுடைய குணநலன்களை ஆராய்ந்து பார்க்க மாட்டார்கள். நீ அந்தச்

சான்றோர்களைப் போலத் தலைவனை ஆராய்ந்து நட்புக் கொள்ளவில்லை. நட்புக் கொண்டுவிட்டு "அவன் தீயன்; கள்வன் என்று வெறுப்பது அறிவுடைமை இல்லை" என்று தலைவனுக்காகப் பரிந்து பேசுகிறாள்; தலைவன் நிலையைத் தலைவிக்குப் புரிய வைக்கிறாள். இப்பாடற்பகுதி வருமாறு :

"நீயும் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவறிந் தளவல் வேண்டும் மறுதரற்கு
அரிய வாழி தோழி பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே" (32:5-9)

தோழியின் இத்தகு அறிவாண்மையைத்தான்

"சூழ்தலும் உசாத்துணை நிலைமையில் பொலிமே"
(தொல். 1072)

என்று தொல்காப்பியர் பாராட்டிக் கூறுகிறார். ஆராய்ச்சி அறிவும், தலைவிக்குத் துணையாக நிற்கும் ஆற்றலும் தோழி நிரம்பப் பெற்றவள் என்பதை அவர் உணர்த்துகிறார். இதன் விரிவைத்தான், "நாற்றமும் தோற்றமும்" எனத் தொடங்கும் தோழி கூற்று நிகழ்த்தும் 32 சூழல்களை விளக்கும் நூற்பாவில் (1090) தொல்காப்பியர் பட்டியலிடுகிறார்.

தலைவனோடு உரையாடுகின்ற பாடலாயினும், தலைவனோடு சொல்லாடும் பாடலாயினும் தோழியின் கூற்றுக் களில் பகுத்தறிவுப் பண்பு செல்வாக்குப் பெற்றுள்ளதை இதுபோன்ற அகப்பாடல் ஆய்வுகள் மேலும் உறுதி செய்யும். மேற்சுட்டிய ஆய்வின் வழி, தலைவி கூற்றில் பிறழ்வு நிலையின் செல்வாக்கும், தலைவன் கூற்றில் இயல்பு நிலைக்கும் பிறழ்வு நிலைக்கும் இடைப்பட்ட போராட்டமும் தோழி கூற்றில் தலைவன் தலைவி இருவர் நினைப்பையும் நிலையையும் ஒருங்கிணைக்கின்ற பகுத்தறிவுப் பண்பும் புலப்பட்டுச் சங்க அக இலக்கியத்தில் அவரவர் நிலைப் பாட்டை உறுதிசெய்கின்றன என்பதை அறியலாம்.

குறுந்தொகை

உரைக்களம்

செவ்விலக்கியமாகிய குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள பகுத்தறிவு சார்ந்த சிந்தனை களைத் தொகுத்துரைப்பது இவ்வுரையின் நோக்கமாகும். குறுந்தொகையும் அதன் உரைகளும் இம்முயற்சிக்கு முதன்மைச் சான்றுகளாகும். தொல்காப்பியம், சங்கப் பிறதொகைகள், பகுத்தறிவு சார்ந்த நூல்கள் ஆகியன துணைச் சான்றுகளாகும்.

பகுத்தறிவு - விளக்கம்

செவ்வியல் தமிழ்நூல்களில் பகுத்தறிவு என்ற சொல் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவில்லை. எனினும் பகுத்து (கலித். 103, அகநா. 97, புறநா. 46, குறள். 322), பகுத்தன்ன (நற். 128) ஆகிய சொற்றொடர்களும், அறிவு என்ற சொல்லும் (163 இடங்கள்)[1] இடம்பெற்றுள்ளன.

உயிர்களை ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு, ஆறறிவு எனப் பாகுபடுத்தி உரைப்பார் தொல்காப்பியர். நூற்பா வருமாறு :

"ஒன்றறி வதுவே உற்ற றிவதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப் படுத்தினரே" (மரபி. 27)

அறிவினை அடிப்படையாகக் கொண்டு உயிரினங்களைப் பாகுபடுத்தி உரைக்கும் தொல்காப்பியரின் பேரறிவு எண்ணிப் பார்த்தற்குரியது.

ஆ. மணி
துணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, தாகூர் கலைக்கல்லூரி,
புதுச்சேரி - 8.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜகதீஷ் சந்திரபோஸ் என்ற அமெரிக்கவாழ் அறிவியல் அறிஞர் செடி, கொடி களுக்கும் உணர்வுண்டு என்பதைக் கண்டறிந்தவர். ஆனால் பன்னூறாண்டு காலப் பழமையுடைய தொல்காப்பியர் புல்லும் மரனும் ஓரறிவுடையன (மரபி. 28) என்று கூறியிருப்பது நோக்கத்தக்கது. தமிழர்தம் அறிவுத்திறனுக்கு இது பதச்சோறனைய சான்று.

ஆறாம் அறிவாகத் தொல்காப்பியர் மனவறிவினைக் கூறியுள்ளார் (மரபி. 27). மேலும்,

''மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'' (மரபி. 33)

என அவர் மொழிந்துள்ளார். இந்நூற்பாவுக்கு உரையெழுதி யுள்ள பேராசிரியரின் கருத்து வருமாறு :

''மக்களெனப் படுவோர் ஐம்பொறியுணர்வே யன்றி மனம் என்பதோர் அறிவும் உடையர். அக்கிளைப் பிறப்பு வேறும் உள.

முப்பத்திரண்டு அவயவத்தான் அளவிற்பட்டு அறிவொடு புணர்ந்த ஆடூஉ, மகடூஉ, மக்களெனப்படும். .... பிறப்பென்றதனாற் குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன வெனப்படும் மனஉணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராயடங்கு மென்பது'' (கே. பகவதி 1981:34-35)

மனவறிவு என்பதனையே பகுத்தறிவு என்பர். ''மனிதனுக்கே யுரியது பகுத்தறிவுக் குணம். இதனைச் சிந்தித்துச் செயல் படும் குணம் எனக் கூறலாம்'' (கே. பகவதி 1981 : XXX)

என வரும் கருத்து பகுத்தறிவினைச் சிந்திக்கும் திறன் என மொழியக் காணலாம்.

பகுத்தறிவு என்பதற்கு மனநியாயம் என்றும், பகுத்தறிதல் என்பதற்குப் பிரித்தறிதல், மனநியாயமறிதல் என்றும் விளக்கம் தருகின்றது நா. கதிரைவேற் பிள்ளையின் தமிழ் - தமிழ் அகராதி (2011:939).

தமிழ்ச் சொற்கோவை (Tamil Lexicon) பகுத்தறிவு - Discrimination, reason, rationality, as a distinguishing, characteristic of human beings; விவேகம் என்றும், பகுத்தறிதல் என்பதற்கு To distinguish, discriminate, reason, analitically; விஷயங்களை வகைப்படுத்தி உணர்தல் (1982:2385) என்றும் விளக்கம் தந்துள்ளது. இதுகாறும் கண்ட கருத்துக்களின் வழியாகப் பகுத்தறிவு என்பதற்குப் பகுத்தறியும் திறன், சிந்திக்கும் திறன் எனப் பொருள் கொள்ளலாம். எனினும் இன்றைய நிலையில் பகுத்தறிவு என்பது கடவுள் மறுப்பு என்பதாக ஆளுமை பெற்றுள்ளது. இது பெரியாரியக்கத்தின் விளை வாகும்." பகுத்தறிவின் முதல் எதிரி கடவுள் என்பார் பெரியார் (கி. வீரமணி 1994:279). இதன் விளைவாகப் பெரியார் பல்வேறு சமூகச் சீர்திருத்தங்களைப் பேசியிருந்தாலும், பெரியார் என்றவுடன் பலரின் மனத்தில் எழுவது அவருடைய கடவுள் மறுப்புக் கொள்கையேயாகும். இது மனப்பதிவு முறையில் அமைவதாகும். கடவுள் மறுப்பும் பகுத்தறிவின் பாற்படும் என்றாலும் அதுமட்டுமே பகுத்தறிவாகாது. பகுத்தறிவின் பல்வேறு நிலைகளில் ஒன்று கடவுள் இல்லையென்பதைத் தம் அறிவாலும் ஆய்வுகளாலும் கண்டறிதலாகும்.

சங்கப் புலவர்களில் சிலர் கடவுள் நம்பிக்கை உடையவர் களாகத் தோன்றிய போதிலும் அவர்கள் கடவுளைப் பற்றிக் கவலைப்படாதவர்கள். மனிதனையே நம்பக்கூடியவர்கள். செயற்கரிய செய்து மறைந்தவர்களே இறையெனப்பட்டார் என்ற கருத்துடையவர்கள் என்பதைச் சங்கப் பாடல்கள் பலவற்றிலும், திருக்குறளிலும் இடம்பெற்றுள்ள கருத்துக்களால் அறியலாம். வெறியாட்டுப் பாடல்கள் ஒரோவழிக் கடவுள் மறுப்பினைக் கூறுவன என்றே கொள்ளத் தோன்றுகின்றது. கட்டு, கழங்கு பார்த்தல் எவ்வகையிலும் தலைவியின் நோயைத் தீர்க்காது என்ற கருத்துடைய பாடல்களும் இவ்வகைத் தன்மையின. சங்கப்பாடல்களில் கடவுள் மறுப்புக் கருத்துக்களும் இலைமறை காயாகக் கூறப்பட்டுள்ளதை இவற்றின்வழி உணரமுடிகின்றது. எனினும் முற்றுமாக இவற்றைப் பாடுவதையே அக்காலப் புலவர்கள் தம் நோக்கமாகக் கொள்ளவில்லை. இவ்வகைக் கருத்துக்களோடு மாந்தர் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள உதவும்

கருத்துக்களையும் பரக்கக் கூறிச் சென்றுள்ளனர். கருத்துக் களைப் பகுத்தறிந்து நல்லன போற்றலே பகுத்தறிவாதலால் மாந்த வாழ்வின் மேம்பாட்டிற்கு உதவும் கருத்துக்களையும் பகுத்தறிவு சார்ந்தன என வகைப்படுத்தலே முறையாகும்.

மனித வாழ்வில் நிகழும் இன்ப துன்பங்களையும், நன்மை, தீமைகளையும் தம் மன அறிவால் பாகுபடுத்தி உண்மையையும் நன்மையையும் அறிந்து, அவற்றைத் தம் வாழ்வில் பயன்படுத்திக் கொள்ளும் நிலை பகுத்தறிவின் பாற்படும். இவ்வகையில் குறுந்தொகைப் புலவர்கள் உணர்த்தி யுள்ள கருத்துக்களை வாழ்வியல் மேம்பாட்டுச் சிந்தனைகள், அறிவியல்சார் சிந்தனைகள் ஆகிய நிலைகளில் பகுத்துக் காணலாம்.

வாழ்வியல் மேம்பாட்டுச் சிந்தனைகள்

மாந்தர் மனவியல்பு இயல்பு நிலையில் தீமைகளை நோக்கியே அமைவதை உலகியலில் காணமுடியும். மாந்தர்தம் அகமனம் பண்பிலி மனம் எனப்படுவது உளவியலார் கருத்தாதல் அறியலாம். விழிப்புநிலையுடைய மேல்மனமே மனிதனின் பண்புச் செம்மைக்குக் காரணமாக அமையும். அறிவு சார்ந்து, பண்பு சார்ந்து எழுந்துள்ள குறுந்தொகைப் புலவர்களின் கருத்துக்கள் அவர்தம் பகுத்தறியும் திறத்தைக் காட்டுவனவாக அமைவதோடு, தனிமனித மேம்பாட்டிற்கும் சமூக வளமைக்கும் உதவுகின்றன. அவற்றுள் சில வருமாறு :

சாதி, மத, பொருள்வளமைத் தடைகளை உடைக்கும் படை

முன்பின் அறிமுகமும் உறவும் இல்லாதவர்களுக்கிடை யிலும் காதல் தோன்றும். சாதி, மதம், பொருள் வளமை போன்ற தடைகள் காதலுக்கு இல்லை. அன்புடை நெஞ்சமே காதலுக்கு அடிப்படை என்ற கருத்து செம்புலப் பெயனீராரின் பாடற் கருத்தாகும் (குறுந். 40). மாந்தர் வாழ்க்கை மேம்பாட்டிற்குப் பெயரறியாப் புலவரின் பங்களிப்பு இது.

சடங்குகள் பயனற்றவை

வெறியாட்டு போன்ற சடங்குகள் பயனற்றவை என்ற கருத்து குறுந்தொகைப் புலவர் களாலும் முன்மொழியப் பட்டுள்ளது. தலைவியின் மெல்லிய தோள்களை நெகிழச்

செய்தவன் முருகவேள் என்கின்றான் வேலன். தாயும் அதனை நம்பினால் என்ன சொல்வது. நம் இல்லோர் செய்யும் இப் பெருநகையைக் காணும் பொருட்டு மலைநாடனை வருக என அழைக்கின்றாள் தீன்மதிநாகனாரின் பாடற்றோழி (குறுந். 111). பாடல் வருமாறு :

''மென்தோள் நெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவேள் என்னும் அன்னையும்
அதுவென உணரும் ஆயின் ஆயிடைக்
கூழை யிரும்பிடிக் கைகரந் தன்ன
கேழிருந் துறுகல் கெழுமலை நாடன்
வல்லே வருக தோழிநம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே'' (குறுந். 111)

தலைவியின் நோய்க்குக் காரணம் தலைவன் என உணராதவன் வேலன். அதனை அன்னை அறிதல் வேண்டும் என மொழிகின்றாள் மதுரை ஈழத்துப் பூதன் தேவனாரின் தலைவி (குறுந். 360). பாடலடிகள் வருமாறு :

''வெறியென உணர்ந்த வேலன் நோய் மருந்து
அறியான் ஆகுதல் அன்னை காணிய'' (குறுந். 360)

வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தனாரின் பாடற்றோழியின் வினா, சடங்குகள் பற்றிய அக்காலக் கருத்தியலைத் தெளிவு படுத்துகின்றது.

வேலனே! சினத்தின் பாற்படாதே. தலைவியை அணங்கிய தலைவனின் மாலையணிந்த மார்பகம் நீ கொன்ற ஆட்டுக் குட்டியை உண்ணுமோ? என்ற தோழியின் வினா, பிற்காலச் சிந்தனைகளுக்கு முன்னோடியாகும். பாடல் வருமாறு :

''முருகயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவல் ஓம்புமதி வினவுவது டையேன்
பல்வே றுருவின் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றுஇவள் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி யாயின் அணங்கிய
விண்தோய் மாமலைச் சிலம்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே'' (குறுந். 362)

பாராட்டும் பண்பினை வளர்த்தல்

பாராட்டு முயற்சியுடையாரை ஊக்குவிக்கும் உற்சாக மருந்தாகும். பாராட்டுப் பெற்றால் சோர்ந்த ஒருவனும் எழுந்து நிற்பான் என்பது வாழ்வியல் நடைமுறை. பாராட்டில்லாத போது ஒருவரின் திறனும் அறிவும் முற்றுமாக வெளிப்பட வாய்ப்பில்லாது போகும். எனவே, 'வளரும் பயிருக்குப் பாராட்டு உரம்' என்ற பழமொழி எழுந்தது. பாராட்டும் பண்பு மேம்பாடு மனிதனின் உள்ளத்துயர்வைக் காட்டுவதோடு, அவனால் பிறர் வாழ்வும் மேம்பட வாய்ப்பாகும். எனவே பாராட்டும் பண்பினை வளர்த்துக் கொள்ளுக என்பதுபோலக் குறுந்தொகைப் புலவர்கள் பாடியுள்ளனர். மனிதன் குறைபாடுகளுடையவனே. முற்றுமாக முழுமையும் செம்மையும் சிறப்பும் வாய்ந்த மனிதன் என ஒருவன் இல்லை. மனிதனின் செயல்களில் குறைகள் இருக்கலாம். தவறுகள் நடக்கலாம். எனினும் அவர்களிடத்தில் உள்ள நிறையினைக் கண்டு பாராட்டுக. பாராட்டு அவர்களின் குறைகளைப் போக்குகின்ற அருமருந்து என்னுமாப்போல மொழிகின்றார் கூடலூர் கிழார் என்ற புலவர்.

மணமான புதிதில் சமைத்துப் பயிற்சியில்லாத இளம் மனைவி குவளைபோன்ற தன் கண்களெல்லாம் புகை படியத் துன்புற்றுப் பெரிதும் முயன்று அன்புடன் சமைத்த மோர்க் குழம்பினை இனிதென்று கூறிப் பாராட்டும் மொழியால் அவன் மனைவி உள்ளமெல்லாம் மகிழ்ந்து முகம் மலர்ந்து போகின்றாள் என்பது கூடலூர் கிழாரின் பாடற்செய்தி (குறுந். 167). பாடல் வருமாறு :

''முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதுஎனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே''

(குறுந். 167)

பாராட்டும் பண்பு இன்று நம்மிடையே குறைந்து வருகின்றது. இப்பண்புக் குறைபாட்டால் மனிதன் முயற்சிக் குறைபாடுடைய வனாகப் போய்விடுவான் என்ற உண்மையைத் தெளிந்து, அப்பண்பு மேம்படவேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் தம் பாடற்செய்தியை அமைத்த இப்புலவரின் அறிவுத்திறம் பாராட்டுதலுக்குரியது.

குறைகளைப் பொறுக்கும் திறன்

மனிதன் தன்னளவில் இன்பங்காணும் குணமுடையவன். தன்னுடைய இன்பமே பெரிதெனக் கருதும் மனப்பாங்கும் உடையவன். இதனால் அவனுடைய செயல்களில் பண்புக் குறைபாடும் பொறுமைக் குறைபாடும் இயல்பாகவே வந்து விடும். தன்னுடைய இன்பத்திற்குத் தடை நேரும்போது அவனுக்குள் சினம் பொங்கியெழத் தொடங்கிக் குடும்பத்தில், சமூகத்தில் பல சிக்கல்களை ஏற்படுத்தி விடுவதை உலகியலில் காணமுடியும். இதனால் வாழ்க்கையிலும் சமூக அமைப்பிலும் அமைதிக் குறைவு ஏற்பட்டு விடுமென்பதைப் பழந்தமிழ்ப் புலவர்கள் அறிந்துள்ளனர். இச்சிக்கல்களைத் தீர்க்கும் வழி முறையாகக் குறைகளைப் பொறுத்துக் கொள்ளும் பண்பு மேம்படவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தியுள்ளனர்.

தலைவனின் பரத்தமையொழுக்கம் தன்னின்பத்தைப் பெரிதெனக் கருதும் மனப்பழக்கத்தால் எழுந்தது. தன்னுடைய பாலுணர்வைக் கட்டுக்குள் வைக்க இயலாத இயல்புடைய வர்கள், தன் மனைவியை விட்டுப் புறப்பெண்களை நாடிச் சென்றனர். இச்செயல் கண்டிக்கத்தக்கது. வெறுக்கத்தக்கது; ஒதுக்கத்தக்கது என்பதைப் புலவர்களும் உணர்ந்து பாடி யுள்ளனர். வாயில் நேர்தல், வாயில் மறுத்தல் கூற்றுப் பாடல்கள் பரத்தமையால் தன் இல்லத்துக்குள்ளேயே புகும் வாய்ப்பினை இழந்து, அனுமதி கேட்டு நிற்கும் தலைவனை இனங்காட்டுவனவாகும். தன்னின்பத்தைப் பெரிதெனக் கருதிய இயல்பால் தன் மனைக்குள்ளேயே செல்லும் தகுதியை அத்தலைவன் இழந்து நிற்பதாகப் பாடியிருப்பது சங்கப் புலவர்தம் அறச்சார்புச் சிந்தனை களுக்குச் சான்றாகும். மேற்கண்டவாறு இன்பத்தைப் பெரிதெனக் கருதிச் சென்ற

தலைவனின் பண்புக் குறைபாட்டைப் பொறுத்துக் கொள்வதே சமூக நன்மைக்கு அடிப்படையானது என்பதையும் புலவர்கள் புலப்படுத்தியுள்ளனர்.

தவறுகளைப் பொறுத்துக் கொள்வது மேலும் தவறு களுக்கு வழிவகுக்கும் என்றாலும், ஒரோவழி அத்தவறுகளை மன்னித்து மறப்பதும் தவறு செய்தோரை நல்வழியில் கொண்டு வந்து சேர்க்கவும் கூடும். பிறர் குறைகளைப் பொறுக்கும் மனமில்லாத வாழ்க்கை அமைதியாக இருக்கும் என்று சொல்ல முடியாது. இவ்வுண்மைகளைப் பகுத்தறிந்த நம் முன்னோர் குறைகளைப் பொறுக்கும் மனப்பழக்கத்தைப் போற்றிப் பாடியுள்ளனர்.

ஒரு பெண்ணுக்கு அவளுடைய கணவன் இழைக்கின்ற கொடுமைகளில் மிகக் கொடியது பரத்தமை மேற்கொள்ளல் ஆகும். உலகம் பரத்தமையை ஏற்றுக்கொண்டதற்குச் சமூகக் காரணங்களும் உளவியல் காரணங்களும் உடலியல் காரணங் களும் பல உண்டு. எனினும் புலவர்கள் இவ்வகைத் தன்மை யினைக் கடிந்தொதுக்கவே பாடியுள்ளனர். உள்ளுறைப் பாடல்கள் இத்தன்மையின (விரிவுக்கு : ஆ. மணி 2005:44-48).

பரத்தமை கடியப்பட வேண்டியதே என்ற கருத்தினைப் போலவே, அக்குறையைப் பொறுத்து மனைவாழ்க்கையைக் காத்தலும் வேண்டும் என்ற கருத்தினையும் புலவர்கள் மொழிந் துள்ளனர். "சிக்கல்களைத் தீர்க்கவும், மனித உறவுநிலை களுக்குள் முரண்பாடுகளை நீக்கவும் பிறர் குற்றங்களைப் புறக்கணிப்பது சிறந்த உத்தியாகும் என்று உணர்வுசால் நுண்ணறிவுச் சிந்தனையாளர்கள் குறிப்பிடுவது எண்ணிப் பார்க்கத்தக்கது" என்ற ம. திருமலையின் (2011:14) கருத்து மேற்கருத்துக்கு உரம் சேர்ப்பதாகும். பரத்தமை மேற்கொண்ட தலைவனின் செயலைப் பிறருக்கு வெளிப்படுத்தாமல் தனக்குள்ளே மறைத்து வாழும் தலைவியின் செயலைக் கூறுகின்றார் கயமனார் என்ற குறுந்தொகைப் புலவர். பாடலடிகள் வருமாறு :

"தண்ணந் துறைவன் கொடுமை
நம்முள் நாணிக் கரப்பா டும்மே" (குறுந். 9)

தலைவனின் செயலைக் கொடுமை எனக் குறித்த புலவர் தனக்குள்ளே நாணப்பட்டுத் தலைவனின் செயலை மறைத்தொழுகும் தலைவியையாய் ஆகியவள் என்கின்றார். ஓரம்போகியாரும் இதே கருத்தினை (குறுந். 10) மொழிந் துள்ளார். ஆலங்குடி வங்கனாரோ இவ்வாறு குறைகளைப் பொறுத்தல் வெறுக்கத்தக்கது (குறுந். 45) எனப் பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்துள்ளார். பாடல் வருமாறு :

"காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்லல் ஊரன் எல்லினன் பெரிதென
மறுவரும் சிறுவன் தாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே" (குறுந். 45)

கயமனாரும் ஓரம்போகியாரும் மரபுப் பார்வையில் குறை களைப் பொறுக்க என மொழிந்தாலும், ஆலங்குடி வங்கனார் பெண்ணுரிமைக் குரல் எழுப்பியுள்ளமை குறிக்கத்தக்கது.

அஃறிணைகளும் அறிவூட்டுவன

ஆறாம் அறிவாகிய மன அறிவு பெற்ற மனிதன் ஐந்தறிவும் அதற்குக் கீழும் உள்ள விலங்குகளைக் கண்டும் அறிவு பெறமுடியும். அவற்றின் மேம்பட்ட பண்புகளைக் கண்ட பிறகாவது நாமும் அப்பண்புகளைக் கைக்கொள்ள வேண்டும் எனக் குறுந்தொகைப் புலவர்கள் பாடியுள்ளனர்.

நான்கறிவுடையது எனத் தொல்காப்பியரால் கூறப் பட்டுள்ள (மரபி. 31) தும்பியிடம் காமம் செப்பாது கண்டது மொழிக என வேண்டுகின்றார் இறையனார் (குறுந். 2). உண்மை கூறும் பண்பு வேண்டும் என்பது புலவர் கருத்து.

தலைவன் தகுதியற்றவன் போலத் 'தீயவற்றைக் கூறினும் கடுவனாகிய குரங்கு தன் கண் கண்ட உண்மை களைப் பொய்யெனக் கூறாது' என ஒரு தலைவி மொழி வதாகக் கூறுகின்றார் கொல்லனழிசியார் (குறுந். 26). அஃறிணை

களும் பொய் கூறாப் பண்பினவாக இருக்கும்போது மனிதர் கூறல் முறையன்று என்பது இப்புலவர் கருத்து.

பெண் யானையின் பசியைத் தீர்க்க ஆண் யானை யாமரத்தின் கிளையினை ஒடித்து ஊட்டும் அன்பு சான்றது பாலைநிலவழி (குறுந். 37) என்கின்றார் பாலை பாடிய பெருங்கடுங்கோ. இவற்றைக் கண்ட பின்பாவது மனிதர் பொய் கூறாமையும், தன் துணையிடம் அன்பு காட்டலு மாகிய பண்புகளை மேம்படுத்திக் கொள்ளவேண்டும் என இப்புலவர்கள் உணர்த்தியுள்ளனர். இப்பண்புகள் மாந்த வாழ்வின் மேம்பாட்டிற்கு உதவுவன என்பது வெளிப்படை.

அறிவியல் சார் சிந்தனைகள்

சங்கப்பாடல்களைப் பயிலுவதற்கு அறிவியல், கலை யியல் ஆகிய இரண்டின் அறிவுப் பின்புலமும் தேவை. பழங்காலத்தில் பாடலே மக்கள் வழக்கில் பெரும்பான்மை யும் வழங்கி வந்த வடிவமாகும். எனவே, அக்காலப் புலவர்கள் தம் கருத்தியல்களைப் பாவடிவிலே படைத்து வந்தனர். அக்காலப் புலவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வுடையவர்களாகவும், கூர்ந்த அறிவுத் திறனுடையவர் களாகவும் திகழ்ந்தமையால் தாம் கண்டறிந்த வாழ்வியல் மெய்ம்மைகளையும் அறிவியல் உண்மைகளையும் தம் பாடல்களில் குறித்துப் போந்தனர். பிற்கால உரைகாரர்களுக்கு அறிவியல் அறிவுத்திறம் குறிப்பாகப் பயிரியல், விலங்கியல் துறையறிவு போதிய அளவு தோன்றாமையாலும் அவர்கள் காலத்தில் நிலவிய சமய, சமூகச் சூழல்களாலும் சங்கப்பாடல் களின் கருத்தியலை அவர்கள் அறிந்து உரைப்பதில் சிக்கல்கள் எழுந்தன. இதன் விளைவாகப் பிற்காலத்தோர் அறிவியல் துறைகள் எல்லாம் அண்மைக் காலத்திலேயே தோன்றியவை எனக் கருதத் தொடங்கி விட்டனர். சிலர் அதனைப் பரப்புரை யாகவும் செய்யத் தொடங்கினர். உண்மையில் சங்கப் பாடல்களில் பொதிந்துள்ள அறிவியல் செய்திகளை அறிந்துரைக்கும் திறம் நம்மில் சிலருக்குப் போதுமான அளவு இல்லையென்றே சொல்லத் தோன்றுகின்றது. இனி, குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள அறிவியல் செய்திகள் சிலவற்றைக் காண்போம்.

யாமைகளின் முட்டையிடும் வழக்கம் பற்றிய குறுந்தொகைப் பாடற்செய்தி குறிப்பிடத்தக்கது. யாமைகள் கூட்டு வளைகளைத் தோண்டுகின்றன. அதில் அவை, ஒன்றிலிருந்து முப்பது முட்டைகள் வரை இடுகின்றன. இவ்வாறு முட்டையிடும் செயலானது, குறிப்பாக இரவில் தான் நடைபெறுகிறது. இதன் பின்னர், தாய் ஆமை தனது முட்டைகளை மணல், மண் மற்றும் உயிரினப்பொருட் களைக் கொண்டு மூடுகிறது. இந்த முட்டைகள் தனித்து விடப்படுகின்றன. ஒரு ஆமை எந்த இனத்தைச் சார்ந்தது என்பதைப் பொறுத்து முட்டைகள் பொரிவதற்கு அறுபதி லிருந்து நூற்றியிருபது நாட்கள் வரை ஆகும். முட்டையின் அளவு தாயின் அளவைப் பொறுத்து இருக்கும் என்பர் (ta.wikipedia.org). எனவே அடைகாத்து முட்டை பொரிக்கும் இயல்பு யாமைகளுக்கு இல்லை எனலாம். மணற் பரப்பில் புதைந்து கிடப்பதால் உண்டாகும் சூட்டினாலேயே யாமை முட்டைகள் பொரிந்து தாயில்லாமலே பார்ப்புக்களை உருவாக்குகின்றன. அப்பார்ப்புக்கள் அவற்றின் தாய்முகம் பார்த்து வளருவன. காமமும் தலைவனின் முகம் பார்த்து வளருவது. அவன் கைவிட்டால் பயனற்றதாகிப் போகும் என்று கூறுகின்றார் கிள்ளிமங்கலங்கிழார் (குறுந். 152). யாமைப் பார்ப்பு தாய்முகம் நோக்கி வளரும் என்ற கருத்து, "தீம்பெரும் பொய்கை யாமை இளம் பார்ப்புத், தாய்முகம் நோக்கி வளர்ந்திசி னாஅங்கு" (ஐங். 44) என்ற ஐங்குறு நூற்றுப் பாடலடிகளிலும் கூறப்பட்டுள்ளது அறியத்தக்கது.

வண்டுகள் பூக்களின் மணத்தை அறியும் திறனுடையன என்ற செய்தி குறுந். 2-ஆம் பாடலில் இறையனாரால் கூறப் பட்டுள்ளது. கூந்தலுக்கு மணம் உண்டு என்ற கருத்தும் அவரால் மொழியப்பட்டாலும் உரையாசிரியர்களில் பலர் இயற்கை மணமுண்டு என உரை கண்டுள்ளனர். பெண்கள் கூந்தலில் மலரணிதலாலும் எண்ணெய் பூசுவதாலுமே அதற்கு மணமுண்டாகிறது என்ற கருத்தினையே சங்கப்பாடல்கள் கூறியுள்ளன. இயற்கை மணமுண்டு என்ற கருத்து சங்கப் பாடல்களில் யாண்டும் இடம்பெறாக் கருத்தாகும். கூந்தல் மணம் செயற்கை யானதே என்ற கருத்தே பாடல்களில் உணர்த்தப்பட்டுள்ளது (விரிவுக்கு ஆ. மணி 2005:103-108).

பாடலுக்கும் உரைக்குமிடையே காணப்பெறும் இடை வெளிக்கு மேற்கருத்து ஒரு சான்றாகும்.

அற்சிரமாகிய முன்பனிக் காலத்தில் சேமச் செப்பில் (Flask) வைத்த வெந்நீரைப் பருகுவர் என்ற செய்தி ஓரிற்பிச்சையரால் (குறுந். 277) கூறப்பட்டுள்ளது.

''பொத்தில் காழ வத்த யாஅத்துப்
பொரியரை முழுமுத லுருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி யுயங்கு நடைச்
சிறுகட் பெருநிரை யுறுபசி தீர்க்கும்
தடமருப் புயானை..... .... (குறுந். 255)

என்ற கடுகு பெருந்தேவனாரின் பாடற்செய்தி அறியத்தக்கது.

'புரையற்ற வயிரத்தை யுடையனவாகிய அருவழியில் நின்ற யாமரங்களின் பொரிந்த திரண்ட அடியை உருவும் படித் தன் கொம்பாற் குத்தி வன்மை பொருந்திய வளைந்த கையினாற் கொண்டு தந்து வருந்திய நடையையும் சிறிய கண்களையுமுடைய பெரிய யானை வரிசையின் மிக்க பசியைத் தீர்க்கின்ற வளைந்த கொம்புடைய ஆண் யானை'' என்பது மேற்பாடலடிகளுக்கு உ.வே. சாமிநாதையர் *(1983:523-524)* தரும் பதவுரையாகும். ஆனால் அறிவியலார் ஆண் யானை யாமரத்தின் அடிப்பாகத்தில் தன் தந்தத்தால் குத்தி அங்குள்ள ஏறத்தாழ 3 கலன் நீரைத் தன் துதிக்கையால் உறிஞ்சிக் குடிக்கும் என்பர். இப்பாட்டிலும் அச்செய்தியே கூறப்பட்டுள்ளது. எனினும் உரையாசிரியர்கள் கருத்து வேறுபடக் கூறியுள்ளனர். இதுகாறும் கண்ட கருத்துக்கள் குறுந்தொகைப் புலவர்களின் அறிவியல் சிந்தனைகளை விளக்குவனவாகும்.

முடிபுகள்

1. பகுத்தறிவு என்பது நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவுவதாகும். கடவுள் மறுப்பு பகுத்தறிவின் நிலைப்பாடுகளில் ஒன்றாகும்.
2. குறுந்தொகைப் பாடல்களில் சடங்கு மறுப்புச் சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன. ஒரோவழி இவை கடவுள் இருப்பையும் வினாவுக்கு உட்படுத்துவதாகவும் கொள்ளலாம்.

3. மாந்த வாழ்க்கையின் மேம்பாட்டிற்குப் பல்வேறு கருத்துக்கள் குறுந்தொகைப் புலவர்களால் முன்மொழியப் பட்டுள்ளன.

குறிப்பு

1. தொல். சொல். *368:1.* தொல். பொருள். *43:1, 109:25, 112:9, 113:5, 145:1, 166:3, 194:9, 206:2, 501:1, 568:2, 577:1, 640:1,* சிறு. *216, 217,* நற். *32:6, 6488, 106:9, 110:9, 277:4, 284:7, 397:4,* ஐங். *474:5,* பதிற். *57:12, 71:25, 72:5, 74:18,* பரி. *2:76, 13:55,* பரி.திறம். *1:15,* கலித். *57:24, 72:18;22, 117:15, 120:!2, 133:10, 138:3(20,* அகம். *71:7, 135:5, 214:9, 225:17, 260:15, 299:8, 351:5, 368:9,* புறநா. *20:6, 30:7, 179:7, 183:7, 184:5, 197:17, 202:11, 206:8, 217:8, 266:13,* நாலடி. *139:2, 140:1, 193:2, 196:1, 227:3, 249:4, 258:4, 314:4, 320:4, 332:4, 367:4(2),* நான்மணி. *22:4, 31:4, 34:3,* இன்னா. *30:3,* ஐந்.எழு. *8:4, 33:2,* திருக். *61:1, 23:1, 140:2, 175:1, 203:1, 315:1, 355:2, 358:2, 372:1, 373:2, 382:1, 396:2, 404:2, 421:1, 422:2, 423:2, 424:2, 425:2, 426:2, 427:1(2), 430:1(2), 441:1, 452:2, 454:2, 463:2, 507:1, 513:1, 532:1, 618:1, 682:1, 684:1, 841:1, 843:1, 846:1, 1022:1,* திரிகடு. *14:4, 19:3, 40:3;4, 46:4, 61:1, 95:1,* ஆசார. *68:2,* பழமொழி *40:1, 55:1, 138:3, 142:2, 164:2, 203:4, 207:1, 220:4, 270:1;4, 271:1, 301:4(2), 323:3, 326:3, 351:2, 364:3,* சிறுபஞ். *55:4, 84:3,* முதுமொழி. *19:1, 38:1,* ஏலா. *30:1,* சிலப். *10:84; 175, 14:161, 20:25, 30:43,* மணி. *4:109, 6:198, 10:8; 76;84, 11:141, 23:26; 29;39, 24:53, 27:11, 29:221; 222, 30:7; 92; 190.*

துணை நூல்கள்

- கதிரைவேற்பிள்ளை நா. 2011. தமிழ் - தமிழ் அகராதி, சென்னை : சாரதா பதிப்பகம்.
- சாமிநாதையர் உ.வே. (உரைஆ.) *1983.* குறுந்தொகை. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

- பகவதி கே. *1981.* மரபியல் - உரைவளம். சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
- திருமலை ம. 2011. அரிமா நோக்கு - காலாண்டிதழ். ஈரோடு தமிழன்பன் (ஆசிரியர்). சென்னை.
- மணி ஆ. 2005. குறுந்தொகைத் திறனுரைகள், கெங்குவார்பட்டி : தமிழன்னை ஆய்வகம்.
- வீரமணி க. *1994* (நான்காம் பதிப்பு). பெரியார் களஞ்சியம் - முதல் தொகுதி : சென்னை, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு.
- .... 1982 (Reprint). Tamil Lexicon - Seven Volumes. Madras : Madras University.
- WWW.ta.wikipedia.org. Accessed on 20.02.12

கலித்தொகை
(பெரியாரியல் பார்வை)

நூலைப்படி - சங்கத்தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படி.
....
சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக் கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படி தெரிந்துபடி
தீமை வந்திடுமே மறுபடி நூலைப்படி!
பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி! நூலைப்படி!

(பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், இளைஞர் இலக்கியம் - 2, பக். 96-97)

என்று பாடினார் பகுத்தறிவியக்கப் பாவலர் பாரதிதாசன். சாதி எனும் தாழ்வும் பொய்யும் புரட்டும் இல்லாதவை சங்கத் தமிழ் நூல்கள் எனும் அவர் கருத்து ஒப்பீட்டளவிலானது.

மாறாகப் பெரியாரின் இலக்கியச் சிந்தனைகளைத் தொகுத்து நோக்கிய இரா. மணியன் "இயற்கையோடு இயைந்த அகப்புறக் கருத்துக்கள் நிறைந்த சங்க இலக்கியங் களுக்குள்ளும், ஆரியக்கருத்துக்கள் ஊடுருவியதால்தான் பெரியார் அவற்றையும் கண்டிக்கிறார் என்பதை உய்த்துணர முடியும்' என்கிறார் (ப. 54). மணியன் நிகழ்த்திய பேரியல் (Macro) ஆய்வின் பொது முடிவு இது.

பாரதிதாசன், மணியன் ஆகியோரின் பொதுமைப்படுத்தப் பட்ட - சற்றே மிகைப் பொதுமைப்படுத்தப்பட்ட என்றும்

பா. மதிவாணன்
பேராசிரியர், தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

கூடச் சொல்லலாம் - முடிபுகளின் வேறாகப் பெரியாரிய நோக்கில் தமிழ்ச் செவ்வியல் படைப்புகளை நுண்ணாய்வு களுக்கு உட்படுத்தித் துல்லியமான முடிபுகள் காணவியலும். இத்தகைய ஒரு முன் முயற்சியாகப் **பெரியாரின் பெண்ணுரிமைக் கருத்துகளுக்கு இணக்கமான / இணக்கமாகக் கொள்ளத்தக்க சில புள்ளிகளைக் கலித்தொகையுள் இனங்காண முனைகிறது இக்கட்டுரை.**

தமிழ்ச் செவ்வியல் அகப்பாடல்களுள் கலித்தொகை பிற அகவல் தொகைகளினும் வேறான தனித்தன்மைகள் கொண்டது. தொல்காப்பியந்தானும்,

'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியது ஆகும் என்மனார் புலவர்' (தொல். அகத். 56)

என்கின்றது.

கலி, பரிபாடல்கள் கூத்து மரபும், நாட்டுப்புற வாய்வழி மரபும் இயைந்து புலவரான் நெறிப்படுத்தப்பட்டு வழங்குவன. அகவற்பாக்களோ எனின் பெரிதும் புலனெறி வழக்கே சார்ந்த 'ஆசிரிய' வழக்கின.

தொல்காப்பியம் புலனெறி வழக்கையே பொருளாகக் கொண்டது; கலி, பரிபாடற் கூறுகளைச் சுட்டிக்காட்டுவதோடு நின்றுவிட்டது (ஆனால், கலிப்பா யாப்புப் பற்றி விரிவாகச் சொல்கிறது).

தொல்காப்பியம் குறித்த மேற்படி முடிபுகளை ஏற்க இயலாவிடினும் கலித்தொகை - உள்ளடக்கம், யாப்பு எனும் இருநிலைகளிலும் - நாட்டுப்புறப்பாடல் சார்ந்திருத்தலை மறுக்க இயலாது.

கலித்தொகையுள் இனக்குழு வாழ்வியல் முதல் வைதிக மேலாண்மை வரையிலான பல்வேறு அடுக்குகள் (Layer) இருப்பதை எடுத்துக் காட்டியுள்ளார் ராஜ் கௌதமன் **(கலித்தொகை - பரிபாடல் ஒரு விளிம்புநிலை நோக்கு).**

குறிக்கோள் நிலைப்பட்ட (Idealistic) அகவல் அகப்பாடல் களை நோக்கக் கலித்தொகைப் பாடல்கள் நடப்புநிலைப் பட்டவை (Realistic). முல்லை அகவல் பாக்களையும், முல்லைக் கலிப்பாக்களையும் ஒப்பிட்டு இதை உணரலாம். எனவே, பொருள் முதல்வாத (Materialistic) அடிப்படை கொண்ட பெரியாரிய நோக்கிற்குக் கலித்தொகை இசை வாயிருத் தற்கான வாய்ப்புகள் மிகுதி.

> *இந்தியாவில் இந்துப்பெண்கள் இந்துமதச் சம்பிரதாயப்படி பாவஜென்மங்களாகக் கருதப்படுவர். அதாவது, சென்ற ஜென்மத்தில் அவர்கள் செய்த பாவகாரியங்களால், இந்த ஜென்மத்தில் பெண்களாய்ப் பிறக்கின்றார்கள் என்பது ஒரு சாத்திரவிதி. ஒரு குடும்பத்தில் எத்தனைப் பெண் குழந்தைகள் இருந்தாலும், அக்குடும்பத்திற்கு ஆண் குழந்தைகள் இல்லாவிட்டால், அதைப் 'பிள்ளையில்லாத குடும்பம்' என்று சொல்லுவது வழக்கம். ஒரு வீட்டில் பெண் குழந்தை பிறந்தால் அது அவ்வீட்டிற்கு அதிருப்தி தரத்தக்க விஷயமாகவே கருதப்படும். ஆண்குழந்தை பிறந்தால் வெகுதிருப்தியுடன் ஆடம்பரமாகச் செலவு செய்வார்கள்* (பக். 262-263)

என்கிறார் பெரியார்.

அகப்பாடல்களும் ஆண்மேலாண்மையை ஏற்றவைதாம். ஆயினும், முற்றாகப் பெண்மகவை வெறுத்ததாகச் சொல்ல இயலாது. குறிஞ்சிக்கலித் தோழி தலைவியை நல்கூர்ந்தார் 'செல்வ மகள்' (கலி. 50:14) என்கிறாள். பிறிதொரு பாட்டில் தலைவனொருவனும் தலைவியை நலம் பாராட்டிக் கூறு மிடத்து (கலி. 56:12) அத்தொடரை ஆள்கிறான். இதற்குப் 'பிள்ளையால் மிடிப்பட்டாருடைய செல்வத்தையுடைய மகள்' என்று பொருளெழுதியுள்ளார் நச்சினார்க்கினியர் (இதுதான் இக்காலத்துச் 'செல்லமகள்' என மருவிற்றுப் போலும்).

"வறுமை, பிள்ளையில்லாத வறுமை. மக்களையுள்ளவர் பொருளுள்ளவராகக் கருதப்படுகின்றமையால் (குறள். 63;

புறம். 188) அவரையில்லாதவரும் நல்கூர்ந்தாரெனப் பட்டார்" என நச்சினார்க்கினியர் உரையை விளக்கியுள்ளார் இளவழகனார் (உரைவிளக்கம், ப. 40).

> *திருமணம் என்பது பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழ்க்கையை நடத்த ஏற்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தம் என்றும், அந்த ஒப்பந்த விஷயம் பெண்ணையும் ஆணை யும் மாத்திரமே பொறுத்ததே ஒழிய, வேறு எவ்விதத் தெய்வீகத்திற்கோ அல்லது எவ்விதக் கட்டுப்பாட்டிற்கோ சம்பந்தப்பட்டதில்லை என்பதுமே ஆகும். மேலும், பழைய முறைக் கலியாணமானது, ஆணுக்கும் பெண்ணுக்கும் கலியாணம் ஏற்பட்ட பிறகுதான் ஒருவர் மீது ஒருவர் ஆசை கொள்வதோ, காதல் கொள்வதோ ஏற்பட வேண்டுமே யொழிய அதற்கு முன்னால் ஒருவர்மீது ஒருவருக்கு ஆசையும் காதலும் ஏற்படுதல் கூடாதென்றும், குற்றமென்றும் அது விபச்சாரத்திற்குச் சமமானதென்றும் கூறப்படுகிறது*
>
> (ப. 317-318)

என்கிறார் பெரியார். தமிழ்ச்சமூகத்தில் திருமணத்திற்கு முந்தைய காதல்-களவு ஏற்கப்படவில்லை. ஆனால், அகப்பாடல்களில் பரவலாகக் காணப்படுகின்றது. சமூக வாழ்வில் களவு ஏற்கப்படாமையைக் களவுப் பாடல்களினூடாகவே காண முடியும். விரிப்பிற் பெருகும். தொகுத்துச் சொல்வதாயின் 'அலர்', 'இற்செறிப்பு', 'உடன்போக்கு' முதலியன காதலை ஏற்றுக்கொள்ளாத சமூகத்தில்தான் காணப்படும்.

திருமணத்தில், தொடர்புடைய ஆண், பெண் தவிர - எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் இடமில்லை என்று கூறும் பெரியார்

> *"ஒரு வயதுவந்த பெண்ணை 'உனக்கு எப்போதம்மா கலியாணம்!' என்று கேளுங்கள். அவள் நாணிக்கோணி - அதெல்லாம் எனக்கென்ன தெரியும்? எங்கள் அப்பா, அம்மாவைக் கேளுங்கள்' என்றுதான் கூறுவாளேயல்லாது வேறுவிதமாகப் பதில் கூறமாட்டாள். அந்தமாதிரிப் பக்குவத்தில்தான் நாம் அவர்களை வளர்க்கிறோம்"* (ப. 290)

என்கிறார். வேறோரிடத்தில்,

''தாய் தகப்பன்மார் பார்த்து ஒருவனுக்குப் பிடித்துக் கொடுப்பது என்றில்லாமல் அதுவாக (பெண்ணாகவே பார்த்து) தகுந்த வயதும் தொழிலும் ஏற்பட்ட பிறகு ஒருவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படிச் செய்ய வேண்டும்''

என்கிறார் (ப. 224).

முல்லைக்கலித் தலைவி ஒருவனைக் காதலிக்கிறாள். காதலைச் சொன்னால் தாய் கடிந்து கொள்வாளோ? என்றும் அஞ்சுகிறாள்.

'ஆயர் மகனையும் காதலை; கைம்மிக
ஞாயையும் அஞ்சுதி ஆயின்; அரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து'' (கலி. 107:25-27)

துணிவில்லாதவளுக்குக் காதல் ஏன்? என்பதுபோலத் தோழி இடித்துரைக்கிறாள். நல்லவேளை - அகமரபிற்கியைய அவள் காதலித்த ஆயர்மகனுக்கே மணம் பேசப்பட்டு விடுகிறது.

தலைவியின் காதலைத் தோழி செவிலியிடம் - அறத்தொடுநின்று - கூறிவிடுகிறாள்.

''அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்
அவருந் தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லாம் உருத்தெழுந் தாறி
இருவர்கட் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்ந்தார் தலை'' (கலி. 39:20-25)

எனும் காட்சி தீட்டப்பட்டுள்ளது. காதலை ஏற்கச் சமூகக் கட்டுப்பாடு இடந்தராவிடினும் இறுதியில் தந்தையும் தமையன்மாரும் இயற்கையை ஏற்பதாகக் காட்டப்படுகிறது.

'வாழ்க்கைத்துணை விஷயத்தில் காதல் போதாது. அறிவு, அன்பு, பொருத்தம், அனுபவம் ஆகிய பல காரியங்களே முக்கியமானவையாகும். பழங்காலத்தில் காதலே போது மானதாக இருக்கலாம்; அப்போதைய அறிவுக்கு அவ்வளவு தான் தேவையாக இருந்திருக்கும். அது மனித வாழ்வையும்,

பிறவிக் குணங்களையும் மேன்மைப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இயற்கையின் பெருக்கம்தான் பெரிதும் காதலின் முழு இடத்தையும் பெற்றுவிடுகிறது. மற்ற பல வாழ்க்கை வேறுபாடுகளுக்கு அந்த இச்சைப் பெருக்கம் இருவருக்கும் போதாது. ஆகையால், அறிவை யும், நிகழ்ச்சிப்பயனையும் அலட்சியப்படுத்தும் காதலை மனிதன் அடக்கி, வாழ்க்கைத்தன்மையைக் கொண்டு வாழ்க்கைத் துணையைப் பொருத்திக் கொள்ளவேண்டும் என்பதே எனது கருத்தாகும் (ப. 337)

என்கிறார் பெரியார்.

தலைவியொருத்திபால் காதல்கொண்டு மயங்கி நிற்கும் தலைவன் சார்பாகத் தோழி, அவன் நிலையை விளக்கி "உள்ளுள் உருகுவான் போலும் உடைந்து" (கலி. 60:10-11) என்று முடிக்கிறாள்.

"தெருவில் காரணமின்றிக் கலங்குவாரைக் கண்டு அவர் உணர்வை உன்னுடையதாய் இரங்குகிறாய். இதனால் பயனில்லை'' என்கிறாள் தலைவி. தோழி, "அவன் நோய் தீர்க்கும் மருந்தை நீயே அருளவேண்டும்" என்கிறாள். தலைவி அவளை எள்ளி நகையாடி "ஒழுக்கம் கெட்டுத் தெருவில் நின்று ஒருவன் கூறுவனவற்றை உண்மையென நம்பி உரைக்கிறாயே'' எனக் கடிந்து கொள்கிறாள். "அவ்வாறாயின் அவனைச் சாகச் சொல்வதோ'' என்கிறாள் தோழி.

இவ்வாறு, தொடரும் உரையாடலில் தலைவி வெறும் உணர்ச்சிமயமான காதலை மறுக்கும் போக்கைக் காணலாம் (கலி. 60).

மோர் விற்றுத் திரும்பும் ஆயமகள்பால் காதல்கொண்ட ஒருவன், அவளைக் குறுக்கிட்டு அழகை வருணித்து வாயாடு கிறான். ஓரிடத்தில்,

''இளமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினால் என்நெஞ்சம்
களமாக்கொண் டாண்டாயோர் கள்வியை யல்லையோ''
(கலி. 108:28-29)

என்று உணர்ச்சிவயப்படுகிறான். அவளோ நடப்பியல் நிலை நின்று,

''நின்னெஞ்சம் களமாக்கொண்டு யாம்ஆள எமக்கு
எவன் எளிதாகும்?
புனத்துளா னெந்தைக்குப் புகாவுய்த்துக் கொடுப்பதோ
இனத்துளா னென்னைக்குக் கலத்தொடு செல்வதோ
திணைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ''

(கலி. 108:30-33)

என்று நகையாடுகிறாள்.

இங்கும் தலைவி கவைக்குதவாத காதலை ஏற்க மறுக்கும் குறிப்பு வெளிப்படுகிறது.

இப்பாட்டிற்கு நச்சினார்க்கினியர் தரும் துறைக் குறிப்பையே கொள்ளவேண்டும் எனும் தேவையில்லை.

பாட்டின் இறுதியில் தலைவி, பெருந்தன்மையோடு தானே குறியிடம் கூறுகிறாள்.

மேற்குறித்த பாடல்களில் தலைவியே 'பெருமையும் உரனும்' உள்ளவளாகக் காணப்படுகிறாள்.

நாம் யாரிடமும் அன்பும் ஆசையும் நட்பும் பொருளாகக் கொண்ட காதல் கூடாதென்றோ, அப்படிப்பட்டது இல்லை என்றோ சொல்ல வரவில்லை. ஆனால், அன்பும், ஆசையும், நட்பும் மற்றும் எதுவானாலும் மன இன்பத்திற்கும், திருப்திக்குமே ஒழிய, மனத்திற்குத் திருப்தியும், இன்பமும் இல்லாமல் அன்பும் ஆசையும் நட்பும் இருப்பதாய்க் காட்டு வதற்காக அல்ல என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே இதை எழுதுகின்றோம். ஏனென்றால், மற்றவர் திருப்தி யிலும் சந்தோஷத்திலும் நுழைந்துகொண்டு, தொட்டதற் கெல்லாம் 'இது காதலல்ல', 'இது காதலுக்கு விரோதம்', 'இது காமஇச்சை', 'இது மிருக இச்சை', 'இது விபச்சாரம்' என்பது போன்ற அதிகப் பிரசங்கித்தனமான வார்த்தை களை - ஒருவிதப் பொறுப்பும் இல்லாதவர்கள் எல்லாம் கூறுவதால் இதை எழுதினோம் (ப. 315).

என்கிறார் பெரியார். 'தூய' பிளேட்டோனியக் காதலை அவர் ஏற்கவில்லை.

''புரிவுண்ட புணர்ச்சியுள் புல்லாரா மாத்திரை
அருகுவித் தொருவரை அகற்றலின் தெரிவார்கண்
செயநின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது
நயநின்ற பொருள்கெடப் புரியறு நரம்பினும்
பயனின்று மன்றம்ம காமம் ....'' (கலி-142:1-5)

என்று தொடங்குகிறது ஒரு நெய்தற் கலிப்பாடல்.

இனிய யாழின் நரம்பை மீட்டத் தொடங்கும் நிலையில் அதன் இசை இனிமையைச் சுவைஞர் கேட்டு இன்புறும் முன்னே நரம்பு அறுந்துபோதலைக் காட்டிலும் காதலித்த இருவர் தழுவி இன்புறும் முன்பே பிரிதல் கொடுமையானது என்பது இவ்வடிகளின் பொருள்.

களவிலும் மெய்யுறுபுணர்ச்சி குற்றமாகாது என்பதே தமிழ் அகமரபு என விளக்கியுள்ளார் வ.சுப. மாணிக்கம் (பக். 42-44).

பெண்ணை அடிமைப்படுத்தியதில் உடைமைக்கும் வாரிசுரிமைக்குமான பெரும்பங்கை வலியுறுத்துமிடத்தில் ''இயற்கை இன்பத்துக்காக ஒரு பெண்ணுடன் கலவி செய்வது என்பது போய், தனக்கு வாரிசு உண்டாக்கிக் கொள்வதற்காக ஒருத்தியோடு கூடவேண்டியது அவசியம் என்கிற நிலை ஏற்பட்டது'' என்கிறார் பெரியார் (ப. 288).

அகவல் அகப்பாடல்களில் இந்த இயற்கை இன்பம் அடக்கிப் புனையப்பட்டுள்ளது. குறிப்பாகத் தலைவி இதனை வெளிப்படப் பேசுவதில்லை.

நோய்அலைக் கலங்கிய மதன்அழி பொழுதில்
காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும்
யானே, பெண்மைதட்ப நுண்ணிதின் தாங்கி (நற். 94)

என்கிறாள் நற்றிணைத் தலைவியொருத்தி. இதிலிருந்து "பாலியல் உறவில் பெண்ணின் அடங்கிய தன்மை புலப்படு கிறது. ஆணின் செயலூக்க நிலை இயற்கையானதாகக் கருதப்

படுகிறது'' என்கிறார் ராஜ்கௌதமன் (**பாட்டும் தொகையும் தொல்காப்பியமும், தமிழ்ச் சமூக உருவாக்கமும், ப. 23**).

மாறாகக் கலித்தொகைத் தலைவியர் இவ்வின்பத்தைச் சற்றே வெளிப்படக் கூறித் திளைத்தலைப் பார்க்க முடிகிறது.

பூமணக்கும் கூந்தலைப் பிடித்து, அதிலுள்ள ஒரு மாலையை விரலால் சுற்றி மோந்ததையும், தலைவியின் கையில் தன் முகத்தைப் புதைத்துப் பெருமூச்செறிந்ததையும் தொய்யில் எழுதிய மார்பகம் வருடி மெய்முழுதும் தடவியதையும் (கலி. 54:5-14) தோழியிடம் பகிர்ந்து கொள்கிறாள் ஒரு குறிஞ்சித் தலைவி. 'தொல்காப்பியம் அகமரபை ஒட்டி வரையறுத்த பெண் வேறு.... இங்கே தனது அந்தரங்கத்தைத் தோழியிடம் பகிர்ந்திடும் பெண் வேறு' என்கிறார் ராஜ்கௌதமன் (**கலித்தொகை, பரிபாடல் - ஒரு விளிம்பு நிலைநோக்கு, ப. 67**).

களவுக்கால இயற்கை இன்பமே கடியப்படாதபோது கற்புக்கால இன்பம் பற்றிக் கூறவேண்டியதில்லை என்றாலும், தோழி கூற்றாக வரும் பாலைத்திணைப் பாடலிலிருந்து ஒரு சான்று,

''இளமையும் காமமும் நின்பாணி நில்லா
இடைமுலைக் கோதை குழைய முயங்கு
முறைநாள் கழிதல் உறாஅமைக் காண்டை
கடைநாள் இதுவென்று அறிந்தாரும் இல்லை''

(கலி. 12:12-15)

என 'இளமை இருக்கும்போதே இயற்கை இன்பம் துய்த்து விடு' என்கிறாள் தோழி.

''கலியாணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் கூடி இயற்கை இன்பத்தை நுகரவும், ஒருவரை ஒருவர் காதலித்து ஒருவருக்கொருவர் வாழ்க்கைப் போட்டியில் ஏற்படும் சிரமத்திற்கு இளைப்பாறவும், ஆயாசம் தீர்த்துக்கொள்ளவும் ஆணுக்கு ஒரு பெண்ணும், பெண்ணுக்கு ஓர் ஆணும் வேண்டியிருக்கிறது'' (ப. 326) என்கிறார் பெரியார்.

''..... .... உளநாள்
ஒரோஒகை தம்முன் தழீஇ ஒரோஒகை
ஒன்றன்கூ றாடை உடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதரோ
சென்ற இளமை தரற்கு'' (கலி. 18:8-12)

என்கிற அடிகள் பெரியார் கூற்றுக்குப் பெரிதும் பொருந்திய இலக்கியமாய் இலங்குகின்றன.

திருமணம் பெண்ணடிமைத்தனத்தை மீள் உறுதி செய்து நடைமுறைப்படுத்துவதை விவரிக்கும் உரையொன்றில் ''நாம் ஆயிரம் சமாதானம் சொன்னாலும் பெண்ணை அடிமையாகவே - ஒருவனுடைய சொத்தாகவே, போகப் பொருளாகவே கருதுகின்றோம். அதற்கு ஒரு தனி உயிரும் மனமும் இருப்பதாகக் கருதுவதில்லை'' (ப. 326) என்கிறார் பெரியார்.

பரத்தையொழுக்கம் பேணும் தலைவனொருவன் அப் பரத்தையர் நாட்டம் குன்றாமல் தலைவியிடம் (காமக்கிழத்தி யிடம் என்பர் நச்சர்) வருகிறான். அப்போது, 'நீ பரத்தை யரிடத்து விரும்பியவற்றைச் செய்துமுடித்து, அவர்கள் விருப்பற்று உன்னைக் கைவிட்டால் எம்மையும் நினைப்பாய் என்று நகையாடுகிறாள்.' இப்பாட்டில்,

''துணிந்தது பிறிதாகத் துணிவிலள் இவளெனப்
பணிந்தாய்போல் வந்தீண்டுப் பயனில மொழிவாயோ
....
நெஞ்சத்த பிறவாக நிறையிலள் இவளென
வஞ்சத்தான் வந்தீங்கு வலியலைத் தீவாயோ
....
தருக்கிய பிறவாகத் தன்னிலள் இவளெனச்
செருக்கினால வந்தீங்குச் சொல்லுகுத் தீவாயோ''
(கலி. 69:10-11, 14-15; 18-19)

நீ முடிவு செய்ததும் (துணிந்தது), நின்னெஞ்சுள் நினைப்பவையும் (நெஞ்சத்த), நின்மனத்தில் மேலோங்கியவை யும் பிறவாக (பரத்தை நாட்டத்தனவாக) இருக்க இவள்

தனக்கென ஓர் அறுதியுடையவளல்லள் (துணிவிலள்), நிறையுடையவளல்லள், தனக்கென ஒரு நெஞ்சுடையவளல்லள் (தன்னிலள்) என வந்தாயோ? என்று இடித்துரைக்கிறாள் தலைவி.

"தன்னிலள்" என்பதற்கு நச்சினார்க்கினியர் 'தனக்கென ஒரு நெஞ்சுடையவளல்லள்' (கலி. *69:18* உரை) என்று பொருள் தருகிறார். தனக்கென ஒரு நெஞ்சுடையவளல்லள் எனக் கருதிச் சொற்களை இறைக்கின்றாயா? என்று தலைவனே வினவுவதன் மூலம் தன் தனித்தன்மையை (individuality) தலைவி முன்னிறுத்துகிறாள்.

பெரியார் கருதிய அளவிற்குரிய மேலெல்லையாக இந்தக் கலித்தொகைத் தலைவியின் தனித்தன்மையைக் கொள்ள இயலாவிடினும் அன்றே தனித்தன்மை நாட்ட முயன்ற குரலை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இதன் ஒளியில்,

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள். 56)

எனும் குறளை - குறிப்பாகத் தற்காத்து எனும் தொடரை - மறு விளக்கம் செய்ய வாய்ப்புள்ளது.

"தற்காத்தல் தன்னைத்தானே கற்பினால் காத்துக் கொள்ளுதல்" என்பர் வை.மு. சடகோபராமானுஜர். இங்கே கற்பைக் கொணர வேண்டியதில்லை. நச்சினார்க்கினியரின் கலித்தொகை உரையை வழிமொழிவதாயின் 'தனக்கென ஒரு நெஞ்சுடைமையைக் காத்துக் கொள்ளுதல்' அஃதாவது, மனைவி தன் தனித்தன்மையைக் காத்துக்கொள்ளுதல் என்று பொருள் காணலாம்.

இதனால், வள்ளுவர் வேறு குறள்களில் கற்பையும், கணவனுக்கு அடி பணிதலையும் வலியுறுத்தியுள்ளமையை, பெரியாரிய நோக்கிலான அப்பிற்போக்கு நிலைப்பாட்டையெல்லாம், நியாயப்படுத்தியதாகவும் ஆகாது. ஆனால், 'தற்காத்து' என்பதையும் பிற்போக்குப்பட்டியலில் சேர்ப்பதைத் தவிர்க்கலாம்.

மேற்குறித்த கலித்தொகைப்பாட்டின் ஒளியில் அடுத்த குறளாகிய,

'சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை' (குறள் - 57)

என்பதையும் - குறிப்பாக 'நிறை' என்பதை - காணலாம். "நிறை - நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்துதல்" என்பார் பரிமேலழகர்.

பி.ஆர். பரமசிவ முதலியார் என்பவர் 'கற்பு'ப் பற்றிய பெரியாரின் கட்டுரைக்குத் திருக்குறளை மேற்கோள்காட்டி மறுப்பு எழுதினார். அது குறித்த தன்னிலை விளக்கமொன்றை விடையாக எழுதினார் பெரியார். அதில், மேற்குறித்த குறளுக்கு, "காவலினால் பெண்கள் கற்பாயிருப்பதால் பயனில்லை; பெண்கள் தாங்களாகவே கற்பாயிருக்க வேண்டும் என்பதுதான் கருத்தாக இருக்கலாம் என்று கருதுகிறோம்" (ப. 217) என்கிறார்.

'இதுதான் கருத்து' எண்ணாமல் 'கருத்தாக இருக்கலாம்' என்று கூறுவது பெரியாரின் பகுத்தறிவு நோக்கிற்கு இயைந்தது.

கலித்தொகைப் பாட்டில் (69:14) நிறை என்ற சொல்லைக் 'கற்பு' என்னும் சொல்லால் மாற்றீடு செய்ய இயலாது. பிற கலித்தொகைப்பாக்களுள்ளும் கற்பு என்னும் பொருளில் எங்கும் இச்சொல் கையாளப்படவில்லை. இஃது ஆணுக்கும் உரியதாகும் (கலி. 60:29). "நிறையழி கொல் யானை" (கலி. 56:32), "நெற்றிச் சிவலை நிறையழித்தான்" (கலி. 104:65) எனுமிடங்களில் யானை, காளை ஆகியவற்றிற்கும் 'நிறை' கூறப்பட்டுள்ளது.

நிறை என்னும் சொல் 'தற்கட்டுப்பாடு' (Self control or Self restraint) என்ற பொருளைக் குறிக்கிறது. தற்கட்டுப்பாடு பொதுவாயினும் ஆணுக்கும் பெண்ணுக்கும் நடைமுறையில் வேறுபடலாம் என்பதையும் மறுப்பதற்கில்லை. எவ்வாறா யினும் கற்பினின்றும் இது வேறானது.

அப்பாட்டில் ‘துணிவு’ எனும் சொல் ‘உறுதியாகத் தீர்மானித்தல்’ எனும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. இப் பாட்டின் ‘துணிவு’, ‘நிறை’, ‘தன்(மை)’ ஆகிய மூன்றும் ஒருங்கு வாய்ந்த ஆளுமையாகத் தலைவி காட்டப்பட்டி ருக்கிறாள். இவள் ‘அச்சமும் நாணும் மடனும்’ (தொல்.பொருள். களவியல் - 8) உடையவளல்லள். இதன் பொருட்டே தொல்காப்பிய மரபைப் பின்பற்றும் நச்சினார்க்கினியர் இத்தலைவியைக் காமக்கிழத்தி என்கிறார்.

அகவல் அகப்பாக்களினும் பெண்ணுரிமையுணர்வு மேம்பட்ட தலைவியைக் கலித்தொகை காட்டுகிறதென்பதே இங்குக் கருத வேண்டியது.

தமிழகத்தில் பெரியாரைப்போல் மிகத்தீவிரமான பெண்ணுரிமைக் கருத்துகளை எண்ணியவர் எவருமிலர். 1930களிலிருந்தே பெரியார் தொடர்ச்சியாகத் தம் கருத்து களைப் பரப்பியும் வந்தார்.

பெண்களை மக்கட் பிறப்பாக மதித்தல், சொத்துரிமை, பெண் கல்வி, இளமணத்தடை, மணமகனைத் தேடும் உரிமை, மணவிலக்கு, மறுமணம், கைம்பெண் மணம், கருவுறும் உரிமை முதலியவற்றோடு தீவிர நிலை நின்று ‘கற்பு’, ‘ஆண்மை’ எனும் கருத்தாக்கங்களை ஒழித்தல், திருமண ஒழிப்பு, பல கணவமணவுரிமை, பெண்ணுரிமை சார் கருத்தடை, ஆண் சாராப் பெண்ணுரிமைப் போராட்டம் முதலியவற்றையும் முன்வைத்தார்.

பெரியார் வழி நிலையினராலும் கண்டுகொள்ளாமல் விடப்பட்டவை அவருடைய பெண்ணுரிமைக் கருத்துகள்தாம். 1980-களில் புதிய நோக்குகளில் பெரியாரியம் மறுவிளக்கங் களுக்கு உட்பட்டமையாலும், பெண்ணியக் கருத்து நிலை களின் எழுச்சியாலும் பெரியாரின் பெண்ணுரிமைக் கருத்துகள் மீட்டெடுக்கப்பட்டன.

பெரியாரின் பெண்ணுரிமைக் கருத்துகளுக்கு முற்றிலும் சான்றானது கலித்தொகை என்று வலியுறுத்துவது இக் கட்டுரையின் நோக்கமன்று; அதற்குக் கலித்தொகையும்

இடந்தராது. சற்றேனும் இணக்கமான புள்ளிகள் இல்லாம லில்லை என்பதையும் கலித்தொகைப் பாக்களைத் திணை வாரியாகவும் கூற்றுவாரியாகவும் பிறவாறும் பகுத்துப் பெரியாரிய நோக்கில் நுண்ணாய்வுகள் நிகழ்த்த இடமுண்டு என்பதையும் சுட்டுவதே நோக்கம்.

துணை நூல்கள்

- **கலித்தொகை,** நச்சினார்க்கினியர் உரை, இளவழகனார் ஆராய்ச்சி முன்னுரையும் உரை விளக்கமும், 1949, பாகனேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்க வெளியீடு.
- **திருக்குறள்,** பரிமேலழகர் உரை, வை.மு. கோபாலகிருஷ்ண மாச்சாரியார் (வை.மு. சடகோபராமானுஜாச்சாரியார்) ஆராய்ச்சிக் குறிப்புரை, 2009, உமா பதிப்பகம், சென்னை.
- **தொல்காப்பியம்,** 1960, பதிப்புக்குழு (மர்ரே) எஸ். ராஜம், சென்னை.
- **நற்றிணை,** 1981, பதிப்புக்குழு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
- **பாரதிதாசன் கவிதைகள்,** இளைஞர் இலக்கியம் 2, 1994, பூம்புகார் பதிப்பகம், சென்னை.
- **பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், முதல் வரிசை தொகுதி – 1, சமுதாயம் – 2,** 2009, பெரியார் ஈ.வெ. ராமசாமி கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை, சென்னை.
- மணியன், இரா. 2006, **பெரியாரின் இலக்கியச் சிந்தனைகள்,** புரட்சிப் பாதைப் பதிப்பகம், சென்னை.
- மாணிக்கம், வ.சுப., 2002, **தமிழ்க்காதல்,** மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.
- ராஜ்கௌதமன், 2006, **பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச்சமூக உருவாக்கமும்,** தமிழினி, சென்னை.
- ...., 2011, **கலித்தொகை – பரிபாடல் ஒரு விளிம்பு நிலை நோக்கு,** விடியல், கோவை.

பத்துப்பாட்டு நூல்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

முல்லைப்பாட்டு
(பெரியாரியல் பார்வை)

ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆணுக்கும் ஏன் பேதம்? ஏன் உயர்வு தாழ்வு? நம் பெண்கள் வெறும் போகப் பொருளாக ஆக்கப்படக்கூடாது. அவர்கள் புது உலகம் சித்தரிக்க வேண்டும் என்பதுதான் என் கருத்து. உலகில் மனித வர்க்கத்திற்கு அடிமைத் தத்துவம் ஒழிய வேண்டுமானால், பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும், கொடுமையும் ஒழிய வேண்டும்.

(தந்தை பெரியார், விடுதலை 30.01.1975)

நல்ல இலக்கியமென்றால், வெளிநாட்டார் வணக்கம் செய்ய வேண்டும், என்பார் பாரதி. 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்கள் இன்றும் போற்றப் படுகின்றன என்றால் அவற்றைப் பாராட்டித்தான் ஆக வேண்டும். காலம் கடந்து நிலைத்து நிற்பவையே செவ்விலக்கியங்கள் என அழைக்கப்படுகின்றன.

பத்துப்பாட்டும், எட்டுத்தொகை நூல்களும் சங்க நூல்கள். அவற்றில் பத்துப்பாட்டு கடைச்சங்க கால நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட பத்துப்பாட்டு நூல்களுள் ஐந்தாவது பாட்டு முல்லைப்பாட்டு. பத்துப்பாட்டைப் பாடிய புலவர்கள் கடைச்சங்க காலப் புலவர்கள். பெரும்பாலான நூல்கள் ஆசிரியப்பாவில் இயற்றப்பட்டன. அதில் கூறப்படும் செய்திகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தமிழகச் செய்திகள்.

முல்லை நிலத்திற்குரிய ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லுவது முல்லைப்பாட்டு. பிரிந்து சென்ற தலைவன் வரும் வரையிலும்

சுப. இரவீந்திரநாதன்
யுஜிசி சிறப்புநிலைப் பேராசிரியர் (2009 - 2011),
முன்னாள் ஆங்கிலத் துறைத் தலைவர்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி

தலைவி பொறுத்துக் கொண்டிருத்தல் முல்லையொழுக்கம். இந்த முல்லைத் திணையையே கற்பொழுக்கம் என்று சொல்லுவர். தலைவியிடம் மாரிக் காலத்தில் வருவேன் என்று சொல்லிப் பிரிந்து சென்றான் தலைவன். மாரிக்காலமும் வந்துவிட்டது. தலைமகனைக் காணவில்லை. தலைவி வருந்து கிறாள். வருந்துகின்ற தலைவிக்கு, தோழி, செவிலித்தாய் முதலியோர் ஆறுதல் கூறுகின்றனர். அன்னைமார்கள், திருமால் கோயிலுக்குச் சென்று, வணங்கி வரம் கேட்டனர். அச்சமயம் வருந்துகின்ற கன்றுகளைப் பார்த்து, "தாய்ப்பசுக்கள் விரைவில் வந்துவிடும்" என்று ஒரு ஆயர்குலப் பெண் ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள். அச்சொல், வணங்கி வரம் கேட்டுக் கொண்டிருந்த அன்னையர் காதிலே விழுந்தது. அவர்கள் அதை நல்ல சகுனமாகக் கருதினர். தலைவியிடமும் அவ்வாறே கூறினர்.

போரில் அரசன் பகைவரை வென்று பாடி வீடு அமைத்தான். அந்தப் பாடி வீட்டிலே கூடாரங்கள் பல இருந்தன. அவைகளின் நடுவே அரசனுக்கென்று ஒரு தனிக் கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. அரசன், தனது கூடாரத்தில், படுக்கையில் படுத்துக்கொண்டு, நடந்த போரைப் பற்றி எண்ணிக்கொண்டு நடக்க வேண்டிய போருக்குத் திட்ட மிட்டுக் கொண்டும் படுத்திருக்கிறான்.

தலைவியின் உடல் இளைத்து, வளையல்கள் கழன்று, ஆடைகள் குலைந்து கவலையோடு படுத்திருக்கிறாள். தலைவன் வந்துவிடுவான் என்ற நம்பிக்கை மட்டும் தளர வில்லை. இச்சமயத்தில், தலைவன் போரில் வென்று வெற்றி முழக்கத்துடன் திரும்ப வருகின்றான். அவன் வருகின்ற தேரின் ஆரவாரம், சோர்ந்து கிடந்த தலைவிக்கு மகிழ்ச்சியை ஊட்டுகிறது. இதுவே முல்லைப்பாட்டின் அமைப்பாகும்.

முல்லைப்பாட்டின் சிறப்பியல்புகள் பல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட ஒரு பாடல். ஆசிரியரின் பெயரைத் தவிர எதுவும் தெரியாத சூழலில் பெயரற்ற தலைவனும் தலைவியும் தங்கள் நிலத்திற்குரிய ஒழுக்கத்தைத் திறம்படப் பின்பற்றுவதை ஒரு நாடகம் போல் படிப்போர்

கண்முன் காட்டுகின்றார் புலவர். எந்த ஊர் என்று தெரியா விட்டாலும், தமிழ்நாட்டின் ஒரு பகுதி மலர்களின் பட்டியல், திருமால் கோயிலில் வழிபாட்டு முறை, வரம்கேட்டல், சகுனம் பார்த்தல், பாடி அமைத்தல், காவல் காத்தல், வெற்றி விழா என வாழ்வியலின் பல அம்சங்களை 103 அடிகளில் எழுத்துச் சித்திரமாகக் காட்டும் திறன் வியப்பில் ஆழ்த்துகிறது.

ஆயினும், தமிழகத்தின் இன்றைய சூழலில், பெரியாரியல் பார்வையில் இப்பாடலைத் திறனாய்வு செய்தால், பல புதிய பரிமாணங்கள் வெளிப்பட்டு, பாடலின் சிறப்பை விளக்கும் என்னும் கருத்துதான் இக்கட்டுரையின் அடிப்படை நோக்கம். முல்லைப்பாட்டு முல்லை நிலத்திற்குரிய ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லுவது; பிரிந்து சென்ற தலைவன் வரும் வரையிலும் தலைவி பொறுத்துக் கொண்டிருத்தல் முல்லையொழுக்கம். இந்த முல்லைத்திணையே "கற்பொழுக்கம்" எனவும் வழங்கப்பெறும் என்ற அறிமுகக் கருத்தை, "புருஷர்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது பாஷைகளில் தனி வார்த்தைகளே காணாமல் மறைபட்டுக் கிடப்பதற்குக் காரணம் ஆண்களின் ஆதிக்கமே தவிர வேறில்லை" (பெரியார் களஞ்சியம் 5/12) என்ற பெரியாரின் கருத்தோடு இணைத்துப் பார்க்கும்போது சில புதிய பரிமாணங்கள் வெளிப்படுகின்றன.

கணவன் - மனைவி இருவரும் பிரிந்திருக்கும்போது பிரிவுத்துயர் இருவரையும் சமமாகப் பாதித்தால்தான் இயல்பாக இருக்கும். ஆனால், முல்லைப்பாட்டில், தலைவி பிரிவாற்றாமை யால் இளைத்து, வளையல்கள் கழன்று, துன்புறும்போது தலைவன் போரில் தீவிரமாக இருக்கிறான். தலைவியைப் பாதித்த அளவிற்குப் பிரிவுத் துயர் அவனைப் பாதிக்கவில்லை. முல்லைப்பாட்டில் மட்டுமல்ல, நெடுநல்வாடையிலும் புலவர் தலைவி - தலைவன் மனநிலையை வேறுபடுத்திக் காட்டு கின்றார். இச்சூழலை டாக்டர் மு. வரதராசனார் பின்வருமாறு விளக்குகின்றார்.

நக்கீரனார், ஒரு பெண் கொற்றவை கோயிலில் நின்று வழிபடுதலை எழுதிக்காட்டுகிறார். ஒன்று, பாண்டியனுடைய அரண்மனையில் கோப்பெருந்தேவி பிரிவாற்றாத் துயரத்தால்

மெலிந்து வருந்தும் காட்சி; மற்றொன்று போர்க்களத்தை அடுத்த பாசறையில் நள்ளிரவில் புண்பட்ட வீரரையும் விலங்குகளையும் பாண்டியன் கண்டு துயராற்றித் திரிதரும் காட்சி. வாடைக்காற்று அரண்மனையிலும் வீசுகிறது. பாசறையிலும் வீசுகின்றது. அரண்மனையில் அரசியின் பிரிவாற்றாத் துயரத்தை மிகுதிப்படுத்துகிறது. பாசறையில் அரசனின் கடமை உணர்ச்சியைச் சிறப்பிக்கின்றது.

(புனையா ஓவியம், xii)

இந்தச் சூழலைப் பெண்ணியப் பார்வையில் பார்த்தால், புதிய பரிமாணங்கள் வெளியாகின்றன. ஆணாதிக்க மனநிலை குறித்துப் பேரா. ரவீந்திரநாதன் பின்வருமாறு விளக்குகின்றார்.

...... ஆண்கள், தங்களது ஆண் ஆதிக்க உணர்வு காரணமாக உணர்ந்தோ (Consciously) உணராமலோ (unconsciously) சமுதாயத்தின், அரசியல், பொருளாதாரச் சமூகப் பிரச்சினை களில் பெண்களுக்கு எந்தப்பொறுப்பும் கருத்துரிமையும் வழங்காமல் பெண்களை ஒதுக்கி வைத்துள்ளனர். "பெண்" என்ற அமைப்பின் தகுதியைக் குலைத்துவிட்டனர். பெண்கள் ''அற்பமான மற்றதுகள்'' ஆக (Non-Significant others) ஆக்கப்பட்டுவிட்டனர். (ஒப்பிலக்கியப் பார்வை, 91)

இச்சூழல் மாற, பெரியார் பெண் கல்வியை வலியுறுத்துகிறார்.

.... கும்மி, கோலாட்டங்களை ஒழித்துவிட்டு, ஓடவும், குதிக்கவும், தாண்டவும், கைக்குத்து, குஸ்தி முதலியவை களையும் சொல்லிக் கொடுத்து ஒரு ஆண்பிள்ளைக்குள்ள பலம், தைரியம், உணர்ச்சி ஆகியவைகள் பெண்களுக்கும் உண்டாகும்படியாகவும் செய்ய வேண்டும்.

(பெரியார் களஞ்சியம் 5/157)

கோப்பெருந்தேவியும் (நெடுநல்வாடை) முல்லைப் பாட்டின் தலைவியும்தான் போர்க்களத்திற்குச் செல்ல இயல வில்லையே தவிர, சாதாரணப் பெண்கள் போர்க்களத்தில் பணியாற்றினார்கள் எனும் செய்தி நம்மை வியக்க வைக்கிறது, அப்போதுகூட அவர்கள் ஆண்களுக்குத் துணை செய்யவே சென்றார்கள் என்ற செய்தி வருந்தற்குரியது.

பெண்கள் பாசறைக்குச் செல்லும் வழக்கம் பண்டைக் காலத்திலிருந்தது. அரசன் போருக்குப் போகும்போது அவர் களையும் அழைத்துச் செல்வான். அப்பெண்கள் இராக்காலத்திலே அரசனுடைய படுக்கையறையைப் பாதுகாக்கும் காவலர்களுக்குத் துணை செய்வார்கள் விளக்கு அணையாமல் பார்த்துக் கொள்வார்கள்...

(சாமி. சிதம்பரனார். பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும், 104, அழுத்தம் எனது)

இப்பெண்கள் வாளணிந்திருந்தாலும், பார்க்கும் பணி, ஆண்களுக்கு உதவியாக விளக்கேற்றுவது. இங்குப் பெண்ணியம் குறித்த பேரா. ரவீந்திரநாதனின் கூற்று கருதத் தக்கது.

.... இன்றும், இன்னும், ஆண்கள் பெண்களைத் தங்களைச் சார்ந்துள்ளவர்களாகவும், தங்களுக்கு, வாழ்க்கையின் உச்சத் திற்குச் செல்ல உதவும் ஏணிப்படிகளாகவும், தங்களது பாலியத் தேவைகளுக்குப் பயன்படும் உடல்களாகவும் தான் கருதுகிறார்களே தவிர, பெண்களும் தங்களுக்குச் சமமானவர்கள் தான், மனிதர்களாக மதிக்கப்பட வேண்டிய வர்கள்தான் என்று கருதுவதே இல்லை.

(ஒப்பிலக்கியப் பார்வை, 89)

அறிவியல் வளர்ச்சி காரணமாக, உலகமே ஒரு கிராமமாகச் (Global Village) சுருங்கிவிட்ட சூழலில் கூட, இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் பெண்ணியம் வேரூன்றவில்லை என்பது கசப்பான உண்மை. பெண் சிசுக்கொலை, வரதட்சணைக் கொடுமை போன்ற மனித நேயக் குறைவான நிகழ்வுகள் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்தச் சூழலில், முல்லைப்பாட்டிலோ நெடுநல்வாடையிலோ பெண்ணியக் கருத்துக்கள் வேரூன்றவில்லை என்பது ஒரு அழுத்தமான வாதமே தவிர, வேறல்ல.

முல்லைப்பாட்டிலே, நல்ல இலக்கியச் சுவை உண்டு. சமுதாயக் கவலை கொண்ட அரசன் உண்டு. சகுனம் பார்க்கின்ற மக்கள் உண்டு. மலர்களை ரசிக்கின்ற மனம்

உண்டு. அமைதியான சமூகச்சூழல் உண்டு. பெண்களைப் பெண்களாகப் பார்க்கின்ற பெண்ணியச் சூழல் இல்லை என்பது ஒரு புதிய செய்தி. இத்தகு விவாதங்களுக்கெல்லாம், செவ்வியல் படைப்புகள் இடம்கொடுக்கின்றன என்பதுதான் சிறப்பு.

துணைநூல்கள்

- இரவீந்திரநாதன்.சுப., ஒப்பிலக்கியப்பார்வை : தமிழும் ஆங்கிலமும், சபாநாயகம் பப்ளிகேஷன்ஸ், சிதம்பரம். 2003
- சிதம்பரனார். சாமி., பத்துப்பாட்டும் பண்டைத்தமிழரும் சென்னை : அறிவுப்பதிப்பகம், 2009
- மாணிக்கம். அ., சங்க இலக்கியங்கள்: மூலமும் உரையும் பத்துப்பாட்டு (முதல் பகுதி), சென்னை : வர்த்தமானன் பதிப்பகத்தார்.
- பெரியார் களஞ்சியம் : தொகுதி 5, சென்னை பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, 2004

பத்துப்பாட்டு

சங்க இலக்கியம் தமிழர்களின் அறிவுக்கருவூலமாக விளங்குவதோடு தொன்மைத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுப் பரப்பை அளந்தறிய உதவும் ஆவணங்களாக உதவன. இவ்விலக்கியங்கள் மனித உயிரி சமூக மனிதனாகக் கூர்தலறம் பெற்ற வளர்நிலையில் ஏற்பட்ட பல்வேறு படிநிலைகளை, வாழ்வியல் அனுபவங்களைத் தன்னகத்தே கொண்டவை.

இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்த மனித உயிரினம் இயற்கையைக் கொஞ்சம் கொஞ்சமாக உள்வாங்கியதோடு, தன்னையும் உணர்ந்து, தனக்கென்ற ஒரு வாழ்வியல் பண்பாட்டு நெறியை உருவாக்கி, உலக உயிரினத்திலிருந்து வேறுபட்ட தனித்த உயிரினமாக மாறியதோடு, உணர்விலும் மானுட உணர்வைத் தனித்துவமாக உருவாக்கிக் கொண்டமையை உணர்த்துவன சங்க இலக்கியங்கள். அவ் உணர்த்துகையெல்லாம் மனித வாழ்வியல் அறிவிற்கு உட் பட்டவை; அதாவது அனுபவ அறிவிற்கு உட்பட்டவை. வாழ்வியல் அறிவானது காரணகாரியங்களோடு தொடர் புடையது. காரண காரியங்களுக்கு அப்பாற்பட்டு செல்லாதது; அதாவது பகுத்தறிவிற்கு உட்பட்டது. பகுத்தறிவிற்கு அப்பாற் பட்டது அன்று.

மனிதகுல வாழ்வியல் அனுபவங்களை வெளிப்படுத்துகிற சங்க இலக்கியப் பத்துப்பாட்டுள் பகுத்தறிவுச் சிந்தனையை ஆராய்வது கட்டுரையின் நோக்கமாயினும், அச்சிந்தனைகளைப் பட்டியலிட்டுக் காட்டாது, மனித உயிரியாகப் பிறப்பெடுத்த உயிரினத்தை 'மக்கள்' என்றும் 'மாக்கள்' என்றும் இரு வேறு சொற்களால் வேறுபட சுட்டப்படுவதன் காரணத்தை ஆராய்வதே அடிப்படையாய் அமையும். அதனுள்ளும் மனித உயிரிகள் 'மக்கள்' என்று அழைக்கப்படாமல் 'மாக்கள்' என்று

உல. பாலசுப்பிரமணியன்
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, அமெரிக்கன் கல்லூரி,
மதுரை - 625 002.

அழைக்கப்படுவதன் காரணத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாய் அமையும்.

திருமுருகாற்றுப்படை மனிதனை 'இருபேர் உருவின் ஒரு பேரியாக்கை' எனக் கூறுகிறது. இவ்வடிக்கு 'மக்கள் வடிவும் விலங்கின் வடிவுமாகிய இரண்டு பெரிய வடிவினையுடைய ஒன்றாகிய பெரிய உடல்' (அடி 57, நச்சர் உரை) என்று உரையெழுதுவர் உரைகாரர்.

இவ் அடியில் உள்ள 'யாக்கை' என்பது மனிதனின் புறவடிவையும்; அதாவது உடலையும், 'இருபேர் உரு' என்பது இரண்டு பெரிய உணர்வுகளையும்; அதாவது விலங்குணர்வும் மனனுணர்வும் சேர்ந்து உருவாகிய அக வடிவையும் உணர்த்துகிறது. அவ்விரு உணர்வில் விலங்குணர்வு குறைந்த மனனுணர்வு மேன்மைப்பட்டு, உணர்ந்தோங்குமானால் அவ்வுயிர் உயர்திணை என்றும் கீழ்மைப்பட்டு விலங்குணர்வு உயருமானால் அவ்வுயிர் அஃறிணையென்றும் அழைக்கப்படும் எனத் தொல்காப்பியம் இலக்கணப்படுத்தும்.

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே' (தொல். சொல். 1)

என்னும் நூற்பா உலக உயிர்களை வகைப்படுத்தும் வரையறையாகும். திருமுருகாற்றுப்படை,

குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாயல் துணங்கை.... (திரு.மு. : 52-56)

என்று விரித்து விலங்குணர்வு மேலோங்கியுள்ள மனிதனின் நிலையை நுண்ணிதின் விளக்கும். மேலும், மானுட உணர்வை,

... ... செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்

நன்னர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே... (திரு.மு. : 62-66)

என்றும் விவரிக்கும்.

செம்மல் உள்ளமொடு செல்குவீராயின் (சிறுபா. 145)
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
(குறுந் : 270:5, 275:5)

அருந்தொழில் முடித்த செம்மல் உள்ளமொடு
(அகநா : 184:5)

என்றும் சங்க இலக்கியங்களும் மானுட உணர்வைப் பலவாறு பேசும் நிலையின. இதனையே,

மாவும் புள்ளும் ஐயறி வினவே (தொல். மரபு : 32)

என்று தொல்காப்பியமும் விதி வகுக்கும் உயிர்களைக் கொன்று குருதியாடி நிணந்தின்னும் விலங்குணர்வு என்றும், செம்மைப் பட்ட; பக்குவப்பட்ட உள்ளத்துடன் வினைமுடித்து அதன்வழி ஒழுகிய வாழ்க்கையுடைய மனித உணர்வு என்றும் உணர்த்துவன சங்க இலக்கியங்கள். அதனாலேயே,

மக்கள் தாமே ஆறறி வுயிரே (தொல். மரபு : 33)
அவற்றொடு மனனே (தொல். மரபு : 27)

என்றும் மனித அறிவை, மனிதனை வரையறுப்பார் தொல்காப்பியர்.

இவ்வாறாக, விலங்குணர்வும் மனித உணர்வும் ஒருங்கு சேர்த்து யாக்கப்பட்ட உடல் என்பதனையே, 'இருபேர் உருவில் ஒருபேர் யாக்கை' என்ற அடி சுட்டுகிறது. இரண்டு முரண்பட்ட உணர்வுகளைத் தன்னகத்தே கொண்ட மனிதன் விலங்குணர்வைக் கட்டுக்குள் கொண்டு, மனனுணர்வை மேம்படச் செய்வதையே 'நன்னர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப' எனக் கூறுகிறது முருகாற்றுப்படை.

இவ்வரையறையோடு பத்துப்பாட்டை அணுகுங்கால் பத்திடங்களில் 'மாக்கள்' எனும் சொல் இடம்பெறுகிறது.

அவற்றைத் தொகுத்து, வகைப்படுத்துங்கால், 1. விலங்கு களைப் போல் உடல் வலிமையே பெரிதென்றிருத்தல் 2. பொருளே வாழ்வென்றிருத்தல் 3. இம்மை துறந்து மறுமையை நோக்கி வாழ்தல் என்ற மூன்று நிலையின்கண் தம் வாழ்வை அமைத்துக்கொண்ட மக்களை மாக்கள் என்று குறித்திருப்பதை அறிய முடிகிறது. அவ்விடங்களை ஆய்ந்து, அதன் காரணத்தை அறிவோம்.

1. உடல் வலிமையே பெரிதென்றிருத்தல்

ஆறுகிடந் தன்ன அகல்நெடுந் தெருவிற்
படலைக் கண்ணிப் பருஏர் எறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டுமூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்து
இருகோட்டு அறுவையர் வேண்டுவயிற் திரிதர
(நெடு. : 30-35)

................பருஏர் எறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள் (பெரும். : 60-61)

என்னும் ஈரிடங்களிலும் 'மாக்கள்' எனும் சொல், மதுவினை அருந்திய மக்கள் 'மனன்' உணர்வழிந்து விலங்குணர்வு மிகப் பெற்று தெருக்களில் விலங்குகள்போல் திரிபவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்கள் மது அருந்துதலையும், மதுவை விருந்தாகப் புரத்தலையும் பல்வேறிடங்களில் போற்றக் காணலாம். சங்க இலக்கியத்தில் பெருமிதத்தோடு பேசப்பட்ட மதுவருந்துதல், இவ்விடங்களில் மதுவருந்தியவரை 'மாக்கள்' என அழைப்பதற்கான காரணத்தை ஆராயுங்கால், மது வருந்துதல் கடியப்படவில்லை என்பதும், மதுவருந்தியவர் நன்னெறிப்பட்ட செம்மல் உள்ளமின்றி, தன்னிலை தவறி மனனுணர்வு அழிந்து உடல் வலிமையே பெரிதென்று எண்ணி, தெருக்களில் விலங்குகளாய்த் திரிதரூஉம் பண்பே மாக்கள் எனச் சுட்டக் காரணமாய் அமைகிறது என்பதை உணர முடிகிறது.

இத்தன்மை, மது அருந்தியதால் அன்று என்பதையும், அம் மனிதன் தன் மனனுணர்வு அழிந்து விலங்குணர்வு மிகுந்து உடல் வலிமையையே முதன்மையாகக் கொண்டமை யால் மாக்கள் என அழைக்கப்படுவதை ஓர்ந்துணர வேண்டும். இச்சிந்தனை, நன்றும் தீதும் பகுத்தறிவும் அறிவு அற்று, உடல் வலிமையையே பெரிதாக மதிக்கும் மனிதனை மாக்கள் என அழைக்கும். இப்பாகுபாடு பகுத்தறிவுச் சிந்தனையின் விளைவே.

கருந்தொழிற் கலிமாக்கள் (பட்டி. : 62)

வலிய தொழிலை உடைய செருக்கின பரதவர்; அறிவின் துணையின்றித் தம் உடல் வலிமையையே பெரிதாகப் பேணி, கடுந்தொழில்களைச் செய்யும் மாக்கள்.

பெருநீர் போகும் இரியன் மாக்கள் (பெரும். : 432)

மிகுதியான நீரினை உடைய ஆற்றுத்துறையில் நீரின் தன்மை அறியாது இறங்கும் அறிவில்லாத மாக்கள்.

நிலைத்துறை வழீஇய மதனழி மாக்கள்
புனற்படு பூசலின் விரைந்து வல்லெய்தி

(மலைபடு : 280-81)

நிலையான, எப்போதும் பயன்படுகின்ற துறைவழியாக இறங்காமல் வழங்காத் துறையில் இறங்கி நீரில் அழிந்து போகும் மாக்கள்.

இவ்விரு இடங்களிலும் நீரின் தன்மை அறிந்து, அதற்கேற்ப நடவாமல், அறிவின்றி, உடல் வலிமையை முன்னிறுத்திச் செயற்படும் மக்களை மாக்கள் எனக் கூறுவது பகுத்தறிவின் விளைவாம்.

2. பொருளே வாழ்வென்றிருத்தல்

பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள் (முல். : 55)

தமது வாழ்க்கைக்குரிய பல்வகைச் செயல்களையும் செய்து வாழாது, நேரத்தைக் கணக்கிடுவதையே வாழ்க்கையாகக் கொண்டு காலம் கழிக்கும் மாக்கள்.

பூவும் புகையும் ஆயும் மாக்களும் (மதுரைக். : 515)

பூக்களையும், சாந்தையும் ஆய்ந்தாய்ந்து, விற்பதையே தம் வாழ்வாகக் கொண்ட மாக்கள்.

..

புலம்பெயர் மாக்கள் கலந்து இனிதுஉறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே... (பட்டி. : 217-220)

'மாக்கள் என்றார் ஐயறிவே உடையராதலின்; என்றது 'சோனகர், சீனர் முதலியோரை' ஐயறிவு - ஐம்பொறி உணர்வு - மாக்கள் மனன் உணர்வின்றி ஐம்பொறியுணர்வையே உடைய விலங்கு போல்வார், என்பர் நச்சினார்க்கினியர்.

புகார்ப்பட்டினத்தில் வந்து தங்கியுள்ள சோனகர், சீனர் முதலியோரைப் 'புலம்பெயர் மாக்கள்' என்றது ஏன்? அவர்கள் வந்து தங்கியிருக்கின்ற மிகப்பெரிய புகழை உடைய புகார்ப்பட்டினத்தையே தரினும் வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒயிய வாரேன் என ஏன் கூறவேண்டும்?

பொருளையே பற்றுக்கோடாகக் கொண்டு, தாம் வாழும் ஊரினை விட்டு நீங்கி, பலகாலம் உற்றாரைப் பிரிந்த துயரின்றி மகிழ்ச்சியோடு இருப்பதால் சோனகர், சீனர் முதலியோரை 'மாக்கள்' எனக் குறித்தனர். இவர்கள் உறைகின்ற புகார்ப் பட்டினத்தைத் தந்தாலும் தன் தலைவியை விட்டுப் பிரிந்து வரமாட்டேன் எனக் கூறும் கூற்று அன்புமிக்கான் அன்று; அறிவான் விளைந்த கூற்று.

தன்னையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழும் தலைவியைப் பிரிந்து தனித்துச் சென்று பொருள் தேட முற்படுதல் அறிவாண்மை அன்று; மனன் உணர்வற்றார்கள் செய்யும் செயல் ஆதலின் அவர்களை 'மாக்கள்' எனக் குறித்தனர் சங்க கால மக்கள்.

இதன் காரணத்தாலேயே பல்வகைப் பிரிவிற்கும் ஏற்றார் போலே கால வரையறை செய்தனர் பண்டைத் தமிழர்.

வினைமேற் செல்லும் தலைவன், பிரிவால் வருந்தும் தலைவியின் துயரம் எல்லை கடவா வண்ணம் இருக்க வேண்டும் என்றும், காத்திருத்தல் எல்லை கடந்தால் இரங்கலாக மாறுவதையும்; அதாவது முல்லைத் திணை நெய்தல் திணையாகவும் அதனினும் பிரிவு மிகுமாயின் பெருந்திணை யாகவும் பகுக்கப்படுவதை ஓர்ந்துணர்க.

இதனால், பொருளே வாழ்வெனக் கொளின், அது மக்கட் பண்பன்று; மாக்கட் பண்பாம் என உணர்க இப்பண்புடைய சோனகர், சீனர் முதலியோரைப் 'புலம்பெயர் மாக்கள்' எனக் குறித்தனர்.

3. இம்மை நோக்கமன்றி மறுமையை வாழ்வென்றிருத்தல்

செம்மை சான்ற காவிதி மாக்களும் (மதுரைக் : 499)

தவம் செய் மாக்கள் (பொருநர் : 91)

காவிதிப் பட்டம் கட்டின அமைச்சர்களும், மண்ணில் நல்ல வண்ணம் வாழாமல், விண்ணில் வீடுபேறு அடையும் பொருட்டுத் தவம் செய்மாக்களும், தம்முடைய பிறவி பயன் அடையுமாறு இவ்வுலக வாழ்வை வாழாது; துறந்து; மறுமை வாழ்வை நாடுவது அறிவிற்கு ஒவ்வாதது; மானுடப் பிறப்பைக் கேலிக்குரியதாக்குவது. அதனால் ஐம்புல நுகர்ச்சி களைக் கட்டுப்படுத்தி, தவம் செய்வது பகுத்தறிவன்று. எனவே தவம் செய் மாக்கள் எனக் குறித்தனர். சங்க கால மக்கள் வாழ்க்கை நிறைவை,

காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே (தொல். கற்பி. 51)

என்று கொண்டனர். இவ்வுலகத்தில் ஐம்புல நுகர்ச்சியையும், மனன் உணர்வுக்கு உட்பட்டு, ஒழுங்கமைத்து, சமூக வரையறைக்கு உட்பட்டு வாழ்தலே வாழ்வாம் என்னும் நெறியைச் சங்க காலத்துக் கொண்டனர். அவ்வாறு வாழ்ந்தாலே அவ்வுயிர் உயர்திணை எனக் கொள்ளப்பட்டது. அன்றாயின்,

மக்கள் இனத்துள் பிறப்பினும் அஃறிணை என்னவே கொள்ளப்படும் என்ற நெறியில் 'மாக்கள்' எனச் சுட்டினர் எனக் கொள்ளவேண்டும்.

இதனாலேயே, ஐம்புலன் நுகர்ச்சியையும் மனன் (மனம்) என்னும் ஆறாவது அறிவுக்கு உட்படுத்தி, காரண காரியங்களின் அடிப்படையில் பகுத்தாய்ந்து வாழ்தல் மனிதப் பண்பு என்றும், அவ்வாறன்றி, ஐம்புல நுகர்ச்சியையே பற்றுக்கோடாகக் கொண்டு, மனனுணர்வு அழிந்து உடல் வலிமையையே பெரிதென்றெண்ணி வாழ்தலும், பொருளே பற்றுக்கோடாய்க் கொண்டு அதுவே வாழ்வென்று வாழ்தலும், இம்மை வாழ்வைத் துறந்து மறுமையை முதன்மையாகக் கொண்டு தேடுதலும் மக்கட் பண்பன்று என்பதும், அவ்வாறு ஒழுகுவாரை மாக்களென்று பதிவு செய்தமையும் பகுத்தறிவுச் சிந்தனையின் விளைவாம்.

பத்துப்பாட்டு நூல்களில் பத்திடங்களில் உள்ள மாக்கள் என்னும் சொல்லும், அச்சொற் பொருளும் சங்கத் தமிழரின் பகுத்தறிவாதச் சிந்தனையின் விளைவால் ஏற்பட்டமையே என்பது இக்கட்டுரையின் முடிவாம்.

காப்பியங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

சிலப்பதிகாரம்

I

இயற்கை, மொழி, மனித மனம், சமூகம் - எல்லாமே எதிர்எதிர் சக்திகள் நடிக்கும் நாடக அரங்கமாக இருக்கின்றன. இந்த அரங்கில் நிகழும் நிகழ்ச்சிகளைப் பகுத்தறிவுக்கு ஆட்பட்ட மனிதர்களுக்கான அழகியலாக மொழியில் எடுத்துரைக்க முயலும்போது அவற்றில் பல்வேறு கூறுகள் வினைபுரியத் தொடங்குகின்றன. நிகழ்ச்சி ஒழுங்கு, கால ஒழுங்கு, முரண் ஒழுங்கு, திரும்பத் திரும்ப வருதல், கதைமாந்தர், நோக்கு நிலை, மர்ம முடிச்சு, பின்புல அமைப்பு, பேச்சு - இப்படிப் பல; இவைகள் எல்லாமே அடிப்படையில் காரண-காரியம் எனும் பகுத்தறிவு எல்லைக்குள் அமைக்கப்படுகின்றன. அதன் மூலமாக ஒருவிதமான நம்பகத்தன்மையை வாசகனுக்குள் உற்பத்திப் பண்ணும்போதுதான் அந்த எடுத்துரைப்பு (அ) பனுவல் இருப்பு நிலைக்கு வருகிறது. காரண - காரியமெனும் பகுத்தறிவுக்கு அடங்காத எந்தவொரு பனுவலும் நம்பகத் தன்மையை ஏற்படுத்த முடியாது. இந்த நம்பகத்தன்மையை ஏற்படுத்தாத எந்தவொரு பனுவலும் பகுத்துப்பகுத்து ஆராய்வதற்குப் பழக்கப்பட்டுப் போன மனத்தைச் சுமந்து வாழும் மனிதர்களின் உலகில் நிலை பெற முடியாது. எனவே, பெரிய காவியமாக இருந்தாலும் அல்லது நான்கு வரியிலான சிறிய கவிதையாக இருந்தாலும் இந்தக் காரண காரியமெனும் பகுத்தறிவிலிருந்து விலகி நின்றுவிட முடியாது. ஆனால் இந்தக் காரண காரியம் பனுவலின் செயற்பாடுகளில் கரைந்து கலந்து போய்விட வேண்டும்; நுண்ணிய புதைபொருளாகி விட வேண்டும். அப்படிப்பட்ட பனுவலே நெஞ்சை அள்ளும் அற்புதங்களாக உலக இலக்கிய வெளியில் உயிர்ப்புடன் நின்று கொண்டு இருக்கின்றன. அப்படி நின்று கொண்டிருக்கின்ற ஒரு படைப்புதான் இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம் ஆகும். இந்தச் சிலப்பதிகாரம் காரண காரியத்திற்கு உட்பட்டு

க. பஞ்சாங்கம்

முன்னைப் பேராசிரியர்,

காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், புதுச்சேரி - 8.

நம்பகத்தன்மையை வாசகனுக்குள் வடிவமைத்துக் கொண்டே இயங்குகின்ற ஒரு பனுவலாக எவ்வாறு அமைந்துள்ளது என்பதை இனிக் காணலாம்.

II

பனுவலின் தொடக்கமே காரண - காரிய அடிப்படையில் தான் அமைந்துள்ளது. திங்களை, ஞாயிறை, மழையை, பூம்புகாரைப் போற்றுகின்ற போற்றிப் பாடல்கள், ஏன் அவைகளைப் போற்ற வேண்டும் என்று காரண - காரியத்தை முன் வைக்கின்றன. சோழனின் குளிர்வெண்கொடை போன்று தண்ணொளியைப் பரப்புவதால் திங்களைப் போற்றுவோம்; காவிரி நாடனுடைய ஆணைச் சக்கரம் போல மேருமலை யினைச் சுற்றி வருவதால் ஞாயிறைப் போற்றுவோம்; சோழனின் அருள்போல மாமழை பொழிவதால் மழையைப் போற்றுவோம்; சோழனின் மரபோடு மரபாகத் தோன்றி உலகப் புகழுடன் விளங்குவதால் அந்த அழகிய பூம்புகாரையும் போற்றுவோம். இவ்வாறு பிடிக்குள் அடங்காத இயற்கைப் பேராற்றலைப் போற்றுவதற்கான காரணகாரியங்களைப் கற்பிக்கும்போது கதை சொல்லியின் பகுத்தறிவு சார்ந்த அணுகுமுறை காவியத்தின் தொடக்கத்திலேயே பதிவாகி விடுகிறது. சோழனைப் புகழ்தல் என்ற அவருடைய நோக்கமும் நிறைவேறி விடுகிறது.

காவியக் கதை திருமணச் சடங்கு நிகழ்ச்சியில் தொடங்கு கிறது. நிகழ்ச்சிகளை இணைப்பதற்கு எடுத்துரைப்பியலில் இரண்டு விதிமுறைகள் இயங்குகின்றன என்பர்.

1. காலம் சார்ந்த தொடரொழுங்கு
2. காரண காரியத் தொடரொழுங்கு

இந்தத் திருமணச் சடங்கு நிகழ்ச்சிகளிலும் காலம் சார்ந்த ஒழுங்கும் காரண காரிய ஒழுங்கும் வினைபுரிகின்றன. கண்ணகிக்கு 12 வயது ஆகிவிட்டது. கோவலனுக்கும் 16 வயது ஆகிவிட்டது. எனவே, திருமணம். இரண்டு பேரின் பெற்றோரும் உயர்ந்து ஓங்கு செல்வத்தினர் என்பதால், மாநகரமே திருமணத்தைக் கொண்டாடுகிறது. மணம் முடித்த மணமக்கள் ஒருதனிக்குடி வாழ்க்கை மேற்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். ஆண்டுகள் சில ஓடின. புகார் நகர வழக்கப்படி ஆடலும் பாடலும் அழகும் என்று கூறிய

மூன்றிலும் குறைபடாத, பரத்தை குலத்தைச் சார்ந்த மாதவியின் அரங்கேற்றம் நடக்கிறது. பெருங்குடி மக்களுக்கான வழக்கப்படிக் கோவலன், நகர நம்பியர் திரிதரு மறுகில் விற்கப் பட்ட அந்த மாதவி மாலையை வாங்கினான். அவள் மனைக்குள் புகுந்து விடுதலை அறியா விருப்பினன் ஆயினான். மனையகம் மறந்தான். அன்றைய வழக்கப்படிப் பரத்தை யிடம் சென்றவன், மீண்டும் மனையகம் திரும்பியிருக்க வேண்டும்தானே! ஏன் திரும்பவில்லை என்று வாசகனின் காரணகாரிய அறிவு எழுப்புகின்ற வினாவிற்குப் பனுவலுக்குள் "அயர்ந்தனன், மயங்கினன், விடுதலை அறியா விருப்பினன்" என்று காரணத்தையும் முன்வைத்து விடுகிறார் கதைசொல்லி.

இப்படி ஓர் ஆடவன் நடந்து கொள்ளும்போது அடுத்து என்ன நிகழும் என்று மனிதனின் பகுத்தறிவு எதை எதிர்பார்க்குமோ அதற்கேற்ப அடுத்த காதையில் (அந்திமாலை சிறப்புச்செய் காதையில்) கணவனைப் பிரிந்த கண்ணகியின் துன்ப நிலையையும் தன்னிடம் மயங்கிக் கிடக்கும் கோவலனைச் சேர்ந்த மாதவியின் இன்ப நிலையையும் எடுத்துரைக்கிறார் கதை சொல்லி. இவ்வாறு நேரடியாகக் காரண-காரிய அடிப்படையில் எடுத்துரைக்கும் கதை சொல்லி, கோவலன் கண்ணகியுடன் சில ஆண்டுகள் வாழ்ந்தான் என்பார், மாதவியுடன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தான்? பின்னால் 'இலம்பாடுநாணத்தரும்' என்று புலம்பும் அளவிற்கு வான்பொருள் குன்றத்தை எவ்வாறு அழித்தான்? இடைப் பட்ட ஆண்டுகளில் கண்ணகியிடம் போய் வர இருந்தானா? முதலிய பகுத்தறிவு வினாக்களுக்குப் பனுவலுக்குள் விடை அமைக்கவில்லை. பொதுவாகப் 'பனுவலுக்குள்' இப்படியான இடைவெளிகளைத் தங்களுடைய பழக்கப்பட்ட காரண-காரிய அறிவினால் வாசகர்களே பனுவலுக்குள் சிதறிக் கிடக்கும் குறிப்புக்களை, வார்த்தைகளை, நிகழ்ச்சிகளை ஒன்றிணைத்துத் தேவையான காரண-காரியத்தைக் கட்டமைத்துக் கொள்வார்கள். இப்படி வாசகனின் பகுத்தறிவையும் வேலை வாங்கும் விதத்தில் புனையப்படும் பனுவலே தொடர்ந்து காலத்தை வென்று நிற்பதாக விளங்குகிறது. கோவலன் மாதவியோடு எத்தனை ஆண்டு வாழ்ந்திருப்பான்? என்பதற்கான விடையைக் கோவலன் கண்ட கனவில் கண்டெடுத்து விட முடியும். கனவுச் செய்தி இப்படி அமைகிறது.

கோவலன் கூறுமோர் குறுமகன் றன்னாற்
காவல் வேந்தன் கடிநகர் தன்னில்
நாறைங் கூந்த னடுங்குதுய ரெய்தக்
கூறைகோட் பட்டுக் கோட்டுமா வூரவும்
அணித்தகு புரிகுழ லாயிழை தன்னொடும்
பிணிப் பறுத் தோர்தம் பெற்றி யெய்தவும்
மாமலர் வாளி வறுநிலத் தெறிந்து
காமக் கடவுள் கையற் றேங்க
அணிதிகழ் போதி யறவோன் றன்முன்
மணி மேகலையை மாதவி யளிப்பவும்
நனவு போல நள்ளிருள் யாமத்துக்
கனவு கண்டேன் கடிதீங் குறுமென (அடைக்., 95-106)

காமக் கடவுளே கையற்று ஏங்கும்படியான அழகுள்ள குமரிப் பெண்ணாக மணிமேகலை கனவில் காட்சி அளிக்கிறாள்; எனவே மாதவி, மணிமேகலை ஆகியோரைப் பிரிந்து வரும் போது மணிமேகலை 12 வயது அடைந்த குமரிப் பெண்ணாக வளர்ந்து இருக்க வேண்டும். அப்படி யென்றால் குறைந்தது 12 ஆண்டுகளாவது கோவலன் மாதவியோடு வாழ்ந்திருக்க வேண்டும். இதேபோல் கண்ணகியோடு வாழ்ந்த அந்தச் சில ஆண்டு எத்தனை ஆண்டு என்பதையும் உரையாசிரியர்கள் கண்டடைந்துள்ளனர். கண்ணகியின் தோழி தேவந்தி பாசண்ட சாத்தனோடு எட்டாண்டுகள் வாழ்ந்தாள் என்பதைக் கொண்டு கண்ணகியும் கோவலனோடு எட்டாண்டுகள் வாழ்ந்திருக்கலாம் எனக் கணிக்கின்றனர். அப்படியென்றால் கோவலன் மாதவியைப் பிரியும்போது அவனுக்கு வயது 12+8+12=36; கண்ணகிக்கு வயது 12+8+12=32; மாதவிக்கு வயது 12+12=24 இப்படிப் பனுவலுக்குள் சொல்லாது விடுவது காரண-காரியமெனும் பகுத்தறிவுக்கு வேலைதரும் ஓர் உத்திதான்.

III

கண்ணகி வாழ்வில் பகுத்தறிவிற்கு அப்பாற்பட்ட எதிலும் ஆர்வம் இல்லை என்றும் தெரிகிறது; தேவந்தி வருகிறாள்; கண்ணகியைப் பார்த்து இவ்வாறு பேசுகிறாள்:

“.......................................பொற்றொடீஇ
கைத்தாயும ல்லை கணவற்கு; ஒரு நோன்பு

பொய்த்தாய் பழம்பிறப்பில்; போய்க் கெடுக; உய்த்துக்
கடலொடு காவிரி சென்று அலைக்கும் முன்றில்,
மடலவிழ் நெய்தல்அம் கானல், தடம் உள,
சோமகுண்டம், சூரிய குண்டம்; துறைமூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு
தாம்இன் புறுவர் உலகத்துத் தையலார்;
போகம்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்; யாம் ஒரு நாள்
ஆடுதும் என்ற அணி - இழைக்கு. (கனாத்திறம், 55-63)

இதைப் 'பீடு அன்று' எனப் பகுத்தறிவால் மறுத்து விடுகிறாள்; இதைப்போலவே வேட்டுவ வரியில் காரண-காரிய அறிவிற்குப் பொருத்தமில்லாமல், தெய்வம் ஏறப்பெற்ற சாலினி, கண்ணகியைப் பார்த்து,

''இவளோ கொங்கச் செல்வி, குடமலையாட்டி
தென்தமிழ்ப்பாவை செய்ததவக் கொழுந்து
ஒருமாமணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமாமணி'' (வேட்டுவ, 47-50)

என்று உரையாடும்போது,

''பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி'' என்று
அரும்பெறல் கணவன் பெரும்புறந்து ஒடுங்கி
விருந்தின் மூரல் அரும்பினள் நிற்ப'' (வேட்டுவ, 51-53)

என்று ஏளனமாக இளமுறுவல் செய்ததோடு 'பேதுற்ற மொழி'' என்று இகழ்வதையும் பார்க்கிறோம்.

கண்ணகியின் இந்தப் பகுத்தறிவுப் பார்வை, நடத்தை எல்லாமே "கொண்ட கொழுநன் கொலை செய்யப்பட்டான்" என்ற செய்தி வந்து காதில் விழுந்ததற்குப் பிறகு காரண-காரியம் கடந்த ஒரு தளத்தில் இயங்கத் தொடங்கி விடுகிறது;

''காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?''
(துன்ப, 51)

என்று சூரியனிடம் கேட்பவளாகவும்,

''கள்வனோ அல்லன்; கருங்கயற்கண் மாதராய்!
ஒள்ளெரி உண்ணும் இவ்வூர்............'' (துன்ப, 52-53)

என்று 'ஒரு குரலை' அங்கிருந்து கேட்கின்றவளாகவும் வெளிப் படுகிறாள். இப்படிக் காரண-காரியத்தில் இருந்து தாவுவது போன்ற பாவனையைக் காரியமாக்க, அடிப்படையில் "கணவன் கொலை" செய்யப்பட்டான் என்ற காரணம் பயன் படுத்தப்படுகிறது. மேலும், ஊர்சூழ்வரியில் மார்பில் விழுந்து அழும்போது வெட்டுண்டு கிடக்கும் கோவலன் உயிர் பெற்று

''நிறைமதி வாள்முகம்

....

கன்றியது...............'' (ஊர்சூழ், 62-63)

என்று அவள் கண்ணீரைத் துடைத்ததோடு

''எழுதெழில் மலர் உண்கண் இருந்தைக்க'' (ஊர்சூழ், 67)

எனச் சொல்லிப் போகிறான்; உடனே கண்ணகி இந்த அற்புத நிகழ்ச்சியை நம்பவும் முடியாமல் மறுத்தொதுக்கவும் முடியாமல் தடுமாறுகிறாள்.

''மாயங்கொல்? மற்றென்கொல்? மருட்டியதோர்

தெய்வம் கொல்?

போயெங்கு நாடுகேன்? பொருள் உரையோ இதுவன்று''

(ஊர்சூழ், 68-69)

இவ்வாறு காரண-காரியம் கடந்த நிலையும் காரண-காரிய அறிவும் கலந்து கரைந்து மனிதர்களை வதைக்கும் நிலையை யும் காட்டுகிறார் கதைசொல்லி.

வழக்குரையாடும்போதும் காரண-காரியமெனும் பகுத்தறிவு தான் செயல்படுகிறது; "யாரையோ மடக்கொடியோய்" எனக்கேட்ட பாண்டியனுக்கு, 'என் கால்சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற், கொலைக்களப்பட்ட கோவலன் மனைவி, கண்ணகி என்பது என் பெயர்' எனப் பல கேள்விகள் கேட்டுப் பெற வேண்டிய விடைகள் பலவற்றையும் கேளாமலேயே தொகுத்துக் கொடுத்துவிடுகிறாள்; கண்ணகியின் பகுத்தறிவு இருந்த நிலை அப்படி. உடனே மன்னன் 'கள்வனைக் கோறல் கடுங்கோல்' அன்று; வெள்வேற் கொற்றம் காண்" என்று காரண-காரியம் பேசியவுடன் புரிந்து கொள்ளுகிறாள்; இவன் வழக்கையும் புரியவில்லை; தான் என்ன செய்திருக்கிறோம்; அதில் எவ்வளவு பெரிய

பிழை இருக்கிறது என்பதையும் புரியவில்லை; வழக்கை எப்படித் தீர்த்து வைப்பது என்பதற்கான வழிமுறையும் அவனுக்குத் தெரியப் போவதில்லை என்பதையெல்லாம் மன்னனின் அந்த ஒரு கூற்றில் இருந்து அறிந்து கொள்ளு கிறாள். எனவே, நேரடியாக வழக்கைத் தீர்த்து வைப்பதற்கான காரண காரியம் சார்ந்த ஒரு வழிமுறையைப் படாரென்று உடனே முன் வைக்கிறாள்; "என் காற்சிலம்பு மணியுடை அரியே" என்ற கண்ணகியின் குரல் காதில் விழுந்தவுடன், வழக்கை முடிப்பதற்கான வழி தெரிந்துவிட்ட மகிழ்ச்சி புலப்பட மன்னன் பேசுகிறான், "தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி; யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே" இந்த ஒரு சிறு பொறி கிடைக்காமல்தான் பாண்டியன் தவித்துள்ளான். கண்ணகியின் பகுத்தறிவு இந்த இடத்தில் பிரமாண்டமாக இயங்கியுள்ளது. தன் தவறு தெரிந்தவுடன் தன் சாவிற்கான காரணத்தையும் பாண்டியன் பதிவு செய்கிறான்.

பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன் (வழக்குரை, 74-75)

எனவே கள்வனாகிய நான்தான் கொலை செய்யப்பட வேண்டிய ஆள்; மேலும்

'மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது..............." (வழக்குரை, 76-77)

எனவே, 'கெடுக' என் ஆயுள் எனச் சாகிறான். கூடவே தேவியும் தன் உடன் சாவிற்கான காரணத்தைக் கூறியே சாகிறாள்; "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" - எனக் காரணம் கற்பிக்கிறாள்; இதேபோல் முன்பு வெட்டுண்ட கோவலனைப் பார்த்த கண்ணகியும் தான் சாகாமல் உயிர் வாழ்வதற்கான காரணத்தைக் கூறியே வாழ்கிறாள்; "காய்ச்சினம் தணியாமல் நான் சாக மாட்டேன்; தீ வேந்தன் தனைக் கண்டு, நீதி கேட்டுக் கணவன் குற்றமற்றவன் என உலகிற்குக் காட்டிய பிறகே வாழ்வை முடித்துக் கொள்வேன்" என்று தன் இருப்பிற்கான காரணத்தைக் கற்பித்துக் கொள்கிறாள்.

வழக்குரையாடி வென்ற கண்ணகி அரசன், அரசி ஆகிய இருவரையும் மாய்த்ததோடு ஓய மாட்டேன்; மதுரையையும் ஒழிப்பேன் எனப் புறப்படுகிறாள். "என் காதலன் கொல்லப்

படுவதற்குக் காரணமாய்த் தீயவர்களின் கூடாரமாக இருக்கும் இந்த மதுரைமாநகர் மேலும் கோபமுற்றுச் சீற்றம் கொண்டேன்; எனவே, குற்றமிலேன் யான்'' என்று இடது மார்பை வலது கையால் திருகி விட்டெறிகிறாள். பார்ப்பனக் கோலத்தில் தீக்கடவுள் தோன்றி மதுரையிலுள்ள தீத்திறத்தார் அனைவரையும் எரித்து முடிக்கிறது. இங்கேயும் தன் துயருக்குக் காரணமாக ஒற்றை மனிதனை - அரசனை - முன்னிறுத்தாமல், மதுரையில் மண்டிக் கிடக்கும் பல்வகையான தீமையே காரணமெனக் காரணங்களைப் பன்முகப்பட்ட தளத்திற்குக் கண்ணகி விரிக்கும் போது அவளது பகுத்தறிவின் வலுவினை விளங்கிக் கொள்ள முடிகிறது.

தொடர்ந்து வஞ்சிக் காண்டத்தில் வேங்கை மரத்தின் கீழ் ஓர் அதிசயத்தைக் குறவர்கள் பார்க்கிறார்கள்; எனவே அதிசயச் செயலுக்குரியவளான கண்ணகியைத் தங்கள் குல தெய்வமாகக் கொண்டாடி மகிழ்கிறார்கள்; மலைவளம் காண வந்த செங்குட்டுவனுக்கு இந்த அதிசய நிகழ்ச்சி போய்ச் சேர்கிறது; கணவனுக்காகவே வாழ்வை இழந்த இரண்டு பத்தினிகளில் யாரை நாம் கொண்டாடுவது என்று தன் 'தேவியிடம்' கேட்கிறான்; அவள் கண்ணகியைத்தான் கொண்டாட வேண்டும் என்பதற்கான காரண-காரியத்தை முன்வைக்கிறாள்; நம் நாட்டிற்குள் வந்தவள் என்ற காரணம் போதுமானதாக இருக்கிறது; அவளுக்குச் சிலை எடுத்துக் கொண்டாடப் பொதிகையில் கல்லெடுப்பதா? இமயத்தில் கல்லெடுப்பதா? என்பதற்கும் காரண-காரியத்தோடு முடிவெடுக்கப்படுகிறது; மறத்தகைமையுடைய நெடுவாள் ஏந்திய சேரர் குடிக்குப் பெருமை சேர்ப்பது இமயத்தில் கல்லெடுப்பதுதான் எனக்காரணம் கற்பிக்கப்படுகிறது; கூடவே தமிழர்களை இகழ்ந்த கனக விசயர்க்கும் பாடம் கற்பிக்கக் கிடைத்த வாய்ப்பாகவும் ஒரு கூடுதலான காரணம் கிடைக்கிறது. அதுபோலவே வடநாட்டுப் போர் '18' நாழிகையில் முடிகிறது. பத்தினிக் கோட்டம் எழுகிறது. மற வேள்வியிலேயே சேரன் நாட்களைச் செலவழித்து விடாமல் அறவேள்விப் பக்கம் அவனைத் திருப்பி விடுவதற்கு மாடலன் மறையோன் கூறும் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை முதலிய நிலையாமை குறித்த காரணங்கள் முன் வைக்கப்படுகின்றன.

IV

இவ்வாறு காரண-காரியம் என்கின்ற தர்க்க நெறியிலேயே பனுவலின் கதை நகர்கிறது; ஆனால் இளங்கோ அடிகள் காரண-காரியத்திற்குள் அடங்காத பல்வேறு நிகழ்ச்சிகளை, காட்சிகளை, கதைகளைக் காவியத்திற்குள் கொண்டு வந்துள்ளார்.

கண்ணகிக்கு இடக்கண் துடிப்பது, மாதவிக்கு வலக்கண் துடிப்பது, இந்திரன் வழிபாடு, வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், சதுக்கப் பூதம், பாவை மன்றம், பெரியோன் கோவில், செவ்வேள் கோயில், வாலியோன் கோவில், நெடியோன் கோயில், கொற்றவை வழிபாடு, பாசண்ட சாத்தன், இடாகினிப் பேய், சோமகுண்டம், சூரிய குண்டம், காமவேள் கோட்டம், சாரணர், மனிதர்களை முதுநரியாக்கும் கவுந்தியின் சாபம், புண்ணிய சரவணம், பவகாரணி, இட்ட சித்தி, ஊழ்வினை, கனவுகள், உம்மைப் பயன், பாவம் தீர்க்கக் கங்கை ஆடல், வராத்தோமை, வட்டிகைப் பூங்கொடி, வயந்தமாலை வடிவில் தோன்றும் காடுறை தெய்வம், சாலினி மேல் தெய்வமேறல், தீய சகுணம், சூரியனோடு பேசுதல், குரங்குக்கை வானவன், எழுவகைப் பத்தினிப் பெண்டிர், ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, நெருப்புக் கடவுள், மதுராபுரித் தெய்வம், பழம்பிறப்பு, நீலியின் சாபம், கொற்றவை கோயில் கதவு அடைத்தல், தேவர்கள் கோவலனோடு வந்து கண்ணகியை மேலே கொண்டு செல்லுதல், மின்னுக் கொடி போல் கண்ணகி வானத்தில் தோன்றுவது, வரந்தருவது, இளங்கோவின் கதையைச் சொல்லுவது - முதலிய காவியத்தின் பெரும்பகுதி காரண-காரியத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளால் கட்டமைக்கப் பட்டுள்ளன.

காரண-காரியம் மட்டும் ஒரு பெருங்காவியத்தைக் கட்டி நிறுத்தி விடாது; இவற்றோடு காரண-காரியத்திற்கு அப்பால் நிகழும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் கொண்டு வந்து பிணைத்து விடும் போதுதான் இயற்கையைப் போலக் காவியமும் புதிராய் உருவெடுத்து அள்ள அள்ளக் குறையாத, அளவிட

முடியாத அழகியல் பிரபஞ்சமாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும். ஆனால் அவைகள் நம்பத்தன்மை ஏற்படுத்தும் படியாக ஏற்கெனவே அடிப்படை போடப்பட்டிருக்கும் காரண-காரியத்தோடு இணைக்கப்பட வேண்டும்.

உண்மையில் காரண-காரியத்தைச் சிதைத்துத் தாவிக் குதிப்பது போன்ற ஒரு பாவனையைக் காரண-காரியம் என்கிற பகுத்தறிவின் மேல் நின்று கொண்டுதான் சாதிக்க முடியும். இவ்வாறு அடிப்படையில் காரண-காரியம் இல்லாமல், காரண-காரியத்திற்கு அப்பாற்பட்ட காட்சிகளை ஒருபோதும் கட்டமைக்க முடியாது. இப்படித்தான் சிலப்பதிகாரப் பனுவலும் காரண-காரியம் எனும் பகுத்தறிவை அடிப்படைத் தளமாக வைத்துக்கொண்டு, காரண-காரியம் கடந்த பல்வேறு நிகழ்வு களையும் தனது காவியத்திற்குள் கட்டமைத்துள்ளது. இப்படி இரண்டையும் இணைப்பதில் நிகழ்த்திய சாதனைதான் சிலப்பதிகாரப் பனுவலின் ஏறத்தாழ இரண்டாயிரமாண்டு இருப்பிற்கான அடிப்படையாகும். காரண-காரியம் எனும் பகுத்தறிவினால் மட்டும் முழுக்க முழுக்க மனித வாழ்வு அமைந்து கிடக்கவில்லை. காரண-காரியத்திற்குள் அடங்காத புதிரான, புரியாத எத்தனையோ நிகழ்வுகள் நடந்தவண்ணம் இருக்கின்றன. அவைகளையெல்லாம் இளங்கோ அடிகள் போல் இப்படிப் புனைவுகளுக்குள் இழுத்து வந்து இருத்தி வைப்பதன் மூலம் அவைகளையும் மனித வாழ்விற்குப் பயன்படுத்திக் கொள்ளும் மாபெரும் செயல்முறைத் தந்திரம் நிறைவேறி விடுகிறது. ஆனால் இப்படிக் காரண- காரியத்திற்கு அப்பாற்பட்ட பல வெளிகளைப் புனைவதன் மூலம் பொது மக்களின் கைக்கு எட்டுகின்ற தூரத்திற்கப்பால் 'மன்னர்கள்' எனும் அரசு அதிகார மையத்தைக் கட்டமைத்துக் கொள்வதற்கு இவைகள் பயன்பட்டுள்ளன. இது விரிவான மற்றொரு ஆய்விற்கு உரிய களமாகும்.

துணை நூல்

- உ.வே.சா. (பதி.) சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ.வே.சா. நூல் நிலையம், சென்னை, ஒன்பதாம் பதிப்பு, *1978*.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

பழமொழி நானூறு

உலக உயிர்களை அறிவுத்திறன் அடிப்படையில் பாகுபடுத்துவது தமிழர் மரபு. உடம்பால் உற்று அறிவன ஓரறிவு உயிர்கள்; உடம்பாலும் நாவாலும் அறிவன இரண்டறிவுயிர்கள்; உடம்பு, நா, மூக்கு ஆகிய மூன்றாலும் அறிவன மூவறிவுயிர்கள்; உடம்பு, நா, மூக்கு, கண், காது ஆகிய ஐந்தாலும் அறிவன ஐயறிவுயிர்கள்; இவ்வைந்தோடு மனத்தாலும் அறியும் திறனுடைய உயிர்கள் ஆறறிவுயிர்கள் எனத் தொல்காப்பியர் பாகுபடுத்துவர் (தொல். 1526). இதனை "நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே" எனத் தனக்கு முன்பே இத்தகைய உயிர்ப்பாகுபாடு அறிஞர்களால் பாகுபடுத்தப்பட்டது என்பதையும் பதிவு செய்வர். இதனால் மனத்தால் அறியும் திறன் மனித உயிர்களின் தனித்தன்மை யாகக் கருதப்பட்டமை புலனாகும். திருவள்ளுவரும் "மெய்ப்பொருள் காண்பது அறிவு" (திருக். 423) என்றும் "நுண்பொருள் காண்பது அறிவு" (திருக். 424) என்றும் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் தந்தை பெரியார் அறிவையும் பகுத்தறிவையும் வேறுபடுத்தி, "ஜீவப்பிராணி களின் சிந்தனா சக்தியும் சிந்திப்பின் உணர்ச்சியுந்தான் அறிவு என்று சொல்லப்படுகிறது. அச்சிந்திக்கும் தன்மையின் கூர்மையைப் பகுத்தறிவு என்று சொல்லலாம்" (த. கோவேந்தன், ப. 160) என்பர். இவ்வடிப்படையிலான பகுத்தறிவுச் சிந்தனைகள் பழமொழி நானூற்றில் அமைந்திருக்குமாற்றை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறிவு

பழமொழி நானூற்றில் அறிவுடைமை என்னும் அதிகாரத்தின் கீழ் எட்டு வெண்பாக்கள் உள்ளன (பழ. 27-34). இவற்றுள் "நற்கு அறிவு" (பழ. 29) என்பது

சு. இராசாராம்

இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி - 3.

மட்டும் அறிவை வரையறுப்பதாக உள்ளது. இதற்கு "மிகவும் இயற்கையறிவு" என்பது பொருளாகும். கல்வி என்னும் அதிகாரத்தில் அறிவுடையார் இயல்பை, "ஆற்றவும் கற்றார் அறிவுடையார்" (பழ. 5) என விளக்குவது இங்கு ஒப்பிடத் தக்கதாகும். மிகுதியும் கற்க வேண்டிய நூல்களை அறிந்தவர்கள் அறிவுடையார் என்பது பொருளாகும். கல்வியால் மட்டு மல்லாமல் கேள்வியாலும் அறிவுத்திறன் உண்டாகும் என்பதை ஒழுக்கம் அதிகாரத்தில் இடம்பெறும், "கூர்த்தநுண் கேள்வி அறிவுடையாக்கு" (பழ. 38) என்னும் தொடர் உணர்த்தும். கூரிய நுட்பமான நூற்பொருளைக் கேட்டுணர்ந்த இயற்கை யறிவு உடையவர்கள் இங்கு அறிவுடையவர்களாகக் கருதப் பெறுகின்றனர். ஆராய்ந்து வைத்த கருத்தும் உண்மையை அறியும் அறிவும் அறிவுடைமைக்குப் பற்றுக்கோடாகும். இவ்விரு இயல்புகளும் இல்லாதவர் "மூர்க்கர்" எனப்படுவர். இதனை, "ஓர்த்த கருத்தும் உணர்வும் உணராத, மூர்க்கர்க்கு" (பழ. 95) என்பது உணர்த்தும்.

நூலறிவு இல்லாமல் இருந்தாலும் எடுத்துக்கொண்ட செயலைத் திறம்பட முடிக்கும் ஆற்றல் அறிவுடைமையாகக் கருதப்பட்டுள்ளது. இதனை "முயற்சி" அதிகாரத்தில் இடம் பெறும்,

"கற்றதொன் றின்றி விடினும் கருமத்தை
அற்ற முடிப்பான் அறிவுடையான்" (பழ. 151)

என்பது புலப்படுத்தும்.

பகுத்தறிவு

மனித அறிவின் வளர்ச்சிகளைப் புலனறிவு, பகுத்தறிவு, சமூக நடைமுறை அறிவு எனப் பாகுபடுத்துவர் (கோ. கேசவன், ப. 145). மனிதன் ஒரு பொருளைக் காணும் பொழுதோ, ஒரு நிகழ்வை ஆராயும் பொழுதோ அதன் தனித்தனி அம்சங்களை மட்டுமே காண்கிறான். அவற்றைப் புற உறவுகளில் வைத்து மட்டுமே காண்கிறான். இதன் விளைவாக எண்ணற்ற தோற்றங்கள் மனிதனின் ஐம்புலன்கள் மூலம் அவன் மூளையில் எதிரொலிக்கின்றன. புலன்களுக்குப் புலப்பட்டதை மனதில் கொள்கிறான். இவ்வாறு அறிவு

பெறுதல் விலங்குகளுக்கும் உண்டு. இதைப் புலனறிவுக் கட்டம் (Perception) என்பர் (கோ. கேசவன், பக். 143-144).

புலனறிவுக் கட்டத்தின் மூலம் பொருளின் அல்லது நிகழ்வின் புறஉறவுகளைக் கண்டறிந்து மனித சமூகம் ஏற்கெனவே தம்மிடத்தில் இருக்கும் அறிவுக் கருத்துக்களுடன் அவற்றை இணைக்கிறது. பொருளின் அல்லது நிகழ்வின் சாராம்சத்தையும் மொத்தத் தன்மையையும் உள் உறவு களையும் ஆராய்ந்து பார்க்கிறது. பொருளின் அல்லது நிகழ்வின் குறிப்பான தன்மைகளையும் பொதுவான தன்மைகளையும் பிரித்தறிந்தும் அந்தப் பொருளை பற்றியும் நிகழ்வுகளைப் பற்றியும் கருத்துகள் உருவாக்கிக் கொள்ளப்படுகின்றன. இதுவே பகுத்தறிவுக் கட்டம் என்பர் (கோ. கேசவன், ப. 144).

பகுத்தறிவின் மூலம் மனித சமூகம் உருவாக்கிக் கொண்ட கருத்துக்கள், மீண்டும் சமூக நடைமுறையில் மனித உறவு களில், வர்க்கப்போராட்டங்களில் பயன்படுத்தப்பட்டுச் சோதிக்கப்படுகின்றன; தோல்வியடைகின்றன அல்லது வெற்றி பெறுகின்றன; பொய்ப்பிக்கப்படுகின்றன அல்லது நிரூபிக்கப் படுகின்றன. இதன்மூலம் பெறும் அறிவைச் சமூக நடைமுறை அறிவு என்பர் (கோ. கேசவன், ப. 145). இவற்றால் பகுத்தறிவு என்பது மனித அறிவு வளர்ச்சியில் ஓர் இடைக் கட்டம் என்பது தெளிவாகும்.

இத்தகைய பகுத்தறிவு, பழமொழி நானூற்றில் "பாத்தறிவு" என இரு இடங்களில் சுட்டப்பட்டுள்ளமை நோக்கத்தக்க தாகும். (பழ. 253, 384). அரசியல்பு அதிகாரத்தில்,

> *"வழிப்பட் டவரை வலியராச் செய்தார்*
> *அழிப்பினும் ஆக்கினும் ஆகும் - விழுத்தக்க*
> *பைஅரவு அல்குல் பணைத்தோளாய்! பாத்தறிவென்*
> *மெல்லக் கவுட்கொண்ட நீர்"* (பழ. 253)

என்னும் வெண்பாவில் "பாத்தறிவு" என்னும் சொல் இடம் பெற்றுள்ளது.

கவுளில் கொண்ட நீர் குடித்தற்கும் உமிழ்தற்கும் அமைதல் போல, தன் கீழ்ப்பட்ட குடிகளைச் செல்வத்தால் உயர்த்து தலும், தாழ்த்துதலும் செய்ய அரசன் வல்லன் என்பதைப் பகுத்து அறிய இயலாது என்னும் பொருளில் இங்கு பாத்தறிவு இடம்பெற்றுள்ளது.

ஈகை அதிகாரத்தில் புகழ் ஒன்றனையே கருதி, கொள்வோர் நிலை அறியாது கொடுக்கும் கொடை சிறந்தது அன்று எனக் கூறும்,

''பயனோக்கா தாற்றவும் பாத்தறிவொன் றின்றி
இசைநோக்கி ஈகின்றா ரீகை - வயமாப்போல்
ஆலித்துப் பாயும் அலைகடல் தண்சேர்ப்ப
கூலிக்கு செய்துண்ணு மாறு'' (பழ. 384)

என்னும் வெண்பாவிலும் "பாத்தறிவு" குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் வறியோர், அவரல்லாதோர் எனப் பகுத்துணரும் அறிவு பாத்தறிவு எனப்பட்டுள்ளது.

பழமொழி நானூற்றில் கூரறிவு (பழ. 103) என்றும் தெள்ளியுணரும் திறன் (பழ. 309) என்றும் சுட்டப் பெறுவன ஆராய்ந்து அறியும் ஆற்றலைச் சுட்டுவனவாகும். இவை பகுத்தறிவோடு ஒத்து எண்ணிப் பாக்கத்தக்கனவாகும்.

தெரிந்து செய்தல் அதிகாரத்தில் "பல்காலும், நாடுக தான்கண்ட நுட்பத்தை'' (பழ. 196) எனக் குறிப்பிடுவது பகுத்தாயும் அறிவை விளக்குவதாகும். ஒருவன் தான் ஆராய்ந்து அறிந்த நுண்ணிய பொருளைப் பலமுறையும் ஆராய்தல் வேண்டும் என்பது இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தக் காரியத்தையும் ஆராய்ந்தே தொடங்க வேண்டும். அங்ஙனம் ஆராய்தல் இல்லாமல் செய்தால் துன்பமே வந்து முடியும். முயற்சி அதிகாரத்தில்,

''யாதானும் ஒன்றுகொண்டு யாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும்'' (பழ. 155)

எனக் கூறுவது இதனை விளக்கும். இவ்வாறு ஆராய்ந்து அறியும் அறிவாற்றலும் ஆராய்ந்து செய்யும் செயலாற்றலும் அறிவுடைமையாகக் கருதப்பட்டுள்ளமை புலனாகும்.

மறுமை மறுப்பு

கடவுள், ஆத்மா, மோட்சம், நரகம், பாவ-புண்ணியம், ஒழுக்கம் போன்ற கற்பனைகளை விஞ்ஞான வளர்ச்சி என்னும் சம்மட்டியினால் பகுத்தறிவாளர்கள் நிர்த்தூளி செய்ய வேண்டும் என்பது பெரியார் விருப்பம். "பகுத்தறிவுவாதிகள் மனித ஜீவ அபிமானிகள் தங்கள் பகுத்தறிவினால் சுயநலப் புரோகிதர் களால் கட்டப்பட்ட இந்த மறு உலக நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்து, மக்களை இவ்வுலக வாழ்க்கையில் பற்றுள்ளவர் களாகச் செய்ய வேண்டும்" (த. கோவேந்தன், ப. 171) என்பது பெரியார் கொள்கை.

பழமொழி நானூற்றில் இம்மை, மறுமை பற்றிய நம்பிக்கைகள் பெரிதும் பதிவாகியுள்ளன. வீட்டுநெறி அதிகாரத்தில் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியாகிய கடவுளை உடைமையாகக் கொள்ளுதலே சிறந்தது என்பதை, "இம்மைக்கும் உம்மைக்கும், தம்மை யுடைமை தலை" (பழ. 388) என்ற அடிகள் உணர்த்தும். அறஞ்செய்தல் அதிகாரத்தில் வஞ்சமனத்தராய் தவமும் அறமும் புரிந்து ஒழுகுதல், அவர்களுக்கு இம்மையின்கண் பழியை உண்டாக்குதலேயல்லாமல் மறுபிறப்பின்கண்ணும் அவர்கள் நிரயத்தினின்றும் வெளியேறாதவாறு இறுகக் கட்டி வீழ்த்தும் கயிறாகவும் ஆகும் என்பர். இதனை,

"இம்மைத் தவமும் அறமும் என விரண்டும்
தம்மை யுடையார் அவற்றைச் சலமொழுகல்
இம்மைப் பழியேயு மன்றி மறுமையும்
தம்மைத்தாம் ஆர்க்குங் கயிறு" (பழ. 372)

என்பது விளக்கும். இவ்வாறு மறுமை பற்றிய பல கருத்துக்கள் பழமொழி நானூற்றில் இடம் பெற்றிருந்தாலும் கீழ்மக்கள் செய்கை என்னும் அதிகாரத்தில் இடம்பெறும்,

"மறுமையொன் றுண்டோ மனப்பட்ட எல்லாம்
பெறுமாறு செய்மின்என் பாரே - நறுநெய்யுள்
கட்டி யடையைக் களைவித்து கண்சொரீஇ
இட்டிகை தீற்று பவர்" (பழ. 109)

என்னும் வெண்பா ஆராயத்தக்கதாகும். இதற்கு, மறுமை என்பது ஒன்று உளதோ? மனம் விரும்பியவற்றையெல்லாம் அடையும் தன்மையைச் செய்யுங்கள் என்று உபதேசிப்பவர் நல்ல நெய்யுள் தோய்க்கப்பெற்றுப் பாகு கலந்த அடையை உண்ணாமல் நீக்கி கண்களை மூடிச் செங்கல்லை உண்ணச் செய்பவரோடு ஒப்பர் என்பது பொருளாகும். இதனால் மறுபிறப்பு இல்லை என்றும் மனதுக்குத் தோன்றியதை யெல்லாம் செய்க என்றும் மக்களிடையே நெறியாகப் பரப்பியவர்கள் அக்காலத்தும் உண்டு என்பது பெறப்படும். இவர்கள் கீழ்மக்களாகவும் இவர்களுடைய நெறி செங்கல்லாகவும் இழித்துரைக்கப்பட்டமையும் விளங்கும்.

தந்தை பெரியார் மறு உலக நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்து இவ்வுலக வாழ்க்கையில் மக்களைப் பற்றுள்ள வர்களாகச் செய்ய வேண்டியது பகுத்தறிவாளர் கடமை என்றார். இப்பணியைப் பழமொழி நானூறு பாடப்பட்ட காலத்திலேயே சிலர் செய்துள்ளனர் என்பது இவ்வெண்பா உணர்த்தும் சமூக வரலாற்றுப் பதிவாகும்.

புராண விமர்சனப் போக்கு

புராணங்களின் மீதான மக்கள் நம்பிக்கையைக் குறைத்து, அவற்றைப் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்து முடிவுக்கு வரும்படிச் செய்தலையும் தந்தை பெரியார் வலியுறுத்துவர் (த. கோவேந்தன், ப. 164). அவ்வகையில் இராமாயணம், பெரியபுராணம் போன்றவை பகுத்தறிவாளர்களால் விமர்சிக்கப் பட்டன.

பழமொழி நானூற்றில் சிவன், திருமால் குறித்த புராணக் கருத்துக்கள், விமர்சிக்கும் நோக்கில் ஆளப்பெற்றுள்ளன. நட்பின் இயல்பு என்னும் அதிகாரத்தில் நல்லோரது நட்பின் திறத்தை உயர்த்திக் கூறுவதற்குச் சிவபெருமான் உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்ட புராணக் கருத்துச் சுட்டப்பட்டுள்ளன. தண்டினையும் வெல்லுகின்ற ஏற்றுக் கொடியினையும் உடைய சிவபெருமான் பொருந்திய அன்பினை உடைய உமையம்மையை ஒரு கூறாகக் கொண்டான். ஆனால் நல்லோர் தம் நட்பினரிடத்து, தாம்

வேறு அவர் வேறு என்னும் வேறுபாடின்றி ஒழுகுவர். இதனை,

''ஒட்டிய காதல் உமையாள் ஒருபாலா
கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டானே
விட்டங் ககலா முழுமெய்யும் கொள்பவே
நட்டாரை ஒட்டி ஒழிக'' (பழ. 125)

என்பது விளக்கும். சிவபெருமான் உமையம்மையை, முழுமையாக ஏற்றுக்கொள்ளாமல் ஒரு கூறாகவே கொண்டான் என விமர்சிக்கும் கருத்துப்பதிவு இதில் இடம் பெற்றுள்ளமை எண்ணத்தக்கது.

இந்திரன் சினந்து ஏவிய மழையைக் கண்ணன் மலை கொண்டு தடுத்து ஆக்களைக் காப்பாற்றினான் என்பது புராணம். அத்தகைய அரிய செயல் செய்த திருமாலையும் ஆநிரைகளுக்குத் தக்க இடையன் என்று உலகம் கூறும்; பழித்துரைக்கும் என்பதை ஒழுக்கம் அதிகாரத்தில் இடம் பெறும்,

''ஆவிற் கரும்பனி தாங்கிய மாலையும்
கோவிற்குக் கோவல னென்றுலகம் கூறுமால்
தேவர்க்கு மக்கட் கெனல்வேண்டா தீங்குரைக்கும்
நாவிற்கு நல்குரவு இல்'' (பழ. 43)

என்னும் வெண்பா உணர்த்தும். இதனால் கண்ணன் செயலை உயர்த்திக் கூறுவதுபோல அதனை ஏற்றுக்கொள்ளாது உலக மக்கள் மறுத்த நிலையும் புலனாகும். ஆட்டிடையன் என்ற நிலையில் வைத்துத் திருமாலைக் கருதியமை குறிப்பிடத்தக்க தாகும். சான்றோரியல்பு என்னும் அதிகாரத்தில் பெரியோர் செய்த குற்றம் மறையாது என்பதை,

''நிரைதொடி தாங்கிய நீடோள் மாற்கேயும்
உரையொழியா வாகும் உயர்ந்தோர்கட் குற்றம்
மரையாகன்று ஊட்டும் மலைநாட மாயா
நரையான் புறத்திட்ட சூடு'' (பழ. 80)

என்னும் வெண்பா உணர்த்தும். இதில் வரிசையாக தோள்வலயத்தைத் தாங்கிய நீண்ட தோளையுடைய

திருமாலுக்குப் பொருந்தியிருக்கும் குற்றங்கள் ஒருநாளும் விட்டு நீங்காது என்பது கூறப்பட்டுள்ளது. திருமாலின் செயல்களில் குற்றங்காணும் போக்கு இருந்துள்ளமை கருதத் தக்கதாகும்.

பலவாகிய பசுக்கூட்டங்களைக் காத்த, நீண்ட வடிவெடுத்த திருமாலாக இருந்தாலும் அவையில் ஒருவனை இகழ்ந் துரைத்தால் தாமும் அவனால் இகழ்ச்சியுரையை அடைதல் உண்டு என்பதை,

.... "பல்லா
நிரைப்புறங் காத்த நெடியோனே யாயினும்
உரைத்தால் உரைபெறுதல் உண்டு" (பழ. 76)

என்னும் அடிகள் உணர்த்தும். கடவுள் அவதாரமாக இருந்தாலும் இகழ்ச்சியுரைக்கு ஆளாவதிலிருந்து தப்ப இயலாது என்பது இதனால் பெறப்படும் கருத்தாகும்.

வெற்றியை உடைய கருடன் மீது ஏறி வீற்றிருந்து உலகத்தைத் தாவியளந்த பெருமை பொருந்திய திருமாலாக இருந்தாலும் தனக்கு ஊதியந்தரும் சீரியதொன்றைச் செய்யாது ஒழிய விடுவார் இல்லை என்பதை,

.... "கொற்றப்புள்
ஊர்ந்துலகம் தாவிய அண்ணலே யாயினும்
சீர்ந்தது செய்யாதா ரில்" (பழ. 178)

என்னும் பாடலடிகள் காட்டும். இதன் விளக்கவுரையில் ம. இராசமாணிக்கம் பிள்ளை, "திருமால் முதலியோர்களும் தமக்கு ஊதியம் பயப்பதாயின் பழி, பாவம் பாரார்" என விளக்குவர் (ம. இராசமாணிக்கம் பிள்ளை, (உ.ஆ), ப. 165). இவ்வாறு கடவுள் செயல்களை ஆராய்ந்து பார்க்கும் இயல்பு பகுத்தறிவுச் சிந்தனையோடு ஒத்து எண்ணத்தக்கதாகும்.

பார்ப்பனர் இயல்பு

பார்ப்பனர் இயல்புகளை வெளியுலகுக்குக் காட்டுவதும் பகுத்தறிவுச் சிந்தனைகளுள் ஒன்றாகும். அவ்வகையில் இறைச்சி உண்ணுதல் தொடர்பான சிந்தனை குறிப்பிடத்

தக்கதாகும். இறைச்சி உணவு உண்ணுதல் சமுதாய மதிப்பில் சமமாக இருந்து காலப்போக்கில் இறைச்சி உண்போர் இழிந்தோர்; இறைச்சி உண்ணாதோர் உயர்ந்தோர் என்னும் கருத்தாக்கம் ஏற்பட்டது. புலால் உண்ணாமை அறப்பண்பு களுள் ஒன்றாக உயர்ந்தது. பார்ப்பனர்கள் புலால் உண்ணாமல் சமுதாயத்தில் தம்மை உயர்வானவர்களாக ஆக்கிக் கொண்டனர். இத்தகைய சமுதாய வேற்றுமைகளைச் சுட்டுவதாக, "நாய்கொண்டால், பார்ப்பாரும் தின்பர் உடும்பு" (பழ. 36) என்னும் பழமொழி தோன்றியுள்ளது. அதனை முன்றுரையனார் ஒழுக்கம் அதிகாரத்தில் பாடியுள்ளார். இறைச்சி உண்ணும் இயல்பினரல்லாத பார்ப்பனர் கூட உடும்பின் தசை கிடைத்தால், அது நாய் கதுவியதாக இருந்தாலும்கூட, அதனை உயர்வானதாக, சுவையுடைய தாகக் கருதித் தின்பர் என்னும் சமுதாயப் பழக்கம் பதிவாகி யுள்ளது.

> *"கள்ளி யகிலும் கருங்காக்கைச் சொல்லும்போல்*
> *எள்ளற்க யார்வாயும் நல்லுரை - தெள்ளிதின்*
> *ஆர்க்கும் அருவி மலைநாட! நாய்கொண்டால்*
> *பார்ப்பாரும் தின்பர் உடும்பு"* (பழ. 36)

என்பது உணர்த்தும். சிறந்த பொருள்களை இழிந்தார் கூறினாராயினும் இகழாது போற்றுதல் வேண்டும் என்னும் கருத்து விளக்கத்திற்கு இது கூறப்பட்டிருந்தாலும் 'பார்ப்பனர் இயல்பாக' இப்பதிவு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும்.

முடிவுரை

மனத்தால் அறியுந்திறன் உலக உயிர்களின் தனித்தன்மை யாகக் கருதப்பெறுதல் தமிழரின் மரபு வழிப்பட்ட சிந்தனை களுள் ஒன்றாகும். பழமொழி நானூறு மனிதனின் இயற்கை யறிவையும் கல்வியறிவையும் செயலறிவையும் அறிவுடைமை யாகக் குறிப்பிடுகிறது. மனித அறிவு வளர்ச்சியின் இடைக் கட்டமாக விளங்கும் பகுத்தறிவு என்னும் சிந்தனைக்கு எடுத்துக்காட்டாக, பழமொழி நானூறு சுட்டும் பாத்தறிவு விளங்குகிறது. பகுத்து அறிதலையும் ஆராய்ந்து அறிதலையுமே

இது சுட்டுகிறது. கூரறிவு, தெள்ளியுணருந்திறன் என்பன இதனோடு ஒத்து எண்ணத்தக்கவையாகும். பழமொழி நானூற்றில் மறுமை பற்றிய சிந்தனைகள் போற்றப்பட்ட நிலையில் மறுமை மறுப்புப் பற்றிய பதிவும் அதனை நெறி யாகக் கூறிய ஒரு சாரார் பற்றிய பதிவும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அவர்கள் கீழ்மக்கள் என்றும் அவர் களுடைய நெறி செங்கல் போன்றது என்றும் பதிவு செய்யப் பட்டிருந்தாலும் தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனை யோடு பெரிதும் ஒத்திருப்பது மனங்கொள்ளத்தக்கதாகும். புராணக் கருத்துக்களை விமர்சிக்கும் போக்கும் பார்ப்பனர் இயல்பை வெளிப்படுத்தும் போக்கும் பகுத்தறிவாகக் கொள்ளத்தக்கனவாகும்.

துணைநூல்கள்

- இராசமாணிக்கம் பிள்ளை, ம. (உ.ஆ.), பழமொழி நானூறு மூலமும் உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மறுபதிப்பு, 2007.
- கேசவன் கோ, சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமை யும் (1930-1936), சரவண பாலு பதிப்பகம், விழுப்புரம், 1990.
- கோவேந்தன் த., தந்தை பெரியார் சிந்தனைக் களஞ்சியம், தொகுதி - 2, கவிதா பப்ளிகேசன், சென்னை - 1998.
- சுப்பிரமணியன் ச.வே. (உ.ஆ), தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசககர் பதிப்பகம், சென்னை - 108, 1998.

நாலடியார்

திருக்குறளுக்கு அடுத்த நிலையில் சிறப்பாக எண்ணப் படும் நூல் நாலடியாராகும்.

"பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்"

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி
நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி"

என வழங்கும் பழமொழிகள் இதன் சிறப்பை விளக்கும். இந்நூலினை இயற்றியவர் சமண முனிவர். ஒருவரா, பலரா என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. இந்நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக, நாற்பது அதிகாரங்களும் பன்னிரண்டு இயல்களும் நானூறு வெண்பாக்களும் உள்ளன. குறளினைப் போலவே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பிரிவுகளை உடையது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலில் கூறப்பட்ட உயர்வான கருத்துகளினால் ஈர்க்கப்பட்ட ஜி.யு. போப் அவர்கள் இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சிறப்புச் செய்துள்ளார். உரையாசிரியர்கள் இதன் செய்யுட்களைப் பல இடங்களில் எடுத்தாண்டுள்ளனர். எக்கருத்தையும் உள்ளத்தில் எளிதில் பதியுமாறு எடுத்துரைப்பது இதன் தனிச் சிறப்பாகும்.

பதினெண்கீழ்க்கணக்கு வரிசையில் இந்நூல் இடம் பெறுகிறது. இந்நூல் வரிசையில் இடம்பெற்றுள்ள அறநூல் களில் பெரும்பாலானவை சமணச் சார்புடையன எனக் கூறப் படுகிறது. இது சமணச் சார்புடைய நூலாக இருந்தாலும், சமுதாய மக்களுக்கேற்ற பல நல்ல அறக் கருத்துக்களோடு கூடிய பகுத்தறிவுச் சிந்தனைகளையும் ஆங்காங்கே எடுத்துச் சொல்லுகிறது. குறிப்பாக, தாளாண்மை, நன்றியில் செல்வம், கல்வி, குடிப்பிறப்பு, மேன்மக்கள், பெருமை, ஈகை போன்ற அதிகாரங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள் காணப்படுகின்றன.

தி. தாமரைச்செல்வி

தமிழ்ப் பேராசிரியர், தாகூர் கலைக் கல்லூரி, புதுச்சேரி - 8.

அக்கருத்துகளை நிரல்படத் தொகுத்துரைப்பதே இவ்வெழுத்துத் துரையின் நோக்கமாகும்.

பகுத்தறிவுச் சிந்தனைகளைப் பின்வரும் மூன்று தலைப்பு களில் வகைப்படுத்திக் கொண்டு அவை நாலடியாரில் எவ்வாறு விளக்கம் பெறுகின்றன என்பதே இங்கு விரித்துரைக்கப் படுகிறது.

1. தன் முயற்சியில் நம்பிக்கை உண்டாக்கல்
2. மக்களைப் பிறப்படிப்படையில் வேறுபடுத்தும் முயற்சியைத் தவிர்ப்பது
3. மக்களிடையே ஒற்றுமை, பொதுநன்மை உணர்ச்சி களை உருவாக்கல்

1. தன் முயற்சியில் நம்பிக்கை உண்டாக்கல்

"சமணம் அறிவு விளக்கத்தை மட்டுமோ, ஒழுக்கத்தை மட்டுமோ வற்புறுத்தாமல் அது இரண்டையும் வற்புறுத்து கின்றது. மேலும் உறுதியான நம்பிக்கையும் அவற்றைக் கடைப்பிடித்தலையும் வற்புறுத்திக் கூறுகின்றது. இம் மூன்றனில் உண்மையான நம்பிக்கையுடன் கடைப்பிடித் தலுக்கே முதலிடம் கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் நல்லொழுக்கமாய் இருப்பினும் தவறான நம்பிக்கைகளுடன் ஒழுகப்படுமாயின் அது மதிப்பினைப் பெருமளவில் இழக்க நேரிடும்" எனும் அறிஞரின் கருத்து சிந்தனைக்குரியது. நல்லொழுக்கத்தைக்கூடத் தவறான நம்பிக்கையுடன் அதாவது மூடநம்பிக்கையோடு கடைப்பிடிக்கப்படும்போது அது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை எனும் கருத்து ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. தன் முயற்சியின் மீது நம்பிக்கை வைத்து ஒரு செயலைச் செய்யும்போது அது வெற்றியினை அடை கிறது. இக்கருத்து, நாலடியாரில் 'தாளாண்மை' அதிகாரக் கருத்துகளில் எதிரொலிக்கிறது எனலாம். சான்றுக்குச் சில கருத்துகள் சாமி. சிதம்பரனார் உரைவழிச் சுட்டப்படுகின்றன.

1. பிறரை நம்பி வாழ்வோர் இறுதியில் துன்புறுவர். **நம்பிக்கையுடன் முயல்வோர் இன்புறுவர் (191).**

2. **தன் முயற்சியினால்** சிறந்து வாழ்கின்றவனை யாரும் கெடுக்க முடியாது (192). இப்பாடலில் தன்

முயற்சியால் சிறந்து வாழ்கின்றவனுக்குத் தானே வளர்ந்து வயிரம் பெற்ற கொம்பு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

3. இசையாது எனினும் இயற்றி ஓர் ஆற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை (194)

எனும் பாடலில் ஆண்மைக்குப் புதுவிளக்கம் தரப் படுகிறது. தொடங்கிய செயலை விடாமல் செய்து முடிப்பதே ஆண்மையும் முயற்சியுமாகும் என்கிறது.

4. முயற்சியுடையவர்கள் தங்கள் உழைப்பால் பெற்ற உணவையே சுவையுடன் உண்பர். இதனைப் பின்வரும் வரிகள் சுட்டும்.

"............ நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும்" (200)

5. அறிவுடைமையின் சிறப்பை எடுத்துரைக்கும் அதிகாரக் கருத்துகளிலும் அறிவு முயற்சியின் சிறப்பே பேசப்படுகிறது.

நல்நிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானும் தான். (248)

எனும் பாடலில் ஒருவனின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் காரணம் அவன் தன் அறிவை நல்வழியில் பயன்படுத்துதலே ஆகும். ஒருவனின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் காரணமாக அமைவது அவனது அறிவு முயற்சியே ஆகும்.

2. மக்களைப் பிறப்படிப்படையில் வேறுபடுத்தும் முயற்சியைத் தவிர்ப்பது

பகுத்தறிவின் மிகச் சிறந்த சிந்தனை மனிதனின் உயர்வு தாழ்வு பற்றியதாகும். சாதியின் பேரால், பிறப்பின் பேரால் சுட்டப்படும் உயர்வு/தாழ்வுகளை இப்பகுத்தறிவுச் சிந்தனைகள் ஏற்றுக்கொள்ளவில்லை. நாலடியாரும், குடிப்பிறப்பு, மேன்மக்கள், கல்வி, தாளாண்மை என்ற அதிகாரங்களில்

உயர்வு தாழ்வைப் பற்றிய விளக்கங்களை வேறுபட்ட கோணத்தில் தருகிறது.

தாளாண்மை எனும் அதிகாரத்தில் 'உயர்குலத்தோர்' யார் என்பதற்குப் பின்வரும் விளக்கம் தருகிறது.

''நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லை; - தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ? தவங்கல்வி யாள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம்'' (195)

தவம், கல்வி, ஆள்வினை முதலியவற்றில் முயற்சி யுடையோரே பிறரால் விரும்பத்தக்க உயர்குலத்தோர் ஆவர் என்கிறது. கல்வியும், முயற்சியும் உடையவரையே உயர் குலத்தோர் என்கிறது.

உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்பதற்கு நாலடியார் தரும் விளக்கங்களைப் பின்வரும் கருத்தின் அடிப்படையில் நோக்கினால் செம்மை தரும்.

''சாதி வேற்றுமைகளை விரும்பாத நாலடிப் புலவர்கள் மக்களை இரு பெரும் பிரிவாகக் கொண்டு பாடினர். ஒன்று மேலோர், மற்றொன்று கீழோர். மேலோர் என்பவர் எல்லோரும் போற்றும் செயல்களைச் செய்து பாராட்டுப் பெறுவர்; கீழோர் எதையும் எண்ணாது செய்து துன்பம் அடைவர்.

மேலோர் பிறன்மனை நோக்கார்; புறங்கூறார்; கீழோர் என்பவர் கனமான பேச்சும், கண்ணோட்டமின்மையும், பிறர் துன்பம் கண்டு மகிழ்தலும் கோபித்தலும், கண்ட இடங்களுக்குச் செல்லுதலும் பிறரைப் பழித்தலும் போன்ற குணமுடையவர் என்றும் வரையறை செய்கின்றனர்.

நற்செயல் செய்பவரையும், தீச்செயல் புரிபவரையும் மட்டுமே மேலோர், கீழோர் என்றார்கள்.''

எனவே, நாலடியார் கருத்தின் அடிப்படையில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்பவர் கல்வியின் அடிப்படையிலும் அவர்தம் ஒழுக்கத்தின் அடிப்படையிலும் குறிக்கப் பெற்றனர் எனலாம். அவர்தம் பிறப்பின் அடிப்படையிலோ, சாதியின் அடிப்படை யிலோ சுட்டவில்லை எனத் தெளியலாம்.

3. மக்களிடையே ஒற்றுமை, பொது நன்மை உணர்ச்சிகளை உருவாக்கல்

சமூக மக்களிடையே பிறர்க்கு உதவும் பண்பை வளர்த்தல், பகுத்துண்டு வாழல், சுற்றத்தாரை அரவணைத்துச் செல்லல் போன்ற மனிதச் செயல்பாடுகளை இத்தலைப்பின் கீழ் அடக்கலாம்.

'பெருமை' எனும் அதிகாரத்தில் இடம்பெறும் 185-வது பாடலில் மிகுந்த தண்ணீரைக் கொடுத்து உலகத்தாரை உண்ணச்செய்து, தண்ணீர் வறண்டபோதும் தோண்டுகின்ற ஊற்றிலே தண்ணீர் ஊற்றெடுத்து உண்பிக்கின்ற ஆற்றலைப் போல, தம்மிடத்திலிருந்த செல்வம் பிறர்க்கு உதவி செய்தலான் கெட்டழிந்த போதும், தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து கொண்டிருப்பர் சிலர். இத்தகையோர் தன் வாழ்நாளில் பிறர்க்கு உதவி செய்தலை மட்டுமே தன் வாழ்நாள் நோக்கமாகக் கொண்டவர் ஆவர். மேலும், இத்தகையோர்,

> *''முன்துற்றும் துற்றினை நாளும் அறம்செய்து*
> *பின்துற்றுத் துற்றுவர் சான்றவர்''* (190)

முன்னால் உண்ணும் உணவை, ஒவ்வொரு நாளும் தருமம் செய்துவிட்டு (உணவு தர்மம் - உண்பதற்கு முன் காக்கைக்குச் சோறிடல், குழந்தைகளுக்குச் சோறு கொடுத்தல், வறியவர்களுக்கு உணவு கொடுத்தல்) பிறகு மிஞ்சியிருக்கும் உணவை உண்பார்கள் நற்பண்புடையவர்கள் எனப் பிறர்க்கு உதவிசெய்தலைச் சுட்டுகிறது.

பகுத்துண்டு வாழும் போக்கைக் கற்றுக்கொடுக்கிறது இந்நாலடியார் பாடல்,

ஈகை எனும் அதிகாரக் கருத்துகள் வறியவர் துயர் கண்டபோது மனமிரங்கி உதவி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன எனலாம். செல்வம் கையிலிருக்கும் போதே, பலருக்கும் பகுத்துக் கொடுத்து நீங்களும் உண்ணுங்கள்; ஒன்றையும் மறைத்து வைக்காதீர்கள் எனும் கருத்தமைந்த பாடல் வரிகள் பின்வருமாறு :

"........... பாத்துண்மின் யாதும்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து" (92)

துன்புறுபவர்கள் யாராய் இருந்தாலும் அவர்கள் துன்பத்தை நீக்குப்வர் யாரோ அவரே எல்லோராலும் சிறந்தவராகக் கருதப்படுவர் (205).

தாமே பிறர் துன்பத்தைக் கண்டு மனமிரங்கிக் கொடுக்க வேண்டும் (279) என்கிறது. பிறருடைய துன்பத்தில் தாம் பங்கெடுக்க வேண்டும்.

சிறிய அரிசியின் அளவாயினும் நாள்தோறும் உம்மால் முடிந்த அளவு பிறர்க்குக் கொடுத்தபின் நீங்களும் உண்ணுங்கள் (94).

தான் துன்புற்றாலும் பிறர்க்கு உதவி செய்யப் பின் வாங்காமல் இருப்பதையே ஆண் மகனுடைய கடமையாகச் சுட்டப்படுகிறது (202).

பகுத்தறிவுச் சிந்தனையின் சிறந்த கோட்பாடு பிறர்க்குத் தீமை செய்யாமல் நன்மை புரிதலே ஆகும். இதனை, ஈகை, சுற்றந்தழால், பெருமை போன்ற அதிகாரக் கருத்துகள் எடுத்துரைக்கின்றன.

பகுத்தறிவு என்பது ஆதாரத்தைக் கொண்டு தெளி வடைவது. மூடநம்பிக்கை என்பது ஆராயாமல் ஏற்றுக் கொள்வது; நல்லவண்ணம் சிந்தித்து ஆராய்ந்து ஏற்க வேண்டியதை ஏற்றுக்கொண்டு மற்றதைத் தள்ளிவிடுவதுதான் பகுத்தறிவுச் சிந்தனை. இதுதான் அறிவை வளர்க்கும்; அறிவு தான் மனித வாழ்க்கையை உயர்த்தும். இந்த அடிப்படைக் கருத்தின் பின்னணியில் தான் நாலடியாரின் சில கருத்துகள் ஆங்காங்கே விளக்கம் பெற்றுள்ளன. அவையே இவ் வெழுத்துரையில் எடுத்துக்காட்டப்பட்டன.

மேலும், இப்பகுத்தறிவுச் சிந்தனைகளைச் சமணச் சமய ஒழுக்க நெறியின் பின்னணியில் காணும்போது தெளிவாக உய்த்துணரலாம்.

சமணச் சமயத்தின் ஒழுக்கங்கள் ஐந்து ஆகும். அவை, 1. கொல்லாமை, 2. பொய்யாமை (அ) வாய்மை 3. கள்ளாமை, 4. பிறன்மனை நயவாமை (அ) கற்புடைமை. 5. பொருள் வரைதல் அல்லது உள்ள நிறைவு (பகுத்துண்ணல்). இவ் வைந்தும் அனுவிரதம் எனப்படும்.[6] இதில் சுட்டப்படும் ஒழுக்கங்கள் யாவும் நாலடியாரில் தனித்தனி அதிகாரங்களாக விளக்கமுற்றுள்ளன. எனவே, பகுத்தறிவு என்பது நல்லொழுக்கத்தின் அடிப்படையில் நுணுகி ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளல் எனவும் உரைக்கலாம்.

பதினெண்கீழ்க்கணக்கு வரிசையில் இடம்பெறும் நாலடியார் எனும் நூல் நீதிஇலக்கிய வரிசையில் வைத்துச் சொல்லப்பட்டாலும், சமணச் சார்புடைய நூலாக இருந்தாலும், சமுதாய மக்களுக்கு ஏற்ற நல்ல அறக்கருத்துகள் சிலவற்றைச் சாதி, சமயங்கட்கு அப்பாற்பட்டுப் பகுத்தறிவு நோக்கிலும் எடுத்துரைக்கிறது என்று கருதுவது ஏற்புடைத்ததே.

குறிப்புகள்

1. வேலுப்பிள்ளை ஆ., தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 47.
2. ஞானமூர்த்தி தா.ஏ., சமணம், ப. 52.
3. சிதம்பரனார் சாமி., நாலடியார் மூலமும் உரையும், பக். 114-119.
4. வெங்கடேசன் இரத்தின., நாலடியார் காட்டும் சமுதாயம், பக். 96-97.
5. ஆனைமுத்து வே., பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், பக். 2411-2412.
6. ஞானமூர்த்தி தா.ஏ., மேலது.

துணைநூல்கள்

- பாலசுந்தரம் தி.சு., (இளவழகனார்) நாலடியார் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 1, 1961.
- சிதம்பரனார் சாமி., நாலடியார் மூலமும் உரையும், மல்லிகா வெளியீடு, ஆலந்தூர், சென்னை, மறுபதிப்பு - 2010.

முதுமொழிக்காஞ்சி

ஓர் இன மக்களின் வாழ்வியலைத் தீர்மானிப்பவையாக அங்குள்ள அரசியல், பொருளியல், சமூகவியல் ஆகிய மூன்றும் விளங்குகின்றன. சமத்துவச்சமூகத்தை நோக்கிய மாற்றத்துக்கான இயக்கங்களும் மேற்கண்ட இம்மூன்று கூறுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்கின்றன. எனினும் ஒவ்வொரு இயக்கமும் தாம் இயங்குகிற சமூகத்தின் தேவை கருதி இக்கூறுகளின் வரிசைமுறையில் மாற்றம் செய்து கொள்கின்றன.

தமிழ்ச் சமூகத்தில் மக்களைப் பாகுபடுத்தும் வலிமையான கூறாகவும், பொருளியல் ஏற்றத்தாழ்வுகளைத் தீர்மானிக்கிற சக்தியாகவும் சாதியம் விளங்குகிறது. சாதிய வேறுபாடுகளைக் களையாமல் பொருளியல் சமத்துவத்தைக் கொண்டுவர இயலாது என்ற நிலை பன்னெடுங்காலமாக நீடித்து வருகிறது. இத்தகைய சூழலில்தான் இருபதாம் நூற்றாண்டளவில் தமிழ் மண்ணில் செல்வாக்குப் பெற்ற பெரியாரியம் சமூகவியலை முன்னிறுத்தியது. சாதிய ஏற்றத்தாழ்வுகளிலிருந்தும், கடவுளின் பெயராலும் மதங்களின் பெயராலும் நிலைபெற்றிருந்த மூடநம்பிக்கைகளிலிருந்தும் மக்களை விடுவிக்க பகுத்தறிவைப் பயன்படுத்திச் சிந்திக்க வைப்பதொன்றே வழி எனப் பெரியார் ஈ.வெ.ரா. கருதினார்.

> *பகுத்தறிவு என்றால் என்ன? ஜீவப் பிராணிகளின் சிந்தனா சக்தியும் சிந்திப்பின் உணர்ச்சியுந்தான் அறிவு என்று சொல்லப்படுகிறது. அச்சிந்திக்கும் தன்மையின் கூர்மையைப் பகுத்தறிவு என்று சொல்லலாம். ஆனால் அப்பகுத்தறிவைப் பெரிதும் மனிதனுடைய சிந்திக்கும் தன்மைக்கும் சிந்திப்பின் கூர்மைக்குமே குறிப்பிட்டுச் சொல்லப்படுகின்றது... ... ...*
>
> *பகுத்தறிவில்லாத எந்த ஜீவராசியும் தன் இனத்தை வருத்தி வாழ்வதில்லை; தன் இனத்தைக் கீழ்மைப்படுத்துவதில்லை; தன் இனத்தின் உழைப்பாலேயே வாழ்வதில்லை; தன் இனத்தின் மீது சவாரி செய்வதில்லை.*

அ. புவியரசு

தமிழாசிரியர், தூய அகுசுதினார் நடுநிலைப்பள்ளி, குடந்தை.

பகுத்தறிவுள்ள மனிதன் தன் இனத்தைக் கீழ்மைப்படுத்து கிறான். வாகனமாய் உபயோகப்படுத்துகிறான். சோம்பேறியா யிருந்து தன் குலத்தின் உழைப்பிலேயே வாழ்கிறான். பாடுபட ஒரு கூட்டமாகவும் - பயன் அனுபவிக்க இன்னொரு கூட்டமாகவும் பிரிந்து கொள்ளுகிறான்.... ... .

பரஸ்பர உதவிக்காக ஏற்பட்ட சமூக வாழ்க்கை, பரஸ்பரத் தொல்லைக்கும் உபத்திரவத்துக்கும் ஆளாக ஏற்பட்டுவிட்டது. சமுதாயத் துறையில் இன்றுள்ள வேற்றுமை, பகைமை, துவேஷம், இழிவு, தரித்திரம், மடமை முதலிய குணங்கள் மனிதனின் அறிவுக் குறைவினால் - பகுத்தறிவு இல்லாததினால் அல்லது பகுத்தறிவைச் செவ்வனே பயன்படுத்தாததினால் ஏற்பட்டவை என்றுதான் சொல்ல வேண்டுமேயொழிய, காலக்கொடுமையாலோ, கடவுள் தன்மையாலோ, அரசாட்சியாலோ ஏற்பட்டது என்று எவரும் சொல்லிவிட முடியாது. (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், முதல் வரிசை, தொகுதி - 5, தத்துவம் - 1, பக். 2391-2394)

என்று தமது உரையின் வாயிலாகப் பகுத்தறிவு குறித்த தமது கருத்துகளை வெளியிடுகிறார் பெரியார் ஈ.வெ.ரா.

இருபதாம் நூற்றாண்டில் பெரியார் ஈ.வெ.ராவால் முன்னெடுக்கப்பட்ட இப்பகுத்தறிவுச் சிந்தனைக்கான வேர்கள் தமிழ் இலக்கியச் சூழலில் பண்டைக்காலத் தொட்டே பதிவாகியிருப்பதை அறிய முடிகிறது. இந்த அடிப்படையில் தொல்காப்பியர் சுட்டும் காஞ்சித் திணை குறித்தும் அதனைத் தொடர்ந்து படைக்கப்பட்ட முதுமொழிக் காஞ்சி குறித்தும் ஆய்ந்து அவை புலப்படுத்தும் பகுத்தறிவுச் சிந்தனை களைப் பதிவு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கட்டுரை முன்வைக்கும் முடிவுகள் வருமாறு :

தொல்காப்பியக் காஞ்சியும் பெருந்திணையும் புலப் படுத்தும் பகுத்தறிவுச் சிந்தனைகள்

1. காஞ்சித் திணை நிலையாமை பேசுவது அன்று. பகுத்தறிவின் அடிப்படையில் போரற்ற அமைதி வாழ்வை வலியுறுத்துவதே ஆகும்.

2. காஞ்சித் திணையின் இணையாகச் சொல்லப்பட்ட பெருந்திணையும் பகுத்தறிவின் அடிப்படையிலான காதல் மணத்துக்கும் பெண்ணுரிமைக் குரலுக்கும் களமாக அமைந்துள்ளது.

முதுமொழிக் காஞ்சி முன்வைக்கும் பகுத்தறிவுச் சிந்தனைகள்

3. போரற்ற அமைதியான சூழலை உருவாக்கவும் குடிகளின் சுமைகளைத் தாங்கவும், பகுத்துண்ணலை எளிதாக்கவும் முயலுகிற அரசுகளே தேவை.
4. பொருள்தேடலையும் இல்லறம் நாடலையும் சமவிகிதத்தில் இணைந்து வாழும் ஆண்பெண் சமத்துவ வாழ்வே தேவை.
5. வறுமையை ஒழிக்க வள்ளல் தன்மை தேவையெனினும் மூடநம்பிக்கைகளின் வழிச் சோர்ந்துவிடாத தன் முயற்சியும் திட்டமிடலும் தேவை.
6. சாதியாலும் வர்க்கத்தாலும் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்கான மனமுள்ளோரே உயர்ந்தவர்.
7. சாதிய, வர்க்க ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்த முயல்வோரே தாழ்ந்தவர்.
8. குலப்பெருமையைக் காட்டிலும் கல்விப் பெருமையே உயர்ந்தது.
9. கற்றல் - கற்பித்தலைவிட ஒழுக்கம் நிறைந்த வாழ்வியலே உயர்ந்தது.
10. அன்பைக் காட்டிலும் அக்கறை செலுத்த வேண்டியது பிறர் மதிக்கும்படி வாழுகிற தன்மான வாழ்வே ஆகும்.
11. மிக உயர்வானதாகக் கருதப்படும் தவத்திற்கு அடிப்படை மனத்தூய்மையே யாகும்.
12. மேன்மையான வாழ்வுக்கு அறிவும், தன்முயற்சியும் உழைப்புமே தேவை.
13. மனித வாழ்வின் எச்சமாகக் கருதப்படுவது நற்செய்கை களின் வழிபெறும் புகழேயாகும்.

தொல்காப்பியக் காஞ்சியும் பெருந்திணையும் புலப்படுத்தும் பகுத்தறிவுச் சிந்தனைகள்

புறமும் அகமும்

இவ்வுலக உயிர்கள் அனைத்துக்குமான அடிப்படைத் தேவைகள் இரண்டே. ஒன்று உயிர் வாழ்தலுக்கு அடிப்படையான உணவுத்தேடல். மற்றொன்று இனப் பெருக்கத்துக்கு அடிப்படையான பாலின வேட்கை. உயிரினங் களின் அடிப்படைத் தேவைகளான இவ்விரண்டையும் பண்படுத்த முனைவதே சங்க இலக்கியம். இச்சங்க இலக்கியத்திற்கு இலக்கணமாகக் கருதப்படும் தொல்காப்பியமும் மேற்கண்ட உயிரினத் தேவைகளை உள்ளடக்கியதாகவே அமைந்துள்ளது. இத்தொல்காப்பியம் பசியைத் தணிக்கும் உணவுத்தேடலை மையமாகக் கொண்ட மானுட வாழ்வியலை 'புறம்' என்றும், பாலின வேட்கையைத் தணிக்கும் உறவுத் தேடலை மையமாகக் கொண்ட மானுட வாழ்வியலை 'அகம்' என்றும் வரையறுத்துள்ளது.

காஞ்சித் திணையும் பகுத்தறிவுச் சிந்தனைகளும்

புறம் சார்ந்த வாழ்வியலின் ஒரு கூறாகக் காஞ்சித் திணையை அமைத்த தொல்காப்பியர் அத்திணைக்கான விளக்கத்தை,

காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறியானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே (புறத். - 18)

என்ற நூற்பாவாகக் கூறியுள்ளார். இந்நூற்பாவிற்கு விளக்கம் கூறவந்த உரையாசிரியர்களுள், இளம்பூரணர்,

பாங்கருமையாவது, ஒருவற்கு ஒரு துணையாகாமை, நிலையாமை மூவகைப்படும் இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என .... இதுபோல் அதுவும் நிலையாமை நோந்திறம் பற்றியும் வருதலானும் அதற்கு இது புறனாயிற்று.

(தொல். புறத். உரைவளம், ப. 230)

என்றும், நச்சினார்க்கினியர்

அதற்கு இது புறனாயவாறு என்னையெனின் எண்வகை மனத்தினும் நான்கு மணம் பெற்ற பெருந்திணை போல, இக் காஞ்சியும் அறம் முதலாகிய மும்முதற்பொருளும் அவற்றது நிலையின்மையுமாகிய ஆறனுள்ளும் நிலை யின்மை மூன்றற்கும் உரித்தாய், எல்லாத் திணைகட்கும் ஒத்த மரபிற்றாகலானும், 'பின்னர் நான்கும் பெருந்திணை பெறும்' (தொல். களவியல் - 14)

என்ற நான்குஞ் சான்றோர் இகழ்ந்தாற்போல அறம் முதலிய வற்றது நிலையின்மையுணர்ந்து அவற்றை அவர் இகழ்தலானும், 'ஏறிய மடலிற்றிற' (தொல். அகத். 51) முதலிய நான்குந் தீய காமமாயினவாறுபோல உலகியனோக்கு நிலை யாமையும் நற்பொருளன்றாகலானும், உரிப்பொருள் இடை மயங்கி வருதலன்றித் தனக்கு நிலமில்லாத பெருந்திணை போல அறம், பொருள், இன்பம் பற்றியன்றி வேறு வேறு நிலையாமையென்பதொரு பொருளின்றாதல் ஒப்புமையானும் பெருந்திணைக்குக் காஞ்சிப் புறனாயிற்று.

.... வீடுபேறு நிமித்தமாக பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றுங் குறிப்பினது காஞ்சியாயிற்று. (மேலது, பக். 231, 232)

என்றும், பாரதியார்

பொறியவிக்கும் உரனின்றி இன்பம் விழைந்து மேவன செய்வார் காமவகை பெருந்திணையாவது போல, முயற்சி மேற்கொள்ளும் உரனின்றி நிலையாமை சொல்லி நெஞ்சழிய மனமடிவதே காஞ்சியாவதானும், இவ்விரண்டுக்கும் இடம், பொழுதிரண்டும் வரையறையின்மையானும் பெருந் திணைக்குக் காஞ்சி புறனாயிற்று. ஒப்பற்ற மறுமை யின்பத்துக்கு நிலையற்ற உலகியலை யிகழும் முறையினை யுடையது (காஞ்சித் திணை) (மேலது, பக். 233, 234)

என்றும், க. வெள்ளைவாரணன்

காஞ்சி என்னும் திணை பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனாம். அதுதான் துணையாதலரிய சிறப்பினைப் பெறுதல் காரணமாகப் பல நெறியானும்

நிலைபேறில்லாத உலகியலைப் பற்றி நிற்கும் இயல்பினை யுடையதாம். .... இங்குப் 'பாங்கு அருஞ் சிறப்பு' என்றது தனக்கு ஒருவாற்றானும் ஒப்பில்லாததாய் உயிர்க்குயிராய்ச் சிறந்த செம்பொருளை எனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும். .... உலகியலில் பலவகைத் துன்பியற் கூறுகளையும் கண்டு அஞ்சிப் பின்னிடாது அவற்றை எதிரேற்றுத் தாங்கி நிற்றல் காஞ்சித் திணையாம் எனத் தொல்காப்பியனார் பொதுப்படக் கூறிய இவ்விலக்கணத்தினை அடிப்படை யாகக் கொண்டே தன்மேற் படையெடுத்து வரும் வஞ்சிவேந்தன் சேனையினைப் போரில் எதிரேற்றுத் தடுத்து நிறுத்தல் காஞ்சித் திணையாம் என்னும் சிறப்பிலக்கணமும் பிற்காலத்து உருப்பெறுவதாயிற்று.

(மேலது, பக். 234, 235)

என்றும் கூறி விளக்குகின்றனர்.

மேற்கண்ட உரையாசிரியர்களுள் முந்தைய மூவரும் 'பாங்கருஞ் சிறப்பிற்' என்ற தொல்காப்பியர் சொல்லாட்சிக்கு 'ஒப்பற்ற சிறப்பினை உடைய வீடு பேறு' என்றும், நான்காமவர் மட்டும் 'ஒப்பில்லாத சிறந்த செம்பொருள்' என்றும் உரை எழுதியுள்ளனர்.

காஞ்சிதானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே. (புறத். - 18)

என்ற தொல்காப்பிய நூற்பாவை, "காஞ்சிதானே பெருந்திணைப் புறனே / பாங்கருஞ் சிறப்பிற் / பன்னெறியானும் நில்லா உலகம் / புல்லிய நெறித்தே'' என்று பிரித்துப் பொருள் காண்பதே சிறப்பு. "காஞ்சி தானே பெருந்திணைப் புறனே'' என்று முதலடியில் கூறிய தொல்காப்பியர் இரண்டாவது அடியில் ''பாங்கருஞ் சிறப்பிற்' எனக் கூறுவது காஞ்சித் திணையையே. ஏனெனில் இக்காஞ்சித் திணையானது, பலவகை நெறிகளாலும் இயங்கிக் கொண்டிருக்கிற இவ் வுலகத்தோடு பொருந்துகிற ஒப்பற்ற சிறப்பினை உடைய

திணையாக விளங்குகிறது என்று கொள்வதே சிறப்பாகும். 'நில்லா உலகம்' என்பதற்கு 'நில்லாது இயங்குகிற உலகம்' என்று பொருள் கொள்வதே சிறப்பு. 'உலகம் உவப்ப' என்று திருமுருகாற்றுப் படையும், 'நனந்தலை உலகம்' என்று முல்லைப்பாட்டும், 'வையகம் பனிப்ப' என்று நெடுநல் வாடையும் தொடங்குகின்றன. இவ்வுலக வாழ்வை மைய மாகக் கொண்ட சிந்தனை மரபுக்குரியவை சங்க இலக்கியங்கள். இத்தகைய பின்புலத்தில் தொல்காப்பியச் சொல்லாட்சியான 'நில்லா உலகம்' என்பதற்குப் பொருள் காண்பதே சிறப்பு.

"பாங்கருஞ் சிறப்பினை உடைய நெறியாக காஞ்சித் திணை விளங்குகிறது" என்ற முதல் நூற்பாவின் கருத்துக்கு அரண் செய்வதாகவே காஞ்சித் திணை குறித்த இரண்டாவது நூற்பாவையும் தொல்காப்பியர் அமைத்துள்ளார். காஞ்சித் திணையின் உட்பிரிவுகளைக் கூறும் இந்நூற்பாவில், போர்க் களத்தில் குற்றுயிராகக் கிடக்கும் தலைவனைப் பாதுகாக்க யாரும் இல்லாத சூழலில் பேய் பாதுகாப்பதாக ஒரு பிரிவும், பேயைத் தடுத்து தலைவியே பாதுகாப்பதாக ஒரு பிரிவும் அமைந்துள்ளன. போர்க்களத்தில் குற்றுயிராகக் கிடந்த தலைவன் தாமே தம்முயிரைப் போக்கிக் கொள்வதாக ஒரு பிரிவும், தம் துன்பத்தைப் பகிர முடியாத சூழலில் தவிக்கும் தலைவனைக் குறித்து ஒரு பிரிவும் அமைந்துள்ளன. தலைவனின் இறப்பினால் பாதிக்கப்பட்ட தலைவி தாமே தம்முயிரைப் போக்கிக் கொள்வதாக மூன்று பிரிவுகள் அமைந்துள்ளன. தலைவனோடு உடன்கட்டை ஏற முயன்ற தலைவியைச் சான்றோர் தடுக்கும் நிலையில் அவள் பேசும் பேச்சாக ஒரு பிரிவு அமைந்துள்ளது. போர்க்களத்தில் இறந்த வீரர்க்கு இரங்கிய உலகத்தார் குறித்து மூன்று பிரிவுகளும், இரங்கிய தலைவி குறித்து இரண்டு பிரிவுகளும், இரங்கிய தாய் குறித்து ஒரு பிரிவும், இரங்கிய சுற்றத்தினர் குறித்து ஒரு பிரிவும் அமைந்துள்ளன. தலைவியை இழந்து துன்புற்ற தலைவனைக் குறித்து ஒரு பிரிவு அமைந்துள்ளது. போர் தொடுத்த வேந்தனுக்குப் பெண் கொடுக்க அஞ்சிய முதுகுடியினர் குறித்து ஒரு பிரிவும், எண்ணற்ற உயிர்களை அழிக்கக் காரணமான கூற்றத்துப் பெருமை குறித்து ஒரு பிரிவும், எவர் அழியினும் அழியாத புறங்காடு குறித்து ஒரு

பிரிவும், மூத்தோர் இளையோர்க்குத் தம் வாழ்வின் வழி எடுத்துக்காட்டிய நெறி குறித்து ஒரு பிரிவும் அமைந்துள்ளது (புறத்திணையியல் - 19).

போர்கள் நிறைந்த சமூகத்தில் ஏற்படும் இழப்புகளையும், துயரங்களையும், கைம்மைக் கோலங்களையும் காட்சிப் படுத்துவதன் வாயிலாகப் போரற்ற அன்பு நிறைந்த சமூகத்தை அமைக்கிற பணியைக் காஞ்சித்திணை செய்துள்ளது. எனவே தான் பல நெறிகளாலும் இயங்குகிற இவ்வுலகில் பாங்கரும் சிறப்பினை உடையது காஞ்சித் திணை என்று தொல்காப்பியர் அடைகொடுத்துச் சிறப்பிக்கிறார்.

இக்காஞ்சித் திணையில் இடம் பெற்றுள்ள பேய், கூற்றம் பற்றிய குறிப்புகள் அக்கால நம்பிக்கைகளைப் பிரதிபலிப் பனவாக இருப்பினும் அன்றைய சூழலில் பகுத்தறிவின் பாற்பட்ட முற்போக்குச் சிந்தனையை வெளிப்படுத்திய திணையாகவே காஞ்சித் திணை விளங்குகிறது.

பெருந்திணையில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

மறுமை இன்பத்துக்கு மாற்றாக இவ்வுலக அமைதி வாழ்வை வலியுறுத்திய காஞ்சித் திணையைப் பெருந் திணைக்குப் புறனாகத் தொல்காப்பியர் காட்டியுள்ளார். காஞ்சித் திணைக்கு மறுமை இன்பத்தை மையப்படுத்திய உரையாசிரியர்களோ பெருந்திணைக்கு எழுதிய உரையில் நிலையாமை நோந்திறம் பற்றி வருவதாகவும் (தொல். புறத். உரைவளம், ப. 231), தீய காமமாயினதாகவும் (மேலது, ப. 232), பொறியவிக்கும் உரனின்றி இன்ப நாட்டம் மிக்கதாகவும் (மேலது, ப. 233) குறித்துச் சென்றனர்.

உரையாசிரியர்களின் இத்தகைய கூற்றுகள் சங்க இலக்கிய மரபுக்கு மாற்றாக அமைந்துள்ளன. பெருந்திணைக்கு இலக்கணமாகத் தொல்காப்பியர்

ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே (அகத். - 54)

என்ற நூற்பாவை அமைத்துள்ளார். இப்பெருந்திணைக்கான ஏற்புடைய விளக்கத்தை வ.சுப. மாணிக்கனார் தமது 'தமிழ்க் காதல்' என்ற நூலில் விரிவாகத் தந்துள்ளார்.

அகத்திணையாவது உள்ளப் புணர்ச்சி; ஆண் பெண் இருவர் உள்ளமும் காதலுக்கு ஒத்திருத்தல். பெற்றோர் முதலாகப் பிறர் யாருள்ளமும் ஒத்திருக்க வேண்டும் என்பது இல்லை; பிறர் உள்ளமெல்லாம் இவ்விருவர் உள்ளத்திற்கு இணங்கியாதல் வேண்டும். இதுவே அகநெறி. ''அன்புறு கிளவியாள்'' (கலி. 138), ''ஒண்டொடி நோய் நோக்கு'' (கலி. 140) என வருதலின் தலைவி அவன் காதலுக்கு இசைந்தாள் என்பது தெளிவு. ''என் நெஞ்சாறு கொண்டாள்'' (கலி. 139) ''என் நெஞ்சம் இடிய இடைக் கொள்ளும் சாயல் ஒருத்தி'' (கலி. 140) என வருதலின் அவன் காதல் வெளிப்படை. இருவரும் ஒத்த அன்புடைக் காதலர்கள்; இயற்கைப் புணர்ச்சியளவில் இடையூறு பட்ட ஐந்திணைக் காதலர்கள். தலைவன் மடலேறி இடையூற்றைத் தவிர்த்தான். இற்செறிக்கப்பட்ட காதலியைத் தன் பெருமுயற்சியால் இல்லக் கிழத்தி ஆக்கினான்; கற்பியற்படுத்தினான். அப்பெரு முயற்சிக்கு அவன் நாண் விட வேண்டியதாயிற்று. அங்ஙனம் செய்து அவள்தன் பெற்றோரை வணக்க வேண்டிய தாயிற்று. இவையெல்லாம் மிகு செயல் அல்லவா? ஆதலின் பெருந்திணையாயிற்று என அறிக. (ப. 199)

என்று 'ஏறிய மடற்றிறம்' என்பதற்கான விளக்கத்தையும்,

'என் யாக்கை காமத்தால் மெலிந்து ஏங்கி வறிதாயிற்று. இனி அவர் வரினும் என் நோய்க்கு மருந்தாகார். போன இடத்திலேயே அவர் இருப்பாராக' (நற். 64) என்று ஓர் ஐந்திணைத் தலைவி பெருந்திணை மொழிகின்றாள். ''அணைத்தால் தோழி நம் தொல்வினைப் பயனே'' (அகம். 243) என்ற தலைவியின் நோவிலும் பெருந்திணைக் குறிப்பு உண்டு.

இல்வாழ்க்கையில் காதல் நுகர்ச்சிக்கு ஒத்த மதிப்புக் கொடாது, இளமையை வேண்டுமளவு நுகராது, பொருள்

முதலியவற்றில் நாட்டங் கொண்டு ஒழுகுவது மிகை யாதலின் 'இளமை தீர்திறம்' பெருந்திணையாயிற்று. (ப. 204)

என்று 'இளமை தீர்திறம்' என்பதற்கான விளக்கத்தையும்

சுற்றுப்புறக் காட்சிகள் விடாது தாக்கினாலும், காமம் சுரந்து நெஞ்சிற் பரவி அலைத்தாலும் தலைவி நாண்விடாள். ஊற்றிய உணர்ச்சியைக் காட்டாள். தனக்குத் தானே ஆறுதல் அடைவாள்; அல்லது தோழியால் ஆற்றுவிக்கப்படுவாள். இது ஐந்திணை நெறி. இந்நெறி வழுவிக் காதலனைப் பிரிந்த தலைவி, தனை மறந்த துயர் கொண்டு ஊர் அறிய வந்து புலம்பும்போது நாண் நீங்குகின்றது. பெருந்திணை தோன்றுகின்றது... ... ... நல்லந்துவனார் ஐந்திணைப் பெண், பெருந்திணைப் பெண்ணாக மாறும் நிலைகளை (கலி. 142) மேற்கண்டாங்கு வடித்துக் காட்டுவார். அதனால் நாணமும் காம அடக்கமும் ஐந்திணைப் பண்பு எனவும் நாணாமையும் அடங்காமையும் பெருந்திணைப் பண்பு எனவும் அறிகின்றோம். (பக். 205, 206)

என்று 'தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்' என்பதற்கான விளக்கத்தையும்,

வீரர்கள் கூடியிருக்கும் விழாக் களத்திற்குச் சென்றேன். அங்கு என் தலைவனைக் காணவில்லை. மகளிர் கை கோத்தாடும் துணங்கையரங்கத்திற்குச் சென்றேன். ஆண்டும் அவனைக் கண்டிலேன். பிற இடங்களுக்கும் சென்றலைந் தேன். யாண்டும் காண்கிலேன்'' (குறுந். 31) எனக் களவுத் தலைவி புலம்புகிறாள். மள்ளரின் விழாவிற்கும் மகளிரின் துணங்கைக்கும் இல்லங் கடந்து புறப்பட்டே போய்விட்டாள். எண்ணம் சொல் அளவில் அமையாது இயங்கிய இச்செய்கை 'மிக்க காமத்து மிடல்' எனப்படும். இப்பாடலை ஐந்திணைக் களவுத் துறையாக இதுகாறும் கருதி வருகின்றனர். அது சரியெனப்படவில்லை. நாண் கடந்த செயலால் களவுத் தலைவி பெருந்திணைத் தலைவியாகின்றாள். (ப. 213)

என்று 'மிக்க காமத்து மிடல்' என்பதற்கான விளக்கத்தையும் வ.சுப. மாணிக்கனாரின் 'தமிழ்க் காதல்' வழி அறிய முடிகின்றது.

இந்த அடிப்படையில் நோக்குகையில் தலைவனும் தலைவியும் கருத்தொருமித்த நிலையில் அவர்களது காதலுக்கு எதிராகத் தலைவியின் வீட்டில் தோன்றும் தடைகளைத் தகர்ப்பதற்குத் தலைவனுக்குக் கிடைத்த ஆயுதமே 'ஏறிய மடற்றிறம்' என்பதாகும். இளமை தீர்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்க காமத்துமிடல் என்ற மூன்றும் சங்கத் தலைவியர் அன்பின் ஐந்திணையில் தங்கட்கு விதிக்கப் பட்ட கட்டுப்பாடுகளைக் கடக்கும் இடங்களாகும். தமிழ்ப் பண்பாட்டு எல்லைக்குள் நின்றுகொண்டு எழுப்பும் பெண்ணுரிமைக் குரல்களாகவே இவை விளங்குகின்றன.

இவ்வாறாகக் காதல் மணத்துக்கும் - கலப்பு மணத்துக்கும் இருந்த தடைகளை உடைக்கவும், பெண்களின் மீதான ஒடுக்குமுறைகளைக் களையவும் பகுத்தறிவின் துணை கொண்டு பண்டைத் தமிழர் வெளிப்படுத்திய உணர்வு களையே பெருந்திணை வெளிப்படுத்துகிறது. ஆக பெருந் திணையும் பெருந்திணைக்குப் புறனான காஞ்சித்திணையும் பகுத்தறிவின் துணைகொண்டு பண்டைத் தமிழர் வெளிப் படுத்தியவை என்பதில் ஐயமில்லை.

இத்தகைய புரிதலுடன் காஞ்சித் திணையின் ஒரு பிரிவாகச் சொல்லப்பட்டுள்ள மூத்தோர் இளையோர்க்குத் தம் வாழ்வின் வழி எடுத்துக்காட்டிய முதுகாஞ்சிக்கு உரிய இலக்கியமாகக் கருதப்படும் முதுமொழிக்காஞ்சி முன்வைக்கும் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் காணலாம்.

3. முதுமொழிக் காஞ்சி முன்வைக்கும் பகுத்தறிவுச் சிந்தனைகள்

மதுரைக் கூடலூர் கிழாரால் இயற்றப்பட்ட முதுமொழிக் காஞ்சி பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகக் கருதப் படுகிறது. அதிகாரத்திற்குப் பத்துப் பாக்களாக நூறு பாக்களைக் கொண்டிருக்கும் இம் முதுமொழிக் காஞ்சியும் மனிதகுல ஒற்றுமைக்கு எதிரான போரினைத் தவிர்த்து அமைதியை

நிலைநாட்டும் தொல்காப்பிய அறவழிக்கே - பகுத்தறிவு நெறிக்கே ஆதரவளிக்கிறது.

கழிதறு கண்மை பேடியிற் றுவ்வாது (4:2)

என்ற முதுமொழி, அளவின் மிக்க வீரத்தை மறுத்துரைப்பதும்,

சார்வி லோருக் குறுகொலை யெளிது (8:10)

என்ற முதுமொழி நல்லினத்தோர் சேர்க்கை இல்லாதவரின் கொலைவெறி குறித்து எச்சரிப்பதும்,

உறழ்வெய் யோருக் குறுசெரு வெளிது (8:2)

என்ற முதுமொழிக் கலகத்தை விரும்புவோர்க்குக் கடும்போர் எளிது எனச் சுட்டிக்காட்டுவதும் போரினால் உண்டாகும் தீய விளைவுகளை உணர்த்துதற்கேயாம். மேற்சுட்டிய,

உறழ்வெய் யோருக் குறுசெரு வெளிது (8:2)

என்ற முதுமொழிக்கு முன்னதாக

புகழ்வெய் யோர்க்குப் புத்தேணா டெளிது (8:1)

என்று முதுமொழிக் காஞ்சி ஆசிரியர் பாடுவதன் நோக்கம் 'உறழ் வெய்யோரை' 'புகழ் வெய்யோராக' ஆக்க வேண்டும் என்ற அவாவேயாம்.

போரைத் தவிர்ப்பதோடு ஓர் அரசனின் கடமை முடிந்து விடுவதில்லை. அரசன், செற்றுஉடன் உறைவோரைத் தவிர்த்தலும் (9:2), முறையில்லா ஆட்சியை மாற்றலும் (9:1) வேண்டும். மேலும் அவ்வரசன் ஏமம் வேண்டுவோனாகவும் முறை செயல் தண்டானாகவும் (10:10) இருப்பதோடு, தன் குடிகளின் சுமைகளைத் தாங்குபவனாகவும், பகுத்துண்ணலை எளிதாக்குபவனாகவும் (8:9) இருக்க வேண்டும் என்கிறது முதுமொழிக்காஞ்சி.

ஓர் அரசாட்சியின் வழிப் போரற்ற நிலை மட்டுமல்ல வறுமையற்ற நிலையும் வரவேண்டும் என்ற எண்ணத்தை வெளியிடும் முதுமொழிக் காஞ்சியின் ஆசிரியர்,

முறையி லரசர்நாட் டிருந்து பழியார் (3:6)

என்று புலவர்களை எச்சரிக்க வேண்டிய நிலையும் இருந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஆண்-பெண் சமத்துவ வாழ்வு

பெருந்திணையின் கூறுகளான இளமைத் தீர்திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம், மிக்கக் காமத்து மிடல் என்ற மூன்று நிலைகளிலும் வெளிப்படும் தலைமகளின் உணர்வுகளை மனத்துள் கொண்டு

நீரறிந் தொழுகாதாள் தார மல்லள் (5:1)

என்றும்

தாரமா ணாதது வாழ்க்கை யன்று (5:2)

என்றும் கூறிப் பெருந்திணை மகளிரை அமைதிப்படுத்த முயலும் முதுமொழிக் காஞ்சியின் ஆசிரியர், பொருள் வேட்கையால் பிரிந்த தலைமகனை மனத்துள் கொண்டு

மக்கட் பேற்றிற் பெரும்பே றில்லை (6:1)

என்றும்

காமம் வேண்டுவோன் குறிப்புச் செயல் தண்டான் (10:10)

என்றும் கூறி இல்லறத்தின் தேவையை வலியுறுத்துகிறார்.

பெருந்திணை தலைவியரின் உணர்வு வெளிப்பாடு களுக்குப் பொருள்வயின் பிரிவோடு பரத்தையர் பிரிவும் காரணம் என்று கருதி

வாய்ப்புடை வழக்கின் நல் வழக்கு இல்லை (6:3)

என்றும்,

வாயா வழக்கின் தீ வழக்கு இல்லை (6:4)

என்றும்,

தற்போற் றாவழிப் புலவிநல் கூர்ந்தன்று (9:5)

என்றும் தலைமகனுக்கான முதுமொழிகளைப் பாடியுள்ள நூலாசிரியர் திறம் இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பொருள் தேடலையும் இல்லறம் நாடலையும் சம விகிதத்தில் இணைத்து வாழும் ஆண் பெண் சமத்துவ வாழ்வையே

பெருந்திணையை ஒட்டிய கருத்துகளாக முதுமொழிக் காஞ்சி வெளிப்படுத்தியுள்ளது.

ஈகையும் தன்முயற்சியும் திட்டமிடலும்

பொருளியல் ஏற்றத் தாழ்வுகளைக் களைவதற்கான பண்டைத் தமிழ் மரபாகிய ஈகையை வலியுறுத்தும் முதுமொழிக் காஞ்சி

இரத்தலி னூஉங் கிளிவர வில்லை (6:9)

என்று இரத்தலைப் பழிக்கிறது. ஏனெனில் மூடநம்பிக்கை களின் வழிச் சோர்ந்து விடாத தன்முயற்சியை வலியுறுத்துவதே முதுமொழிக் காஞ்சியின் நோக்கமாகும். அத்துடன்

முற்பெரு கலிற்பின் சிறுகாமை சிறந்தன்று (1:10)

என்று திட்டமிட்ட பொருளியல் வாழ்வையும் இந்நூல் வலியுறுத்துகிறது.

சாதியும் வர்க்கமுமாய் முரண்பட்டுக் கிடக்கும் சமூகத்தில் தன்முயற்சியையும் திட்டமிடலையும் தாண்டி வறியவர் உருவாகின்றனர். இவ்வறியவரின் நிலை உயர்த்த முயலும் ஈகைக்குப் பழியோர் செல்வம் கூடாது (4:1) என்கிறது முதுமொழிக் காஞ்சி. மேலும் பேணில் ஈகையும் (4:4), பொய் வேளாண்மையும் (4:6), அறத்தாற்றின் ஈயாத ஈகையும் (5:8) ஈகையே அல்ல என்று கூறி, நல்வழிப்பட்ட செல்வத்துப் பயனாக ஈகை அமைய வேண்டும் என்று வலியுறுத்து கிறது முதுமொழிக்காஞ்சி.

ஈரமுடைய மனிதர்களாலேதான் ஈகை சிறக்கிறது (2:2, 8:3) என்றும், ஈதலே மேன்மையானது (6:10) என்றும் கூறி ஈகையாளர்களை ஊக்கப்படுத்த முனையும் முதுமொழிக்காஞ்சி தானே இன்புறும் தனிமனிதர்களையும் (4:10), சோராக் கையர்களையும் (5:4), இயைவதை மறைக்கும் கொடியவர் களையும் (6:5) கண்டிக்கிறது.

நிலவுடைமைச் சமூக அமைப்பில் பொருளியல் ஏற்றத் தாழ்வுகள் மிகுகின்றன. இச்சூழலில் வறுமையை ஒழிக்க தூயதாகிய வள்ளண்மை வேண்டும் என்ற பண்டைத் தமிழ்

மரபை முன்மொழியும் முதுமொழிக் காஞ்சி அத்துடன் நின்று விடாமல் மூடநம்பிக்கைகளின் வழிச் சோர்ந்து விடாத தன் முயற்சியும் திட்டமிடலும் வறுமையைக் குறைக்கும் வழிகள் என்ற கருத்தை முன்வைப்பது பகுத்தறிவின் பாற்பட்டது ஆகும்.

உயர்ந்தவர் - தாழ்ந்தவர் : மாற்றுச் சிந்தனை

பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தில் பகுத்தறிவின்பாற்பட்ட மாற்றுச் சிந்தனையை முன்வைக்கிறது முதுமொழிக்காஞ்சி.

பேரிற் பிறந்தமை ஈரத்தின் அறிப (2:1)

என்னும் முதுமொழியின் வாயிலாகப் பெருமைக்குரிய பிறப்பு என்பதற்கான அளவுகோல் அவர் மனத்தில் உள்ள ஈரமே தவிரச் சாதியோ வருணமோ அல்ல என்பதைத் தெளிவு படுத்துவதுடன் ஒருவர் மன ஈரத்தை அவரது ஈகையால் அறியலாம் (2:2) என்றும், ஈகையைவிடச் சிறந்தது வாய்மை யுடையே (1:4) என்றும் அடுக்குகிறது முதுமொழிக் காஞ்சி. இங்கு,

வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல் (குறள். 291)

என்ற வள்ளுவரின் வாய்மைக்கான இலக்கணமும் குறிக்கத் தக்கது. சாதியாலும் வர்க்கத்தாலும் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்வுக்கான மனமுள்ளோரே உயர்ந்தவர் என்னும் முதுமொழிக் காஞ்சியின் பகுத்தறிவுச் சிந்தனை சிறப்பானது.

சிற்றிற் பிறந்தமை பெருமிதத்தி னறிப (2:6)

என்னும் முதுமொழியின் வழி, ஒரு சமூகத்தில் தாழ்ந்தவர் என்பதற்கான அளவுகோலாக 'உதவும் மனமின்றிச் செருக்குடன் வாழ்தலை' முன்னிறுத்துகிறது முதுமொழிக் காஞ்சி. இது பிறப்பு அடிப்படையிலான ஏற்றத்தாழ்விற்கு எதிரான மாற்றுச் சிந்தனை மட்டுமல்ல. சாதிய, வர்க்க ஏற்றத் தாழ்வுகளை நிலைநிறுத்த முயல்வோரைத் தாழ்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்துவதும் ஆகும்.

கல்வியும் ஒழுக்கமும் மானமும்

சமூக ஏற்றத்தாழ்வுகளை நிலைநிறுத்த கடவுளின் பெயராலும் மதங்களின் பெயராலும் பரப்பப்பட்ட மூட நம்பிக்கைகள் பயன்பட்டன. பாமர மக்களை மூடநம்பிக்கை களில் இருந்து விடுவிக்கும் ஆயுதமாகச் சிந்தனைத் திறன்மிக்க கல்வியையே பகுத்தறிவாளர்கள் கையில் எடுத்தனர். இக் கல்வி பற்றிக் குறிப்பிடும் முதுமொழிக்காஞ்சி,

குலனுடை மையிற் கற்புச் சிறந்தன்று (1:7)

என்று சாதிக்கு மாற்றாகக் கல்வியை முன்னிறுத்துகிறது. இந்தக் கல்வி என்பது வெறும் ஏட்டுப்படிப்பல்ல; கற்றவர் களின் வாழ்க்கையைப் பின்பற்றி ஒழுகுகிற வாழ்க்கை முறை (1:8) என்றும்

மேதமையைவிடக் கற்றவற்றை மறவாமல் வாழ்தலே சிறப்பு (1:3)

என்றும் கருத்துகளை அடுக்குகிற முதுமொழிக் காஞ்சி

ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை (1:1)

என்றும்

காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல் (1:2)

என்றும் கூறியிருப்பது சமூக மாற்றத்துக்கான களப்பணியில் பகுத்தறிவின் பங்களிப்பை உணர்த்தும்விதமாக உள்ளது. மேற்கண்ட முதுமொழிகளின் வழிக் கற்றல்-கற்பித்தலை விட ஒழுக்கம் சார்ந்த வாழ்வியலே முதன்மையானது என்றும் அன்பைக் காட்டிலும் அக்கறை செலுத்த வேண்டியது பிறர் மதிக்கும்படி வாழ்கிற தன்மான வாழ்வே (கண்ணஞ்சப்படுதல்) என்றும் உணர்த்துகிறது முதுமொழிக்காஞ்சி. சாதியா? கல்வியா? எனில் கல்வியே என்றும் கல்வியா? ஒழுக்கமா? எனில் ஒழுக்கமே என்றும் அன்பா? தன்மானமா? எனில் தன்மானமே என்றும் விடையிறுப்பதன் வாயிலாகத் தமிழ்ச் சமூகத்தின் தேவைகளை முதுமொழிக் காஞ்சியின் ஆசிரியர் உள்வாங்கியிருப்பது புலனாகிறது. எனவேதான் மிக உயர்ந்த தாகக் கருதப்படும் தவத்திற்குக்கூட இவ்வுலக வாழ்க்கை

சிறக்க உதவும் மனத்தூய்மையே அடிப்படை **(7:10)** என்கிறார் இந்நூலாசிரியர்.

விடாமுயற்சியும் உழைப்பும்

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் (குறள். 619)

என்றார் வள்ளுவர். முதுமொழிக் காஞ்சியின் ஆசிரியரும் வள்ளுவரை வழிமொழிவதைப்போல

மிகுதி வேண்டுவோன் தகுதி தண்டான் (10:6)

என்றும்

துன்பம்வெய் யோர்க்கு இன்பம் எளிது (8:5)

என்றும்

பேரறிவி னோனிது வாழாமை பொய் (7:1)

என்றும்

சீருடை யாண்மை செய்கையி னறிப (2:10)

என்றும் கூறி கடவுள் நம்பிக்கையாளரின் கருத்தியலுக்கு மாற்றாக விளங்கும் அறிவையும் தன்முயற்சியையும் உழைப்பையுமே வாழ்க்கைக்கான அடிப்படைகளாக முன்னிறுத்துகிறார்.

மனித வாழ்வின் பயன் கூறும் போதும்
இசையிற் பெரியதோ ரெச்சமில்லை (6:8)

என்கிறார். இதனைத்தான் வள்ளுவரும்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள். 231)

என்கிறார். சமத்துவ நோக்கிலான சமூக மாற்றம் கருதிய அறிஞர்களின் சிந்தனைப்போக்கு ஒத்திருப்பதை இங்கு அறியமுடிகிறது.

மேற்கண்டவற்றின் வாயிலாக முதுமொழிக்காஞ்சி நிலையாமையை வலியுறுத்தவில்லை என்பதும் இவ்வுலக வாழ்க்கை சிறப்பதற்கான வழிகளைப் பகுத்தறிவுப் பார்வையோடு வெளிப்படுத்தியுள்ளது என்பதும் புலனாகின்றன.

துணை நூல்கள்

- ஆனைமுத்து வே. (பதிப்பாசிரியர்), பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், முதல்வரிசை - தொகுதி : 5 - தத்துவம் : 1, பெரியார் ஈ.வெ. இராமசாமி - நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 600 005, இரண்டாம் பதிப்பு - 2009
- சுப்பிரமணியன் ச.வே., (உரையாசிரியர்), தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், 3/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108, மூன்றாம் பதிப்பு, 1999.
- பாலசுந்தரம், தி.சு., (உரையாசிரியர்), முதுமொழிக்காஞ்சி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை - 1, இரண்டாம் பதிப்பு, 1954.
- பெருமாள்சாமி வெ., சங்க இலக்கியக் காட்சிகள், மார்க்சிய வெளிச்சத்தில், பாரதி புத்தகாலயம், 421, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018, முதற் பதிப்பு - 2010
- முருகன், ப. (உரையாசிரியர்), திருக்குறள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி), லிட்., 41-ஆ, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098, பன்னிரண்டாம் அச்சு, 2011.
- மாணிக்கம், வ.சுப., தமிழ்க் காதல், சாரதா பதிப்பகம், G-4, சாந்தி அடுக்ககம், 3 ஸ்ரீ, கிருஷ்ணாபுரம் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014, முதற் பதிப்பு - 2007.
- வெள்ளைவாரணன் க., தொல்காப்பியம் புறத்திணை யியல் - உரைவளம், பதிப்புத்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 625 021, முதற் பதிப்பு - 1983.

திருக்குறள்
(வள்ளுவர் சமயம் - வாழ்க்கை விழைவு)

1. வள்ளுவர் முன்னைக் கால வாழ்வியல்

இது பழந்தமிழர் காலம்; தமிழரது பண்பாடு தோற்றம் கொண்டு தொடர்ந்து வாழ்ந்துவந்த காலம்; ஈராயிரம் ஆண்டு முற்பட்ட காலம்.

பரம்பொருள் பற்றித் தமிழர் உருவாக்கிய சமயம் யாதும் அப்போது இல்லை. வைதிகம், வைணவம், சைவம், சாக்தம் ஆகியவை பரம்பொருட் கொள்கை உடையவை. இவை பழந்தமிழகத்துக்கு உரியவை அல்ல. சமணம், பவுத்தம், ஆசிவகம் வடபுலத்திலிருந்து முதலில் தமிழகத்தில் இறக்குமதி ஆனவை.

தமிழகத்தை ஆட்கொண்ட தமிழகத்தை இயக்கிய சமயம் அன்று யாதும் இல்லை; இன்றைய சைவ, வைணவ, அம்மை, அம்மன், ஆண்டி, கருப்பன், வெள்ளையன் சமயம் இன்றைத் தமிழரை ஆட்கொண்டுள்ளன. இயக்குகின்றன. இவை அன்றில்லை.

பழந்தமிழரை ஆட்கொண்ட கொள்கை - இயக்கிய கொள்கை - அகம்புறம் வாழ்க்கைக் கோட்பாடுகள். காதல், காமம், இல்லறம், போர், மறம், கொடை / வள்ளன்மை, புகழ், நடுகல்... இவை அகம் புறம். இவ்வாறான வையக வாழ்வே வாழத்தக்கது (life-affirmation) என்னும் கொள்கை பழந்தமிழர் கொள்கை. இக்கொள்கையே தமிழர் சமயம் எனலாம். இவ்வாழ்வைச் சமயச் சார்பின்மை (secularism science) என்பர். இது அறிவியல் சார்ந்தது; பகுத்தறிவு (rationalism) சார்ந்தது.

தி. முருகரத்தினம்

முன்னைப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

பழந்தமிழகத்தில் அறிவிற்குப் புலப்படா இயற்கைப் பொருள்கள், அச்சம் தரும் இயற்கைப் பொருள் பற்றிய வழிபாடு இருந்தது. கந்து, மரம், சுனை, மலை, நீர் நிலை இத்தகையவை இவை.1 இவை இயற்கை வழிபாடு (felishisim) கொடுவினை கொள்வினைச் சூழ்ச்சி (magic) எனலாம். முருகு அல்திணை; முருகன் உயர்திணை; உயிர்த்திணை (animism) என்பர்.

இவை முழுப்பொருண்மையுடைய சமயம் ஆகுமா?

2. வள்ளுவர் கொள்கை

வள்ளுவர் பின்னர் வந்தவர். ஆயினும் பழந்தமிழர் வைய வாழ்வியற்கொள்கை மேற்கொண்டவர்; விரித்துரைப்பவர். அவர்தம் நூலின் பெயர் முப்பால், அறம், பொருள், இன்பம் வகுத்தும் தொகுத்தும் தந்தவர். இவை வைய வாழ்வு பற்றியவை (secularism, life affirmation).

3. வள்ளுவர் நூல் : சொல்லாட்சிகள்

வள்ளுவரின் வாழ்வியற் கொள்கையை அறியும்முன் வள்ளுவரின் நூலினை அறிதல் வேண்டும். இன்று காணப் படும் பாயிரம் நான்கு பத்துக்களும் வள்ளுவர் வரைந்தவையாக மாட்டா. ஏனெனில் அவை நூலின் உள்வரும் 'மெய்யுணர்தல்' 'அவாஅறுத்தல்' என்னும் பத்துக்களுடன் முரண்கின்றன. மொழி நடையும் பிற்காலத்தவை. இவை சமணர் சேர்க்கை யாகலாம். 'ஆரா இயற்கை அவாநீப்பின். அந்நிலையே பேரா இயற்கை தரும்' என்னும் குறட்பா 'அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால் பிறவாழி நீந்தல் அரிது' என்னும் பின்னுள்ள குறட்பாவுடன் முரண்படுவதைக் காணலாம்.

'கடவுள்' என்னும் சொல்லாட்சி முப்பாலில் இல்லை. பழந்தமிழில் 'கடவுள்' என்னும் சொல் பரம்பொருளைக் குறித்ததில்லை.

'இறை' என்னும் சொல்லுக்குத் 'தலைவன்' என்பதே பொருள். 'இறைமாட்சி' என்னும் பத்தின் தொடராட்சியில் இப்பொருளைக் காணலாம். 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' என்னும்

குறட்பாவில் இப்பொருண்மையே உள்ளது காண்க. 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகு இயற்றியான்' எனப் பரம்பொருளை வைதல் கூடுமா! உலகியற்றியான் மன்னவன்தான்.

4. முப்பால் உண்டு; நாற்பால் இல்லை

அறம் பொருள் இன்பக் கோட்பாடு வைதிக சமயத் தார்க்கோ, சிரமண சமணர் பவுத்தர்க்கோ சார்ந்தது அல்ல. அது வையக வாழ்வை வேண்டிப்போற்றும் சார்வாக உலகாய்தற்கு உரியதாகலாம். இம்முப்பான் கொள்கைக்கு மாறாக நாற்பாற் கொள்கை - அறம் பொருள் இன்பம் வீடு - வைதிக சமயத்தால் உருவாக்கப்பட்டது. முப்பாலை விட்டதே வீடாம்! காமத்தைக் கடத்தல் வேண்டுமாம்; வையகத்தை விலக்கல் வேண்டுமாம்; துறத்தல் வேண்டுமாம். வள்ளுவர்க்கு இத்தகைய நாற்பாற் கோட்பாடு உடன் பாடில்லை. இதனை அவர் அறியார்.

வள்ளுவர் சமயம் இன்ப இல்வாழ்க்கை; ஒப்புரவு ஈகை செய்தல்; புகழ் ஈட்டுதல்; பின் பற்றினைத் துறத்தல்; இயற்கை அடைதல், பரம்பொருள் எண்ணம் இல்லை.

5. உயிர் யாது?

வள்ளுவர் முப்பாலில் இம்மை மறுமை பேசப்படுகிறது. தேவ உலகமும் நரக இருளுலகமும் காட்சி தருகின்றன. இருவினை இயக்கம் தென்படவில்லை. 'ஊழ்' என்னும் வாழ்வியல் நெறி பேசப்படுகிறது. உயிர் பேசப்படுகிறது. ஆனால் 'ஆத்மா' பேசப்படவில்லை. உயிர் அழியாது மறையாது நிலைபேறு கொண்டிருந்ததால் தானே இம்மை மறுமை தேவர் நரகர் உளவாகலாம். வள்ளுவர்க்கு உயிர், நிலைபேறா (permanent) இக்கொள்கைகளைச் சமண பவுத்தம் கொண்டு இயங்குபவை. வள்ளுவர் இவற்றைச் சுட்டிச் செல்கிறாரா? ஒட்டிச் செல்கிறாரா? வள்ளுவர் சமயத்தின் ஒருகூறு இவை எனல் வேண்டும். பரம்பொருளை உடன்பாடா உயிரியர் கோட்பாடு இது எனக்கொள்ளலாம்.

சமயம் எந்த அளவு?

6. தெய்வம் யாது?

வள்ளுவர் 'தெய்வம்' என்னும் சொல்லாட்சியைப் பயன் படுத்துகிறார். 'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய் எனப் பெய்யும் மழை', 'தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும்', 'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்' என்னும் பாக்கள் வழிக் காணலாம். இச்சொல்லாய் பேசப்படும் தெய்வம் யாது என்பது அவரால் எங்கும் பேசப்படவில்லை. தெய்வம் தான் யாது? வள்ளுவர் 'அணங்கு' என்னும் சொல்லையும் பயன்படுத்துகிறார்? 'அணங்கு கொல்... மாலும் என்நெஞ்சு' என்பது குறள். இவை பொருதுப் பொருண்மை கொண்டவை போலும். 'அணங்கு', 'சூர்', 'கடவுள்', 'பேய்', 'இயவுன்' என்னும் பழந்தமிழ் ஆட்சிகளும் இத்தகையவை. இவற்றை நம் புலன்களுக்கு அகப்படா வல்லாண்மைகள் (Mystic Bowers) எனக் குறிக்கலாம். இவை இயற்கை உள்ளும் கடந்தும் இயங்குபவையாகக் கருதப்படலாம் (Para-normal powers)

பேய் பற்றிய நம்பிக்கை போன்றதுதான் தெய்வம் பற்றிய நம்பிக்கையும் ஆகலாம். இவை தொல் பழங்காலத்து (primitivetge) நம்பிக்கைகளின் எச்சம் ஆகலாம்.

வள்ளுவர், 'திரு', 'தாமரையினாள்', 'தவ்வை', 'தாமரைக்கண்ணான்' (இந்திரன்), 'கூற்றுவன்' ஆகிய தெய்வங் களையும் சுட்டுகிறார். ஆனால் தன் கொள்கையாக ஒட்டு கிறாரா என்பது ஐயமே.

சிறுதெய்வங்கள் மக்கள் வாழ்க்கையை எந்த அளவு இயக்குகின்றன, கட்டுக்குள் கொண்டுள்ளன என்னும் கருத்துக்கள் ஆய்வுக்கு உரியன.

7. வள்ளுவர் செய்தி

வள்ளுவர் இல்லறம், காதல், காமம், ஆட்சி, அறம், கலைகள் அடங்கிய வையக வாழ்வைப் போற்றுகிறார்

(life-affirmation) வாழ்க்கை மறுப்பு (life-negation) அவரிடம் இல்லை. இது அவர் தரும் பகுத்தறிவுச் செய்தி.

பின்குறிப்பு

1. *மலையும் மரமும் மரம்செறி காவும்*
காடும் மேடும் கள்ளியும் புதரும்
சுனையும் துருத்தியும் கழியும் கடலும்
நாடும் ஊரும் நல்மனை இடங்களும்
மருவும் சந்தியும் மறுகுகூடு சதுக்கமும்
மன்றில் பொதியிலில் கந்துடைநிலையிலும்
யாழினும் பிறவினும் எங்கணும் மன்னி
உவந்துறை கடவுளர் காட்சியும் உளவே

மேற்கண்ட இடங்களில் எல்லாம் அணங்கு சூர், அரமகள், பேய், தெய்வம் குடிகொண்டுள்ளன எனப் பழந்தமிழ் பகர்கிறது.

திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களைப் பற்றிச் சுமார் 140 ஆண்டுகளாக அறிஞர்கள் பலர் பல்வேறுவிதமான கருத்துக்களைக் கூறியிருக்கின்றனர். இருப்பினும் இந்நூல்கள் இயற்றப்பட்ட காலம் இந்நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக் களுக்கும் தமிழ்ப் பண்பாடு என்றுசொல்லி கட்டமைக்கப் பட்டுள்ள கருத்துக்களுக்கும் இடையேயான ஒருங்கிணைப்பு அல்லது மாறுபாடுகளைப் பற்றித் தெளிவான ஆய்வுகள் எதுவும் இன்றுவரை வரவில்லை. திருக்குறள் உள்பட பல நூல்களுக்கு அந்நூல்களின் பழைய உரைகளுடன் கூடிய செம்மையான பதிப்புக்கள் இன்றுவரை வெளிவரவில்லை. சிறுபஞ்சமூலம், திரிகடுகம், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது என்ற ஐந்து நூல்களை அறிஞர் வையாபுரிப் பிள்ளை பழைய உரைகளுடன் செம்மையான பதிப்பாகப் பல்வேறுவகைப்பட்ட குறிப்புகளுடன் 1944இல் வெளியிட்டார். பல அருமையான திருத்தங்களைப் பெற்று இவ்வுரைப் பதிப்புக்கள் வெளிவந்த பின்னரும் இன்று வரையில் இதே நூல்களுக்குப் பிழைகள் நிறைந்த வெளியீடுகள் வெளிவந்துகொண்டு இருக்கின்றன. திருத்தப் பட்ட பதிப்புக்கள் வெளிவந்த நூல்களுக்கே இந்தக் கதி என்றால் மற்ற நூல்களைப் பற்றிப் பேசுவது மிகையாகும். தமிழ்மொழியின் அல்லது தமிழ்மக்களின் அவலமென்றோ அல்லது பெருமையென்றோ இதனை நாம் கூறிக்கொள்ளலாம்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் இந்த நூல்களின் மீது நம்முடைய அபிப்பிராயங்களைத் தெரிவிப்பது என்பது சரியாக இருக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்தாலும் அதையும் மீறி, பலரும் இந்த நூல்களை ஆராய்வதாகக் கூறி வருகின்றனர். இந்நிலையில் திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என்ற நூல்களில் கூறப்படும் பகுத்தறிவுப்பூர்வமான கருத்துக்

திருமிகு பொ. வேல்சாமி
நாமக்கல்

களைப் பற்றி ஒரு கட்டுரை எழுத வேண்டியதாயிற்று. பகுத்தறிவு என்ற சொல்லாட்சியே பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட ஐரோப்பியச் சிந்தனையின் ஒரு வெளிப்பாடு. மறுமலர்ச்சி காலத்திற்கு முன் இத்தகைய ஒரு சொல்லாடல் உலகத்தின் எந்தப் பகுதியிலாவது நிகழ்த்தப் பட்டிருக்குமா என்பது கேள்விக்குரியது. பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன்பு நாகரிகம் அடைந்த உலகின் பல பகுதிகளில் மதத்தின் அடிப்படையில் மட்டுமே மனிதர்கள் சிந்தித்து வந்தனர் என்று வரலாறு கூறுகின்றது. மதத்தைக் கலக்காமல் சிந்தனை செய்த தத்துவவாதிகளான சாக்ரடிஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்கள் பதினைந்தாம் நூற்றாண்டு வரை மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் போயினர் என்பது வரலாறு கூறும் செய்தி. மறுமலர்ச்சிக் காலச் சிந்தனையாளர்கள் மேற்கூறிய கிரேக்க அறிஞர்களை அரேபிய பாரசீக மொழிகளில் இருந்து மீட்டெடுத்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

சங்க இலக்கியங்களுக்கு அடுத்ததாகத் தோன்றியதாகக் கருதப்படும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஒழுக்கம் சார்ந்த பிரச்சனைகளைத்தான் தன்னுடைய பாடுபொருளாகக் கொண்டிருந்தன. சில இடங்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் இந்த ஒழுக்கம் முறைமை என்பது எத்தகைய வரையறைக்குட் படுத்தப்பட்ட தன்மை உடையதாக இருந்தது என்று நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. எடுத்துக்காட்டாகத் தமிழ் மரபு என்பது ஒருத்திக்கு ஒருவன்(?) என்பதாகத்தான் சொல்லப்பட்டு வருகின்றது. (இந்த இடத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்று வழக்கமாகச் சொல்கின்றதை நான் மாற்றி யிருக்கிறேன். ஏனென்றால் தமிழ் இலக்கியம், வரலாறு முழுமையும் ஒரு ஆணுக்கு பல பெண்கள் என்பதாகத்தான் சான்றுகள் உள்ளன. இதற்கு மாறாக ஏலாதி நூலின் 30, 31ம் பாடல்கள் அமைந்துள்ளன 1. அந்த பாடல்களின் பொருளை நூலின் பழைய உரை இவ்வாறு கூறுகின்றது.

“மாட்சிமைப்பட்ட வறிவுடையார், மாட்சிமைப்பட்ட தம் மறிவினாற் புதல்வரைப் பொருந்தியவகையுரைக்குமிடத்து, தனக்குப் பிறந்தவனுரதனென்றும், தன்னேவலாலாதல்,

தானிறந்ததற்பின்பு குருக்களாலாதல் தன் மனையாள் வயிற்றே பிறனொருவற்குப் பிறந்தவனைக் கேத்திரச னென்றும், தீவேட்டு மணம்புரியுமுன் தாய் வீட்டிற் பெற்ற பிள்ளையைக் கானீனனென்றும், மணம் புரிந்தபின் கணவன் வீட்டில் அவனுக்கொளித்துப் பிறனொரு வனிடத்துப் பெற்ற பிள்ளைக் கூடனென்றும், கணவனிறந்த பின்னர் வேறாருவனுக்குத் தான் மனையாளா யவனொடு பெற்ற பிள்ளையைப் புநர்ப்பவனென்றும் கூறுப.''

தமிழ்ப் பண்பாடு என்று கூறப்பட்டு வருவதற்கு முற்றிலும் மாறான செய்திகளைக் கூறுகின்ற இத்தகைய கருத்துக்களை இன்றைய நிலையில் நாம் எப்படிப் புரிந்து கொள்வது இந்த ஒரு பாடலில் தான் இப்படியான செய்தி உள்ளது என்று எளிதாகத் தள்ளிவிட முடியாது. இதனை ஒட்டிய செய்தி அடுத்தப் பாடலிலே உள்ளது. வேறுசில பாடல்களிலும் இத்தகைய குறிப்புகள் உள்ளன. இதுமட்டு மல்லாது கடந்த 1500 ஆண்டுகளாகத் தமிழ்மன்னர்களுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் (தமிழ் மன்னர்கள் மட்டுமல்லாது வேற்றுமொழி மன்னர்களும் ஆண்ட வரலாறு தமிழ் நிலத்திற்கு உண்டு) சட்டமாக இருந்தது மனுநீதிதான். அந்த மனுநீதி யில் குடும்பம் தொடர்பான சட்டங்களில் மேலே குறிப்பிட் டுள்ளதை ஒத்த பகுதிகள் உள்ளன என்பதையும் நாம் மனம் கொள்ள வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டு மென்றால் சிலவகையான கருத்துகள் குறிப்பிட்ட சமூகத்திற்குப் பெருமையளிக்கும் என்று நூல்களில் கூறப்பட்டு இருந்தாலும் நடைமுறை வாழ்க்கை என்பது மேலே குறிப்பிட்ட பாடலில் உள்ள கருத்துகளைத்தான் பிரதிபலிக்கின்றன.

ஏலாதி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம் போன்ற நூல்களிலும் மற்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும் கல்வி, கேள்வி, அவையறிதல், அவையஞ்சாமை, சொல்வன்மை என்ற இவைகளைப் பற்றி ஏராளமான பாடல்கள் உள்ளன. ஏலாதி நூலின் ஆசிரியரான கணிமேதாவியார் தமிழாசிரியர் மகனார் மரக்காயனார் மாணாக்கர் என்ற குறிப்பும் உள்ளது. இவை களை எல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது கல்வியின்

ஊடான ஒரு பகுத்தறிவுச் சமூகம் அன்று செயல்பட்டதாக நாம் உறுதியாகக் கூறலாம். தமிழாசிரியர் என்ற குறிப்பை வைத்து வடமொழியாசிரியர் பாலிமொழியாசிரியர் பிராகிருத மொழியாசிரியர் என்று பல மொழிகளையும் கற்பிக்கும் ஆசிரியர்கள் அக்காலத் தமிழகத்தில் இருந்ததையும் இத்தகைய வேற்றுமொழிகளைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த பல மாணவர்கள் படித்துவந்தனர் என்றும் நாம் கூறலாம். வடமொழி பாலி மொழிச் சொற்கள் 600க்கு மேற்பட்டவை. இத்தகைய நூல் களில் பயின்றுவந்துள்ளதை வையாபுரிப்பிள்ளை பட்டியி லிட்டுத் தன்னுடைய ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். சீனாவில் இருந்துவந்த பௌத்த துறவிகள் இவான்சுவாங், பாகியான் போன்றவர்கள் பாலிமொழியில் இருந்த பௌத்த நூல்களைத் தமிழ்நாட்டிற்கு வந்து மொழிபெயர்த்துப் படி எடுத்துச் சென்றனர் என்ற வரலாறும் பிற்கால நூலான யாப்பருங்கல விருத்தியுரையும் குறிப்பிடப்பட்டுள்ள "வடமொழி வழித் தமிழாசிரியர்" போன்ற செய்திகளும் ஒரு பத்து நூற்றாண்டுக் காலம் வரையிலும் (கி.பி.1 நூற். - 12 நூற்.) தமிழ்நாட்டுச் சிந்தனையாளர்கள் மத்தியில் குறிப்பிட்ட சில குழுக்களைச் சேர்ந்தவர்கள் கல்வியின் ஊடான பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கொண்டிருந்தனர் என்று நாம் கூறுவதற்கு ஆதாரமாக அமைந்துள்ளன.

பதினெண்கீழ்க் கணக்கில் உள்ள அறநூல்களில் காணப் படுகின்ற குறைந்த அளவிலான பகுத்தறிவுச் சிந்தனைகள் வைதீகம் சார்ந்த சைவ வைணவ சமயங்கள் ஆதிக்கம் பெற்ற காலம் வரையிலும் விவாதிக்கப்பட்டு வந்துள்ளன என்று நாம் உறுதியாகக் கூறலாம். இத்தகைய விவாதங்களைப் பக்திநெறிக்கு மாறான திமிர்வாதங்கள் என்று மாணிக்கவாசகர் போன்றவர்கள் கூறுவதைக்கொண்டு நாம் உறுதி செய்யலாம் அல்லவா?

முத்தொள்ளாயிரத்தில் பகுத்தறிவுச் சிந்தனைகள்

முத்தொள்ளாயிரம்

முத்தொள்ளாயிரம் மூன்று மன்னர்களைப் பற்றிய மூன்று தொள்ளாயிரம் பாடல்களால் பெயர்பெற்றது. ஆனால் காலச் சூழலில் சிக்கி மறைந்துபோன பாடல்கள் தவிர எஞ்சியுள்ள 110 பாடல்கள் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. இந்நூலை யாத்த புலவர் பற்றிய குறிப்புகள் நமக்குக் கிடைக்கவில்லை.

முத்தொள்ளாயிரம் பழமையும் வளமையும் கொண்டது. அன்றைய தமிழனின் அகமும் புறமும் இதில் அடங்கிக் கிடக்கிறது. அவற்றுள் அகம் பற்றிய பாடல்களில் பகுத்தறிவுக் கருத்துக்களும் ஆங்காங்கே தென்படுகின்றன. இப்பாடல்கள் கற்பனைதான் என்றாலும் பழைய இலக்கியங்களில் காட்டப் பட்ட காதல் நிகழ்ச்சிகளில் இருந்து சில மாறுபாடுகளைக் காணமுடிகிறது.

பெண்களைக் காதல்படுத்தும் பாடும், பெண்கள் தன் காதலுணர்வுகளை வெளியிடும் திறமும் பழைய இலக்கியங் களில் காண முடியாதவை. காவலனை நினைத்துக் காதல் நோய் கொண்டு கண்ணீர் சிந்தும் கன்னிப்பெண்கள், அரசனைப் பார்க்கவிடாது கதவுகளை அடைக்கும் அன்னையர், கதவுத் துளையின் வழியே காவலனைக் கண்டுகளிக்கும் காரிகையர், காதல் கூடுமோ, கூடாதோ எனக்கூடற் சுழி இழைக்க முயலும் காதல் வயப்பட்ட பெண்கள், கனவில் வந்த காவலனைக் கண்ணுக்குள் சிறைப்பிடித்துக் கண்ணைத் திறக்காது இறுக்கமாக இமை மூடியிருக்கும் இளம்பெண்கள், நாரையைத் தூதாக அனுப்பும் நங்கையர் எனக் காதலைப் பலவழியிலும் வெளியிடும் பெண்களை, அக இலக்கியங் களில் காணமுடிவதில்லை. பெரியாரின் சிந்தனையில் திருமண முறைகளில் பலமாறுதல்கள் ஏற்படுவது ஏற்றுக்கொள்ளப் படுகிறது. அதுபோல் காதலிலும் அதை வெளிப்படுத்தும்

மு. வள்ளியம்மை

பேராசிரியர், தமிழியல் துறை,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

திறத்திலும், மறைபொருள் உரைபொருளான நிலையை முத்தொள்ளாயிரத்தில் காண்கிறோம்.

ஊர்வாயும் மூடுமோ

காதல் கொண்ட பெண்ணிற்கு அன்னை சொல்வ தெல்லாம் கொடுமையாகத் தெரியும். பழந்தமிழ் இலக்கியங் களில் தாயிடம் எதையும் தலைவி நேரில் பேசுவதில்லை. காதல் உணர்வுகளை அவளிடம் வெளிப்படுத்துவதும் இல்லை. இதற்கு மாறாகச் சிந்திக்கும் திறன் கொண்ட பெண்ணை முத்தொள்ளாயிரத்தில் காண்கிறோம். அன்னை என்றால் அன்புடையவள் அல்லவா? ஆனால் என் அன்னை கொடியவள் வாசலில் நிற்காதே, மன்னவனைப் பார்க்காதே என்று என்னை வீட்டிற்குள் வைத்துப் பூட்டிவிட்டாள். கூண்டுக்கிளியான என் நிலைகண்டு ஊர்முழுவதும் அலர் எழும்பியது. என்வாயை மூடிய அன்னையே ஊர் வாயை மூட உன்னால் முடியுமா? ஊர்வாய் மூட உலைமூடியும் உண்டோ? என்னைத்தான் அடைத்து வைக்கமுடியும். ஊர்வாயை அடைக்க முடியுமா என்ற கேள்வி அவளது அறிவுத்திறத்தையும் அச்சமின்மையையும் காட்டுகிறது.

தோழியின் மதி

தோழி என்பவள் எக்காலத்தும் அறிவிற்சிறந்தவளாகவே காட்டப்படுகிறாள். தலைவியின் உடல் மாறுபாட்டையும், அவள் முகத்தையும் வைத்து எதையும் நுணித்தறியும் நுண்மாண் நுழைபுலம் மிக்கவள்.

> *''புன்னாகச் சோலை புனல்தெங்கு சூழ்மாந்தை*
> *நல்நாகம் நின்றலரு நல்நாடன் என்ஆகம்*
> *கங்குல் ஒருநாள் கனவினுள் தைவந்தான்*
> *என்கொல் இவர் அறிந்த ஆறு''* (15)

கன்னிப்பெண் ஒருத்தி தன் காதலன் தன்னைத் தழுவியதைக் கனவில் கண்டு மகிழ்ந்தாள். யான் யாரிடமும் சொல்லாத இக்கனவைத் தோழியர்கள் எவ்வாறு அறிந்தனர்? அகத்தின் அழகை முகத்தில் பார்த்துத் தெரிந்து கொண்டிருக் கிறார்கள். குறிப்பறிதல் திறனை இது காட்டுகிறது.

மூடநம்பிக்கை ஒழிப்பு

பவனி வந்த சேரனைப் பார்த்தாள் ஒருபாவை. பறி கொடுத்தாள் தன் நெஞ்சை. கண்கள் உறக்கம் இழந்தன. உணவு செல்ல மறுத்தது. உருகினாள்; உள்ளம் உடைந்தாள். பித்துப் பிடித்தவள் போல் பிதற்றினாள். மகளின் நிலைகண்டு பதறியது அன்னை நெஞ்சம். சித்தம் கலங்கியதோ, சிந்தை மயங்கியதோ என அன்னை கலங்கினாள். பேய் பிடிக்கப் பெற்றாள் உன் பேதை மகள் என்றனர் 'ஊர்ப் பெண்டிர்' வெறியாட்டு நிகழ்த்தப்பட்டது. யான் கொண்டது காதல் நோய் என அறியாது இவர்கள் பேய் விரட்ட முனைகிறார் களே எனத் தனக்குள் முனகித் தவித்தாள் தலைவி.

வெறியாடுதல் - பெண்டிர்க்குப் பேய் பிடித்திருந்தால் முருகபூசை செய்து பேய் விரட்டுவது என்பது அன்றைய வழக்கு. கையில் கொலைவாள் ஏந்திய வேல்மகன் பலி யாட்டை இழுத்துவந்து வெட்டி அதன் உதிரத்தைத் தூவிப் பேயை விரட்டுவான். பின் பெண்ணை நீராட்டி வீட்டிற்குள் அழைத்துச் செல்வர், என்னே விந்தையிது! கோதையால் வந்த காதல் நோய் வெறியாட்டு நிகழ்த்துவதால் நீங்கிவிடுமோ? என நோய்க்காரணம் அறியாது மூடநம்பிக்கை கொண்டு பேய் விரட்டுவதைக் கூறுகிறார். தலைவி நோயின் காரணம் அறிந்ததால் மூடநம்பிக்கையை ஒப்ப மறுக்கிறாள். காரியத் திற்கான காரணம் தெரியும்போது அங்கே மூடநம்பிக்கை இல்லாமல் போகிறது.

அறிவு வயப்பட்ட பேச்சு

சோழன் உலாவரும் நேரம். மகளைக் காணவிடாது உள்ளே வைத்துக் கதவடைக்கிறாள். அடைக்கப்பட்ட பெண் அல்லல்பட்டு ஆற்றாது அழுகிறாள். அது கேட்டு அக்கம்பக்கத்துள்ள மூதாட்டியர் அங்கு விரைந்து வருகின்றனர்.

அவளை அடைத்து வைக்கவேண்டாம். கதவைத் திறந்துவிடு. சோழனைக் காண்பதால் அவளுக்குத் துன்பம் ஏற்பட்டால் அதைப்பின்னர் பார்த்துக் கொள்ளலாம். அடைக்கப் பட்ட வீட்டிற்குள் அவள் அடங்காத துன்பத்தால்

உயிரிழந்தால் என் செய்வது? என்று கேட்கிறார்கள். அடைத்துவைப்பதில் அர்த்தமில்லை; மகளிர் தான் நினைத்தால் மட்டுமே காத்துக் கொள்ள முடியும் என்பது இங்குப் பொருள் கொள்ளத்தக்கது. "சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பேதலை" என்பது வள்ளுவம்.

காவலை மீறவிழைந்த கன்னி

வீட்டுக் காவலில் இருந்தாள் மங்கை. காவலைமீற வேண்டும். காதலனைக் கூட வேண்டும் எனக் கனவுகண்டாள். ஆனால் காவலோ பலமாக இருந்தது. இற்செறிக்கப்பட்ட தன்னையாரும் வெளியே அழைத்துவர உதவமாட்டார்களா என்ற ஏக்கம்.

காவலைக் கடக்க வேண்டும். காவல் காக்கும் காவலர்களின் தலைமீது நடந்து செல்லவேண்டும். அவனோடு ஒருநாள் மட்டுமாவது களிக்கவேண்டும் என்று எண்ணுகிறாள். காவலைக் கடக்க வேண்டும் என்ற துணிச்சல் அவளிடம் இருந்தது. சுதந்திர உணர்வு அவளுக்குள் எழும்புகிறது.

பழந்தமிழ் அகஇலக்கிய உணர்வுகளிலிருந்தும், செயல்களில் இருந்தும் மாறுபட்டதாக உள்ளன முத்தொள்ளாயிரச் செய்திகள். அகப்பொருள் இன்னவிடத்து இன்னார்க்கே கூற்று நிகழும் என்றும், தலைவி, தோழி ஆகியோர் பேச வேண்டிய இடங்களும் குறித்துப் பேசும். முத்தொள்ளாயிரத்தில் தலைவி, தாய் அனைவரும் நல்ல அறிவார்ந்த சிந்தனையோடு எதையும் ஆராய்ந்து முடிவெடுக்கும் திறத்தோடு பகுத்தறிவாகிய நல்லதை, அல்லதை உணரும் பண்புடையோராய் விளங்குகின்றனர்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் காட்டும் மெய்யியல் நிலைப்பாடுகள்

முன்னுரை

பண்டைத் தமிழரின் மெய்யியல் நிலைப்பாடுகளை முற்ற எடுத்துரைக்கும் கட்டுரையாக இதனைச் சொல்ல முடியாது. பண்டைத் தமிழ் நூல்களின் ஆழமும் அகலமும் அவற்றினுள் தொழில்படும் மெய்யியலும் நம்மால் இன்னும் முழுதும் உணர முடியாமலேயே உள்ளன. எனவே சிறுகச் சிறுக அவற்றை அகழ்ந்து அடையாளப்படுத்தவேண்டும் என்ற நோக்கமே இக்கட்டுரையில் தொழில்படுகிறது. மெய்யியல் என்பதற்கு அறிவு உற்பத்தி செய்யப்படு வதற்கான முன்வடிவங்கள் (Conditions of Knowledge) என்று ஒரு வரையறை உண்டு. ஜெர்மானியச் சிந்தனையாளரான இம்மானுவெல் கான்ட் இது பற்றிப் பேசினார். குறிப்பிட்ட ஒரு சமூகச் சூழலில் உற்பத்தியாகும் வெவ்வேறு வகையான அறிவுத் தொகுதிகளுக்கு “அடிப்படையாக” குறிப்பிட்ட ஒருவிதமான மெய்யியல் புலம் விளங்குகிறது என்று கான்ட் குறிப்பிட்டார். ஆயின் அம்மெய்யியல் புலத்தை “அடிப்படை” என்றோ பின்புலம் அல்லது சூழல் என்றோ கருதுதல் கூடாது என்பார் அவர். இதன்படி, அறிவுத் தொகுதி களிலிருந்து விலகிய அல்லது தனித்த நிலையில் மெய்யியல் தோற்றமளிக்காது. மாறாக, குறிப்பிட்ட அக்காலத்திய வெவ்வேறு அறிவுத் தொகுதிகளின் ஊடாகவே அது தன்னைப் புலப்படுத்தும், எனவே அறிவுத் தொகுதிகளின் உடனுறைப் புலம் என்று அதனைக் கருதவேண்டும் என்பார் அவர். பண்டைத் தமிழர் மெய்யியலை அக்காலத்திய இலக்கியங்கள், இலக்கணங்களின் ஊடாக, அவற்றின் உடனுறைப் புலமாகக் கண்டறிய வேண்டும் என்ற முறையில் இவ்வகை விவாதங்

ந. முத்து மோகன்

பேராசிரியர் & தலைவர், குருநானக் ஆய்வுத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

களின் வழியாக நமக்குக் கிடைக்கிறது. சமீபகாலங்களில் லூயி அல்த்தாசர் என்ற பிரெஞ்சு மார்க்சியர் மார்க்சின் பொருளாதார நூல்களை வாசித்து அதனுள் தொழில்படும் மெய்யியல் புலத்தை அடையாளப்படுத்த முனைந்தார். இவ்வகை வாசிப்பை அவர் அடையாளப்படுத்தும் வாசிப்பு (Symptomatic Reading) என்றார்.

காண்ட், அறிவு உற்பத்திக்கான மெய்யியல் முன்வடிவங் களை அனுபவம் கடந்தவை என்றார். நாம் அப்படிக் கொள்ளவில்லை. அவை வெறும் கருத்தளவிலான முன் வடிவங்களோ, அனுபவம் கடந்தவையோ அல்ல, அவை சமூக வரலாற்றுரீதியாக அர்த்தப்படுபவை என்றே நாம் கொள்ளுகிறோம். தமிழ் இலக்கிய, இலக்கண நூல்கள் உருவாவதற்கான மெய்யியல் முன்வடிவங்களை அவற்றின் சமூக வரலாற்றுத்தளத்தில் வைத்து இக்கட்டுரை கண்டறிய முனைகிறது. இலக்கிய, இலக்கண நூல்களை அடையாளப் படுத்தும் வாசிப்பு முறை (Symptomatic Reading) மூலம் வாசித்தறிந்து அவற்றினூடாகத் தொழில்படும் மெய்யியல் நிலைப்பாடுகளைக் கண்டறிதல் எனும் முறையையும் இங்குப் பயன்படுத்துகிறோம். தொல்காப்பிய நூலில் "பாடலுள் பயின்றவை நாடுங்காலை" (தொல். 949) என்றொரு சொற்சேர்க்கை பயன்படுத்தப்படுவதை நாம் அறிவோம். பாடலுள் பயின்றவற்றை நாடி அடைவதே நாம் மேலே குறிப்பிட்ட அடையாளப்படுத்தும் வாசிப்பின் வழி மெய்யியல் உடனுறைப் புலத்தைக் கண்டறிதல் எனக் கொள்ளலாம்.

இக்கட்டுரை, தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தை முன் நிறுத்தி அதனுள் பயின்று வரும் மெய்யியல் நிலைப் பாடுகளை அடையாளப்படுத்த முனைகிறது.

முதல், கரு. உரிப்பொருள் என்ற மூன்றே

தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் முதல் நூற்பாக்களில் ஒன்று முதல், கரு, உரிப்பொருள் என்ற மூன்றைப் பற்றிப் பேசத்தொடங்குகிறது.

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே
பாடலுள் பயின்றவை நாடுங்காலை" (தொல். : 949)

என்பது அந்நூற்பா. அடுத்து வரும் நூற்பாக்கள் முதல், கரு உரி எனும் மூன்று பொருட்களை விரித்து வரையறுக்கின்றன.

"முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே" (தொல். : 950)

எனத் தொடங்கிப் பின் கருப்பொருட்களும் உரிப்பொருட்களும் வரையறுக்கப்படுகின்றன.

முதல் எனப்படுவது நிலம் பொழுது என்ற பெரிய வட்டமாகவும் அதனுள் கரு எனப்படுவது நிலம் பொழுது ஆகியவற்றை விட அளவில் குறைந்த ஒரு வட்டமாகவும் இன்னும் சிறியதான குறிப்பான ஓர் உள்வட்டத்தினுள் இடம் பெறுபவையாக உரிப்பொருட்களும் வடிவப்படுத்தப் பெறுகின்றன. முதல் கரு உரிப்பொருட்கள் மூன்றும் ஒன்றினுள் ஒன்று சிறந்ததாக வரும் என்ற உரையாசிரியர்களின் விளக்கம் கவனத்திற்கு உரியதாகிறது. உரி என்ற சொல் சிறப்பாக, குறிப்பிட்ட அதற்கு உரியது என்ற பொருண்மையை நோக்கியே இட்டுச் செல்கிறது. முதல் பொருளைச் சொல்லும் போது "இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே" என்ற பாடல் வரியில் பயின்று வரும் "இயல்பு" எனும் சொல் கவனத்தைக் கவருகிறது. இதற்கு இணையாக "முறை சிறந்தனவே" என்ற சொற்களும் நிற்கின்றன. தொல்காப்பிய முதல் நூற்பாக்களிலேயே இயல்பு, சிறப்பு என்ற கருத்தாக்கங்கள் தொழில்படுவதாக நம்மால் உணரமுடிகிறது. முதல், கரு, உரிப் பொருள் என்ற வரிசையில் ஒன்றின் ஒன்று சிறந்ததாகக் குறிப்பிட்ட ஒரு திசையில் வகைப்படுத்தல் நிகழ்வதையும் அது இயல்பிலிருந்து சிறப்புப் பொருள் நோக்கி நகர்வதையும் காணமுடிகிறது.

இந்நிலையில், சங்ககாலத் தமிழர்களின் இலக்கியங்களையும் இணைத்துப் பார்க்கும்போது, இயற்கையோடு இரண்டறக் கலந்திருந்த ஒரு நிலையிலிருந்து, மானுட

இயல்பு அல்லது சமூக இயல்பு என்ற அடுத்த நிலைக்கும், இன்னும் குறிப்பாக சமூகத்தினுள் உருவாகும் வேறுபாடு களால் சிறப்புப் பண்புகளை வரையறுக்கும் மூன்றாவது நிலையை நோக்கியும் பண்டைத் தமிழ்ச் சிந்தனை நகர்வதாகத் தோன்றுகிறது. எனவே இயற்கை, இயல்பு, சிறப்பு என்ற மூன்று கருத்தமைப்புகளின் வழியாகப் பண்டைத் தமிழரின் மெய்யியல் நிலைப்பாடு உருவாவதாகச் சொல்லத் தோன்றுகிறது.

இயல்பு, சிறப்பு ஆகிய சொற்களில் நின்று சிந்திக்கும் போது, தொல்காப்பிய ஆசிரியர் சுபாவவாதம், வைசேடிகம் ஆகிய சிந்தனைப் போக்குகளை அறிந்தவராக இருந்தார் என நாம் முடித்துவிட முடியும். தொல்காப்பியர் சுபாவவாதம், லோகாயதம், ஆசீவகம், சமணம் போன்ற பல சிந்தனைப் போக்குகளை நன்றாகவே அறிந்திருந்தவர் என்பதை அவரது எழுத்துக்களிலிருந்து அறிய முடிகிறது. ஆனால் அவற்றில் எந்த ஒன்றுக்கும் தமிழ்ப் பண்பாட்டைச் சுருக்கிக் காட்டும் முயற்சி அவரிடம் இருப்பதாகச் சொல்லமுடியவில்லை. மாறாக அவரால் அறியப்பட்டிருந்த மெய்யியல் சிந்தனைகள் ஒருபுறமிருக்க, அவற்றைக் கடந்து தமிழ்ப் பண்பாட்டை அதன் சொந்த இயல்புகளிலிருந்தே வரையறுக்க விழையும் அவரது முயற்சியே முனைப்பாக வெளிப்படுகிறது.

திணைக் கோட்பாடு

''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே''

(தொல். : 951)

பண்டைத் தமிழர்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நால்வகை நிலங்களையும், இவை மயங்கி வரும் பாலை எனும் மற்றொரு நிலத்தையும் பகுத்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு அந்நிலங்களில் வாழ்ந்த மக்களின் உணவு ஈட்டலையும் சமூக நடத்தையையும் தெய்வங்

களையும் வகுத்திருந்தார்கள் என அறிகிறோம். இது ஓர் அபூர்வமான பகுப்பு முறை. நான்கு அல்லது ஐவகை நில மக்களின் வாழ்வையும் தனித்தனி உலகாகவே உருவகித் திருந்தனர் என்பது அவ்வவ் நிலத்து முழுமை வலியுறுத்தப் பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இதனைப் பூகோளவியல் சார்ந்த ஒரு பொருள்முதல்வாத மெய்யியல் பார்வை எனலாம். பூகோளவியல் என்பதைவிட இயற்கை சார்ந்த மெய்யியலாக இதனை விளக்கலாம். பண்டைத் தமிழரின் இயற்கை சார்ந்த பொருள்முதல்வாதப் பார்வை இயற்கையை அருவமாக்கி ஒற்றைப்படுத்தாமல் பன்மீயப் பண்புகளோடு பதிவு செய்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க ஓர் உண்மை யாகும்.

நிலங்களைக் குறிப்பிட்டு அந்நிலத்து வாழும் மக்களின் தொழில், ஒழுக்கம், வழிபாடு ஆகியவை அந்நிலங்களின் பண்புகளைச் சார்ந்தே சொல்லப்படும்போது, நிலங்களின் இயல்பான பண்புகளிலிருந்து அந்நிலத்து மக்களின் சமூக வாழ்க்கை முறை வருவிக்கப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. நிலத்தின் பண்புகள், அங்கு வளரும் தாவரங்கள், வாழும் உயிரினங்கள் ஆகியவற்றின் நடத்தை யிலிருந்து மனிதரின் நடத்தையும் தகவுகளும் வருவிக்கப் பட்டிருந்தன என்பதைக் காண்கிறோம். சமூக ஒழுங்கிற்கு முன்னோடியாக இயற்கையும் இயற்கையில் உயிரினங்களின் செயல்பாடுகளும் கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே இயற்கை என்பதைப் பண்டைத் தமிழர் வெறுமனே “சுற்றுப்புறச் சூழலாக”க் கொள்ளாமல், தம்மை இயற்கை யின் நீட்சியாகவும் தொடர்ச்சியாகவும் கொண்டனர் என்று உணரமுடிகிறது. இயற்கையைச் சுற்றுப் புறமாகவும் சூழலாகவும் கொள்ளும்போது மனிதர் / இயற்கை என்ற இரட்டைநிலை உருவாகிவிடுகிறது. அந்தச் சுற்றுப் புறத்திற்கும் சூழலுக்கும் அந்நியமாகிவிட்ட மனிதர் என்ற தன்னிலை (Subjectivity) உருவாகிவிடுகிறது. ஆயின் பண்டைத் தமிழரின் திணைப் பார்வையில் மனிதர் இயற்கையிலிருந்து இன்னும் தனித்து நிற்கவில்லை. இயற்கையைத் தம்மை விடப் பலமடங்கு பெரிதான ஒன்றாகவே மனிதர் அக்காலங் களில் உணர்ந்திருக்கின்றனர். அகத்திணைப் பாடல்களில்

ஏராளமாகக் காணப்படும் இயற்கை வருணனைகள் உண்மையில் இயற்கைக்குப் புறமாக நின்று வருணிக்கப்படுபவையே அல்ல. மாறாக, அவை இயற்கையினுள் இரண்டறக் கலந்து வாழும் ஒரு மக்கள் கூட்டம், அந்த இயற்கையிலிருந்தே தனது காதலுக்கும் களவுக்கும் புணர்ச்சிக்கும் பிரிவுக்கும் இலக்கணங்களை, முன்வரைவுகளை வருவித்துக் கொள்கிறது.

இயற்கை சார்ந்த பண்டைத்தமிழரின் உலக நோக்கை வலியுறுத்தும் மற்றொரு நூற்பாவும் தொல்காப்பியத்தில் உள்ளது.

''நிலம் தீ நீர் வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்'' (தொல். 1589)

உலகம் என்ற சொல் இங்கும் பயின்று வருகிறது. ஆயின் இங்கு அது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் போன்ற தம்மிலேயே முழுமை கொண்ட பலவகை நிலங்களைக் குறிக்கவில்லை என்பது கவனத்திற்கு உரியது. இப்பாடலில் உலகம் என்பது அதிகப் பொதுத்தன்மை கொண்டு மொத்த இயற்கையையும் குறிக்கிறது. இங்கு எடுத்தாளப்பட்டுள்ள நூற்பாவில் உள்ள "உலகத்"தை ஒருவர் புலன்களால் உணரமுடிகிறது. இது தத்துவார்த்தரீதியாக பூடகப்படுத்தப் பட்டுள்ள அல்லது அருவப்படுத்தப்பட்டுள்ள (Abstract) உலகம் ஆகும். மலையும் மலை சார்ந்த பகுதியும், காடும் காடு சார்ந்த பகுதியும், நதியும் நதி சார்ந்த பகுதியும், கடலும் கடல் சார்ந்த பகுதியும் என முன்பு வகுக்கப்பட்ட "உலகங்கள்" அதிக பிரத்தியட்சத் தன்மை கொண்டவையாக இருந்தன. குறிஞ்சியையும் முல்லையையும் மருதத்தையும் நெய்தலையும் ஒருவர் கண்களால் காணமுடியும். புலன்களால் உணர முடியும். ஆயின் தொல்காப்பியம் 1589-ல் சொல்லப்படும் "உலகம்" அப்படிப்பட்டதல்ல. இது மலை, காடு, நதி, வயல், கடல், கடற்கரை போன்ற அப்பட்டமான நேர்க் காட்சிகளிலிருந்து விலகி பொதுமைப்படுத்தப்பட்ட ஒரு மொழியில் நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஆகியவற்றின் மயக்கத்திலிருந்து உலகை வருவிக்கிறது.

குறிஞ்சி முதலான நால்வகை உலகங்கள் எடுத்துக் காட்டப்படும்போது அவற்றை ஒரே உலகமாக ஒன்றிணைத்துக் காட்டும் அக்கறை பண்டைத் தமிழருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. பிந்திய பாடலில் அது ஒரே உலகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. தமிழின் முதல் வரையறை நிலங் களின் பிரத்தியட்சப் பண்பையும் பன்மீயத்தையும் அங்கீகரிப்பதாக உள்ளது. நால்வகை நிலங்களின் தனித்தனி இயல்புகள், அவற்றின் தாவரங்கள், பறவைகள், விலங்கினங்கள் என விரியும்போது அதேவகையான பரந்த பிரத்தியட்சம் பதிவாகியிருப்பதாகவே உள்ளது. இயற்கையைப் புறப் பொருளாகப் பார்க்கும்போதுதான் அதனை ஓர் ஒருமை வாதத்தினுள் அடக்கும் முயற்சிகள் தொடங்கும் என்று இங்கு நாம் வாதிடமுடிகிறது. இயற்கையைப் புறப்பொருளாகப் பார்ப்பதற்கு அப்படிப் பார்ப்பதற்கான மனிதனின் தன்னிலை (Subjectivity) தோன்றியிருக்கவேண்டும். அத்தன்னிலையின் ஒருமையே புற உலகை ஒருமைப்படுத்துவதற்கான முன் நிபந்தனையாகிறது. குறிஞ்சி முதலான நால்வகை நிலங்கள் அவற்றின் எல்லாவகையான பன்மை வடிவில் சித்திரிக்கப் பட்டிருப்பது இயற்கை உலகை அன்றைய தமிழர்கள் இன்னும் அந்நியப்படுத்தவில்லை என்பதையும் எனவே அவ்வகை அந்நியப்படுத்தலில் தோன்றும் தன்னிலை ஒரே உலகம் என்ற எல்லைகட்டப்பட்ட பார்வைகளும் தோன்றவில்லை என்பதும் புரியவருகிறது.

தொல்காப்பியம் *951, 1589* ஆகிய இரண்டு நூற்பாக்களுமே பொருள்முதல்வாத நிலைப்பாட்டினையே குறிப்பனவாக இருந்த போதிலும் நால்வகை நிலங்கள் குறித்த முந்திய நூற்பா தமிழுக்கே உரிய பிரத்தியேகமான இயற்கை சார்ந்த ஒரு பழைய மெய்யியல் நோக்கைக் குறித்து நிற்கிறது.

அதேபோல, பாலை என்பதை நில மயக்கத்தால் உருவாவது என்று தொல்காப்பியம் குறிப்பிடும். இங்கு மயக்கம் என்ற சொல் வருவது பண்டைத் தமிழரின் இயங்கியல் அணுகுமுறையைக் குறிக்கிறது எனலாம். தொல்காப்பியம் *1589*-ல் சொல்லப்படும் நிலம், நீர், தீ, வளி, விசும்பு

ஆகியவற்றின் ''கலந்த மயக்கம்'' என்ற சொற்கள் முன்பு பேசிய இயங்கியலை மேலும் முன்னெடுத்துச் செல்கின்றன. நால்வகை நிலங்களை அல்லது பஞ்சபூதங்களைத் தனித் தனியாகப் பெயரிட்டு அழைப்பதைவிட அவை கலந்து மயங்கி புணர்ந்து நிற்கின்றன என்ற சித்திரம் அதிகக் காட்சிப் பண்பு கொண்டதாக உள்ளது.

நிலமும் பொழுதும் (மனிதரும்)

குறிஞ்சி முதலான நால்வகை நிலங்கள் வரையறுக்கப் பட்ட பின்னர் அடுத்து வரும் நூற்பாக்களில் நால்வகை நிலங்களின் பெரும் பொழுதுகளும் சிறு பொழுதுகளும் வரையறுக்கப்பட்டுள்ளன.

''காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
கூதிர் காமம் என்மனார் புலவர்'' (தொல். 952)

''பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப'' (தொல். 953)

''வைகறை, விடியல் மருதம்; எற்பாடு
நெய்த லாதல் மெய்பெறத் தோன்றும்'' (தொல். 954)

முதற்பொருளாக இங்குச் சொல்லப்படும் நிலத்தையும் பொழுதையும் ஆங்கிலத்தில் சொல்லப்படும் வெளியும் காலமும் (Space and Time) என்று மொழிபெயர்த்துவிட முடியாது. ஆங்கிலத்தில் கருதப்படும் வெளியும் காலமும் என்பவை பெருமளவில் அருவமானவை, சூக்குமமானவை (Abstract), பொருள்முதல்வாதத் தளத்திலேயே அவை அருவப்படுத்தப் படுகின்றன. ஆயின் தொல்காப்பிய நூற்பாக்கள் (951-954) குறிப்பிடும் நிலங்களும் பொழுதுகளும் மிக மிகப் பிரத்தியட்ச மானவை. பொழுதுகள் ஆண்டு, பருவகாலங்கள் போன்ற பெரும் பொழுதுகளாகவும் ஒரேநாளின், சிறுபொழுதுகளாகவும் திரும்பத் திரும்ப வரும் சுழற்சிப் பண்பு கொண்ட கால வரையறைகளைக் குறிக்கின்றன. பொழுது என்பது வெறுமனே கால ஓட்டத்தை மட்டும் குறிக்காமல் இன்னும் நிலம், தாவரங்கள், உயிரினங்கள் ஆகியவற்றின் உணர்ச்சிநிலை களையும் சேர்த்துக் குறிக்கிறது. நிலமும் பொழுதும் இன்னும் கூடுதலாக மானுட உணர்ச்சிகளுடன் இயைபு கொண்ட

நிலையில் சுட்டப்படுகின்றன என்பது நிலம், பொழுது ஆகியவற்றின் பிரத்தியட்சப் பண்பைத் தீவிரப்படுத்துகின்றன.

காலம் நேர்கோட்டுப் போக்கில் சுட்டப்படவில்லை என்பது கவனத்திற்குரியது. நிலங்களின் கண்கூடான முழுமை யும் காலங்களின் சுழற்சியும் இவை இயற்கையிலிருந்து வருவிக்கப்பட்டுள்ளன என்பதை நிருபிக்கின்றன. பொதுவாக மேற்கத்திய மெய்யியலில் வெளியும் காலமும் கிடைநிலைப் பண்பையும் குத்துக்கோட்டுப் பண்பையும் முறையே குறித்து நிற்கும். தமிழிலும் அவை அவ்வாறே உள்ளன எனலாம். நிலம் சமதளத்திலான பரப்பையும் பொழுதுகள் ஒரே ஆண்டின் அல்லது ஒரே நாளின் மாறுபடு பண்பையும் குறிக்கின்றன எனலாம். ஆனால் மேலை மெய்யியலில் சொல்லப்படும் வெளியும் காலமும் என்ற கருத்தாக்கங்களை விட அதிகக் குறிப்பான, பிரத்தியட்சமான கருத்தாக்கங்களாக தமிழின் நிலமும் பொழுதும் விளங்குகின்றன.

நிலம் இயற்கையின் சமதளப் பரப்பையும் பொழுதுகள் அச்சமதளப் பரப்பில் நிகழும் மாற்றங்களையும் குறிக்கின்றன எனலாம். மாற்றங்கள் சுழற்சிப் பண்பைக் கொண்டனவாகவும் உள்ளன. காலம் என்பது இன்னும் நேர்கோட்டுத் தன்மை பெறாத வடிவில் மாற்றங்கள் வாழ்வில் சுழல் ஒழுங்கினைக் குறிக்கும் மாற்றங்களாகத் தமிழில் பதிவாகியுள்ளன. நிலம், பொழுது, சுழல் மாற்றங்கள் ஆகியவை அன்றைய தமிழ்ச் சமூகத்தின் உலகநோக்கினுள் ஓர் உள்ளீடான முழுமையை வலியுறுத்துவனவாக அமைந்துள்ளன.

நிலமும் பொழுதும் வெளி, காலம் என்று தனித்தனியாக அர்த்தப்படாமல், அவற்றிற்குப் புறத்தேயுள்ள மனிதர் எனவும் மிக அணுக்கமாக நிலம், பொழுது, மனிதர் என்ற சார்பு நிலையில், மிகப் பிரத்தியட்சமாகத் தமிழில் பயின்று வந்துள்ளன.

அகமும் புறமும்

இக்கட்டுரையின் தொடக்கத்தில், இயற்கையோடு இணைந்திருந்த நிலை, பொருள் மற்றும் மானுட இயல்பு,

அவற்றின் சிறப்பு என்ற வரிசையில் வகைப்படுத்தும் முறைமை பண்டைத் தமிழரிடையில் ஓர் அடிப்படையான முன்வடிவாகத் தொழில்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டோம். இந்த வரிசையில் மிகப் பெரிய ஒரு வகைப்படுத்தலாக அகமும் புறமும் உருவாகின்றன.

மனித சமூக வரலாற்றில் முதல் வேலைப் பிரிவினை ஆண்/பெண் ஆகியோருக்கிடையில் நிகழ்ந்ததாக மார்க்ஸ் முதலான சமூகவியலாளர்கள் கூறுவர். இதனை வேலைப் பிரிவினை என்பதைவிட, வாழ்வியல் வட்டாரங்களில் ஏற்பட்ட முதல் பகுப்பு எனலாம். பண்டைத் தமிழின் அகம்/புறம் என்ற பகுப்பு அவ்வகைப்பட்ட ஒரு பகுப்பாகவே தோன்றுகிறது. அகமும் புறமும் சிறப்புப் பண்புகளைக் கொண்ட இரு வாழ்வியல் வட்டாரங்களாக அடையாளப் படுத்தப்படுகின்றன. அவை இரண்டின் இலக்கணங்கள் மிக விரிவான முறையிலும் நுட்பமான முறையிலும் பண்டைத் தமிழில் வரையறுக்கப்படுகின்றன.

அகமும் புறமும் பெண், ஆண் (தலைவன், தலைவி) ஆகியோரின் வாழ்வியல் வெளிகளைக் குறிப்பனவாகவும், காதல்வாழ்வு / பொருளீட்டல், குடும்பம்/போர், குடும்பம்/ அரசு ஆகிய எதிர்வுகளைக் குறிப்பனவாகவும் தமிழில் உருவாகியுள்ளன. இவ்விருவகை வாழ்வியல் வட்டாரங்களுக் கிடையில் முரண்கள் உண்டு என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். இயற்கை சார்ந்த வாழ்க்கை என்பதனுடன் அகவாழ்க்கை அதிகத் தொடர்ச்சி கொண்டதாக அடையாளப் படுத்தப்பட முடியும் (தமிழ்க் காதல் : வ.சுப. மாணிக்கம்). இந்த வகையில் காதல், களவு, கற்பு, குடும்பம் ஆகியவை முன்னுரிமை கொண்ட அடிப்படைகளாகத் தமிழில் பதிவு பெறுகின்றன.

''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாம்'' (தொல். 1168)

''காமப்பகுதி கடவுளும் வரையார்'' (தொல். 1029)

புறம் என்பதில் ஆண் வெளி, பொருளீட்டல், போர் வாழ்க்கை, அரசு உருவாக்கம் ஆகியவை அடங்குகின்றன. புறவாழ்க்கை

யின் செயல்பாடுகள் பல அகவாழ்க்கையை நிலைப்படுத்த விரும்பும் பெண்ணால் பல வேளைகளில் விமர்சனத்திற்கு உள்ளாகின்றன. அவை அருளற்ற கொடூரமான செயல்கள், சொந்த விருப்பால் அமையாமல் வேந்து வினை என்ற நிர்ப்பந்தத்தால் செய்யப்படுபவை என்ற விமர்சனம் அகப் பாடல்கள் பலவற்றில் பதிவாகியுள்ளன. "அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்த பொருள் வயிற் பிரிவோர் உரவோர் ஆயின் உரவோர் உரவோராக, மடவோமாக மடந்தை நாமே'' (குறுந்தொகை 20) என்பது போன்ற பாடல்களை நினைவு கூறுவோம்.

அகம், புறம் என்ற ஆண், பெண் வாழ்வியல் பரப்புகள் மிக விரிவாகவும் நுட்பமாகவும் வரையறை பெறுவதை அல்த்தூசரின் தன்னிலைகள் கடைந்தெடுக்கப்படுதல் (Interpellation of Subjectivites) என்ற கருத்தாக்கத்தின் வழியாக விளக்கலாம். இயற்கையோடு இரண்டறக் கலந்திருந்த நிலை யிலிருந்து, இயற்கையிலிருந்து வாழ்வியல் கூறுகளை வருவித்தல் என்ற நிலை உருவாகி, அதன் பின்னர் சமூகப் பிரிவுகள் என்ற தன்னிலைகள் கடைந்தெடுக்கப்படுதல் என்ற மூன்றாவது நிலை உருவாகிறது. இயற்கையோடு இயைந்திருந்த நிலையிலிருந்து சமூக வாழ்க்கை உருவாவதில் தன்னிலை உருவாக்கங்கள் நிகழ்வது மெய்யியல் ரீதியாக ஒரு முக்கியமான வரலாற்றுச் சம்பவமாகும். தன்னிலை உருவாக்கங்களின் வழியாகவே சமூக முரண்கள் சுய இயக்கம் பெற்றுச் சமூக வரலாறு தொடங்குகிறது. இத்தகைய ஒரு நிகழ்வைக் குறிப்பதே அகம், புறம் ஆகியவற்றைச் சுமந்து நிற்கும் பெண், ஆண் என்ற தன்னிலைகள் கடைந்தெடுக்கப்படுவதாகும். ஆண், பெண் என்ற முதல் வேலைப் பிரிவினையை அடிப்படை யாகக் கொண்டு ஆண், பெண் ஆகியோரைக் குறிக்கும் தன்னிலைகள் கடைந்தெடுக்கப்படுகின்றன. இந்தத் தன்னிலைகள் உருவாவதில் ஏற்றத்தாழ்வான சமூகப் பாத்திரங்களும் அவற்றிற்கிடையில் முரண்பாடுகளும் தோன்ற வேண்டும். ஏற்றத்தாழ்வும் முரண்பாடுமின்றி, தன்னிலைகள் கடைந்தெடுக்கப்படமுடியாது. அகம், புறம் என்ற பகுப்பில் அத்தகைய ஏற்றத்தாழ்வும் அவற்றிற்கிடையில் முரண்பாடு களும் தோன்றுகின்றன.

சமூகரீதியான சிறப்பினங்கள் (தன்னிலைகள்)

உருவாக்கம்

அகம், புறம், ஆண், பெண், தலைவன், தலைவி போன்ற தன்னிலைகள் உருவாக்கப்படுவதுடன் அந்நிகழ்வுப் போக்கிற்கு இணையாகத் தொழில்ரீதியான வேலைப் பிரிவினை நிகழ்வதையும் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் சுட்டிக்காட்டு கின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நிலப் பகுப்பில் இவ்வகை வேலைப் பிரிவினை உள்ளடங்கி அமைந்துள்ளது.

''பெயரும் வினையும் என்று ஆஇரு வகைய
திணைதொறும் மரீஇய திணை நிலப் பெயரே''

(தொல். 966)

என்ற தொல்காப்பிய நூற்பா நிலம் சார்ந்த தொழில் அடிப்படையில் மக்கட்பெயர்கள் அமைவதைக் குறிப்பிடு கிறது. "இது கருப்பொருளின் பாகுபாடாகிய மக்கட்திறம் உணர்த்துதல் நுதலிற்று'' என்று இளம்பூரணர் குறிப்பிடுவார். மக்கட்திறம் என்ற சொல்லை நிலம் சார்ந்த மக்கள் கூட்டத்தினரின் குறிப்பான அல்லது சிறப்பான பெயரை எடுத்துரைத்தல் எனலாம். ஆயர், வேட்டுவர், குறவன், குறத்தி, எயினர், எயிற்றியர், உழவர், உழத்தியர், நுளையர், நுளைச்சியர் போன்ற பலவகை மக்கட் கூட்டத்தினரின் பெயர்கள் இங்கு உருவாகின்றன அல்லது கடைந்தெடுக்கப் படுகின்றன. தன்னிலைகள் கடைந்தெடுக்கப்படுதலை அல்த்தூசர் பெயரிட்டழைத்தல் (Naming, Calling) என்றும் கூறுவார்.

நிலங்களின் வேறுபாடும் பாலியல் வேறுபாடும் தொழில் களின் வேறுபாடும் தன்னிலைகளை இங்கு உருவாக்கி யுள்ளன. வேறுபாடு, முரண்பாடு (Difference, Contradiction) என்ற இரண்டு கருத்தாக்கங்களை இங்கு வித்தியாசப்படுத்திக் காட்ட வேண்டியுள்ளது. வேறுபடுத்துதல் என்ற செயல்பாடு சிறப்பினடிப்படையில் அமைவதுதான். பகுப்பாய்வின் குறிப்பிட்ட ஒருவகை எதிர்வுபடுத்தல் அல்லது முரண்பாடு ஆகும். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் ஏராளமான

பகுப்புகள் கண்டறியப்படுகின்றன. இருப்பினும் அவை எல்லாமே முரண்படுத்தல் ஆகாது. சமூகரீதியான பகுப்புகளே முரண்பாடாக இறுக்கமடைகின்றன. நிலைபெறுகின்றன. சமூகரீதியான முரண்பாடுகள் தொடர்ந்து தொழில்படும் நிலைத்த தன்னிலைகளை உருவாக்குகின்றன. உயர்ந்தோர் (தொல். 972, 977, 979, 1162), அடியோர் (தொல். 969), மேலோர் (தொல். 975), புலைய, இழிசின (புறம். 287) என்பது போன்ற சொற்களின் பயன்பாடு சமூக முரண்பாடுகளைச் சுமக்கும் தன்னிலைகளாக உருப்பெறுகின்றன.

''இன்மையது இளிவும் உடமையது உயர்ச்சியும்''

(தொல். 987)

அறிந்த சமூகமாக இந்நிலையில் தொல்காப்பியச் சமூகம் காட்சியளிக்கிறது.

''உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான'' (தொல். 979)

என்ற நூற்பா இங்குக் குறிக்கத்தக்கது. பொருள் வயிற் பிரிவை நியாயப்படுத்தும் தொல்காப்பியம் சமுதாயத்தில் உயர்ந்தோர்தம் ஒழுக்கச் சிறப்புக்கள் பொருட்செல்வத்தினா லாகும் எனக் கூறுகிறது.

சமூகத்தளத்தில் தோற்றம் பெற்று நிலைகொண்டு விட்ட முரண்பாடுகளின் தீவிரத்தை அகம்/புறம் அல்லது ஆண்/பெண் என்ற சட்டகத்தினுள் மீட்டுக் கொணர்ந்து மிதப்படுத்தும் முயற்சியும் பிற்காலத் தமிழ் மரபினுள் உருவாவதைக் காண்கிறோம். இவ்வகை மிதப்படுத்தல் களுக்கான முன்வரைவுகளைத் தொல்காப்பியத்தினுள்ளேயே கண்டடைய முடியும்.

பொருளடைவு

அஃறிணைகள்
அறிவூட்டுதல் 148
அகநானூறு 47,61
அங்குத்தர நிகாயம் 17
அபிதம்மம் 6
அபிதம்ம பிடகம் 6
அம்பேத்கர் 19
அரசியல் அமைதி 30
அறஇலக்கியம் 55
அறத்தொடு நிற்றல் 115,157
அறநெறிச்சாரம் 10
அறம்பாடிற்றே ஆயிழைக் கணவ 81
அறன்வலியுறுத்தல் 17
அறப்பாதை 33
அறிவியல் சிந்தனை 39,148
அறிவியல் வளர்ச்சி 113
அறிவு 197
அறிவுடைமை 7
அறிவுவயப்பட்ட பேச்சு 245
அறிவூட்டும் அஃறிணைகள் 147
அன்பு 35
அன்பு வாழ்க்கை 111
அனுமான ஞானம் 7
அனுபவியம் 27
ஆகமஞானம் 7
ஆத்மன் 13
ஆதிபகவன் 92
ஆண்-பெண் சமத்துவ வாழ்வு 226
ஆலத்தூர் கிளார் 81
ஆன்மா இல்லை 13
ஆன்மா உண்டா 13
இம்மை வெறுப்பு 181
இயற்கையோடு இயைந்த வாழ்வு 132
இலக்கண விளக்கம் 87
இலையுதிர் காலம் 23
இளவேனிற் காலம் 23
இறையனார் அகப்பொருள் 105
ஈகையும் தன்முயற்சியும் 227
உடல்வலிமையைப் போற்றுதல் 178
உண்மையான மனிதன் 30
உயர்ந்தவர் - தாழ்ந்தவர் : மாற்றுச் சிந்தனை 228
உயிர்யாது 234
உயிரினங்களின் அறிவியல் வகைப்பாடு 50
உலகியல் கடவாமை 35
ஊர்வாயும் மூடுமோ 244
எண்வகை மணம் 109
ஏலாதி 237
ஐம்புலன் முதிர்ச்சி 182
ஐவகை சீலங்கள் 18
ஒழுக்கம் 229
கங்குசி 29
கடவுள் 90
கண்மூடிப் பழக்கங்கள் 8
கணக்காயனார் 136
கணவன் மனைவி உறவு 171
கல்வி 229
கலித்தொகை 51,153
களவுப்புணர்ச்சி 112
கன்பூசியஸ் 21
காஞ்சித் திணையும் பகுத்தறிவுச் சிந்தனையும் 217
காதலறம் 120
காரணகாரிய அடிப்படை 186
காவலை மீறுதல் 246
கீங்கு-பனுவல் 21
குறிக்கோள் நிலை 155
குறைகளைப் பொறுக்கும் திறன் 145
கூத்து மரபு 154

கெனித்பர்க் 57
கௌடலியம் 65
சட்டவிய நூல் 25
சட்டவியலார் கருத்து 36
சடங்குகள் தேவையா? 14
சடங்குகள் பயனற்றவை 142
சடங்குப் பனுவல் 22
சமநிலைக் கோட்பாட்டு நூல் 24
சமயம் 232
சமுதாய ஒழுங்கு 31
சமுதாயச் சமத்துவம் 16
சாதி 142
சிந்தாமணி 80
சிலப்பதிகாரம் 44,185
சிறுபஞ்சமூலம் 239
சீவன் 13
சீனத்தில் செவ்வியல்
படைப்புகள் 20
சீனப்புரட்சி 37
சீனமொழியில் அறநூல்கள் 20
சுத்தபிடகம் 6
சுவாமிநாதம் 87
செல்வ மகள் 155
சொல் வகைப்பாடு 91
ஞானம் 7
தத்துவ ஞானிகள் 23
தந்திரம் 22
தம்மபதம் 6
தமிழ் அற மரபு 55
தமிழர் மெய்யியல் 247
தலைவன் கூற்று 137
தலைவி கூற்று 135
தற்கட்டுப்பாடு 164
தன்முயற்சியில்
நம்பிக்கை உருவாக்கல் 208
தனக்கென வாழா
பிறர்க்குரியர் 127
தாவு மார்க்கம் 25
தாவோ 25
திசைத் தெய்வம் 15
திட்டமிடுதல் 227
திணைபாகுபாட்டில்
பகுத்தறிவுச் சிந்தனை 100
திரிகடுகம் 237
திரிசரணங்கள் 4
திரிபிடங்கள் 4,19
திருக்குறளில் சமயம் 232
திருமணம் 123
திருவள்ளுவர் 9
தீகநிகாயம் 6
தூயஇலக்கியம் 58
தெய்வம் 85
தெய்வம் யாது 235
தொல்காப்பியத்தில்
மெய்யியல் சிந்தனை 247
தொல்காப்பியம் 48,85,96
தொல்காப்பியர் 57
தொடர் இலக்கணத்தில்
பகுத்தறிவுச் சிந்தனைகள் 104
தேரிக்காதை 15
தோழி 244
நடப்பு நிலை 155
நடுகல் வழிபாடு 132
நடுநிலை 35
நடுப்பாதை 30
நல்லறம் 4
நவீனம் 27
நற்றிணை 52,133
நன்னன் மா. 11
நாலடியார் 72-75
நாற்பாலின்மை 234
நான்மணிக்கடிகை 78
நியாய உணர்வு 32
நீதி உணர்வு 32
நீதி சதகம் 76
நீதிமான் 32
பகுத்தறிவு 198
பகுத்தறிவு : கடவுள் 12

பகுத்தறிவு : புத்தரின் கருத்து 8
பகுத்தறிவு : மேலை நாட்டார் விளக்கம் 26
பகுத்தறிவு விளக்கம் 7
பத்துப்பாட்டு 175
பதிற்றுப்பத்து 41
பரத்தை ஒழுக்கம் 162
பழமொழி 57
பழமொழி நானூறு 62-64,197
பார்ப்பனர் இயல்பு 204
பாரதிதாசன் 153
பால்பாகுபாட்டில் பகுத்தறிவுச் சிந்தனைகள் 101
பாலி அறநூல்கள் 3
பாலி மொழி 3
பிச்சுக்கள் 8
பிறப்பு அடிப்படையில் வேறுபடுத்தாமை 209
புணர்ச்சி இலக்கணத்தில் பகுத்தறிவுச் சிந்தனைகள் 103
புத்தர் 8
புத்தரின் கருத்து 12
புத்த சங்கம் 5
புராண விமர்சனப் போக்கு 202
புருடன் 13
புலமைத்திறம் 34
புனித நீராடல் 14
பூரண மனிதன் 35
பெண்ணடிமை 160, 165
பெரியார் 10
பெரியாரிய நோக்கு 154,169
பெருந்திணையில் பகுத்தறிவுச் சிந்தனை 221
பெற்றோர் அன்புப் பனுவல் 24
பொருள் முதல் வாதம் 155
பொருள் வகைப்பாடு 92
பொருளே வாழ்வு 179
போலி நம்பிக்கை 8
பௌத்தம் 4
மகாவக்கம் 13
மஞ்சள் ஆறு 20
மந்திரம் 22
மதியுடம்படுதல் 113
மருந்து 52
மதம் 142
மதுரைக்காஞ்சி 44
மறுமை மறுப்பு 201
மறுமையைப் போற்றுதல் 181
மனிதனின் மேல் அளவு மனிதனே 30
மாக்சு முல்லர் 3
மானம் 230
முத்தொள்ளாயிரம் 243
முதல்சீன அரசு 22
முதுமை 25
முதுமொழிக்காஞ்சி 214
முதுமொழிக் காஞ்சியில் பகுத்தறிவுச் சிந்தனை 224
முப்பால் 234
முருகியல் 56
முல்லைப்பாட்டு 169
முன்னுணர்தல் 22
மூடநம்பிக்கை ஒழிப்பு 245
மெய்யியல் 247
மெய்யுணர்தல் 7
ரோம் 39
வட்டக் காமிணி 5
வடநூல் அற மரபு 55
வாய்மொழி மரபு 154
வாழ்வியல் கோட்பாடு 127
வாழ்வியல் மேம்பாட்டுச் சிந்தனை 142
வாழவிடு 34
விடாமுயற்சியும் உழைப்பும் 232
விதுசேகர பட்டாச் சாவியா 3
விநய பிடகம் 5,13
விளிம்புநிலைநோக்கு 161
வீரம் 32
வேள்வித் தீ 15

நமக்கு அறிவு இருக்கிறது. அனைவருக்கும் இருக்கிறது. ஆராயும் திறன் இருக்கிறது. அவற்றைக் கொண்டு எந்தச் சங்கதி ஆனாலும் ஆராய்ந்து பார்த்துத் தான் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து கொள்ளவேண்டும்.

- தந்தை பெரியார்